
இனி வரும்
உதயம்
ரமணிசந்திரன்
இனி வரும்
உதயம்
ரமணிசந்திரன்

## நூல் விவரப் பட்டியல்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : **இனிவரும் உதயம்** |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : அக்டோபர், 1992 |
| நான்காம் பதிப்பு | : மே, 1997 |
| ஐந்தாம் பதிப்பு | : நவம்பர், 1999 |
| ஆறாம் பதிப்பு | : டிசம்பர், 2000 |
| ஏழாம் பதிப்பு | : செப்டம்பர், 2002 |
| எட்டாம் பதிப்பு | : மார்ச், 2006 |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 192 |
| பைண்டிங் | : கார்டு போர்டு |
| கணிப்பொறி அச்சு | : சுமதி லேசர்ஸ், சென்னை-6. |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் வெளியிடுவோர் | : **அருணோதயம்**<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை ரூ. 50.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |



# இனி
# வரும்
# உதயம்

புகழ்பெற்ற ஆசிரியர்களின்
மிகச்சிறந்த நாவல்கள்
அருணோதயம் வெளியீடுகள்

அருணோதயம்
இராயப்பேட்டை
சென்னை – 600 014.

# இனி வரும் உதயம்

## 1

"அம் . . ம்மா!" என்று இருகைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டாள் நித்யா. நித்யகல்யாணி.

அவள் தங்கியிருந்த அந்த வேலை பார்க்கும் பெண்களுக்கான விடுதியில், அவளது அடுத்த அறைக்காரி தன் ஆட்டத்தைத் தொடங்கிவிட்டாள். இன்னும் இரண்டு மூன்று பேர் விரைவிலேயே வந்து சேர்ந்து கொள்ளுவார்கள்.

இவர்களால் எப்படி முடிகிறது?

வேலை முடிந்து திரும்பி வந்தால் டிபன் சாப்பிடப் போகக்கூடத் தோன்றாமல் அப்படியே விழுந்து கிடக்கத் தானே அவளுக்குத் தோன்றுகிறது; இவர்கள் மட்டும் இப்படித் துள்ளுகிறார்களே!

ஒருவேளை மனதின் சோர்வுதான் உடலையும் பாதிக்கிறதோ?

விரைவிலேயே செவிப்பறை கிழிந்து விடும் அளவுக்கு உச்சத் தொனியை எட்டியது டிஸ்கோ சங்கீதம். சகித்துக் கொள்ளவும் முடியாமல், பயில்வான் போல கட்டுமஸ்தாக இருந்த பக்கத்து அறைக்காரியோடு மோதும்

துணிவும் இல்லாமல் அவளால் சொந்தமாக முடிகிற காரியமாய்த் தன் கைகளால் தன் காதுகளை இறுகப் பொத்திக் கொண்டாள்.

ஆனால் எவ்வளவு நேரம் அப்படி இருக்க முடியும்? காது மடல்கள் வலிக்கத் தொடங்கவே, எழுந்து சென்று அறைக்கதவோடு சன்னல்களையும் மூடிவிட்டு வந்து கட்டிலில் அமர்ந்தாள்.

அப்போதும் சத்தம்தான். ஆனால் நல்ல வேளையாக முன்னைப் போலக் காதைத் துளைக்கவில்லை.

உதட்டைக் கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தவளுக்கு, ஊரின் நடு நாயகமாய் இருந்த பெரிய வீடு நினைவு வந்தது. வீட்டைச் சுற்றிலும் மாவும் பலாவுமாகப் பெரிய பெரிய மரங்களோடு பெரிய பூந்தோட்டமும், மல்லிகை, இருவாட்சியின் மனதை மயக்கும் வாசனையும், அவ்வப்போது ஊர்க் கோடியில் இருந்த கோவிலில் இருந்து காற்றில் மிதந்து வரும் நாதசுர ஓசையும் . .

கூடவே திருச்சியில் ஒரே ஒரு மாதத்திற்கென்று வாடகைக்கு எடுத்து, ஒரே ஒரு வாரம் மட்டும் தங்கியிருந்த ஒரு சின்ன வீடும் . . சின்ன வீடேதானோ?

ச்ச . . எப்படி இருந்தால் என்ன?

எல்லாம் கனவாகி முடிந்துவிட்ட கடந்த காலம். உண்டு முடித்ததும் நாவிலிருந்து மறைந்துவிடும் இனிப்பும், உறைப்புமான சுவைகள்போல, இன்பம் துன்பம் எல்லாம் மறைந்து வெறும் பொறுமையை மட்டும் அவளுக்குத் துணையாகவிட்டுச் சென்றுவிட்ட கடந்த காலம்!

நில்லாமல் சுழலும் இயந்திரம் போல் அதற்கும் பழக்கப்பட்டுப் போய் விட்ட இந்த வாழ்க்கையில் இன்று மட்டும் ஏன் இந்த சலிப்பு?

அல்லது பழக்கப்பட்டு விட்டதாக எண்ணியதுதான் தவறோ?



தவறேதான்.

தெருவில் போகும்போதும் வரும் போதும் அங்கங்கே அந்த சுருக் வலிகள் இன்று வரை நிற்கவே இல்லையே!

அன்னியராய் நின்று ஆராய்ந்து சொல்வது என்றால் முன்பு கத்தியால் குத்துவதுபோல இருந்த வேதனை இப்போது குண்டூசியில் குத்தும் அளவுக்குக் குறைந்திருப்பதாகக் கூறலாம். மற்றபடி வலி இல்லாத நாள் என்று ஒரு நாளுமே இல்லை.

ஒரு வேளை . . . இன்னும் கொஞ்ச . . . நிறையக் காலம் கழிந்தால் . . .

தடதடவென்று கதவை ஓங்கித் தட்டும் ஓசையில் திடுக்குற்று, சிந்தனை கலைந்து எழுந்தாள் நித்யா.

பொறுமை இழந்த அவசரத் தட்டுகள் சற்று அதிகப்படி நேரமாகவே கதவு தட்டப்பட்டு இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்.

"அட என்னாம்மா, எப்பப் பார்த்தாலும் கதவைப் பூட்டிகினு நீ என்ன தவம் பண்றியா, ஜெபம் செயறியா? வா, உனுக்கு டெலிபோனு வந்துக்கிதாம். அழச்சாரச் சொன்னாங்க. வா ." என்று நீட்டினாள் அந்தம்மா.

அந்த விடுதியைக் கூட்டி சுத்தம் செய்வது, கூப்பிட்ட குரலுக்கு ஓடுவது, சாமான் வாங்கி வருவது, ஆபீஸ் பையன் போல வேலை செய்வது என்று எல்லாம் அவள்தான்.

எனவே அவள் அதட்டினால் பதிலுக்கு எரிச்சலைக் கூடக் காட்ட முடியாது. அத்தோடு அவள் கொண்டு வந்த சேதியும் வியப்பூட்ட, "எனக்கா!" என்று ஆச்சரியமாகக் கேட்டாள் நித்யா.

"பின்ன? பக்கத்து ரூம்புகாரவுங்களுக்கு வந்ததை நான் உங்ககிட்டே வந்து சொல்றேனாங்காட்டியும்? அட போனுன்னு சொன்னாக்கா ஓடிப் போயி எடுத்துப் பேசவியா, சும்மா வழக்காடிக்கிட்டுகிறியே . . ." என்று

கேட்டுவிட்டுக் கையில் மடக்கிக் கொண்டிருந்த புகையிலையை கடை வாய்க்குள் திணித்தபடியே நகர்ந்தான் அவன்.

இந்த ஒரு காரணத்துக்காகவே அந்தம்மாவிடம் எதையும் வாங்கி வரச் சொல்வதில்லை நித்யா.

யாராயிருக்கும் என்று யோசித்தபடி அறைக் கதவைச் சாத்திக் கொண்டு கிளம்பினாள்.

போன் கால் தனக்குத்தானா என்பதில் இன்னமும் அவளுக்கு ஐயம்தான்.

தோழமை என்று எவரோடும் பழகவில்லை.

உறவு என்றோ ஒருவருமே இல்லை . . . அதாவது 'அற்றகுளத்து அறுநீர்ப் பறவை' என அவளுடைய தந்தையின் பணம் மறைந்தபின் எந்த உறவினரும் அவளைக் கண்டுகொள்வது இல்லை. அவளுக்கும் அவர்கள் யாரும் வேண்டியது இல்லை என்று தோன்றிவிடவே பிறப்பினால் விளைந்த பந்தங்கள் எல்லாமே விட்டுப் போயின.

அப்புறம் யார்?

டெலிபோன் அருகே வந்துவிட்டவளுக்குத் திடீரென்று அவயவங்கள் இயங்க மறுத்தன ஒருவேளை . . .

நேற்று பஸ் நிறுத்தத்தில் பஸ்ஸுக்காகக் காத்து நின்றபோது அந்த வெண்ணிற காண்டஸா கிளாஸிக் சற்றுத் தயங்கிவிட்டுச் சென்றாற் போலத் தோன்றியதே! கூட நின்றவர்களில் ஒரிருவர் 'இந்தக்கார் . . .' என்று பரபரப்புற்று பேசினார்களே ஒரு வேளை,

"எடுத்துப் பேசேன் நித்யா. என்ன பார்த்துக் கொண்டு நிற்கிறாய்?" என்று விடுதிப் பொறுப்பாளரின் குரல். "உன் ஆஃபீஸில் இருந்து கூப்பிடுகிறார்கள்."

ஓ!

நித்யா இறுக்கம் தளர்ந்து சட்டெனத் தொய்ந்தாள்.



ஐந்து ஆண்டுகளுக்கு அப்புறமும் அறிவு வளர்வதாகவே இல்லையா என்று தனது அனாவசியமான மனக் கிளர்ச்சிக்காகத் தன்னையே உள்ளூரக் கடிந்து கொண்டபடி ரிசீவரை எடுத்தாள் அவள்.

"நித்யாவாம்மா, நான்தான் ஆசிரியர் பேசுகிறேன்" என்றார் சிவானந்தம்.

"வ . . . வணக்கம் சார். எ . . . என்ன சார் திடீரென்று . . ?" என்று இன்னமும் முழுமையாகத் தன் வசப்பட்டிராத குரலில் வினவினாள் நித்யா.

"அடடா, என்னம்மா குரல் பதறுகிறது? திடீரென்று டெலிபோன் என்றதும் பயந்துவிட்டாயா? பயப்பட ஒன்றும் இல்லை. சற்று ஆசுவாசப்படுத்திக் கொள். நல்ல விஷயமாக பேசத்தான் கூப்பிட்டேன். நம் பத்திரிகை விற்பனை பிய்த்துக் கொண்டு போகப் போகிறது பார். அது விஷயமாக உன்னிடம் நேரில் பேச வேண்டும். நாளை ஓர் அரை மணி நேரம் முன்னதாகக் கிளம்பி வந்துவிடுகிறாயா? விஷயம் வெளியே போய்விடாமல் விவரமாகவும் பேச வேண்டும்!" என்றார் அவர்.

"சரி சார்" என்றாள் நித்யா பணிவாக.

காலையில் குளியலறை வாயிலில் க்யூவைத் தவிர்ப்பதற்காக என்று அதிகாலையில் குளிப்பது நித்யாவின் வழக்கம். அது இப்போது வசதியாகி விரைவாகக் கிளம்புவதில் பிரச்சினை இல்லாது போயிற்று.

டைனிங் ரூமில் முதல் ஆளாக இரண்டு தோசைகளை உண்டு உணவை முடித்துக் கொண்டு அலுவலகத்துக்கு விரைந்தாள்.

ஆசிரியரின் ஐடியா என்னவாக இருக்கும்?

நித்யா பணிபுரிந்த பத்திரிகையின் விற்பனையைப் பெருக்க வேண்டும் என்கிற எண்ணம் நிர்வாகத்தினருக்கு இருந்தது. அவர்களுக்கு மட்டும் என்று இல்லை. அங்கு பணி புரிந்த அனைவருக்குமேதான் இருந்தது.

விளம்பரதாரர்களைப் பெருக்கிக் கொள்ள அது அவசியமாகவும் இருந்தது.

விற்பனைக்காக என்று எந்த அளவுக்கும் இறங்கி, எதையும் பிரசுரிக்கும் பத்திரிகைகள் பெருகிவிட்டிருந்த இந்தக் காலத்தில் அந்தப் பத்திரிகையின் போக்கு சற்று வித்தியாசமாக இருந்தது.

எழுத்தாளர்களைப் போலவே பத்திரிகைகளுக்கும் ஒரு கற்பு உண்டு. அது படிப்பவர் மனதில் விரசமாகத் தோன்றாதவற்றையே பிரசுரிப்பது என்று ஒரு கொள்கையைக் கடைப் பிடித்து வந்தது அந்தப் பத்திரிகை.

மனித மனதின் வக்கிரங்களை வியாபாரம் செய்து மற்ற பத்திரிகைகள் லாபம் பெற்றபோது தரமான இந்தப் பத்திரிகையின் விற்பனை குறையத் தான் செய்தது. எனவே புதுப்புது உத்திகளைக் கையாண்டு சர்க்குலேஷனைப் பெருக்குவதில் ஆசிரியர் முனைப்பாக இருந்தார்.

இப்போது புதிதாக என்ன ஓர் உத்தியைக் கண்டுபிடித்துவிட்டார். இவ்வளவு உற்சாகம் கொள்வதற்கு?

எதுவாயிருந்தாலும் அவளுக்கும் மகிழ்ச்சிதான்.

நல்ல பத்திரிகை. அது வளர்வதே நல்ல விஷயம். அத்தோடு போனசாக அங்கே பணிபுரியும் அனைவருக்கும், அவள் உட்பட நல்லது தானே. வரப்பு உயர மாதிரிதானே.

சந்தோஷமான எதிர் பார்ப்புடன் ஆசிரியரை நோக்கியவள், அவரது புது ஐடியா பற்றி அறிந்ததும் அப்படியே அயர்ந்து போனாள். எங்கோ தூரத்தில் இருக்கும் வேதனை அவளுக்கு மிக அருகிலேயே வரப்பார்க்கிறதே!

ஏதேதோ சொல்ல நினைத்தும் தொண்டைக்கு வெளியே சத்தம் வர மறுக்கவே திணறிய படி பேந்தவிழித்தாள் அவள்.

சிறு புன்னகையுடன், "என்ன நித்யா, பேச்சையே காணோம்? உன் அபிப்ராயத்தைச் சொல்லு", என்று



ஊக்கினார் சிவானந்தம். சிரமப்பட்டு சுதாரித்துக் கொண்டாள் நித்யா.

"சார் . . . சார், நம் பத்திரிகை மிகவும் உயர்ந்த . . . த . . தரமான பத்திரிகை சார். இதைப் போய் சினிமா கினிமா நடிகர் அது இது என்று ஏ . . . ஏன் சார் தாழ்த்திக் கொள்ள வேண்டும்?"

அவளைக் கூர்ந்து நோக்கிவிட்டு, "தப்பு நித்யா, எழுத்தையும் பத்திரிகையையும் போல நடிப்பும் திரைப்படமும் கலைத் தொழில்தான். ஒரு கலைத் தொழிலில் இருப்பவர்கள் மற்றதில் இருப்பவர்களை இகழ்ந்து பேசுவது பிழையாகும்" என்று சிறு கண்டிப்புடன் பேசினார் சிவானந்தம்.

தன் கீழ்ப் பணிபுரிபவர்களுக்கு சிவானந்தம் பேச்சு சுதந்திரம் கொடுத்திருந்த போதும் எல்லோருக்குமே அவரிடம் மிகுந்த மரியாதையும் உண்டு. ஆனால் மரியாதைக்காக வாயை மூடி அவர் சொல்வதை ஏற்கும் நிலையில் நித்யா இல்லையே.

எனவே, விடாமல், "ஆனால் பெரும்பான்மை திரைப்படங்கள் மிகவும் மூன்றாம்தரம் நாலாம் தரமாகத் தானே இருக்கின்றன சார்? அதெல்லாம் நமக்கு வேண்டாம் சார்" என்று எதிர்வாதம் செய்தாள்.

"அப்படிப் பார்த்தால் பத்திரிகைத் தொழிலும் அப்படித்தானே. நீ சொல்லுகிற மூன்றாம் தரம், நாலாம் தரம் இதில் இல்லையா? அதற்காக பத்திரிகைகளை வேண்டாம் என்பாயா?"

பதில் சொல்ல முடியாமல் திணறி விட்டு, அந்த வழிப்பேச்சையே விடுத்து, "ஆனாலும் சிவாஜி கணேசன் மாதிரி நடிகர் என்றாலும் பரவாயில்லை. அந்த ஜெ . . . ஜெயப்பிரதீபன் அப்படி ஒன்றும் பெரிய குணச்சித்திர நடிகர் இல்லையே! சார் வெறும் . . . வெறும் கமர்ஷியல் ஆக்டர்தானே . . . அவரைப் போய் எதற்காக? வேறு

யாராவது நல்ல நடிகரைப் பற்றி எழுதலாம் சார்" என்றாள் ஓரளவு இறைஞ்சுதலாகவே முடித்தாள் நித்யா.

"இல்லையம்மா. அதற்கு வழியில்லை" என்றார் சிவானந்தம். மேசை மேல் அடுக்காக இருந்த காகிதங்களின் மேல் வைக்கப்பட்டிருந்த பேப்பர் வெயிட்டை அகற்றி அருகில் வைத்தார். "நடிகர் ஜெயப்பிரதீபனின் பேட்டியைத் தான் நம் பத்திரிகையில் பிரசுரிக்கப் போகிறோம். நடிகர் ஜெயப்பிரதீபனுடன் ஒருவாரம் என்கிற அந்தப் பேட்டியை எடுக்கப் போகிறவளும் நீதான்" என்று திட்டவட்டமான குரலில் அறிவித்துவிட்டு, மேலாக இருந்த பேப்பரை எடுத்துப் படிக்கத் தொடங்கினார்.

விஷயம் முடிந்தது; நீ போகலாம் என்பது இதன் அர்த்தம். ஆனால் எப்படிப் போவது? அவர் இடி மேல் இடியாக அல்லவா தலையில் போடுகிறார்!

"சார் ... நான் ... நான் எதற்காக, சார்? வேறு யாராவது ரிப்போர்ட்டர் . . . வேறே . . ." என்று பதட்டத்துடன் தொடங்கியவள், ஆசிரியரின் நேர் பார்வையில் தயங்கி, "ஓ ... இல்லை சார். நான் இ . . . இதுவரை லேடீஸ் . . . பெ . . பெண்களிடம் மட்டும்தான் . . . அதெல்லாம் வேறே மாதிரி . . . உழைத்து முன்னேறியவர்களைத் தான் பேட்டி எடுத்தேன் சார் . . ." என்று மேலே தொடருமுன் சிவானந்தம் இடைமறித்தார்.

"ஜெயப்பிரதீபன் உழைத்து முன்னுக்கு வரவில்லை என்று உனக்கு யார் சொன்னது?"

ஆசிரியரின் குரல் மாற்றத்தை உணர்ந்து அவளுக்குப் பேச்சு தயங்கியது.

பிரதீபன் உழைக்கவில்லை என்று யாரால் சொல்ல முடியும்? அதுவும் அவளால் எப்படி முடியும்.

துணை நடிகனாகத் தொடங்கி, எந்த நேரம் படப்பிடிப்பு என்றாலும் குறித்த நேரத்தில் சென்று, எத்தனை டேக்



என்றாலும் சலிக்காமல் நடித்துக் கொடுத்து, எவ்வளவு நேரம் வேலை என்றாலும் முகம் சுளிக்காமல் செய்து கொடுத்து . . . அவள் அறியாததா?

சற்று அடங்கிப் போய், "அப்படிச் சொல்லவில்லை சார். ஆனால் யாராவது ஆண் ரிப்போர்ட்டரை அனுப்பலாமே என்றுதான் சொல்கிறேன் . . . . அவர் . . . அவர் ஆண் நடிகர் அல்லவா?" என்றாள் மன்றாடும் குரலில் அவள்.

ஆனால் சிவானந்தம் அந்தக் குரலைக் கண்டு கொள்வதாக இல்லை. "ஆண் என்கிற ஒரு காரணத்துக்காக அவர் மீது அவதூறு சொல்ல முடியாது, நித்யா இன்று வரை அவர் எந்தப் பெண்ணையும் கையைப் பிடித்து இழுத்ததாகக் கேள்வி இல்லை" என்றார் கடுமையான குரலில்.

"சார் . . ர்"

"இந்தப் பேட்டியை நீதான் எடுக்க வேண்டும் என்பது நிர்வாகத்தினர் விருப்பம். இந்த அலுவலகத்தில் பேச்சு சுதந்திரம் உண்டுதான். ஆனால் இட்ட பணியைச் செய்ய மறுப்பதற்கு உரிமை கிடையாது. உனக்கு இந்த வேலை தேவை என்றுதான் நான் நினைக்கிறேன். அது சரிதான் என்றால் பேட்டி சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்து கொள்ள நாளைக் காலைப் பத்து மணிக்கு அவரது பங்களாவுக்குப் போய் அவருடைய செகரட்டரியைப் பார்த்துப் பேசி முடிவு பண்ணு. அவரது முகவரியைப் பையன் கொண்டு வந்து தருவான்" என்றார் சற்று மாறாத குரலில் தொடர்ந்து.

வேலை தேவையில்லை என்று எழுந்து போய்விடலாம்தான். ஆனால் அடுத்த மாதம் உண்பது எப்படி? மெஸ் பில், அறை வாடகை, சலவைக் கணக்கு வழி? ஆனாலும் . . .

விக்கித்துப் போய் அமர்ந்திருந்தவளின் குனிந்த தலை மீது சிவானந்தத்தின் பார்வை படிந்தது. "போம்மா,

எப்போதும் தருகிற வேலையைத் தட்டாமல் செய்வாயே போ. நாளைக் காலையில் நான் சொன்ன மாதிரி வேலையைத் தொடங்கு போ" என்றார் சற்று இதமான குரலில்.

மெல்லத் தலை நிமிர்ந்து, "சார், இந்தப் பேட்டி ஒருவாரம் என்றீர்களே. அப்படியானால் தினமும் வேலை நேரத்தில் போய்ப் பார்த்தால் போதும் இல்லையா?" என்று வினவினாள் நித்யா. அதுவே எவ்வளவோ துன்பம்.

சிவானந்தம் சிரித்துவிட்டார், "நாம் என்ன, அவர் நடிக்கும் படங்களின் சீன்களை முன்கூட்டியே எழுதி அந்தப் படங்களுக்கு இலவச விளம்பரமா கொடுக்கப் போகிறோம்? நீ உன்னுடைய அந்த ஒருநாள் கட்டுரைகளை எல்லாம் எப்படி எழுதினாய்? அவை போலவே, அதிகாலையில் அல்லது முன்தினமே சென்று தான் தொடங்க வேண்டியிருக்கும். உனக்கு நினைவில்லை, அந்த ஒருநாள் கட்டுரைகளின் வெற்றியே குடும்பச் சூழ்நிலையில் அவர்கள் நடந்துகொள்ளும் முறையையும் வெளிவாழ்வில் அவர்கள் கண்டிருந்த வெற்றியையும் இணைத்து நீ எழுதியிருந்த விதத்தால்தானே வந்தது. இதையும் அப்படித்தான் செய்ய வேண்டியிருக்கும்."

அந்தக் குடும்பச் சூழ்நிலை என்கிற வார்த்தை அவளை விசித்திரமான வகையில் துன்புறுத்த, அந்த ஒருநாள் கட்டுரைகளை ஏன் எழுதினேன் என்று தன்னையே நொந்து கொண்டாள் நித்யா. நெஞ்சுக்குள் அரிக்கத் தொடங்கிய வேதனையை ஒதுக்கி, "நான் எப்படி சார் அவர் வீட்டில் ஓர் ஆணின் வீட்டில் போய்க் கால நேரம் இல்லாமல் தனியாக வேலை செய்ய முடியும்?" என்று புதிதாக ஓர் ஆட்சேபணையைக் கிளப்பினாள். எப்படியாவது இந்த வேலை தன்னைவிட்டு வேறு யாரிடமும் போய்த் தொலையாதா என்கிற தவிப்பு அவளுக்கு.

ஆனால் ஆசிரியர் மீண்டும் முகம் கடுத்தார். "ஆமா . . . மாம். ஆணுக்குப் பெண் நிகர் என்று மேடை மேடையாக



ஆளாளுக்கு முழங்குவீர்கள். அப்புறம் தனியாக எப்படிப் போவேன் . . . என்று மூக்கால் அழுவீர்கள். தனி என்ன தனி? அவ்வளவு பெரிய நடிகர் வீட்டில் வேறு ஆளே இல்லாமலா இருக்கும்?" என்றவர் சற்றே யோசித்து, "வேண்டுமானால் பேட்டி நேரத்துக்கு ஒரு ஃபோட்டோ கிராஃபரையும்கூட அழைத்துப்போ. படங்களும் வேண்டும் இல்லையா? மனோகரிடம் நான் சொல்லிவைக்கிறேன்" என்றார்.

மீண்டும் ஏதோ சொல்ல வாயைத் திறந்தவளிடம், "போதும் நித்யா. சும்மாவே இந்தப் பேச்சில் சற்று அதிகப் படியாகவே நேரம் செலவாகி விட்டது. இதற்குமேல் வீண் பேச்சு வேண்டாம். இன்று பக்கம் மேக்கப் பண்ணி முடிக்க வேண்டிய நாள் போய் வேலையைப் பார்" என்று மேலே பேச்சுக்கு இடம் தராத குரலில் கூறி முடித்துவிட்டார் அவர்.

அன்றிரவெல்லாம் நித்யாவுக்கு சரியான உறக்கமில்லை.

இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக என்ன ஆனாலும் ஆகட்டும் என்று பேசாமல் வேலையை விட்டு விடலாமா என்று அவளுக்குப் பல முறை தோன்றியது.

ஆனாலும் அப்படி விட்டுவிட்டால் உடனே என்று இல்லாவிட்டாலும் ஒன்றிரண்டு மாதங்களுக்குள்ளாக வேறும். வேறு வேலை கிடைக்கக்கூடும் என்கிற நம்பிக்கைக்குச் சற்றும் இடமில்லையே.

யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல மூளை கெட்டுப்போய்ப் பட்டப் படிப்பை இடையில் விட்டுத் தொலைத்தவள்; வேறு மாதிரி வேலைப் பயிற்சிகளையும் எண்ணிக்கூடப் பாராமல் கோட்டைவிட்டவள். ஏதோ, எந்தப் பிறவியிலோ செய்திருந்த ஒரு சிறு நல்வினைப் பயனாக இந்த வேலை கிடைத்து, தன் தகுதிகளை மெல்ல வளர்த்து வரும் வாய்ப்பும் கிட்டியிருக்கிறது.

இந்தச் சமயத்தில் இதையும் கைநழுவ விடுவது முட்டாள்தனம். அத்தோடு விட்டு விட்டுப் பட்டினி கிடப்பதா?

தினை விதைத்தவன் அதையே அறுப்பதுபோல ஒரு மூடத்தனமான வசந்த காலத்தில் மூளை கெட்டுப் போனதன் வினையை அவள் அனுபவித்துத் தான் ஆக வேண்டும். ஆனால் இவ்வளவு காலம் அனுபவித்த துயரங்கள் போதாதா இன்னுமா என்பது தான் அவளுக்குத் தாங்க முடியாது போயிற்று.

தவியாய்த் தவித்தாள். வேறு எதுவும் செய்வதற்கு இல்லாமல்.

## 2

அவள் என்னதான் தவித்தாலும் வேலை வேலை ஆயிற்றே.

அதைவிட்டுத் தொலைக்கும் தைரியம் இல்லாத காரணத்தால், ஆசிரியர் சிவானந்தத்தின் கட்டளைக்கு அவருக்குக் கீழே பணிபுரிந்தவளான நித்யகல்யாணி பணிந்துதான் தீர வேண்டியிருந்தது.

மறுநாள் காலை பத்து மணிக்குத் தலைவிதியோடு தன்னையும் நொந்தபடி ஜெயப்பிரதீபனின் பெரிய மாளிகையின் சுற்றுமதில் 'கேட்' அருகே ஆட்டோவிலிருந்து இறங்கினாள் நித்யா.

இதிலெல்லாம் நிர்வாகம் மிகவும் தாராளம்தான். பஸ்சில் போகக் கூடாது? ஆட்டோ பில் இவ்வளவா? என்றெல்லாம் ஒரு கேள்வி. முகச்சுளிப்பு சிரிப்பு என்று ஒன்றும் இராது. நித்யாவும் ஆபீஸ் பையனுடைய



சித்தப்பாவின் ஆட்டோவை ஏற்பாடு செய்து கொண்டு இரவு நேரங்களில் சற்றுத் தாமதம் ஆனால்கூட தைரியமாகத் தனியே போய் வருவாள்.

இறங்கும்போதே நடிகனின் தரிசனத்துக்காகக் காத்துக் கிடந்த கூட்டத்தைக் காணவும் அவளுக்கு எரிச்சல் வந்தது.

அரைகுறை ஆடையில் அன்னநடை பயின்று கொண்டிருந்த சில பெண்களைப் பார்க்கையில் இழுத்து வைத்து, கன்னம் பழுக்க அறையலாமா என்று வந்தது.

முட்டாள் பெண்களுக்கு முடிவே இல்லையா?

பையன்கள் கதை அதற்கு மேல்.

ஜெயப்பிரதீபன் கடைசியாக நடித்து வெளிவந்து வெற்றிகரமான நூறாவது நாளை எட்டிக் கொண்டிருந்த திரைப்படத்தில் கனவு சீனில் பிரதீபன் அணிந்திருந்தது போன்ற உடையில் ஜிகினா பளபளக்க வியர்த்து வழிந்த சில பையன்களை பார்க்க நேர்ந்தபோது அவளுக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம்போல இருந்தது.

நடிகரைப் பார்ப்பதற்காக காத்து நின்றவர்களை அழைத்து உட்கார வைத்துக் கொண்டிருந்த ஒரு பணியாள் அவளையும் அங்கே வந்து அமருமாறு ஜாடை காட்டவும் அவளது எரிச்சல் அதிகமாயிற்று.

"நான் நடிகரைப் பார்க்க வரவில்லை. அவருடைய செகரட்டரியைச் சந்திக்க வந்தவள்" என்று கூறி, தன் விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்தாள்.

உடனே மந்திரம் போட்டாற்போல கேட்டருகே நின்ற கூர்க்கா, கேட் பில்லரின் உட்புறமாய் இருந்த டெலிஃபோனை எடுத்துப் பேசி, உள்ளிருந்து ஒரு பணியாள் ஓடி வந்து, கேட்டிலேயே அமைந்திருந்த சின்னக்கதவு வழியே அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

நீண்டு வளைந்து சென்ற காரோடும் பாதையின் இருபுறமும் சின்னச் செடிகளில் வண்ண மலர்கள் பூத்துக்

குலுங்கின. பரந்த பசிய புல்வெளி; நடுவிலே செய்குளம்; புல்வெளியின் இடையேயும் மலர்ச்செடிகள்; பக்கவாட்டில் பெரிய மரங்கள்; நடுவே பெரிய வீடு. அல்ல, மாளிகை! நடிகர் நிறையதான் சம்பாதித்து விட்டார் போல! இனி நம்பி வரும் அப்பாவிப் பெண்களின் நகைகளை அமுக்கத் தேவையிராது! மனதில் இருந்த கசப்பு நாவிலும் பரவினாற் போல உணர்ந்தாள் நித்யா.

எவ்வளவோ முயன்று மனதை வெறுமையாக்கி வைத்துக்கொண்ட போதும் போர்டிகோவிலிருந்து வரண்டாவுக்குச் செல்லும் பத்து படிகளை ஏறி முடிக்குமுன் அவளுக்கு வியர்த்து விட்டது.

வெளியே இத்தனை பேர் காத்துக் கிடக்கிறார்கள் என்றால் அவன் வீட்டில்தான் இருக்கிறான் என்றுதானே அர்த்தம்? இன்றே அவனைப் பார்க்க நேருமோ?

இதென்ன மடத்தனம் என்று இந்த படபடப்புக்காக அவளுக்குத் தன்மீதே கோபமும் வந்தது. இவனோடு ஒரு வாரப் பேட்டிக்கே துணிந்து வந்து விட்ட பிறகு அவனை இன்று பார்த்தால் என்ன? இன்னொரு நாள் பார்த்தால் என்ன?

படியேறி நிமிர்கையில் சுமார் நாற்பது வயது மதிக்கத்தகுந்த ஒருவர் எதிரே நின்றார். " வாருங்கள் நான் மிஸ்டர் பிரதீபனுடைய செகரட்டரி. பெயர் தேவசகாயம். கையில் கொஞ்சம் வேலை இருக்கிறது. நீங்கள் இங்கே சற்று நேரம் உட்கார்ந்திருக்கிறீர்களா?" என்று பக்கவாட்டில் உள்ள ஓர் அறைக்குள் அழைத்துச் சென்று சோபாவைக் காட்டினார்.

பின்னோடு வந்த ஒரு பையன் கண்ணாடித் தகடால் மூடிய ஒரு கண்ணாடித் தம்ளரை சோபாவின் எதிரே இருந்த டீபாயில் வைத்து விட்டுப் போனான்.

"ஜூஸ் சாப்பிடுங்கள். நான் இதோ வந்துவிடுகிறேன்" என்று வெளியேறினார் தேவசகாயம்.



முட்டி மோதிய எண்ணங்களைப் பிடிவாதமாக ஒதுக்க முயன்றவளாகப் பார்வையை அங்கும் இங்கும் ஓட்டினாள். ஆனால் பசேல் என்று சுவருக்கு சுவராகப் பரப்பட்டிருந்த பச்சை வண்ணக் கார்ப்பெட்டோ, பொருத்தமாகக் கிடந்த மங்கிய தங்கநிற வெல்வெட் உறையிட்ட சோபாக்களோ, ஆங்காங்கே அழகு மிளிர வைக்கப்பட்டிருந்த கலைப்பொருட்களோ கூடவே இதமான குளிரை நல்கிய ஏசியோ, எதற்கும் அவளை அமைதிப்படுத்தும் சக்தி இல்லாது போயிற்று.

இந்தப் பேட்டிக்குச் சம்மதித்துதானே, பேட்டி எடுக்கப் போகிறவள் நித்யா என்று அவனுக்குத் தெரியுமா?

ஏதோ பத்திரிகைப் பேட்டி இலவச விளம்பரம் என்று எண்ணியிருப்பான்; அவள் வந்து நிற்கையில் அவனுக்கு எப்படி இருக்கும்? ச்சு. . . அப்படி பெரிதாக எப்படி இருந்துவிடப்போகிறது? இந்த ஐந்து நீண்ட ஆண்டுகளில் அவன் வாழ்வில் அவளைப்போல எத்தனை பேரோ? அவள் பெயர் அவனுக்கு நினைவிருக்கிறதோ என்னவோ? அவள் முகம்கூட அடையாளம் தெரிகிறதோ என்னவோ?

சே. இதென்ன சித்திரவதை என்று கண்களைத் திறந்து பார்த்தபோது எதிரே அவன் நின்றான். ஜெயப்பிரதீபன்.

உதட்டோரம் ஒரு சிறு வளைவுடன், "பணத்துக்கு வலிமை அதிகம்தான்; இல்லையா? உன்னை என் வீட்டுக்கு இழுத்துவந்துவிட்டதே" என்றான் பிசிறற்ற குரலில்.

பிரமைதட்டினாற்போல அவனது நெடிய உருவத்தை விழித்த கண் விழித்த படி பார்த்திருந்தவளுக்கு மெல்லத்தான் அவன் பேச்சு உறைத்தது.

இல்லை. அவன் மறக்கவில்லை. நன்றாகவே நினைவு வைத்திருக்கிறான். அவள் முகத்தை மட்டுமல்ல எல்லாவற்றையுமே!

சற்று முன் நிராசையுற்று நொந்தவளுக்கு விசித்திரமான வகையில் இப்போதும் துன்பமாகத்தான் இருக்கிறது.

ஆனால் அவனுக்கு அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையா. என்னவோ, சாவதானமாக அவள் எதிரே வந்து அமர்ந்து, ஒரு சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டு, அவள் முன் இருந்த தம்ளரைக் காட்டி, "குடிக்கவில்லை, அன்னாசிச்சாறு உனக்குப் பிடிக்குமே?" என்று வினவினான்.

சட்டென ஏதோ நெருட, அவனை நிமிர்ந்து நோக்கினாள் நித்யா. "உங்களுக்கு நான் வருவேன் என்று தெரியுமா?" என்று வினவினாள்.

லேசான புன்னகையுடன் தோளைக் குலுக்கினான் பிரதீபன்.

"எப்படித் தெரியும்?" விடாமல் மீண்டும் கேட்டாள் அவள்.

மீண்டும் தோளைக் குலுக்கினான் அவன். "அப்படி ஒன்றும் உலகமகா ரகசியம் இல்லை. மணிகண்டன். அதுதான் உங்கள் எம்.டி. லயன்ஸ் கிளப் மீட்டிங் ஒன்றில் சந்தித்தபோது பத்திரிகை விற்பனை டல்லடிப்பது பற்றி கொஞ்சம் வருத்தமாகப் பேசினார். ஏதோ நம்மாலான உதவி என்று ஐடியா கொடுத்தேன்."

பார்வையை அவன் முகத்திலிருந்து அகற்றாமல், "ஆனால் நான்தான் பேட்டி எடுக்க வரவேண்டும் என்றது." என்று கேள்விக்குரலில் இழுத்தாள்.

ஆழமாக இருந்த புகையை நிதானமாக வெளிவிட்டான் பிரதீபன். "மிஸ்டர் மணிகண்டனுக்கு நான் எந்த விதத்திலும் கடன்பட்டவன் இல்லை. உறவு என்றும் உரிமை கொண்டாட முடியாது. பார்த்தால் சிரித்த முகமாய்ப் பேசுகிற அளவு, தவிர பெரிய நட்பு என்றும் சொல்வதற்கில்லை. சும்மா அவருக்கு நான் ஏன் உதவ வேண்டும்?"

அவன் உதவி உதவி என்றது ஆத்திரமூட்ட, " என்ன பெரிய உதவி? இது உங்களுக்கும் விளம்பரம்தானே" என்றாள் அவள் துடுக்காக.



அவன் சற்றும் அசையாமல், "அப்படி விளம்பரம் தேவையென்றால் ஏற்கனவே அதிக விற்பனை உள்ள பத்திரிகைக்கே இந்த பேட்டியைக் கொடுத்திருப்பேனே. பணமும் தந்து சலாம் போட்டு வாங்கிப் போயிருப்பார்கள்" என்றான்.

அவன் சொல்வது உண்மையே என்பது புரிந்ததால் அந்த பேச்சை விடுவது. "அப்படி நிபந்தனையிட்டு என்னை வரவழைக்கக் காரணம்?" என்று மிடுக்காகவே வினவினாள்.

அவளை ஒருதரம் ஏற இறங்க நோக்கினான் பிரதீபன் உன்மேல் எனக்கு காதல். உன்னை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் வரவழைத்தேன் என்றால் நம்புவாயா?" என்று பதில் கேள்வி கேட்டான்.

தயங்காமல், "இல்லை. நம்பமாட்டேன்" என்று திட்டவட்டமாகக் கூறித்தலையசைத்தாள் நித்யா.

"நான் சொல்கிற பதிலை ஒத்துக் கொள்வதாக இல்லை என்றால் ஏன் அனாவசியமாகக் கேள்வி கேட்கிறாய்?" என்று இடக்காகக் கேட்டான் பிரதீபன்.

"என்ன செய்வது?" என்று உதட்டைப் பிதுக்கினாள் நித்யா. "அரிச்சந்திரன் வாயில் பொய் வருவதற்குச் சமம் அல்லவா உங்கள் வாயில் மெய் வருவது" என்றாள் எகத்தாளமாக.

அவளைச் சற்று வெறித்து நோக்கி விட்டு, "எல்லாவற்றுக்குமே ஏதாவது விளக்கம் இருக்க முடியாதா நித்தி?" என்று தணிவான குரலில் வினவினான் பிரதீபன்.

அந்தக் குரலும், நித்தி என்ற அழைப்பும் அவனுள் ஏற்படுத்திய பாதிப்பைப் பிடிவாதமாக ஒதுக்கி, "சிறைச்சாலைக்குப் போய் அங்கிருக்கும் குற்றவாளிகளை விசாரித்துப் பாருங்கள். மிச்சம் மீதி இல்லாம அத்தனை பேருக்கும் ஏதாவது ஒரு விளக்கம் இருக்கத்தான் செய்யும்" என்றாள் நித்யா அலட்சியக் குரலில்.

பிரதீபனின் முகம் இறுகியது. "சிறைச்சாலையா? ஆமாம். அங்கேயும் சென்று பார்க்கத்தான் போகிறாய்.... என்ன அப்படி விழிக்கிறாய்? ஆண்டுக்கு ஒரு தரம் சிறைக்கைதிகளுக்கு இனிப்பு வழங்குவது என் வழக்கம். இந்த ஒருவார பேட்டியில் அந்த நாளும் அடக்கம். இந்த ஒருவாரமும் என்னை விட்டுப் பிரியாமல் ஒட்டிக்கொண்டு இருக்கப் போகிறவளாயிற்றே. அதனால் நீயும் சிறைக்கு வந்துதானே ஆக வேண்டும். அதைத்தான் சொன்னேன் பயந்துவிடாதே" என்று இறுக்கத்துடன் தொடங்கியவன் இலகுக் குரலில் கூறி முடித்தான்.

எவ்வளவு எளிதாகக் குரல் மாறுகிறது என்று அதையும் அவனிடம் கண்ட குற்றம் குறைகளுடனேயே இணைத்தாள் நித்யா. இதைப்போலத் தானே மனதையும் சுலபமாக மாற்றிக் கொள்கிறான். கண்ணில் படுகிற பெண்களை எல்லாம் கைகளுக்குள்ளும். அந்த சுந்தரி, அந்த ஜெயமாலினி... இந்த கூட்டத்தோடு அவளும்... சேச்சே.

"என்ன விஷயம்?" என்று பிரதீபனின் குரல் கேட்கவும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் நித்யா.

அவன் அவளையே பார்த்திருந்தது புரியவும் தடுமாறினாள்.

ஏன்? இவன் எப்படியோ போகட்டும் என்றுதானே விலகி ஒதுங்கிப் போனாள். மீண்டும் இழுத்து வைத்து வதைப்பானேன்?

அன்று 'நானாக இனி உன்னிடம் வரமாட்டேன்' என்றானே அதைப் பொய்ப்பிப்பதற்காகவா?

இல்லை... இல்லை. கட்டாயமாய் ஒருநாள் என் வீடு தேடி வருவாய்... இந்த பண்ணை, மிராசு, கவுரவம் என்பன எல்லாமே ஒன்றுமில்லை என்று உணர்ந்து நீ என்னிடம் வந்தே தீருவாய் என்று இறுமாப்புடன் கூறினானே அதை மெய்ப்பிப்பதற்காகவா? இருக்கும். அதற்காகத்தான் இருக்கும். பார்த்ததும் முதல் வார்த்தைகளாகச் சொன்னானே.



என்ன, இன்று இவனிடம் இருக்கும் பணத்துக்கு அந்தப் பண்ணை மிராசு எல்லாம் ஒன்றும் இல்லை என்று ஓடி வந்ததாக எண்ணிவிட்டானா? அல்லது பண்ணை மிராசுக்காகவே அன்று பிரிந்ததாக நினைத்தானோ?

என்றுமே நித்யா அந்தப் பண்ணை மிராசு பணத்தையோ, கவுரவத்தையோ பெரிதாக நினைத்தது இல்லையே. பள்ளியில்கூட அவளுடைய பிரியமான தோழி அவள் வீட்டு வயலில் கூலி வேலை செய்யும் பிச்சைக்கண்ணுவின் மகள் செல்விதான்.

ஒருவேளை நினைத்திருக்க வேண்டுமோ? நினைத்து அவற்றை மதித்திருக்க வேண்டுமோ? மதியாமல் அலட்சியம் செய்ததால் இழந்தவை எத்தனை? சிறப்பிழந்து, செல்வம் இழந்து, பேணி வளர்த்த பெற்றோரை இழந்து...

ஊஹூம். இந்த மாதிரி நெஞ்சைக் குத்திக்கிளறி ரணமாக்கிக் கொள்வது மதியீனம். அது இன்னமும் ரத்த களரி ஆகாமல் தடுப்பதுதான் முக்கியம். தடுத்தாக வேண்டும்.

இவனுக்கு நூலளவும் இடம் கொடாமல், இது வரை சற்றும் உணர்ச்சிவசப்படாமல் செய்து முடித்த பல அசைன்மெண்ட்கள் போல இதையும் செய்து முடித்துவிட்டு ஒதுங்கிக் கொள்வதுதான் கொஞ்சமேனும் புத்தியிருப்பதன் அடையாளம் என்று முடிவு செய்தபோதே உள்ளத்தின் ஒரு மூலையில் ஒரு சிறு முணு முணுப்பு கேட்டது.

வேலைகளை அவளாக உணர்ச்சி வசப்படாமல் செய்தாளா அல்லது அவளுக்கு உணர்ச்சிவசப்படும் சக்தியே அற்றுப்போயிருந்ததா?

சே, இந்த மனது ஒன்று. உடனிருந்தே கொல்லும் வியாதியாக வேண்டாத கேள்வி எல்லாம் கேட்டுக் கொண்டு, என்று வெறுப்பும் கோபமுமாக நிமிர்ந்தபோது ஏதோ பதிலுக்காக அவன் காத்திருப்பது புரிந்தது. எதற்கோ என்னவென்று கேட்டானே.

அது எப்படியோ போகட்டும். முதலில் அவனது பணத்துக்காக ஒன்றும் அவள் இங்கு ஆசையாக ஓடி வந்து விடவில்லை என்பதைத் தெளிவுபடுத்தி விட வேண்டும்.

"நான் ஒன்றும் இங்கே நானாக வரவில்லை" என்றாள் எடுப்பாக.

"அப்படியா? ஆனால் யாரும் இங்கே கயிறு கொண்டு கட்டி இழுத்து வரவில்லையே" என்றான் பிரதீபன் அசட்டையாக.

"கயிறு கொண்டு கட்டினால்தானா? இவள்தான் வரவேண்டும் என்று நிபந்தனையிடவில்லை?" என்று கோபத்துடன் தொடங்கியவள், கதவை ஒற்றை விரலால் தட்டிவிட்டு, தேவசகாயம் உள்ளே வரவும் பேச்சை நிறுத்திக்கொண்டாள்.

"சார், நீங்கள் சொன்ன மாதிரி எல்லா கால்ஷீட்டும் ஏற்பாடு செய்து விட்டேன். இன்று காலை ஷூட் . . ." என்றவரை இடைமறித்தான் பிரதீபன்.

"அது இருக்கட்டும், சகாயம் சார். முதலில் இந்த பத்திரிகை விஷயமாய் பேசி முடித்து அவர்களை அனுப்புங்கள்" என்று நித்யாவைக் காட்ட, தேவசகாயம் அவளிடம் திரும்பினார்.

முதல் முறை பார்த்தபோது அவனுக்கிருந்த பதட்டத்தில் நித்யா கவனியாதிருந்த ஒன்று இப்போது பளிச்சென்று அவள் மனதில் பட்டது.

இந்த தேவசகாயத்தின் முகம் அவளுக்கு ஏற்கனவே பரிச்சயமானது. யார், எங்கே என்று யோசித்தபடியே அவரை நித்யா நோக்க, அவர் முகத்தில் அந்த மாதிரி இனம் கண்ட அடையாளமே தெரியவில்லை. அவர் சலனமின்றித்தன் முதலாளி கூறிய வேலையைத் தொடங்கிவிட்டார்.

"இந்த ஞாயிறு மாலையிலிருந்து அடுத்த ஞாயிற்றுக்கிழமை முடிய இந்த பேட்டியை வைத்துக்கொள்ளலாம் என்று பிரதீபன் சார் முடிவு



செய்திருக்கிறார். உங்களுக்கு அந்த நேரம் சரிதானா?" என்று அவளிடம் வினவினார்.

இந்த ஞாயிற்றுக்கிழமையேவா? அவ்வளவு சீக்கிரமாகவா? "ஊகூம். . . இந்த வாரம் முடியாது" என்றாள் அவள் அவசரமாக.

தேவசகாயம் சற்று திகைப்புற்றவராகப் பிரதீபனைப் பார்க்க அவன் இலகுவாகக் கையசைத்தான். "எல்லாம் முடியும், சகாயம். அதை நாம் மணிகண்டனிடம் பேசி ஏற்பாடு செய்து கொள்ளலாம். மேலே சொல்லுங்கள்."

ஆத்திரத்துடன் அவனை உறுத்து விழித்தாள் நித்யா. இடுப்புக்குச் சீழே அடிக்கிறவன்! ஆசிரியரிடமே அவளால் மறுத்துப் பேச முடியாது. இவன் மானேஜிங் டைரக்டர் லெவலில் நிற்கிறானாக்கும்?

யார் முகத்தையும் பாராமல் கருமமே கண்ணாயினார் போன்று மேலே பேசினார் தேவசகாயம், "ஒரு வாரத்துக்கு வேண்டிய துணிமணிகளோடு நீங்கள் ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் இங்கே வந்துவிடலாம். உங்களுக்குத் தங்குவதற்காக இங்கே அறை ஒன்று ஏற்பாடு..."

"அதற்கு அவசியமில்லை. நான் தங்கப்போவது இல்லை" என்று சுருக்கமாக அறிவித்தாள் நித்யா.

கையிலிருந்த மீதி சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் அழுத்தி அணைத்தான் பிரதீபன். "வேலை முடிந்து நான் திரும்பி வர பத்து மணியும் ஆகலாம்; பனிரெண்டுமணியும் ஆகலாம். சில சமயம் ரிகார்டிங் முடிவதற்கு இரவு இரண்டு மணிகூட ஆகியிருக்கிறது. அதெல்லாம் உங்கள் பத்திரிகைப் பேட்டிக்கு அவசியம் இல்லாத விஷயங்களா? அல்லது அந்த நேரத்தில் உனக்காக உன் விடுதிக்கும் இங்கேயும் 'ஓட்டல்' அடிக்கச் சொல்கிறாயா? அல்லது அதற்கும் மேலாக நீ எக்கேடும் கெட்டு ஒழி என்று ஏதாவது வாடகை வண்டியில் ஏற்றிக் கைகளை விட்டுவிட வேண்டும் என்கிறாயா?"

அவன் சொல்வதும் சரிதான். உழைப்பு என்று வந்துவிட்டால் பிரதீபன் இரவு பகல் பார்க்கிறவன் இல்லைதான்.

அவன் பேச்சு சரியாய் இருப்பது அவளுக்கு இன்னும் எரிச்சலூட்டியது.

அதிலும் புரிந்துகொள்ள முடியாத முட்டாளுக்கு விளக்குகிற மாதிரியில் அவன் பேசிய தோரணை வேறு ஆத்திரமூட்ட, "நான் இங்கே தங்குவதானால் என் கவுரவத்துக்கு எந்தவிதப் பங்கமும் ஏற்படாது என்கிற உறுதி மொழி தர வேண்டும்" துணிவுடன் கூறிவிட்டாள்.

ஒரு கணம் பிரதீபனின் கண்களில் சீற்றம் ஜொலித்தது.

மறுவினாடியே அவன் முகம் மாறிவிட்டது. அலுப்புற்றாற்போலத் தோளை குலுக்கியவன், " இந்த வீட்டில் உன் கவுரவத்துக்குக் குறைவு வருவானேன்? அத்தோடு உன்னை ஒன்றும் தனியாக இங்கே வந்து தங்கச் சொல்லவில்லையே உனக்கு துணையாக – பாடி கார்ட் மாதிரி என்று வேண்டுமானாலும் சரி இன்னொருவரையும் அனுப்புவதாகத்தானே ஏற்பாடு? " என்றான் ரசனையற்றவன்போல.

ஏற்பாடா?

ஏற்கனவே இதுதான் ஏற்பாடு என்றால் சிவானந்தம் ஏன் முதலிலேயே அதைச் சொல்லியிருக்கக் கூடாது? அவள் அவ்வளவு வாதாடிய பிறகு ஏதோ சலுகை காட்டுகிற மாதிரி அல்லவா மனோகரை அழைத்துப் போகச் சொன்னார்!

அதுவும் மனோகரனை! பிள்ளைப் பூச்சியை மடியில் கட்டிக்கொள்கிற மாதிரி அவனது அறுவைப் பேச்சும் பார்வையும். அவன் வருகிறான் என்றாலே அலுவலகத்தில் அத்தனை பேரும் பிய்த்துக்கொண்டு ஓடுவார்கள். . . ஆக அதுதான் காரணமா?



இப்போது அவளை இங்கேகூட அனுப்புவது என்றால் அவளை விட்டு ஒதுங்கி எங்கே ஓடச் சொல்லுகிறார்? யாரிடம்?

என்னவோ, அவளது கண்களைக் கட்டிவிட்டு மற்றவர்கள் கண்ணாமூச்சி விளையாடுவதுபோல உணர்ந்தாள் நித்யா.

"ஞாயிறன்று மாலை இவர்களும் கூட போட்டோ ரொக்கரும் வருவார்கள் சகாயம் சார். நான் சொன்னது போல இருவருக்கும் அறைகள் ஏற்பாடு செய்துவிடுங்கள். இன்னும் பத்து நிமிடங்களில் நான் கிளம்புவதற்குக் கார் கொண்டுவரச் சொல்லுங்கள்" என்று கூறி அவரை அனுப்பிவைத்தான் பிரதீபன்.

கைப்பையை எடுத்துக்கொண்டு அவரைப் பின் தொடர முயன்ற நித்யாவை, "ஒரு நிமிடம்" என்று நிறுத்தினான்.

அவனுடைய செயலாளர் வெளியேறிக் கதவு சாத்திக் கொண்டதும் நித்யாவின் புறம் திரும்பினான். "சற்று முன் கவுரவத்தைப் பற்றி ஏதோ பேசினாயே. உன் கவுரவத்தைப் பற்றிய அக்கறை எனக்கு இராதா?" என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினான்.

இந்தக் கேள்வியைக் கேட்க இவனுக்கு நிரம்பவும்தான் திண்ணக்கம் இருக்க வேண்டும் என்று எண்ணியபடி, "ஏன் இருக்க வேண்டும்?" என்று திருப்பிக் கேட்டாள் நித்யா.

"ஏனா? மனைவியின் கவுரவம் பற்றிய பொறுப்பு கணவனுடையது என்பது உலக வழக்கம்" என்றான் பிரதீபன் அதே குரலிலேயே.

அதுவரை திரட்டி வைத்திருந்த திடம், இந்தக் கணவன் – மனைவி பேச்சில் நிலைகுலைந்துவிட, "நான். . . நான். . ." என்று தடுமாறினாள் அவள்.

நிதானமாக அவளது வாக்கியத்தை "என் மனைவி" என்று முடித்தான் பிரதீபன்.

## 3

அடுத்த இரண்டு நாட்களும் யாருடனும் இயல்பாகப் பேசிப்பழகும் நிலையில் நித்யா இல்லை.

சேலைகளைத் துவைத்து 'அயர்ன்' பண்ணவேண்டும், ஷாப்பிங் செய்ய வேண்டும்; அது இது என்று காரணம் காட்டி அலுவலகத்துக்கு இரண்டுநாள் மட்டம் போட்டுவிட்டு அறைக்குள்ளேயே முடங்கிவிட்டாள்.

நளாயினி என்று ஒருத்தி பொழுது மறையக்கூடாது என்று கதிரவனையே நடுவானத்தில் நிறுத்திவைத்தாள் என்று நித்யா படித்ததுண்டு.

பொதுவாக இந்த மாதிரி கற்புக்கரசிகளின் கதைகளில் நித்யாவுக்கு நம்பிக்கை கிடையாது. தன்னளவில் ஊரேயும் ஆண்கள், தத்தம் மனைவிமார் மட்டும் உண்மையானவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக கட்டி வைத்த வெறும் கட்டுக் கதைகள் என்பாள். ஆனால் இன்றளவில் நளாயினியின் சக்தி தனக்கில்லையே என்று ஏங்கினாள்.

அப்படி ஒரு சக்தி இருந்திருந்தால் அவளும் ஞாயிற்றுக்கிழமை விடியக்கூடாது என்று சூரியனை நிறுத்தியிருப்பாளே!

ஆனால் ஒன்று; நளாயினி ஆதவனை நிறுத்திவைத்தது கணவனைக் காப்பதற்காக; நித்யா பொழுதை நிறுத்த விரும்பியது அவனைக் காணாமல் இருப்பதற்காக ஆயிற்றே!

மனைவியாம் மனைவி!

ஆக அந்த வெண்ணிறக் காண்டசா பஸ் நிறுத்தத்தில் சற்றுத் தயங்கிவிட்டுச் சென்றதாக அவள் எண்ணியது



வெறும் கற்பனை அல்ல. கண்ணில் பட்டவுடன் காதல் மனைவி என்பது ஞாபகம் வந்து விட்டதாக்கும்!

மனைவி! அப்படிச் சொல்ல அவனுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்?

முதலில் அது கல்யாணமா என்பதே சந்தேகம். அதன்பிறகோ ஐந்து ஆண்டுகளாக அவள் இருக்கிறாளா அல்லது செத்த இடம் புல் முளைத்துவிட்டதா என்பது எதுவும் அவனுக்குத் தெரியாது. அதை அறிந்துகொள்ளும் அக்கறையும் இருக்கவில்லை. இன்றானால் கணவனாம் மனைவியாம். கவுரவம் காப்பது அவன் பொறுப்பாம்.

கவுரவம் காப்பது மட்டும்தான் கணவனின் பொறுப்பாமா? கஷ்டப்படும்போது துணை நிற்கவேண்டியது கணவனின் கடமை இல்லையாமா? இந்த ஐந்து ஆண்டுகளில் என்னென்ன வேதனைகள், எத்தனை இழப்புகள்!

அதிலும் மற்ற அத்தனை துன்பங்களிலும், தந்தை இறந்தபோதுகூட அவளுடைய தாயாரின் துணை இருந்தது. அந்தத் தாயும் மறைந்தபோது தன்னந்தனியாக அவள் எவ்வளவு வேதனைப்பட்டாள்!

தன் நெஞ்சறியப் பொய் சொல்வது சாத்தியமில்லை. ஓரிரு இரவுகளில் ஆறுதலுக்காக அவனது தோளுக்கு ஏங்கியே அழுதிருக்கிறாள். அந்த வெட்கம் கெட்ட ஏக்கத்துக்காக உள்ளூர மிகவும் அவமானப்பட்டும் இருக்கிறாள். அத்தனைக்கும் அவனையே காரணமாக்கி அவன் மீதிருந்த வெறுப்பை ஏற்றிக்கொண்டும் இருக்கிறாள்.

மனைவியாம்.

ஆனால் மனைவிதானா? கழுத்தைக் கை தானாக வருடிப் பார்த்த போது அங்கே தாலியில்லாதது மனதை நெருடியது. பழைய நினைவுகள் முட்டி மோதிக்கொண்டு நெஞ்சுக்குள் குமைந்தன.

எவ்வளவோ முயன்று பார்த்தும் அவற்றை ஒதுக்க முடியாமல் புலி தன் காயங்களை வலிக்க வலிக்க நக்குவது போலப் பழைய வேதனைகளைத் துடிக்கத் துடிக்க எண்ணிப் பார்க்கலானாள் அவள்.

அப்போது அவளுக்குக் கல்லூரியில் தேர்வுக்கு முன்னதாகப் படிக்கத் தந்திருந்த விடுமுறை நேரம். ஸ்டடி ஹாலிடேஸ்!

நித்யா படிப்பில் ஓரளவு கெட்டிக்காரி. கற்றுக்கொடுக்கும்போதே விஷயத்தை மனதில் கிரகித்துக் கொள்வாள். முதல் ராங்க் வாங்கவேண்டும் என்கிற கட்டாயம், உந்துதல் ஏதும் வீட்டில் கிடையாது. அவள் வாங்குகிற அறுபது சதவீதமே அங்கே பெருமைக்குரிய விஷயம். படிக்கவே தோன்றவில்லை வெறுமனே வீட்டினுள் அடைந்து கிடைந்தது போரடித்தது.

"நம் கிராமத்தில் படப்பிடிப்பு நடக்கிறது. வேண்டுமானால் செல்வியை அழைத்துக்கொண்டு போய் பார்த்துவிட்டு வாயேன்" என்று அனுப்பியவர் கண்ணபிரான்தான். அவளுடைய தகப்பனார்.

அங்கே தன் வரையில் ஒழுங்காக நடித்ததோடு, மற்றவர்களின் பிழைகளையும் திருத்தியபடி சிரித்த முகத்துடன் நின்ற அந்த நெடிய இளைஞனை அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. இரவெல்லாம் அவன் உருவம் ஏனோ கண்ணுக்குள் வந்து நின்று அவளைத் தூங்கவிடாமல் தொந்திரவு செய்தது.

மறுநாளும் சென்றாள். அன்று அவனளவில் ஓய்வுபோதும். மற்றவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டும், வெயிலின் வெக்கையில் களைத்தவர்களுக்குத் தண்ணீர், மோர் என்று ஊற்றிக்கொடுத்துக்கொண்டும் சுற்றியவன் கண்களில் அவள் பட்டாள். அவ்வளவுதான். கண்ணோடு கண்ணினை நோக்கிவிட்டபிறகு வேறு எதுதான் அசாத்தியம்? பெற்றவர்கள் கண்ணில் மண்ணைத் தூவுவதில்தான் எவ்வளவு உற்சாகம்!



ஒவ்வொரு நிகழ்ச்சியாக நினைவு வர, நினைவு வர அவளுக்கு நெஞ்சு வலித்தது இன்று. ஆனால் அன்று வீரதீர சாதனையாக அல்லவா இருந்தது!

தன் மனதைப்பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள நித்யாவுக்கு பதினைந்தே நாட்கள் போதுமானதாக இருந்தன.

ஆனால் பிரதீபன் ஆம், அவன் பெயரே பிரதீபன்தான். சினிமா ராசியாக முன்னே சேர்த்துக் கொண்ட கொம்புதான் அந்த 'ஜெய்' ஒன்றில் உறுதியாக இருந்தான். நித்யாவின் விருப்பப்படி அன்றே பெண் கேட்க வர மறுத்தான்.

"பரம்பரை பெருமை, சொத்து, பணம் என்று எதுவும் இல்லாத அனாதைப் பையன், இன்றளவில் தொழிலிலும் ஒரு நிலை வரவில்லை. அப்படி ஒருவன் திடுமென வந்து பெண் கேட்டால் உன் பெற்றோருக்கு எப்படி இருக்கும், நித்தி? பொறு. இந்தப் படம் முடியட்டும். பெரிய பானர். கதாநாயகன் வேடம் இல்லாவிட்டாலும் கதாநாயகனைவிட அதிகம் வருகிற, முக்கியம் வாய்ந்த பாத்திரம் எனக்கு. படம் வெளிவந்துவிட்டால் நன்றாக இருக்கும்" என்று அவன் கூறிய போது ஒரு பெண் வந்தாள். அவர்கள் இருவரையும் பார்த்ததும் திரும்பிச் சென்றாள்.

நித்யா நகர முயன்றபோது நிறுத்தி வைத்து, "இவள் என் செகரட்டரி தான். பயப்படாதே" என்று கூறவும் ஆச்சரியமாகப் பார்த்து, "பணம் காசு இல்லை என்கிறீர்கள். பந்தாவாய் செகரட்டரி எல்லாம் வைத்திருக்கிறீர்களே!" என்று விசாரித்தாள் நித்யா.

"அது ஒன்றும் பெரிய காரியம் இல்லை. ஆனால் நீ சொல்லுகிற மாதிரி பந்தாதான்" என்று வெண்பற்கள் தெரியச் சிரித்தான் பிரதீபன். "துணை நடிகன் என்றாலும் ஓரளவு படங்களும் வருமானமும் எனக்கும் உண்டுதான் நித்தி. சாப்பாட்டுக்குப் போதும். ஆனால் உன்னை நான்

வைத்துப் பார்க்க விரும்பும் சிறப்புக்குப் போதாது. அதோடு இந்தப் பெண் சந்தரிக்கும் முழுச்சம்பளம் நான் கொடுக்க வேண்டியது இல்லை இவளுடைய தகப்பனார்தான் இந்தப் படத்தின் ஹீரோ, ஹீரோயின் இருவருக்குமே கால்ஷீட் பார்க்கிறவர். மகளையும் இதே வேலையில் பழக்குகிறார் என்னுடையதையும் பார்த்துக் கொள்ளச் சொல்லி இருக்கிறேன்" என்று விளக்கினான்.

புரியாமல், "அதெப்படி ஒருத்தரே இரண்டுபேருக்கு வேலை பார்க்க முடியும்?" என்று விசாரித்தாள் நித்யா.

"கால்ஷீட்தானேம்மா அதைக் கூட இரண்டுபேருக்குப் பார்த்தால் எல்லோருக்கும் வசதிதான், ஒன்றுக்கு ஒன்று க்ளாஷ் ஆகாமல் இருக்கும்.

"என்னவோ போங்கள், ஒன்றும் புரியவில்லை, ஆனால் உங்கள் படம் எப்போது முடியும்? நேற்று ஒன்றுவிட்ட மாமா வந்தார். அவர் மகனுக்குப் பெண் வேண்டுமாம். எங்கள் வீட்டில் தான் அவர் இருக்கிறாராம். எனக்கு ஒரே பயமாக இருக்கிறது" என்று சிணுங்கினாள் அவள்.

அந்தப் பகுதியில் ஓரளவு செல்வம் மிகுந்த நிலச் சுவான்தாரரான கண்ணபிரானுக்கு நித்யா ஒரே மகள். பெண்ணோடு சொத்தும் வரும் என்கிற நிலைமை மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை உந்தியது.

இந்தச் சித்திரையில் முடித்து விடலாம் என்று வந்தவர்களைக் கண்டு நித்யா அரண்டுபோனாள்.

கடைசியாக அவளது வற்புறுத்தலின்பேரில், அந்தப் படத்திற்குக் கிட்டத்தட்டப் படப்பிடிப்பு முடிந்ததும், அதுவும் அவனது பாத்திரம் சற்றும் வெட்டுப்படாது என்கிற உறுதிகிட்டியதும் நித்யாவின் வீட்டுக்குப் பிரதீபன் வந்தான்.

வந்தவனை வெளிவராந்தாவில் தான் உட்காரச் சொல்லிப் பேசினார் கண்ணபிரான்.



அது வீட்டுத்தலைவர் அளவில் மட்டும் பேசி முடித்துவிட்டுப் போகிற வெளி ஆண்களுக்காகக் கட்டப்பட்ட பகுதி.

அதற்கு மேல்கூட கொஞ்சம் பழகிய, அல்லது உறவு என்றிருப்போரை மட்டுமே உள்ளே அடுத்த கட்டுக்கு அழைத்து வருவார் கண்ணபிரான்.

தன்னந்தனியே வந்து, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, தன் தொழில் நடிப்பு என்று கூறிய இளைஞனுக்கு இதுபோதும் என்பது அவர் கணிப்பு.

"ஏம்பா, பார்த்தால் படித்தவன் போலத் தெரிகிறாய், நடிப்புகிடிப்பு என்கிறாயே, நிலையாக ஒரு வேலை தேடிக் கொள்ளலாமில்லையா?" என்று இலவசமாக ஆலோசனையும் வழங்கினார்.

ஆனால் அவன் வந்த காரணம் அறிந்ததும் அவனை அடித்து விரட்டாத குறைதான். அவ்வளவு தூரம் அவமானபடுத்தி அனுப்பிவிட்டார்.

கால் காசுக்குக் கூத்தாடுகிற பயலுக்குச் சொத்தையும் பெண்ணையும் பார்த்ததும் நாவில் எச்சில் ஊறுகிறதாம்.

என்ன நியாயமற்ற பேச்சு சொல்லப்போனால் நித்யாவுடைய தந்தை ஓரளவு காசுக்காரர் என்பது அவனுக்குத் தெரிந்தே இராது. அவள் அதுப்பற்றி அவனிடம் பேசவே இல்லையே! அவனைப் போய் பணத்துக்காக வந்தவன் என்பதா? அல்லது அவளுடைய தந்தையின் பணம் இல்லாவிட்டால் நித்தியாவை யாரும் சீந்தமாட்டார்கள் என்பது அவரது கணிப்பா?

நல்லவேளையாகப் பிரதீபன் தானாக வந்து பெண் கேட்பது போலக் கேட்டானே தவிர நித்யாவை உட்படுத்திப் பேசவில்லை. அல்லது அவன் மீதும் கண்ணபிரான் பாய்ந்திருப்பார்.

நல்லவேளை, அப்பாவிடம் காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றினான் என்று அன்று உள்ளூர மகிழ்ந்தது முட்டாள்தனம் என்பது பிறகுதான் தெரிந்தது.

அவனைக் காட்டிக் கொடுத்திருந்தால் அவளுக்குக் காவல் ஏற்பட்டிருந்திருக்குமே!

இழுத்துக்கொண்டு ஓடாமல் நேர்மையாகப் பெண் கேட்க வந்த ஆசைக் காதலனுக்கு இழைக்கப்பட்ட அநியாயத்தை நித்யாவால் சகிக்க முடியவில்லை.

சமயத்தில் ஸ்டடி லீவும் முடிந்ததால் படிப்புக்கு என்று ஹாஸ்டலுக்குக் கிளம்பியவள் நேரே அவனிடம் சென்று விட்டாள்.

பிரதீபனுக்கு அதிர்ச்சிதான். தயக்கம்தான், "வேண்டாம்மா. உன் பெயர் கெட்டுவிடும்" என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். "வா. நானே உன்னைக் கொண்டுவிட்டு விடுகிறேன். என்னை அவமானப்படுத்தினாலும் பரவாயில்லை. வா என்று கூட சொன்னான்." அல்லது ஒரு நாள் தானே போனால் போகட்டும் ஓசைப் படாமல் ஹாஸ்டலுக்கே போ. படிப்பை முடி என்றெல்லாம் கூறினான்.

அவன் உண்மையாக சொன்னானோ அல்லது தன்னை உத்தமனாகக் காட்டிக்கொள்ள வேடமிட்டானோ? பின்னதுதான் காரணம் என்று பிறகு நித்யா புரிந்து கொண்டாள்.

ஆனால் அன்று பிரதீபன் தயங்கத் தயங்க நித்யாவின் பிடிவாதம் அதிகமாயிற்று. திரும்பிப் போகச் சொன்னால் எங்கேயாவது விழுந்து செத்துவிடப்போவதாக வேறு மிரட்டினாள்.

அசல் சினிமா கதாநாயகிதான்! நாயகனுக்கு ஏற்றவளாக இருக்க வேண்டாமா?



தற்கொலை என்ற மிரட்டலில் பிரதீபன் பணிந்தான் பணிந்த மாதிரி காட்டிக் கொண்டான்.

அப்புறம் யோசித்தான்.

என்ன யோசனை என்று விசாரித்தபோது, மிகவும் தயங்கி விட்டு, கையில் அதிகப் பணம் இல்லை, இந்த படபிடிப்பு முழுவதும் முடிந்த பிறகுதான் பணம் வரும், கையில் கொணர்ந்த பணம் கொஞ்சம் தான் இருக்கிறது. இப்போதையத் தேவைக்கும் போதாது என்றான். அவனது குறிப்பை உணராமல் அவள் கைச் செலவுப் பணத்தில் டாக்சிக்குச் செலவானது போக மீதியைக் கொடுத்தாள்.

அவன் லேசாகச் சிரித்தான். சிரிப்பு தானே வரும்.

மீண்டும் என்னவென்றபோது விவரம் சொன்னான்.

அவனும், அவளுமாக ஏதாவது ஓட்டலில் தங்கினால் பார்க்கிறவர்கள் தப்பாக, சீப்பாக நினைப்பார்கள். எனவே முதலில் ஒரு வீடு தேட வேண்டும். அதற்கு அட்வான்ஸ் கொடுக்கவேண்டும். அத்தோடு என்னதான் ஒருவருக்கு ஒருவர் என்ற முடிவுக்கு இருவரும் வந்துவிட்டாலும் திருமணம் என்று ஒன்று இல்லாமல் ஓர் இடத்தில் இருவருமாகச் சேர்ந்து வாழ்வது சரியில்லை. மஞ்சள் கயிற்றில் இரண்டு கிராம் தாலி என்றாலும் அதற்கும் பணம் வேண்டும். மாலை. அய்யர் அது இது என்று எத்தனையோ.

அவளே உள்ளூரச்சற்றுக் கலங்கி இருந்த விஷயம் இந்தத் திருமணம். நாம்பாட்டில் வந்துவிட்டோமே, திருமணம் ஆகாமலே தப்புத்தவறு நேர்ந்து விடுமோ என்று ஆவல் கலந்த ஒரு கலக்கம்.

இப்போது பிரதீபனே திருமணம் பற்றி பேசவும் சான்றாண்மையின் திருவுரு என்றே எண்ணிவிட்டாள்.

எனக்கும் உங்களுக்கும் அறிமுகம்கூட இல்லை என்று சொன்னுங்கள்" என்று கூறிச் சென்றார். தகராறுக்கு பயந்தவர்போலும்.

இது திருமணமா என்று உள்ளூறத்திகைத்தவள் திடீர் திருமணம் என்றால் இப்படித்தான் இருக்கும் என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

வயிற்றுக்குள் ஏதோ பிசைந்த போதும் மனதில் மகிழ்ச்சியாகவும் இருந்து. இப்போது அவள் பிரதீபனுடைய மனைவி என்று ஆகிவிட்டாளே!

மாலைகளைப் பிள்ளையார் பாதத்திலேயே வைத்துவிட்டு இருவருமாகச் சென்று சாப்பிட்டார்கள். போட்டோ எடுத்தார்கள்.

அவன் பார்த்திருந்த வீட்டுக்குச் செல்லும்போது சொன்னான். "ரொம்பவும் நட்பு, உறவு என்று எனக்கு இங்கு யாரும் இல்லை, நித்யா. என்னிடம் பிரியம், மரியாதை உள்ளவர்கள் படக்குழுவில் இருக்கிறார்கள்தான். ஆனால் இந்தத் திருமணத்துக்கு உதவுகிற அளவுக்கு வருவார்களா என்பது சந்தேகம்தான். உனக்கும் இன்னமும் பதினெட்டு முடியவில்லையா, யாருக்கும் தெரியாமலேயே இருக்கட்டுமே என்று முடிவு செய்தேன். அப்புறம், உன் நகைகளைக்கூட நான் விற்க வில்லை நித்தி. ஒருவரிடம் அடமானமாய் கொடுத்துவிட்டுப் பணம் வாங்கி வந்தேன். சென்னை சென்ற பின் பணம் எடுத்து திருப்பிவிடலாம்."

இதெல்லாம் அவளுள் கொஞ்ச நஞ்சம் எழுந்து தலைநீட்டிக் கொண்டிருந்த குறுகுறுப்பை நசுக்கவும், அவளைக் குஷிப்படுத்தவும் கூறப்பட்ட வார்த்தைகள் என்பது அன்று தெரியாததால் நித்யா அகமகிழ்ந்துதான் போனாள்.

ஒரு பெரிய வீட்டின் பக்கவாட்டில் பின்புறமாக அமைந்திருந்தது, பிரதீபன் வாடகைக்குப் பார்த்திருந்த அவுட் ஹவுஸ்!



கேட்டிலிருந்து அவுட் ஹவுஸ் செல்லும் வரை வைத்த கண் வாங்காமல் பார்த்த வீட்டுக்காரம்மாளின் பார்வையில் நித்யா அப்படியே குன்றிப் போனாள்.

வீட்டைத் திறந்து உள்ளே சென்றதும், அவளை அணைத்து ஆசுவாசப் படுத்தினான், பிரதீபன். "அவர்கள் வீட்டுக்கு புதிதாக குடி வருகிறவர்கள் எப்படி இருப்பார்கள் என்று பார்க்கத்தான் செய்வார்கள் இல்லையா? எப்படியோ, மிஞ்சி மிஞ்சி ஒரு மாதம் தானே. அப்புறம் சென்னைக்கு போய் விடலாம். அங்கே ஒரு ஃப்ளாட் நமக்கு இருக்கிறது. அங்கே போய் ஜாலியாக இருக்கப்போகிறோம்."

வெறும் பாயும் தலையணையும் தான் என்றாலும் பிரதீபனின் அணைப்பில் சொர்க்கபோகமாக தோன்றியது.

வீடு என்றால் ஓரளவு சின்னதான ஓர் அறையும், ஒட்டினாற்போல குளியலறை, டாய்லெட்டும், சமையல் செய்வதற்கு ஒரு மறைப்பும்தான்.

நல்லவேளையாக நித்யாவிடம் பிரதீபன் சமையலை எதிர்பார்க்க வில்லை. காலையில் எழுந்து குளித்து முடித்தால் அருகில் உள்ள ஓட்டலில் ஏதாவது உண்பதற்கு வாங்கி வருவான். அவளுக்கு மதிய உணவும் வாங்கி வந்துவிடுவான். கொறிப்பதற்கு ஏதாவதும், கொஞ்சம் பழங்களும், ஃப்ளாஸ்கில் காபியும் வாங்கிவருவான். காலை உண்டபின் வேலை என்று சென்றானென்றால் மாலை அல்லது இரவில் திரும்பி வரும்போது உணவை வாங்கி வந்துவிடுவான்.

"நீ சமைப்பது என்றால் பாத்திரம் பண்டம் என்று நிறைய வாங்க வேண்டியிருக்கும், நித்யா. நம் வீட்டுச் சாப்பாட்டின் ருசியைச் சென்னை சென்று பார்த்துக்கொள்ளலாம்." என்றவன் கண்சிமிட்டி, "உப்புக்கும் சர்க்கரைக்கும் வித்தியாசம் தெரியுமில்லையா?" என்று கேலி பேசிச் சிரித்தான்.

இந்த ஏற்பாடு நித்யாவுக்கும் நிம்மதிதான். ஏனெனில் அவளுக்கு இந்தச் சமையல் கிமையல் ஒன்றும் தெரியாது.

"பெண்ணாய்ப் பிறந்தவள் சமைக்கத் தெரியாமல் இருக்கக் கூடாதடி. ஒரு சோறு, ரசமாவது படித்துக்கொள்" என்று அவளுடைய அம்மா புவனம் விடுக்கு விடு கெஞ்சுவாள்.

"போங்கள் அம்மா, எல்லாம் படிப்பு முடிந்த பின் ஒட்டு மொத்தமாகக் கற்றுக் கொள்கிறேன்" என்று நழுவி விடுவாள் நித்யா.

அன்னையின் நினைவு வந்ததும் நித்யாவுக்கு மனம் கலங்கிப் போயிற்று. பாவம், கல்லூரியில் தேர்வு எழுதிக் கொண்டு இருப்பாள் மகள் என்று எண்ணிக் கொண்டு இருப்பார்கள். இவளானால் இங்கே காதலனோடு... இல்லை கணவனோடு குடித்தனம் நடத்திக் கொண்டு இருக்கிறாள்!.

நேரடியாக நித்யாவிடம் சொல்லாவிட்டாலும் மகளின் திருமணத்தைப் பற்றி அன்னைக்கு ஆயிரம் கனவுகள் உண்டு என்று அவளுக்குத் தெரியும். அந்தக் கனவுகளைப் பாழாக்கியது பாவமில்லையா?

மகள் வீட்டை விட்டு வெளியேறி விரும்பியவனை ரகசியத்திருமணம் செய்து கொண்டாள் என்பது வெளிவரும்போது ஊரில் பெரியதனக்காரரான தந்தை தலைகுனிய நேரிடுமோ? வம்பு பேசுகிறவர்கள், திருமணம் செய்துகொண்டாள் என்றா சொல்லப் போகிறார்கள்? ஓடிப்போய் விட்டாள் இவர்மகள் என்று அசிங்கமாய்த்தான் பேசுவார்கள்.

இந்த மாதிரி நினைவுகள் நித்யாவின் மனதை வெகுவாக வாட்டத் தொடங்கின.

பிரதீபன் அருகில் இருந்தால் அவளது முகமாறுதலில் இருந்தே ஊகித்து மனம் உற்சாகம் கொள்ளும்படி ஏதாவது பேசுவான், சிரிப்பான், அவளையும் உடன் சிரிக்க வைப்பான்.



ஆனால் அவன் அருகில் இல்லாத வேளைகளில் அவள் தவியாய்த் தவித்துப்போவாள். அதுவும் பகல் முழுவதும் வேறு வேலையின்றித் தனியாக இருக்க நேர்ந்தபோது இந்த நினைவுகள் அடிக்கடி வந்து அவளை அலைக்கழித்தன.

மாலையில் அவன் வந்ததும் எல்லாம் மாறிவிடும். அணைத்து, கொஞ்சி எப்படியும் தேற்றிவிடுவான்.

ஒரு நாள் மட்டும் அவனை நித்யா தேற்றும்படி ஆயிற்று.

அங்கு குடியேறிய மூன்றாம் நாள், இரவு பிரதீபன் திரும்பி வர வெகுநேரம் ஆயிற்று. நித்யா இங்கிருந்த அவனுக்கு என்ன ஆயிற்றோ, ஏதும் விபத்தோ என்னவோ என்று தவியாய் தவித்த போது சோர்வுடன் வந்து சேர்ந்தான் வழக்கம் போலப் பேசவும் இல்லை.

நித்யா வற்புறுத்தி விவரம் கேட்ட போது, "உன் நகைகளை ஓர் இடத்தில் அடமானம் வைத்ததாகச் சொன்னேனில்லையா, அங்கே அந்த நகைகள் திருட்டுப் போய் விட்டன." என்றான் அவன் மிகுந்த வருத்தத்துடன்.

அப்பாடி, நகைதானா என்றிருந்தது நித்யாவுக்கு.

"போனால் போகிறது, விடுங்கள்" என்றவள் யோசித்து "ஆனால் தீபன், அடமானம் வைத்த பொருளைத் திருப்பிக் கொடுப்பது அவர்கள் பொறுப்பு தானே? இல்லாவிட்டால் பெறுமானத்தைத் தந்துவிட்டுப் போகிறார்கள். இதற்குப் போய் அப்படி வருத்தப்படுகிறீர்களே" என்றாள் அவள் இலகுவாக.

"அப்படி இல்லை நித்யா. இவர்கள் மிகவும் வேண்டியவர்கள். நான் ஒரு நடிகனாகக் கால் ஊன்ற முடிந்ததே இவர்களால்தான் எனலாம். நகை அடமானம் எல்லாம் வேண்டாம் சும்மா பணத்தைக் கடனாக வாங்கிப்போ என்றார்கள். நான்தான் சும்மா பணம் வாங்கிவரப் பிடிக்காமல் நகைகளை வைத்துவிட்டு

வந்தேன். இப்போது போய், உங்கள் வீட்டுத் திருட்டைப் பற்றி எனக்கென்ன, என் நகையைக் கொடுங்கள் என்று எப்படிக் கேட்பது? ஆனால், நித்யா, நான் சம்பாதித்து உன் நகைக்கும் மேலாக உனக்கு நிறைய நகைகள் வாங்கித் தருவேன். நிச்சயமாய் நித்தி. நித்தி. நீ என்னை நம்புகிறாயில்லையா?" என்றான் பிரதீபன் உருக்கமான குரலில்.

அவன் அருகில் இருக்கும்போது நித்யாவுக்கு அவனது தொழிலே நடிப்புதான் என்பது அடியோடு மறந்து போய்விடுமே நம்பினாள். முழுமையாக நம்பினாள். இடி வந்து தலையில் நேராக இறங்கும் வரையில் நம்பிக் கொண்டே இருந்தாள்.

## 4

ஓர் ஆறு நாட்கள் இவ்விதமாக கனவுபோல கழிந்துபோயின. பகலெல்லாம் குற்றக் குறுகுறுப்பிலும் பெற்றோர் நினைவிலும் தன்னந்தனியே அவள் தவியாய்த் தவிப்பதும், பிரதீபன் திரும்பி வந்ததும் அவன் அணைப்பில் உலகையே மறப்பதுமாக நித்யா வயதில் ஆறு நாட்கள் ஏறிப்போயின.

இடையில் அவளது பிறந்த நாளும் வந்து போயிற்று. இரவில் பேச்சு நடுவில் சொன்னபோது, காலையிலேயே ஏன் சொல்லவில்லை என்று அவனுக்கு ஒரே கோபம். அந்த நேரத்தில் மீண்டும் வெளியே சென்று இனிப்பு வாங்கிவந்து அவளை உண்ணவைத்தான். நாவைவிட நெஞ்சில் அதிகம் இனித்தது.

ஏழாவது நாள் பிரதீபன் வேலையென்று வெளியே சென்று ஒரு மணி நேரம் இருக்கும். வாயிற்கதவு தட்டப்படும்



சத்தம் கேட்டு, சற்று பயத்துடன் சன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் நித்யா.

அந்தப் பெண். அன்று படப்பிடிப்பில் தன் செகரட்டரி என்று பிரதீபன் குறிப்பிட்ட பெண் சுந்தரி.

நித்யா கதவைத் திறந்ததும் உள்ளே வந்த சுந்தரி, ஒரேடியாக அழத் தொடங்கிவிட்டாள்.

சும்மாவே சுந்தரியைக் கண்டதும் நித்யா சற்றுக் கலங்கியிருந்தாள். யாருக்குமே சொல்லவில்லை என்று இருக்கும் நிலையில் வீடு தேடி அவனுடைய செகரட்டரி வந்திருக்கிறாள் என்றதுமே பிரதீபனுக்கு என்னவோ ஆபத்து என்று பயந்துவிட்டிருந்தாள் நித்யா.

இப்போது அவள் ஒரேடியாக அழவும் அரண்டுபோனாள். "அ- அவருக்கு என்ன ஆ—ஆயிற்று" என்று சிரமப்பட்டு வினவினாள்.

சுந்தரியின் அழுகை நின்றது. விழிகளை விரித்து நித்யாவைப் பார்த்து விட்டு, "யாருக்கு?" என்று விசாரித்தாள். ஆக யாருக்கும் எதுவும் இல்லை. அதிலும் பிரதீபனுக்கு ஒன்றுமில்லை என்பது தெளிவாயிற்று.

ஆசுவாசமாய்ப் பெருமூச்சு விட்டுவிட்டு, " நீ ஏன் அழுதாய்?" என்று வந்தவளை விசாரித்தாள் நித்யா.

மீண்டும் சுந்தரியின் உதடு பிதுங்கவும், "இதோ பார், முதலில் விஷயத்தைச் சொல்லிவிட்டு அழு. அதற்கும் முதலாக அந்த பாத்ரூமில் தண்ணீர் சூடாய் இருக்கிறது. அங்கே போய் முகம் கழுவிவிட்டு வந்து, விஷயம் என்ன என்பதை அழாமல் நிதானமாகச் சொல்லு" என்றாள் சற்று எரிச்சலுடனேயே. சும்மாவே ஏதேதோ எண்ணிக் கலங்கித் தெட்டபவளை அவசியமற்றுப் பதறவைத்துவிட்டாளே என்கிற ஆத்திரமும் நித்யாவுக்கு.

ஆனால் நீர் ததும்பும் விழிகளோடு, அவளது கைகளைப் பற்றிக் கொண்டு, "மேடம், எனக்கு நீங்கள்தான்

உதவி செய்யவேண்டும், மேடம். இல்லையானால் நான் செத்துதான் போவேன் மேடம்" என்று அந்தப் பெண் சுந்தரி கெஞ்சியபோது அவளுக்கு பாவமாகவும் இருந்தது.

சற்று யோசித்துவிட்டு, "இங்கே உட்கார்" என்று பாயைக் காட்டிவிட்டு, ஃப்ளாஸ்கில் இருந்த காபியில் ஒரு கப் ஊற்றிக் கொண்டுவந்து கொடுத்து குடிக்கச் சொன்னாள்.

பிறகு விவரம் கேட்டாள்

"என் திருமணத்தை பாஸ் நிறுத்தப் பார்க்கிறார் மேடம். நீங்கள்தான் அவரிடம் சொல்லி என் திருமணத்தை நடத்தி வைக்கவேண்டும்" என்று முதலில் அவள் சொன்னபோது நித்யாவுக்கு விஷயம் தலைகால் புரியவில்லை.

இந்தப் பெண்ணின் திருமணத்தைப் பிரதீபன் ஏன் நிறுத்த வேண்டும்? அவனால் எப்படி நிறுத்த முடியும்? மிஞ்சிமிஞ்சி வேலையை விட்டு நிறுத்த முடியும். அதுகூடப் பார்ட் டைம் வேலைதான். அந்த வேலை போவதால் இவள் திருமணம் எப்படி நிற்கக்கூடும்?.

மேலும் பேச்சுக் கொடுத்ததில் முழுவிவரமும் தெரியவந்தது.

சுந்தரியுடைய அத்தை மகன் மோகன். ஆள் அழகாக ராஜாமாதிரி இருப்பான். சுந்தரிக்கும் அவனுக்கும் ஒருவர் மீது ஒருவருக்கு உயிர்க்காதல். ரோமியோ ஜூலியட் மாதிரி உயிரை விடவும் ரெடி என்கிற மாதிரி காதல்.

எங்களுடையது போல என்று உள்ளூரப் பெருமிதத்துடன் நினைத்தபடி மேலே விஷயத்தை கிரகித்தாள் நித்யா.

சொந்த அக்கா மகன் என்பதால் சுந்தரியுடைய அப்பாவுக்கும் இது பிரியம்தான். உறவு எல்லோரும் ஒப்பித் திருமணம் நிச்சயமாகி இருந்த வேளையில் பிரதீபன் குறுக்கிடுகிறானாம்...



சற்றுத் தயங்கி நத்தையாய்ச் சுருங்கப் போனவளை மீண்டும் பேச வைத்தாள் நித்யா.

சுந்தரியுடைய தந்தைக்குப் பிரதீபனிடம் மிகுந்த மரியாதையும் பிரியமுமாம். எனவே, சுந்தரிக்கு இந்த மாப்பிள்ளை வேண்டாம் என்று. அவன் சொன்னான் என்று திருமணத்தை நிறுத்தப்போவதாகச் சொல்லிவிட்டாராம். இப்போது பிரதீபனாக வந்து அவரிடம், இந்தத் திருமணம் நடக்கட்டும் என்று சொன்னால் தவிர, இந்தக் கல்யாணம் நடப்பதற்கு வழியே இல்லையாம். ஆனால் ஒன்று. இந்த திருமணம் மட்டும் நடக்கவில்லை என்றால் அவள் கண்டிப்பாக உயிரை விட்டுவிடுவதாக இருக்கிறாளாம்.

உயிரை விடுகிறவள் இப்படி விளம்பரப்படுத்திக் கொண்டா விடுவாள் என்று நினைத்த நித்யாவுக்கு ஒன்றும் புரியவில்லை. பிரதீபன் ஏன் இந்தத் திருமணத்தைத் தடுக்க வேண்டும்?

"அது– அது எனக்கும் புரியவில்லை மேடம் முதலில் நினைத்தேன் என்னை அவரே– அவரே."

உதட்டைக் கடித்துக்கொண்டு நித்யா பேசாதிருக்க, சுந்தரி தொடர்ந்தாள். "ஆனால் உங்களை இங்கே வைத்துக் குடித்தனம் தொடங்கிய பிறகும் ஏன் இப்படிச் செய்கிறார் என்று எனக்குப் புரியவில்லை, மேடம்" என்றாள் அவள் சோகமாக.

யோசனையோடு சுந்தரியைப் பார்த்தாள் நித்யா. "இந்த- இந்த வீடு உனக்கு எப்படித் தெரியும் வேறுயாருக்காவது தெரியுமா?" என்று விசாரித்தாள். அவள் யாரிடமும் சொல்லவில்லை என்றாளே.

"அதுவா மேடம்?" என்று உற்சாகத்துடன் விவரித்தாள் சுந்தரி "அன்றைக்கு இந்தப் பக்கம் என் கிளாஸ் மேட் ஒருத்தியைப் பார்க்க வந்தேனா?– அவளுக்கு இங்கேதான் மணமாகி இருக்கிறது மேடம். அவளைப் பார்க்க வந்தேனா?

பிரதீபன் சார் அவசரமாக இந்த வீட்டுக்குள் செல்லுவதைப் பார்த்தேன். அப்புறம் நீங்கள் இரண்டு பேரும் வெளியே வந்து மூலைக் கடையில் ஜூஸ் குடித்தீர்கள்" என்றாள், துப்பு துலக்கிவிட்ட பெருமையுடன். உடனேயே, "வேறே யாருக்கும் நான் சொல்லவில்லை மேடம். சாரும் சொன்ன மாதிரி தெரியவில்லை. ஆனால் ஜெயநளினா மேடத்துகிட்ட சாருக்கு ரகசியம் கிடையாது–" என்று தொடர்ந்து கூறியவளுக்கு குப்பென வியர்த்து, "என்று.. என்று மற்றவர்கள்–வந்து– சிலபேர் பேசிக்கொள்வார்கள்–" என்று உளறிக் கொட்டி கிளறி மூடினாள்.

எந்த ஜெயநளினா என்று நித்யா கேட்கவில்லை. அன்றைய முன்னனி நட்சத்திரங்களில் அவள் ஒருத்தி என்பது அவளும் அறிந்த விஷயம்தான். சற்று தாராளமாகக் காட்டி நடிப்பவள். ஆனால் அவளுக்கும் பிரதீபனுக்கும்– ஊகூம்– அதெல்லாம் தவறாக ஒன்றும் இராது என்று தனக்குள்ளேயே உறுதி கூறிக்கொண்டவள், மீண்டும் சுந்தரியிடம் கவனத்தைத் திருப்பினாள்.

"மேடம், எப்படியாவது சாரிடம் சொல்லி என் திருமணத்தை நடத்தி வையுங்கள் மேடம்" என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள் அவள்.

நடிப்புக் காட்சிகளை அடிக்கடி பார்த்ததாலோ என்னவோ, முகத்தில் சற்று அதிகப்படி சோகத்தைக் காட்டி அவள் கெஞ்சிய விதம் நித்யாவுக்குச் சிரிப்பு மூட்டியது.

உடனேயே, தானும் இப்படிச் சிறுபிள்ளைத் தனமாகத்தான் நடந்து கொண்டுவிட்டோமோ என்று கலக்கமும் தோன்றியது.

அதை மறைத்து, தன்னால் முடிந்ததைச் செய்வதாக சுந்தரியிடம் உறுதிகூறி, அவளை அனுப்பிவைத்தாள்.

ஆனால் சாரிடம் சொல்லித் திருமணத்தை நடத்தி வைக்கும் வாய்ப்புதான் அவளுக்கு கிட்டாமலேயே போயிற்று.



அவன் அன்று இரவு வீட்டுக்கு வரவே இல்லை. ஆனால் மகா உத்தமமாய் வேலையிருப்பதாகவும் அனேகமாக வேலை முடிய நள்ளிரவுக்கு மேல் ஆகிவிடும் என்றும், அதற்கு மேல் வீட்டுக்காரர்களை எழுப்பி, கேட்டைத் திறக்கச் சொல்வது சரியில்லை என்பதால் அதிகாலையில் பால் வண்டி வரும் நேரத்துக்கு வந்துவிடுவதாகவும் கூறினான்.

இரவு பிரதீபன் வராதது வேதனையாக இருந்தபோதும், பிறருக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பாத அவனது பண்பு குறித்து அவளுக்குப் பெருமையாகவும் இருந்தது. டெலிஃபோனுக்காக அழைத்து வந்து, தன் வட்ட விழிகளை விரித்து அவளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த சிறுமியிடம் புன்னகையுடன் நன்றி கூறி விட்டுத் தன் இருப்பிடம் மீண்டாள்.

நல்லவேளை வீட்டுக்கார அம்மாள் இல்லை. அந்த அம்மாளின் பார்வையிலேயே உடல் குன்றிப் போயிருக்கும்.

இருட்டில் எல்லாமே சற்று அதிகப்படி தீவிரத்துடன் தெரியும் என்பார்கள்.

மெய்யே போல இருளின் தனிமையில் நித்யாவுக்கும் தனது செயல் மிகவும் அடாததாகத் தோன்றலாயிற்று. பெற்று வளர்த்த பெரியவர்கள் அறியாமல் ஒரு பெண், மிஞ்சி மிஞ்சி முப்பது நாட்கள் அறிந்திராத ஒருவனை நாடிவந்து அவனோடு குடும்பம் நடத்துவது எவ்வளவு பிசகான காரியம்.

அவனது சொந்த வாழ்வு பற்றி அவளுக்கு என்ன தெரியும்?

அவன் கொலை, கொள்ளை செய்த கொடியவனாக இருக்கலாம். போதை மருந்து உட்கொள்கிறவனாக இருக்கலாம்.

பெண்களை ஏமாற்றி சிவப்பு விளக்குப் பகுதிக்குக் கொண்டு சென்று விற்கும் கயவனாக இருக்கலாம்…

குறைந்த பட்சம் தேன் உண்டபின் உதறிவிட்டு அடுத்த மலருக்குத் தாவும் காமுகனாகக் கூட இருக்கலாம்…

நித்யாவுக்கு நெஞ்சு படபடென்றது.

இன்று அந்த சுந்தரி கூடச் சொல்லவில்லையா? முதலிலே அவனைப் பிரதீபனே… என்று நினைத்ததாக. காரணம் ஒன்றும் இல்லாமல் அப்படி சும்மா நினைக்கத் தோன்றுமா?

அப்புறம் இடையில் ரகசியமே இல்லாத அந்த ஜெயநளினா…

கடவுளே நின்று ஆராய்ந்து யோசியாமல் எப்படிப்பட்ட இக்கட்டில் வந்து சிக்கிக் கொண்டாள்!

அவளிடம் சலிப்பு வந்து பிரதீபன் அவளை உதறிவிட்டால் பிறகு அவள் கதி என்ன? இனி எந்த முகத்தை வைத்துக்கொண்டு அவளுடைய பெற்றோரை நாடிப் போகமுடியும்? அவர்கள் முகத்தைப் பார்த்து எப்படிப் பேசமுடியும்?

முதலில் அவளுடைய அருமைத் தாய்-தந்தைக்கு அவள் எப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகம் செய்திருக்கிறாள். அவர்களுக்கு விஷயம் தெரியும்போது எப்படி துடித்துப் போவார்கள்? இத்தகைய பெரிய பாவத்துக்குத் தண்டனை தராமல் கடவுள் எப்படிச் சும்மா விடுவார்?

இரவெல்லாம் ஒரு பொட்டுக் கண் மூட முடியவில்லை அவளால்.

நாளைக்கு பிரதீபன் வந்ததும் முதலில் திருமணத்தை ரிஜிஸ்டர் பண்ண வேண்டும். அப்புறம், இந்த ரகசிய வாழ்க்கையை விடுத்து, அவர்கள் விஷயத்தைப் பகிரங்கபடுத்த வேண்டும்.



உருண்டு புரண்டுகொண்டு இருந்தவள் திடுமெனக் கதவை யாரோ தட்டவும் அதிர்ந்து போனாள் யார் யார் எனுமுன் குரல் நடுங்கியது.

"எல்லாம் நான்தான்" என்றது வீட்டுக்காரம்மாளின் பொறுமையிழந்த குரல் "சீக்கிரம் வா. உனக்கு ஃபோன் வந்திருக்குது. நட்ட நடு ராத்திரி என்கிற புத்திகூட இல்லாமல் யாரோ கூப்பிடுகிறாங்க நாளைக்குப் பேசன்னிருப்பேன். ஏதோ ரொம்பவும் அவசரமாம். சீக்கிரம் வா. வந்து சட்டுபுட்டென்று பேசி முடித்துவிட்டுப் போ" என்றாள் அவள், எரிச்சலுடன்.

அந்த 'ரொம்ப அவசரமா' வில் நித்தியா மீண்டும் அதிர்ந்தாள்.

சற்றுமுன் பிரதீபனைச் சந்தேகப்பட்டதெல்லாம் மறந்து போயிற்று. அவனுக்கு ஏதோ ஆபத்து என்று பதறி கலங்கி போனாள்.

உடம்பு பதற, உள்ளம் நடுங்க ஊரில் உள்ள அத்தனை தெய்வங்களையும் வேண்டியபடி ஓடிச்சென்று ரிசீவரை எடுத்தாள் நித்யா.

மறுமுனையிலிருந்து ஒரு பெண் பேசினாள். கசமயக்கத்தில் அவள் குரல் சொக்கியது.

"ஹலோ…ஃ…"

சற்றுத் திகைத்துவிட்டு, " நான்… நான் நித்யா பேசுகிறேன்." என்றாள் நித்யா.

"தெரியும்… தெரியும்… நான் தானே உன்னைக் கூப்பிடச் சொன்னேன். எதற்குக் கூப்பிட்டேன்… ஆங்… இதோ பார்…? நான் யார் தெரிகிறதா? ஜெயநளினா. என்னுடன் பேசுவதற்கே உனக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். லக்கி கேர்ள். ம்… நான் ஏன் கூப்பிட்டேன் என்றால், தூக்கம் தூக்கமாக வருகிறதா, எல்லாம் மறந்து போகிறது… நான்."

ரிசீவரைக் காதிலிருந்து சற்று அகற்றி வெறுப்புடன் பார்த்தாள் நித்யா. தன்னைப் பெரிய ராணியாக

நினைக்கும் ஜெயநளினாவுடன் பேச அவளுக்குப் பிரியம் இல்லை. ஆனால் வைத்து விடவும் துணிவு வரவில்லை. பிரதீபனைப் பற்றி ஏதும் சேதியிருந்தால்?

இடையில் ரகசியமே இல்லாத ஜெயநளினா என்று சுந்தரியின் குரல் அநியாயமாக மனதில் கெக்கெத்தது.

பல்லைக் கடித்துக் கொண்டு மீண்டும் ரிசீவரைக் காதருகில் கொண்டு சென்றாள்.

"ஏய். அங்கே இருக்கிறாயா, இல்லையா? ஓர் உம் போடக்கூடவா தெரியாது?" என்று அதட்டியது ஜெயநளினாவின் குரல்.

"இருக்கிறேன்" என்றாள் நித்யா சுருக்கமாக.

"ம். நான் எதற்குக் கூப்பிட்டேன் தெரியுமா?"

"நீங்கள் இன்னும் சொல்லவில்லை" என்றாள் நித்யா, எரிச்சலை அடக்கிய குரலில்.

"ஆமாம். சொல்லுமுன் தூக்கம் ஆ- அதுதான் தூக்கம் பார், பிரதீபன் இப்போதுதான் இங்கிருந்து கிளம்பி வருகிறார். அவருக்கு நன்றாகத் தூங்குவதற்கு வசதி செய்துவை. அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன். ஒரு பத்து நாட்களாகச் சேர்ந்திருக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதா, இன்று இருவருக்குமே தூங்க முடியாமல் போய் விட்டது. வேறு எதுவும் இல்லாமல் அந்த செம்புக் கல் அட்டிகை மட்டும் போட்டால் என்னைவிட்டுப் பார்வையை எடுக்கவே முடியவில்லையாம் அவருக்கு. கடைசியாக இரண்டு பேருக்கும் தூக்கம் கோராகயா" என்று கிண்கிணியாய்ச் சிரித்தாள் ஜெயநளினா.

நித்யா உறைந்துபோய் நிற்க, அவளே மீண்டும் தொடர்ந்தாள்.

"நான் பகல் முழுவதும் தூங்கப் போகிறேன். அவரையும் தொந்தரவு பண்ணாமல் தூங்கவிடு- புரிந்ததா?- சரி மேடம் என்று பதில் சொல்லக்கூடவா தெரியாது? சனியன்." என்று தெளிவாக முணுமுணுத்தபடியே ரிசீவரை வைத்தாள் ஜெயநளினா.



அங்கே க்ளிக் சத்தம் கேட்டுத் தொடர்பு அறுந்த பிறகும் ரிசீவரைக் கீழே வைக்கத் தோன்றவில்லை நித்யாவுக்கு.

இல்லை இது பொய். இவளை நம்பக்கூடாது. ஊகூம். கொஞ்சம்கூட நம்பக்கூடாது. பிரதீப் பாவம் உகூம். நான் நம்பமாட்டேன். தீபன் வேலை இருக்கிறது என்று சொன்னால் வேலைதான் இருந்திருக்கும். படம் சீக்கரமாக ரிலிஸ் ஆகும் என்றார்களே. இரவு பகலாக ஷூட்டிங் இருந்திருக்கும். இவள் பெரிய பொய் சொல்லுகிறாள். ஆனால் இரவுபகலாக எல்லோரும் வேலை பார்ப்பார்களா?. செய்வார்கள். கூடுதல் பணம் கொடுத்து கட்டாயம் செய்ய வைத்திருப்பார்கள்.

ஆனால் செம்பு அட்டிகை? அதைப் பற்றி அவளுக்கு எப்படித் தெரியும்? எப்படி. விற்கப் போகும் முன் அவளிடம் காட்டியிருப்பார். பெரிய நடிகையாயிற்றே! அவளே பணம் கொடுத்து வாங்கி கொள்கிறாளா என்று கூடக் கேட்டிருக்கலாம். இப்போது தொலைந்தது தெரிந்ததும் புளுகிறாள். அவ்வளவுதான் அவ்வளவேதான்.

சற்றே திடப்பட்ட மனதுடன் ரிசீவரை வைத்துவிட்டு வீட்டுக்காரம்மாளுக்கு நன்றிகூறித் திரும்பினாள்.

ஆனால் வீட்டுக்காரம்மாள் அவளை அழைத்துப் பேசினாள். " இதோ பாரம்மா, ஏதோ நல்ல வாடகை வருகிறது என்றுதான் சினிமாக்காரர்கள் ஆனாலும் பரவாயில்லை என்று வாடகைக்கு விட்டோம். இந்த மாதிரி வேலை கெட்ட நேரத்தில் ஃபோன் கீன் எல்லாம் இனிமேல் வைத்துக் கொள்ளாதே. இன்றைக்கு முதல் தடவை என்றதாலே கூப்பிட்டேன். இனி இந்த மாதிரி கண்டகண்ட நேரத்தில் போன் வந்தால் கூப்பிட மாட்டேன். நினைவு வைத்துக்கொள். " என்று தோரணையாகக் கூறவும் கூசிக் குறுகிப் போனாள்.

அந்த டெலிஃபோன் பேச்சே அவள் மனதைக் குதறி இருந்தது. இப்போது என்னவோ நித்யாவாக வந்து கண்ட நேரத்தில் ஃபோன் செய்தாற்போல அந்த அம்மாள் பேசவும் அவள் மேலும் முகமும் மனமும் கன்றிப் போனாள்.

பேசமாட்டாமல் தலையாட்டி விட்டுத் திரும்பி நடந்தாள்.

அத்தோடு நில்லாமல் வீட்டுக்கார அம்மாள் தன் பெரிய குரலில் "இந்த நேரத்தில் நீங்கள் எங்கே எழுந்திருந்து இங்கே வந்தீங்க? ஒரு பெண் கொஞ்சம் வெள்ளைத் தோலாக கண்ணில் பட்டுவிடக்கூடாதே. அந்த ஐயாயிரம் அட்வான்ஸ் அவன் கொண்டு வந்து தந்ததா, அல்லது உங்களுடைய செட்டப்பா?" என்று அதட்டிக் கேட்டது நித்யாவின் காதுகளில் நன்றாகவே விழுந்தது.

நெஞ்சை அழுத்தியபடியே ஓடோடிச் சென்று அந்த சின்னம் சிறு வீட்டினுள் புகுந்து கதவை உள்ளே தாளிட்டவள் அப்படியே விழுந்து நெஞ்சே வெடித்து விடும்போல் விம்மி அழுதாள்.

## 5

கீழ்வானம் சிவக்கக்கூட இல்லை. மையிருள் கரைந்து உருவம் புரிகிற வெளிச்சம் வரும்போதே பால் வண்டியோடு பிரதீபனும் வந்துவிட்டான்.

ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாதபடி தானாக அழுது ஓய்ந்து அப்படியே உட்கார்ந்திருந்த நித்யாவுக்கு அவனது வேகமான காலடி ஓசை நன்றாகவே கேட்டது. ஆயினும் அவன் கதவைத் தட்டிய பிறகுதான் திறந்தாள் திறந்து விட்டுச் சற்று ஒதுங்கி நின்றாள்.



கதவை அவசரமாகச் சாத்திவிட்டு, டார்லிங் என்று கையை விரித்தான் பிரதீபன்.

ஆனால் அவள் அசையாமல் நிற்கவும் கைகளைக் கீழிறக்கி, வியர்வை நாற்றம் அடிக்கிறதா, நித்தி? இதோ குளித்துவிட்டு வந்துவிடுகிறேன். என்று ஒரு டவலை எடுத்துக்கொண்டு அவன் குளியல் அறைப்பக்கம் திரும்பினான்.

நித்யாவின் நாசி வியர்வை நாற்றம் தவிர வேறொரு வாசனையையும் உணர்ந்தது. விலை உயர்ந்த செண்டின் மணம். நித்யா தங்கிப் படித்த ஹாஸ்டலில் கூட இருந்து படித்த ஒரு சிங்கப்பூர் பெண் ஸ்ப்ரே செய்து கொள்வாள். அங்கேயே பதினைந்து வெள்ளி என்பாள்.

பிரதீபன் செண்ட் பயன்படுத்துவது இல்லை.

பின்னே இந்த வாசனை எங்கிருந்து வந்தது?

ஏதேதோ தோற்றங்கள் மனத்திரையில் ஓடி அவளைத் துன்புறுத்தின.

அவள் பேசாமலே நிற்பதை உணர்ந்தவனாக, என்னடா கண்ணு? இரவெல்லாம் கொட்டு கொட்டென்று தூங்காமல் விழித்திருந்தாயா? பைத்தியம் ஆனால் பரவா இல்லை. இன்று வரமாட்டேன் என்று சொல்லி விட்டே வந்து விட்டேன். பகல் முழுவதும் நன்றாகத் தூங்கலாம் என்றான் கனிவாக.

தொந்தரவு பண்ணாமல் பகல் முழுவதும் தூங்கிவிடு என்றது இன்னொரு குரல் ஏகோ.

"உங்களுக்கு நேற்று வேலை எத்தனை மணிக்கு முடிந்தது.?"

குரலின் பேதத்தை உணர்ந்து நின்று, இரவு ஒரு மணிக்கு அதன் பிறகு ஜெயநளினாவை அவள் ஓட்டலில் கொண்டு விடவேண்டியிருந்தது" என்றான் அவன், சமாதானமாக.

"ஏன்? அவளுக்கு அங்கே போக வழி தெரியாதாமா?"

"சூப்பர் கேள்வி!" என்று சிரித்தான் பிரதீபன். "உடனே வரவில்லை என்று கோபமா, கண்ணம்மா? என்ன செய்வது? ஜெயநளினாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை. நீங்கள் என்ன டாக்டரா என்று அடுத்த சூப்பர் கேள்வி கேட்டுவிடாதே. தெரிந்தவர்களுக்கு ஒன்று என்றால் உதவிவிட்டு வரலாமா? அத்தோடு போனில் சொன்னேனே, வீட்டுக்காரர்களை அந்த நேரத்தில் எழுப்பி கேட்டைத் திறக்கச் சொல்வது சரியல்ல என்று போகிறது விடு- இன்று பகலில் நேற்றைய இரவை ஈடுகட்டி விடலாம்" என்று நகைத்தான்.

நித்யாவுக்கு நாராசமாய் இருந்தது. இரவு முழுவதும் இங்கே இவள் அவன் அணைப்புக்காக ஏங்கிக் கொண்டிருந்ததாக எண்ணுகிறானோ? என்ன துணிச்சலாக ஜெயநளினாவை கொண்டு விடப் போனேன் என்கிறான். உடம்பு சரியில்லையாமே என்ன சொன்னாலும் நம்புவாள் இந்த ஏமாளி என்கிற தைரியமா?

சரசரவென்று விடிந்து வந்த வெளிச்சத்தில் அவளது முகபாவனை ஓரளவு புலப்பட, "என் நித்திக்கு இன்னுமா கோபம்?" என்று சரசமாகக் கூறியபடியே ஒரு கையால் அவளது கன்னத்தை வருடினான் பிரதீபன்.

தொட்ட கையைத் தட்டிவிட்டு, "என்னைத் தொடாதீர்கள்."

வேகமாக விலகி நின்றாள் நித்யா.

அவனது புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது. "இது என்ன அசட்டுக் கோபம் நித்யா?" என்று அதட்டியபடி அவள் பக்கமாக ஓர் எட்டு எடுத்து வைத்தான் அவன்.

அப்போது யாரோ சிலர் வேகமாக அங்கு வந்து கதவைத் தள்ளி திறக்கவும் இருவரும் திகைப்புடன் வாயிலை நோக்கினர்.



"இங்கே, இங்கேதான். இதே வீடுதான். இதோ இருக்கிறார்களே" என்று பரபரப்புடன் கூறியபடி, நாலைந்து பேர் தொடர அறையினுள் வந்தார் கண்ணபிரான்.

தந்தையைக் கண்டதும், அப்பா என்று அழுதபடி அவரிடம் ஓடினாள் நித்யா.

நித்யா நினைத்தது போல மகள் இன்னும் ஹாஸ்டலில் இருப்பதாகவே கண்ணபிரான் எண்ணிக்கொண்டு இருக்கவில்லை.

நித்யாவின் பரீட்சை அவள் கிளம்பிச் சென்று மூன்று நாட்கள் கழித்துக் தொடங்கவேண்டியது. கொஞ்சம் முன்னாலேயே போய் மற்றவர்களிடம் கலந்து படிக்கவேண்டும். ஆசிரியைகளிடம் கொஞ்சம் சந்தேகமும் கேட்க வேண்டும் என்று கூறிவிட்டு நாலுநாள் முன்னதாகவே கிளம்பியிருந்தாள் அவள்.

மகள் மீது சற்றும் ஐயம் கொண்டிராத பெற்றோரும் தடையேதும் சொல்லவில்லை.

ஆனால் தேர்வுக்கு முன்தினம் மாலைவரை நித்யா வரவில்லை என்றானதும் உடன் பயின்ற செல்வி, கண்ணபிரானுக்குத் தகவல் கொடுத்து விட்டாள்.

உடனே ஓடிவந்த கண்ணபிரான் முதலில் செல்வி மேல்தான் எரிச்சல் பட்டார். எங்கே போயிருப்பாள்? "லீவு முழுவதும் செல்வியோடு கோயில், செல்வியோடு குளக்கரை என்று உன்னோடு தானே சுற்றினாள்" என்று அதட்டவும் சுட்டு வெளிப்பட்டு விட்டது.

"இல்லையே. ஒரே ஒரு நாள் படப்பிடிப்பு பார்க்கப் போனபிறகு நித்- இல்லை சின்னம்மாவை நான் பார்க்கவே இல்லையே" என்று கையை விரித்தாள் அந்தப் பெண்.

நித்யா பெருமை பாராட்டாத போதும், இருவரும் ஒத்த தோழிகளாகவே பழகி வந்தபோதும் கண்ணபிரான் முன்னிலையில் அதைக் காட்டிக் கொள்ள முடியாது என்பதைச் செல்வி அறிவாள்.

படப்பிடிப்புக்குப் போன பிறகு—

அந்த சினிமாக்காரன் சும்மா வந்து பெண் கேட்டுவிடவில்லையோ என்று யோசனை ஓடியது கண்ணபிரானுக்கு.

வீடு திரும்பியவர் நாலைந்து பேரைத் திரட்டிக்கொண்டு படப்பிடிப்புக் குழுவைத் தேடி கிளம்பிவிட்டார்.

பெண் விஷயம் . சத்தத்தைக் குறையுங்கள். கூட்டம் வேண்டாமென்று புவனம் கெஞ்சியதெல்லாம் அவர் காதிலேயே ஏறவில்லை.

மகளையும் நன்றாக அடித்துக் காலை ஒடித்து இழுத்து வருவதாகப் புறப்பட்டார். ஆனால் மகள் ஏற்கனவே அடிப்பட்ட மானாக அப்பா என்று கதறிக் கொண்டு ஓடிவரவும். தோளில் சாய்த்து. தட்டிக் கொடுக்கத்தான் அவரால் முடிந்தது.

ஆனால் அத்தனை கோபத்தையும் தன் அறியாப் பெண்ணை மயக்கி இழுத்துச் சென்ற அற்பன் மேல் திருப்ப முடிந்தது.

இந்த வரவை ஓரளவு எதிர் பார்த்திருந்தவன் போலப் பிரதீபன் நிதானமாகவே பேசினான். 'வாருங்கள்' என்று வரவேற்றான். "நாம் சற்றுத் தனியே பேசுவது நல்லது" என்றான் கண்ணபிரானை நேராகப் பார்த்து.

"யாருக்கடா நாயே, நல்லது?" என்று சீறினார் கண்ணபிரான். "தனியே பேசவேண்டுமா நாய்க்கு? நன்றாக நாலு சாத்து சாத்தி மண்டையை உடைத்து போட்டுவிட்டு வாருங்கள். நாம் நித்யாவை அழைத்துக்கொண்டு போகலாம்" என்று உடன் அழைத்து வந்தவர்களை ஏவினார்.

கையிலிருந்த டவலை 'பாத்ரூம்' கதவில் போட்டுவிட்டு நிமிர்ந்தான் பிரதீபன். " அது அவ்வளவு எளிதல்ல மிஸ்டர்



கண்ணபிரான். நித்யா என் மனைவி. தெய்வ சந்நிதானத்தில் திருமணம் செய்திருக்கிறோம்" என்றான் ஓர் அழுத்தத்துடன். எந்தவித உணர்ச்சியையும் காட்டாத அவனது பார்வை மட்டும் தந்தையின் தோளைப் பற்றியபடி அவரோடு ஒட்டி நின்ற நித்யாவின் மீது பாய்ந்து மீண்டது.

"கோயில் திருமணமா?" என்றார் கண்ணபிரான் ஏளனமாக. மகளைத் தன் தோளிலிருந்து பிரித்து விலக்கி நிறுத்தினார்.

அவள் கழுத்தில் கிடந்த மஞ்சள் சரடு தென்படவும். வெறும் கயிறு. இந்த ஒரு கயிற்றைக் கொண்டு இந்த கண்ணபிரான் மருமகனாகி, சொத்துக்கெல்லாம் வாரிசாகி விடலாம் என்று திட்டம் போட்டாயாடா? என்று ஆத்திரத்துடன் கேட்டவர். வினாடிக்குள் மகளின் கழுத்தில் இருந்த அதை கழற்றி வீசிவிட்டார்.

நித்யா திகைப்புற்று நிமிர மாங்கல்யம் கீழே விழுமுன் பாய்ந்து அதைப் பிடித்த பிரதீபன் " நித்யா இங்கே வா" என்று கர்ஜித்தான்.

மகளைத் தன்புறம் இழுத்து கொண்ட கண்ணபிரான் அவனுக்குமே உரத்து கத்தினார் " அனாதைப் பயலே, யாரையடா அதட்டுகிறாய்? இன்னொருதரம் என் மகளைப் பேர் சொல்லிக்கூப்பிட்டாயானால் அப்புறம் அந்த நாக்கே உனக்கு இருக்காது. ஜாக்கிரதை. என்னடா நாகு. பயல் இவ்வளவு துள்ளுகிறான். இரண்டு போடு போட்டு அவன் கையைக் காலை ஒடிக்காமல் எல்லோரும் என்ன வேடிக்கை பார்க்கிறீர்கள்?" என்று உடன் வந்தவர்களை அதட்டினார்.

அந்த நாகு என்கிற நாகேந்திரன் கண்ணபிரானின் ஒன்றுவிட்ட தம்பி. கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பதில் சமர்த்தர். கண்ணபிரானின் செழித்த வயல்களைப் பார்த்து பெருமூச்சு விடுகிறவர். நித்யா விஷயம் கேள்விப் பட்டதும் ஓடிவந்து. அய்யோ அண்ணா என்று உருக்கமாய் உருகி ஒட்டிக் கொண்டார்.

கண்ணபிரான் பாட்டில் அடி. உதை என்றபோது "முன்வந்த மற்றவர்களை, "கிரிமினல் கேசாகிவிட்டால் நமக்குதான் ஆபத்து. பயல் நிற்கிற திமிரே சரியில்லை" என்று அடக்கி வைத்ததும் அவரே இப்போதும் முன் வந்து "அண்ணா, நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்கவேண்டும். நாம் தேடி வந்தது நம் பெண்ணை. கிடைத்து விட்டாள். கூட்டிப் போய்விடுவோம். மற்றபடி அடிகிடி என்று போட்டால் அவன் கோர்ட் கேசு என்று சேவலப்படுத்திவிடக்கூடும். பாப்பாவின் எதிர்காலத்துக்கு அது நல்லதா. யோசியுங்கள்" என்றார் பதவிசாக.

உள்ளே குமுறும் கோபத்தை வெகுசிரமப்பட்டு அடக்கிக் கொண்டார் கண்ணபிரான். "நீ சொல்வதும் சரிதாண்டா. நீ வாம்மா நித்யா" என்று மகளின் கையைப் பற்றித் திருப்பினார். "நில் நித்யா" என்று அழுத்தமான குரலில் முழங்கினான். பிரதீபன். அவனை நோக்கி நீண்ட அவனது கரத்தில் சின்னத் தங்கப் பொட்டுகளுடன் கூடிய மஞ்சள் சரடு ஊசலாடியது. "இதற்கு பதில் சொல்லிவிட்டுப் போ".

நித்யா பிரமித்து நிற்க, கண்ணபிரான் சீறினார். "அவன் என்னடா பதில் சொல்வது? அதை நீயே பத்திரமாக வைத்துக்கொள். கூத்தாடிக்கு ஏற்ற ரெகார்டு டான்ஸ்காரி எவளாவது வருவாள். அவள் கழுத்தில் கட்டு" என்றார் உதாசீனமாக.

அவரது பேச்சை அவன் காதில் வாங்கிய மாதிரியே தெரியவில்லை.

"நித்யா!" என்றான் சற்றே பிரமித்தவன் போல.

உதட்டைக் கடித்துக்கொண்டு நின்ற நித்யா ஒரு முடிவுக்கு வந்தவளாக நிமிர்ந்தாள்.

"அந்தக் கெம்பு அட்டிகை. அதை ஜெயநளினாவிடம் கொடுத்தீர்களா?" என்று மெல்லிய குரலில் வினவினாள்.

என்ன பேச்சு இது என்பது போலத் தலையசைத்தான் பிரதீபன். ஆனால் நித்யா அவனையே பார்த்தபடி நிற்கவும்



பதிலும் சொன்னான். "ஆமாம் அவளிடம்தான் கொடுத்தேன். அவளிடமிருந்துதான் பணமும் வாங்கிவந்தேன். ஆனால் நித்யா. அது வெறும் நகை. நாம் பேசிக்கொண்டிருப்பது நம் வாழ்க்கைப் பிரச்சினை" என்றான் தொடர்ந்து.

"கெம்புக்கல் அட்டிகையை மட்டும் போட்டால்..."

நித்யா முடிவு எடுத்தாள். "நேற்று பகலில் சுந்தரி வந்தாள். சில விஷயம் தெரியவந்தது. அவள் திருமணத்தை நிறுத்துகிறீர்களாமே. சொன்னாள்.." என்றவள், ஒரு பெரிய மூச்செடுத்து "இந்த மாதிரி வாழ்க்கை வாழ என்னால் முடியாது. நான் அப்பாவோடு போகிறேன்" என்று முடித்தாள்.

"நோ!" என்றான் பிரதீபன். "போகாதே நீ போகக் கூடாது நித்யா. ப்ளீஸ், நான் கேட்கிறனில்லையா, போகாதே நித்தியம்மா.. நித்யா, இந்த மாதிரி அரையும் குறையுமாக ஒன்றும் இல்லாததை எல்லாம் பேசிவிட்டு நீ ஓடலாமா? நித்தி, யோசி. உன்னைப் பிரிந்து என்னாலும் என்னைப் பிரிந்து உன்னாலும் வாழமுடியுமா? வேண்டாம்மா, என்னிடம் வந்துவிடு" என்று கெஞ்சினான்.

"முடியும் நீங்கள் இல்லாமல் என்னால் தனியாக வாழ முடியும். இனி ஒருபோதும் நான் உங்களிடம் வரவே மாட்டேன்" என்று அழுதபடியே கூறினாள் நித்யா.

"நன்றாகக் காது குளிரக் கேட்டுக்கொள்" என்றார் கண்ணபிரான் குரூர திருப்தியுடன்.

அவர் பேச்சு காதில் விழுந்தது போலப் பிரதீபன் காட்டிக்கொள்ளவில்லை.

தன் முழு உயரத்துக்குமாக நிமிர்ந்தவன், "இல்லையில்லை, கட்டாயமாக ஒரு நாள் என்வீடு தேடி நீ வருவாய். இந்தப் பண்ணை, மிராசு, கௌரவம் என்பனவெல்லாம் ஒன்றுமில்லை, ஒன்றுமேயில்லை என்று உணர்ந்து நீ என்னிடம் வந்தே தீருவாய்" என்றான் கர்வத்தோடு.

வந்துவிட்டானே! அவன் சொன்னது போலவே அவனை வீடு தேடி வந்துவிட்டான். ஆனால் அவன் பேச்சில் குறிப்பிட்டது போலப் பண்ணை, மிராசு, கவுரவும் பெரிது என்று அவள் அவனைப் பிரியவும் இல்லை. இன்று அவையெல்லாம் ஒன்றுமில்லை என்று வெறுத்துத் திரும்பி வரவும் இல்லை.

இதெல்லாம் பிரதீபனுக்கு எங்கே புரியப்போகிறது?

நித்யாவைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்? நித்யா அவனைப் பற்றி அறிந்த அளவுகூட இராது.

இப்படி ஒருவரைப் பற்றி ஒருவர் ஒன்றுமே தெரியாமல் திருமணம் செய்தது எவ்வளவு பெரிய பிசகு?

ஆனால் அது திருமணம்தானா? இல்லவே இல்லை என்றார் அவள் தகப்பனார். பந்தல் பாங்கு இல்லை. உற்றார் உறவினர் இல்லை. சாட்சிக்கு ஒரு நாதியில்லை. அந்த அய்யர்கூட பயந்தவன் என்கிறாய். இந்த மாதிரிக் கயவாளிப் பயல்கள் வசதியுள்ள வீட்டுப் பெண்களைத் தூக்கிச் சென்று ஏதோ ஒரு கயிற்றைக் கழுத்தில் கட்டினால் அது கல்யாணம் ஆகிவிடுமா? எல்லாவற்றையும்விட முக்கியமாக அன்றைக்கு உனக்குப் பதினெட்டு வயது முடியவும் இல்லை. அது கல்யாணமாகவே நடந்திருந்தாலும் அது செல்லாது. இது சும்மா ஒப்புக்குச் செய்தது திருமணம் மாதிரி ஒரு நாடகம் என்றார் அவர்.

## 6

அவர்களுடைய திருமணம் நாடகமாக இருக்கலாம். அது திருமணமே இல்லாமலும் இருக்கலாம். ஆனால் அன்றிரவு நடந்தது?



அது இல்லையென்று ஆகிவிடுமா!

அத்தோடுகூட அடுத்தடுத்து வந்த இரவுகள்?

கணவனும் மனைவியும்தானே அப்படி நடந்துகொள்ளலாம்? இது கல்யாணம் இல்லை என்றால் அப்புறம் அவளுக்கு என்ன பெயர்?

வேதனையில் நித்யாவின் முகம் கசங்க, அதன் காரணத்தை தவறாகப் புரிந்து, " நீ கவலையே படாதே, கண்ணு, நாளைக்கே நல்ல நல்ல பையன்களாகப் பிடித்துவந்து க்யூ வில் நிறுத்துகிறேன். உனக்கு யாரைப் பிடிக்கிறது என்று சொல்லு. ஜாம் ஜாம் என்று திருமணம் செய்துவைக்கிறேன்" என்று மகளைத் தேற்ற கண்ணபிரான் முற்பட்டபோது அவள், "அப்பா" என்று அலறிவிட்டாள்.

"என்ன செல்லம்?"

"எனக்கு வேறே திருமணம் எல்லாம் வேண்டாம்பா"

"அது என்ன வேறே திருமணம்? ஏன் அந்த நாய் மோப்பம் பிடித்துக் கொண்டு திரும்பவும் இங்கே வந்து நிற்பானோ என்று பயப்படுகிறாயா? அவசியமே இல்லை அந்தப் பயல் இனி இந்தப் பக்கம் தலைவைத்துக்கூட படுக்கமாட்டான். அங்கிருந்து கிளம்புகிறபோது உள்ளே போய் அந்த ராஸ்கலிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்தேனே, நினைவிருக்கிறதா? என்ன சொன்னேன் தெரியுமா? அடேய், பணக்காரப் பெண், வளைத்துப் போட்டுக்கொண்டால் உட்கார்ந்து தின்னலாம் என்று நினைத்திருப்பாய். இன்னமும் அந்த நப்பாசை இருந்தால் அடியோடு விட்டுவிடு. என் சொத்தில் ஒரு நயாபைசா தரமாட்டேன். தருமத்துக்கு எழுதிவைத்து விடுவேன் என்று நன்றாய்ப் புத்தியில் உறைக்கும் படி சொன்னேன். மீறி வந்தால் கட்டிவைத்துத் தோலை உரிப்பதாகவும் மிரட்டியிருக்கிறேன். எல்லாமாக இந்த திசைக்கே கும்பிடு போட்டுவிட்டு எப்போதோ பின்னங்கால் பிடரியில்

இடிபட ஓடியிருப்பான். நீ பயப்படாதே" என்று மேலும் தைரியம் சொன்னார் தந்தை.

ஆனால் அவன் வந்துவிடுவானா என்று மகள் பயப்படவில்லை. வந்துவிடமாட்டானா என்றுதான் அவளது பேதைமனம் ஏங்கியது என்று பாவம், அவர் அறிந்துகொள்ளவே இல்லை.

இடையில் பத்திரிகையில் போட்டிருந்ததாக ஒரு செய்தியைக் கேட்டறிந்து வந்து மகளிடம் கூறினார் கண்ணபிரான். "இந்தக் குடிகாரக் கூத்தாடிப் பசங்கள் நன்றாகத் தண்ணி போட்டுவிட்டு ஒருத்தனுக்கு ஒருத்தன் அடிதடி ரகளையாம். கத்தியால் கீறியிருக்கிறார்கள். ஆனால் கஷ்டத்தைப்பார். ஒரு பயலுக்கும் உயிருக்கு ஆபத்தே இல்லையாம். குடிகார நாய் இந்தப் பக்கம் தலையை நீட்டட்டும், அந்த தலையே இல்லாமல் பண்ணி விடுகிறேன்" என்று உறுமினார் அவர் "ஆனால் சொத்து கிடைக்காது என்று ஆனபிறகு அவன் ஏன் இங்கே வரப் போகிறான்?" என்று அலட்சியப்படுத்தி முடித்தார்.

பிரதீபனும் அந்தப்பக்கம் வராமலே இருந்து அவளுடைய தந்தையின் வாக்கை மெய்யாக்கினான்.

அத்தனை நடப்புகளையும் மீறிக்கொண்டு உள்ளூர நித்யாவுக்கு இருந்த ஒரு சிறு நம்பிக்கையும் மெல்ல மெல்ல ஒருவழியாக உயிரைவிட்டது.

ஆனால் அப்படி ஒரு நம்பிக்கையை அவள் வைத்திருந்ததும் மடத்தனம்தானே. அதுவும் முதல்நாளே நகையில் கைவைத்தவனிடம்!

திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்து மீண்டும் மீண்டும் துடித்தாள் நித்யா.

நித்யா திரும்பிவந்து இத்தனை நாளாகப் புவனம் மகளின் முகத்தைப் பார்த்து எதுவும் பேசினாளில்லை.

"தாலியாம் தாலி அந்தக் கயிற்றைக் கழற்றி அவன் கையிலேயே விட்டெறிந்துவிட்டு என் தங்கத்தை



அப்படியே கொண்டுவந்துவிட்டேன்" என்று கண்ணபிரான் பீற்றியபோது கணவனையும் மகளையும் வெறித்து நோக்கிவிட்டு உள்ளே போனவள்தான். அதற்கு மேல் உண்டு இல்லை என்பதோடு பேச்சை சுருக்கிக் கொண்டாள் அவள்.

அடிக்கடி தாயார் பூஜையறைக்குள் புகுந்து புகுந்துகொள்வதையும், தனியே அமர்ந்து வெற்றிடத்தை வெறிப்பதையும் கண்ட நித்யாவுக்கு அதன் பின்னணியில் இருந்த வேதனை நன்றாகவே புரிந்தது. ஆனால் தடுக்கிவிழுந்து ரத்த காயம் பட்ட குழந்தையாக திரும்பி வந்திருந்த மகளுக்குத் தாயாரின் ஆதரவு பெரிதும் தேவைப்படவே, வானத்தை வெறித்துக் கொண்டிருந்த புவனத்திடம் சென்று அவளை ஒண்டி அமர்ந்தாள்.

அன்னையின் மடியில் முகம் புதைத்து, "என்மேல் ரொம்பக் கோபம் இல்லையாம்மா?" என்று விசும்பினாள்.

தன்னியல்பாய்த் தாயின் கரம் மகளின் தலையை வருடியது. "கோபம் என்னம்மா, வருத்தம்தான். இன்று என்று இல்லை. என்றைக்கோ தொடங்கியது என்றாலும் கல்யாணப் பெண்ணின் சந்தோஷத்தோடு நீ வாழவேண்டும் என்று ஆசைப்பட்டுத்தான் அழகாக நித்யகல்யாணின்னு பெயர் வைத்தேன். பள்ளிக்கூடத்தில் சேர்கிறபோது பெயர் ஸ்டைலாக இருக்கட்டும் என்று உன் அத்தை சொன்னாள் என்று கல்யாணியை விட்டுவிட்டு வெறும் நித்யா என்று பெயரை எழுதிவிட்டு வந்தபோது மனதில் கஷ்டமாக இருக்கும். இப்போது ஆள் அம்பு அறியாமல் ஒரு கல்யாணத்தைக் கட்டிவிட்டு, அதையும் தொலைத்துவிட்டு வந்து நிற்கிறாயே என்பதுதான் தாங்க முடியவில்லை. என்னதான் அப்பா கத்தினாலும் தாலியென்று கட்டிய பிறகு அதைக் கழற்றலாமாடி பெண்ணே?"

கட்டிவைத்து அடித்து நொறுக்கியிருந்தால்கூட மனதுக்கு நன்றாக இருந்திருக்குமோ என்னவோ. இப்போது இந்த வருத்தம் நித்யாவுக்கு இன்னமும் அதிகமாக வலித்தது. மவுனமாகக் கண்ணீர் உகுத்தாள்.

"உன் அப்பா வேறு மணியான மாப்பிள்ளை பார்த்து உனக்குத் திரும்பக் கல்யாணம் செய்யப்போகிறாராம்."

திடுக்குற்று, "அப்பாவிடம் நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன் அம்மா" என்றாள் மகள்.

"சொன்னால் கேட்டுக் கொள்கின்ற மனிதரா உன் அப்பா?" என்றாள் புவனம் சோர்வோடு. " ஆனால் சொல்ல அவசியமும் இல்லைதான். தண்டோராப் போடாத குறையாக ஊர்முழுவதும் பரப்பிவிட்டபிறகு எவன் வருவான்? அதையும் மீறி வருகிறவன் அந்தப் பையனை விடவும் சொத்து பத்துக்கு ஆசைப்பட்டுதான் வரக்கூடும்."

"யார் வந்தாலும் நான் நிச்சயமாக மறுத்துவிடுவேன் அம்மா" என்றாள் மகள் உறுதியோடு.

"ஆமாம். வேறுமாதிரி நான் உன்னை வளர்க்கவில்லையே." என்ற புவனத்தின் குரல் சட்டென நடுங்கியது. " உன்னை நான் எப்படி வளர்த்தேன் என்றே எனக்குத் தெரியவில்லையே, மகளே," என்றாள் வேதனையோடு.

சற்றும் குறையாத வலிதான் மகளுக்கும். சொல்லப்போனால் தன்னுடைய மடத்தனத்தினால் வந்த துன்பம் என்று வேதனை சற்று அதிகம் என்றுதான் சொல்லவேண்டும். எப்படி வளர்த்தேன் என்று வருந்தும் இந்தத் தாயின் வளர்ப்பில் யார் என்ன குறை காணமுடியும்?

கிராமத்தில் வாழ்ந்த போதும் புவனம் கட்டுப்பெட்டியில்லை. மகளின் படிப்பில் பிடிவாதமாய் இருந்தது. அவள் தான் தோழிகளோடு விருப்பம்போல்



நித்யாவை பழகவிடும் தாய்க்கு பிற ஆண்களோடு அவள் பேசினால் பிடிக்காது. வேலைக்காரனை, வண்டிக்காரனை அவள் நேரடியாக வேலை ஏவுவது கூடாது. ஆண்கள் வேலை செய்யும் இடத்துக்கு மகள் போனால் பிடிக்காது. வாய்வார்த்தையாக நேரடியாகக் கண்டிக்காமலே உணர வைத்துவிடுவாள். ஆனால்...

தோன்றியதைச் சட்டெனக் கேட்டுவிட்டாள் நித்யா. "என்னிடம் சந்தேகமே வரவில்லையா அம்மா?" என்னென்ன பொய் சொல்லி எப்படி எப்படி போற்றினாள். அதில்தான் அன்று எவ்வளவு சந்தோஷம் சே.

"இல்லையே, தங்கம் எனக்கு உன்மேல் சந்தேகப்படவே தோன்றவில்லையே."

"அம்ம்மா" திருகுக் கத்தியால் நெஞ்சில் குத்தி அங்கேயே அதனால் துழாவினால் இப்படி வலிக்கக்கூடுமா?

இந்த வலிக்கு மூலகாரணம் அந்தப் பிரதீபன் அல்லவா.

வலி அத்தோடு நின்றிருந்தால் பிரதீபன் மீது அவளுக்கு மேலே மேலே வெறுப்பு ஏறாதிருந்திருக்கலாம்.

அவளது தூய அன்புக்குத் தகுதியற்ற பாத்திரம் என்று ஒதுக்கிவிடக்கூட முடிந்திருக்கலாம்.

ஆனால் அதுவெறும் தொடக்க வலிதான். அடுத்தடுத்து அலைமேல் அலையாகத் துன்பம் அவர்களைத் துரத்தி துரத்தி அடித்தது.

நித்யா எவ்வளவு மறுத்துப் பேசியபோதும், "சின்னக்குழந்தை உனக்கென்ன தெரியும்? உன்னை எப்படி வாழவைக்கப் போகிறேன் பார்" என்று வீராப்பு பேசிய கண்ணபிரானுக்கு மாப்பிள்ளை வேட்டை அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை ஏன், முடிகிற காரியமாகவே தெரியவில்லை.

அவர் எங்கெங்கே சென்றாலும் அவருக்கு முன் மகளின் பிரதாபம் அங்கே சென்றுவிட்டிருந்தது. மகளின் செயல் மிகப் பெரிய பிழை என்பதையும், பெற்றவர்களைப் போல மற்றவர்களுக்கு மன்னிப்பு மனப்பான்மை இராது என்பதையும் அவரும் நாலைந்து குத்துப் பட்டு புரிந்துகொள்ள நேர்ந்தது.

எப்போதும் உரக்கப் பேசி நிமிர்ந்து செல்லுகிறவர் கண்ணபிரான். பெரும்போக்கானவர். ஜாடை, மாடை ரகசியப்பேச்சுகளை அவர் புரிந்து கொண்டதும் இல்லை, மற்றவர்களிடம் கண்டுகொண்டதும் இல்லை. ஆனால் ஒன்றிரண்டு குத்து விழுந்ததும் சத்தம் அடங்கி, நாலுபேர் பேச்சையும், ஜாடையையும் கவனிக்கத் தோன்றியது. கவனித்தவர் அவமானத்தால் முகம் வெந்துபோனார்.

கூடவே நாகேந்திரனின் ஓதல் வேறு. "ஒரொருத்தர் பேச்சைக் கேட்டால் எனக்கே நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல இருக்கிறது. நீங்கள் இந்த ஊரில் எப்படிதான் நடமாடுகிறீர்களோ!" என்று கண்ணைத்துடைத்து மூக்கைச் சிந்தினார்.

வேலையாளை அதட்டக்கூட கண்ணபிரானுக்குத் தயக்கம் வந்தது.

இரண்டு நாட்கள் அறைக்குள்ளேயே கூண்டுப்புலியாக உலவியவர் மறுநாள் நாகேந்திரனைக் கூப்பிட்டு அனுப்பினார். "ஒட்டுமொத்தமாய் நிலபுலன், வீடு, எல்லாம் நீயே எடுத்துக் கொள். வேற்று ஆளிடம் போகாமல் உன்னிடமே இருக்கட்டும். முக்கால் விலை கொடு போதும்" என்றார்.

குள்ளநரி கொண்டாட்டத்தைக் காட்டாமல் மூக்கால் அழுதது. அரை விலை பேசி, அதிலும் பாதியை கொடுத்து மீதியைப் பிறகு தருவதாக வாய்ப்பேச்சாய்ப் பேசி முடித்தது.

பணத்துடனும் மனைவி மகளுடனும் மதுரைப்பக்கம்



பைக்கில் ஏறிச் சென்று வயல் வரப்பை பார்க்கிறவருக்கு வியாபாரம் என்னவரும்? அதிலும் ஏமாறுகிறவர்களைக் கண்டால் ஏமாற்றுகிறவர்கள் விடுவார்களா?

புவனம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். புரியாத தொழிலில் இறங்க வேண்டாம். கையில் இருக்கிற பணத்தை டெபாசிட் செய்து வட்டியில் வாழலாம் என்று.

ஆனால் கெட்ட நேரம் வரும் போது பெண்டாட்டி சொல் கேட்கும் பேடியா நான் என்கிற வீராப்புதானே தோன்றுகிறது.

சுடுமணலில் ஊற்றிய நீராகக் கொண்டு வந்த பணம் சுவடு தெரியாமல் போயிற்று. மீதிப் பணத்தைத் தராமல் நாகேந்திரன் கண்ணாமூச்சி ஆடினார்.

கண்ணபிரான் உடைந்து போனார்.

நல்லவேளையாக உடலாலும் அதிக வேதனைப்படவில்லை. நாகேந்திரனிடம் பைசா பெயராமல் திரும்பி வந்த இரவு–

மனைவி மகளை அழைத்து "தப்பு செய்துவிட்டேனோ என்று இருக்கிறதம்மா. அந்தப் பையனிடம் சமாதானம் பேசி நல்லபடியாக காரியத்தை நடத்தியிருக்கவேண்டுமோ என்று தோன்றுகிறது. நாய் பேய் என்று பேசி, உன்னையும் கெடுத்து விட்டேன். என்றாவது பார்த்தால், பார்த்தால் என்னை மன்னித்துவிடச் சொல்லம்மா நீயும்– நீயும் அந்தப் பையனைத் தேடி–" என்றவர் மகளின் முகத்தைப் பார்த்து விட்டு " கடவுள் விட்ட வழி" என்றார். மனைவியின் கையைப் பற்றிக் கொண்டு சற்றுநேரம் சும்மா இருந்தார்.

மறுநாள் காலையில் மற்றவர்கள் கண்விழித்தபோது, அவரது உயிர்ப் பறவை பறந்து வெகுநேரம் ஆகியிருந்தது.

நித்யா உள்ளூர வெகுவாக வதைப்பட்டுப்போனாள்.

சிங்கம்போல வாழ்ந்தவர் நொடித்துப்போய் மனம் ஒடிந்து இந்த வயதில் மறையக் காரணம் அவளது புத்திகெட்ட செயல் அல்லவா?

அவள்தான் சின்னப்பெண் படிப்பைக்கூட முடித்திராத பதினெட்டு வயது மன் ஏஜ் கேர்ள் பேதைப் பருவம். அவன்?

பிரதீபனுக்கு அப்போது இருபத்தைந்து முடிந்திருந்ததே. அவளைவிட ஏழு வயது பெரியவன் அவனுக்குத் தெரிந்திருக்கவேண்டாம்?

கசந்த முறுவல் ஒன்று அவளது இதழ்களில் தோன்றி மறைந்தது.

பிரதீபனுக்குத் தெரியாமல் என்ன. இவள் ஏமாளி என்று. தெரிந்த பிறகுதானே அவளிடம் காதல் நடிப்பு நடித்திருக்கிறான்.

குளிரக் குளிர அவன் தொட்டமேனி முழுவதும் தீப்பிடித்தாற்போல எரிந்தது அவளுக்கு.

மன்னிப்புக் கேட்பதா? யார் யாரிடம் கேட்பது? மனம் கொதித்தது அவளுக்கு.

மதுரை என்கிற பெயரே தாய்க்கும் மகளுக்கும் வெறுத்துப் போயிற்று.

ஆனால் வேறு எங்கு செல்வது என்றும் புரியாமல் அங்கேயே ஒரு துணிக்கடையில் சேல்ஸ் பிரிவில் பணி புரியத் தொடங்கினாள் நித்யா. சம்பளம் குறைவுதான். காலை எட்டு மணிக்குக் கடையில் நுழைந்தால் இரவு எட்டரை வரைக்கும் வேலை வெட்டி முறித்தது. ஆனால் அந்தச் சிறு தொகையும் விட்டுவிட முடியாத நிலையில் இருந்ததால் அதே வேலையில் நீடித்தாள் நித்யா.

இந்தச் சமயத்தில் சோதனைக்குக் கொஞ்சம் ஓய்வுகொடுத்தார் கடவுள்.

புவனத்தின் சிறுவயது தோழி ஒருத்தி மதுரையிலேயே வசிப்பவள் அவளை ஒரு நாள் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் புவனம் சந்தித்தாள்.

புவனத்தின் நிலையைக் கண்டு கண்ணீர் வடித்தாள் அவள். குடும்பத் தலைவனை இழந்த நிலையில் குடும்ப பாரத்தை தன் மெல்லிய தோள்களில் தாங்கிநின்ற பெண்ணைக் காணவும் அவள் மனம் பாகாக உருகியது.



வீட்டிற்கு விருந்தினராக வந்திருந்த தமக்கை கணவர் சிவானந்தத்திடம் அந்தக் குடும்பத்துக்கு ஏதாவது உதவி செய்யுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

சிவானந்தனுக்கும் பத்திரிக்கை வேலைக்கு ஒரு பெண் தேவைப்பட்டிருந்த நேரம் அது. பத்திரிகையில் பெண்கள் பேட்டிப் பகுதியைக் கவனித்துக் கொண்டிருந்த பெண் திருமணம் செய்வதால் வேலையை விட்டு விலகுவதாக ஒரு மாத நோட்டிஸ் கொடுத்திருந்தாள்.

இப்போது தன் மனைவியையே பேட்டி கண்டு விவரம் எழுதித்தரும்படி நித்யாவுக்கு ஒரு தேர்வு வைத்தார். அவள் அதைச் செய்தவிதம் திருப்தி அளிக்கவே, வேலையில் எடுத்துக் கொண்டார்.

புவனத்தின் தோழிக்கு உளமார்ந்த நன்றி கூறி, தாயும் மகளுமேயான அந்தச் சின்னக் குடும்பம் சென்னையில் குடியேறியது.

தடைகளை மீறிப் பெண்கள் முன்னேறுவதைக் கேட்கையில் ஓர் உற்சாகம், அதை எழுத்தில் வடிக்கும் போது ஒரு சந்தோஷம். இரண்டுமே எழுத்தில் பிரதிபலித்து அவளுக்கு வெற்றியை தேடித்தந்தது.

திருச்சியிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து ஊரிலும் மதுரையிலுமாக மனம் நொந்த இரு ஆண்டுகளின் வடுக்கள் மெல்லத் தேயலாயின. மகிழ்ச்சி என்று சொல்வதற்கு இல்லை என்றாலும் ஓரளவு நிம்மதியாக வாழ்க்கை நடந்தது.

சென்னையில் இரண்டு ஆண்டுகள் கழிந்தபின் மூன்றாம் ஆண்டு தொடங்கியபின் ஒரு நாள் புவனம் மகளிடம் பிரதீபனைப் பற்றி பேசினாள். "அந்த பையனைப்பற்றி அப்புறம் ஏதாவது தகவல் தெரிந்ததா, அம்மா?" என்று வினவினாள்.

"எந்தப்..." என்று தொடங்கியவள் உடனே புரிந்து "அம்மா" என்றாள் அதிர்ச்சியுற்று. லேசாகத் தலையசைத்து, "என்னம்மா

கையிலிருந்த பத்திரிகையைப் புரட்டியபடியே, "உனக்கும் ஒரு துணை வேணுமில்லையா?" என்றாள் அன்னை.

துணையா? பிரதீபனா? புயல் அடித்துக் கொந்தளிக்கிற கடலில் மண்குதிரை எப்படிப்பட்ட துணையோ அதேமாதிரிதான் பிரதீபனும். இந்தத் துணையை நம்பி ஒருதரம் அவதிப்பட்டது போதாதா?"

"எனக்கு நீங்களும் உங்களுக்கு நானுமாய் இந்தத் துணைபோதும் அம்மா" என்று கண்டிப்பான குரலில் கூறிவிட்டு அந்த இடம்விட்டு சென்று விட்டாள் நித்யா.

பிரதீபனைப் பற்றிய சிறுபேச்சிலும் முகம் சிவந்த மகளைப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள் புவனம்.

## 7

பிரதீபனைப் பற்றி யாரிடமும் விசாரித்து அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் நித்யாவுக்கு இருக்கவில்லை.

அங்கங்கே கண்ணில்பட்டுக் கருத்தில் உறுத்திய சினிமா விளம்பரங்கள், பஸ்களிலும் அலுவலகத்திலும் மற்ற இடங்களிலுமாக அங்கங்கே காதில் விழுந்த பேச்சுகள் போதுமே.

பிரதீபன் எதிர்பார்த்தது போலவே அப்போது அவன் நடித்த படம் நூறு நாள் ஓடி, அவனுக்குப் புகழ் தேடித் தந்தது. அடுத்து ஜெயநளினாவோடு கதாநாயகனாக ஒரு படம். அதுவும் நூறு நாள் படம். அடுத்து பிரம்மாண்டமான வண்ணப்படமாக ஜெயநளினாவின் சொந்தப் படம் நன்றாகத்தான் ஓடியது. ஆனால் அதிகச் செலவு செய்ததால் நளினா அதிகம் லாபம் காணவில்லை என்று ஒரு வதந்தி.



அப்புறம் பல நாயகிகளுடன் நடித்து விட்டான். புகழும் பொருளும் போட்டிபோட்டுக் கொண்டு அவனிடம் குவிந்தன.

ஜெயநளினாவை ரகசியத் திருமணம் செய்து கொண்டான் என்றார்கள். "ஜெயநளினா பீல்டில் வந்து பத்து ஆண்டுகளாவது இருக்கும். எப்படியும் பிரதீபனைவிட வயதானவளாக இருப்பாள். அவளைப் போய் பிரதீபன் மணப்பானா? சும்மா தொடுப்புதான்" என்று பகிரங்க ரகசியமாக பேசினார்கள். ஜெயப்பிரதீபன் கஞ்சிக்கு லாட்டரி அடித்த காலத்தில் அவனை கைதூக்கிவிட்டு முன்னுக்குக் கொணர்ந்தவள் ஜெயநளினா, சும்மாவா செய்வாள் என்று அடித்துக் கேட்டார்கள்.

பஸ் ஓடும்போது, பக்கத்தில் இரண்டு பேர் பேசும்போது இடையில் இறங்கி ஓடிவிடவா முடியும்? அல்லது அலுவலகத்தில் சினிமாக்காரர்களை பற்றிய வம்பு பேசாமல் வேலையைப் பாருங்கள் என்று எல்லோருக்கும் கடைசியாக உள்ளே நுழைந்த அவள் விரட்ட முடியுமா? தவிர்க்க முடியாமல் கேட்டுத்தான் ஆக வேண்டியிருந்தது. கேட்டு கேட்டுத் தவித்துதான் தீர வேண்டியிருந்தது.

வேறு எந்த பேச்சில் என்றாலும் நித்யா தன் தாயாரிடம் மாறுதலை உணர்ந்து விசாரித்திருப்பாள். ஆனால் பிரதீபன் பற்றிய பேச்சின் தாக்குதலினால் வேறு எதுவும் அவளது கருத்தில் பதியவில்லை.

மேலும் சில மாதங்கள் சென்றபின் மீண்டும் புவனம், மகளிடம் இந்த பேச்சை எடுத்தாள். "சினிமாவில் நடிப்பவர் என்று அப்பா சொன்னாரே, சிவானந்தம் சாரிடம் சொல்லி யார் என்னவென்று விசாரித்துப் பார்க்கலாமே" என்றாள். குரலில் ஒரு மன்றாடல் இருக்கவும் நித்யாவால் பழைய மாதிரி பட்டுக் கத்தரித்தாற்போல பேச முடியவில்லை.

அன்று வீடுதேடி வந்த பிரதீபனைக் கண்ணபிரான், வாயில் வராண்டாவிலேயே வைத்துப் பேசி அனுப்பி

விட்டதால் புவனம் அவனைப் பார்த்திருக்க வழியில்லை. பின்னரோ, அவன் விஷயம் அந்த வீட்டுப் பேச்சில் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்கிற மாதிரியில் யாரும் அந்தப் பேச்சு எடுத்து பேசியதே இல்லை. எனவே இன்றைய முன்னணிக் கதாநாயகர்களில் ஒருவனாக பிரதீபன்தான் மகள் வாழ்வை நாசப்படுத்தியவன் என்பது அந்த தாய்க்குத் தெரியாமலேயே இருந்தது.

கண்ணபிரானும் தன் கடைசிப் பேச்சின்போது கூட பிரதீபனை அந்தப் பையன் என்றாரே தவிர பெயர் சொல்லிக் குறிப்பிடவில்லை.

ஏனோ, மனதுக்குள் சுருக்கென்றது நித்யாவுக்கு.

"என்னம்மா, திடீரென்று?" என்று தாயின் முகத்தை உன்னிப்பாகக் கவனித்தபடி வினவினாள்.

"அது- அது ஒன்றுமில்லை கண்ணு" என்று வெகு சிரியசாகக் கையிலிருந்த காபியை அருந்தலானாள் புவனம்.

தாயின் முகத்தில் இருந்த சோர்வும் மகளின் கண்களைத் தவிர்த்த விதமும் நித்யாவை உறுத்தின.

தந்தை இறந்ததில் இருந்தே மெலிந்து கொண்டே வந்த உடல்தான் என்றாலும் மிகவும் தூக்கலாகத் தெரிந்த கன்னத்து எலும்புகள் கவலையைத் தர, தாயார் மறுத்தும் பிடிவாதமாக டாக்டரிடம் அழைத்துச் சென்றாள்.

அப்புறம் மருத்துவமனைக்கும் வீட்டுக்குமாகக் கொஞ்ச நாட்கள் அலைந்தாள்.

தாயின் தவிப்பைக் கண்டு தாளாமல் ஒரு நாள் விளக்கம் கூறினாள். "அம்மா, இப்போது அந்த மனிதர் தானாகவே நல்ல நிலைமைக்கு வந்துவிட்டார். எனவே இனி நாம் அவருக்குத் தேவையில்லை என்று ஒதுக்கிவிட்டார்."

"ஒருவேளை நாம் இருக்கும் இடம் அவருக்குத் தெரியாமல்." என்று குறுக்கிட்டுப் பேசிய தாயின் பேச்சை



இடைவெட்டித் தொடர்ந்தாள் நித்யா. "தெரிந்து கொள்வது முடியாத காரியமா, அம்மா? அந்தத் திருமண நாடகம் நடந்த பின் இருவரும் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். அதைக் கொடுத்து டி.வி.யில் ஒரு விளம்பரம் கொடுத்தால் தகவல் தெரிய எத்தனை நாள் ஆகும்? நான் என்ன முக்காட்டுக்குள்ளா மறைந்திருக்கிறேன்? அன்றைக்கு அப்பாவின் பணம் கிடைக்கும் என்கிற ஆசையில் பழகிப் பார்த்தார். பலிக்கவில்லை. இன்று தானாகவே பணக்காரர் ஆகிவிட்டதால் இது ஏன் வீண் தொல்லை என்று விட்டுவிட்டார். இந்த நிலையில் அவரிடம் போய் பத்தோடு பதினொன்னாக என்னையும் வைத்.. ச்சு, நானும் இருக்கட்டுமா என்று கேட்பதா, அம்மா? அவமானம் இல்லையா? இப்போது நமக்கு என்ன குறை? உண்ண உணவும், உடுக்கத் துணியும், இருக்க நிழலும், அது வாடகைக்கு என்றாலும் நம் முயற்சியில் கிடைக்கிறதே. இது போதாதா? அனாவசியமாய் மனதை அலட்டி உடம்பை உருக்கிக் கொண்டு விட்டீர்களே!" என்றாள் வருத்தமும் வேதனையுமாக. நிராசையுடன் கண்களை மூடிக் கொண்டாள் புவனம்.

தாயார் இறந்தபோது நித்யா பெரிதும் பரிதவித்துப் போனாள். சிவானந்தமும் அவருடைய மனைவியுமாக அவளைப் பழைய சூழலில் இருந்து அகற்றி- அந்த வேலை பார்க்கும் பெண்கள் விடுதியில் சேர்த்துவிடாமல் இருந்திருந்தால் உடைந்தே போயிருப்பாள்.

அன்னையை இழந்த அந்த நேரத்தில் அவளது வெட்கம் கெட்ட மனது ஆறுதலுக்குப் பிரதீபனைத்தான் பெரிதும் நாடியது. அந்த ஆறுதல் கிட்டாத காரணத்தினால் முன்னிலும் அதிகமாக அவனை வெறுத்தது.

ஒருவாறு இந்தத் தனிமையும் பழக்கப்பட்டு அமைதியுறத் தொடங்கிய இந்த நேரத்தில் இப்படிக் குறுக்கிட்டதோடு நில்லாமல் மனைவி என்று வேறு சீண்டுகிறானே!

அன்று அவன் அவளை மனைவி என்று சொன்னதும் முதலில் திகைத்துப் போனாள் நித்யா. ஐந்து ஆண்டுகளாக அடியோடு மறந்து போயிருந்த உறவு. இப்போது எங்கிருந்து நினைவு வந்தது? ஒருவேளை, அவளை அவள் சட்டை செய்யவில்லை என்று கண்டதும் அடக்கிப்பார்க்கும் ஆணவம் தலைதூக்கிவிட்டதா? அவளைப் பழையபடி பணியவைத்துக் காட்டும் வீம்பா? எதுவானாலும் அவள் அதற்கு இடம் தரப்போவது இல்லையே.

கண்டிப்புடன் நிமிர்ந்து, "மனைவி, மண்ணாங்கட்டி என்றால் வருமானம் இல்லாமல் பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை என்று வேலைக்கும் உங்களுக்கும் சேர்த்து ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் போய்விடுவேன்" என்றாள் உறுதியான குரலில்.

"பட்டினியா?" பிரதீபனின் முகம் இறுகியது. அவளை ஆழம் பார்த்தவன் மெல்ல இளகி, லேசாக முறுவலித்து, "நான் சொல்லவில்லை சரி, ஆனால் நீயாகச் சொன்னால்?" என்று சிறு கேலிக்குரலில் கேட்டான்.

அவனது முறுவல் ஆத்திரத்தைத் தூண்ட, "பிதற்றுவதற்கு எனக்கு இன்னமும் பைத்தியம் பிடிக்கவில்லை. அதனால் ஒரு நாளும் சொல்லமாட்டேன்" என்றாள் நித்யா அலட்சியமாக.

"சொல்லுவாய் பெண்ணே, சொல்லுவாய். சர்வ நிச்சயமாக ஒருநாள் நீயே சொல்லுவாய்" என்றான் பிரதீபன் அவளுக்கு மேல் உறுதியான குரலில்.

"ச்சு" என்று அலட்சியமாகத் தலையைத் திருப்பினாள் நித்யா.

"மெள்ள மெள்ள கழுத்து சுளுக்கிக் கொள்ளப்போகிறது." என்று கேலியாகவே பேசி பிரதீபன் சிரிக்கவும், கோபத்துடன் அடுத்த காலடி எடுத்து வைத்து வேகமாக வெளியேறினாள் நித்யா.



சிரிக்கிறானா? ஏன் சிரிக்க மாட்டான்? அதுதான் உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்திருக்கிறானே.

இன்னமும் ஏழுநாட்கள் அவன் சொன்னதுபோல விட்டுப் பிரியாமல் ஒட்டிக் கொண்டு கூடவே அலையும் போது அவள் தானாக மனக்கட்டுப்பாட்டை இழந்து அவனது காலடியில் கட்டாயம். விழுந்து விடுவாள் என்று மனப்பால் குடித்திருப்பான். பெரிய ஹீரோ அல்லவா? என்று உள்ளூரப் புகைந்தாள் நித்யா.

அந்த சந்திப்பை பொறுத்தவரையில் எப்படியோ பிரதீபனுடன் பதிலுக்குப் பதில் பேசித் துணிவாக காட்டிக் கொண்டபோதும் தன் கண்கள் காந்தம் கண்ட இரும்பென அவன் புறம் பாய்ந்ததை நித்யா உணர்ந்தே இருந்தாள்.

ஆனால் பழைய கதையெல்லாம் புரட்டிப் பார்த்த மனது இதற்காக அவளையே சீ சீ என்று இகழ, இனி இம்மி அளவு பலவீனத்துக்கும் இடம் கொடுப்பது இல்லை என்று உறுதி செய்து கொண்டாள் அவள்.

"நித்யா நித்யா, ஞாயிறன்று நீ என் பின்னே மொப்பட்டில் என் தோளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துகொள். மொப்பெட்டில் போய்விட்டு இருவருமே ஆட்டோ சார்ஜ் வாங்கிக் கொள்ளலாம்" என்று ஒட்டிக் கொள்ள முயன்ற மனோகரனை, " இல்லையில்லை நீங்கள் முதலில் போங்கள். எனக்கு வெளியே ஒரு வேலை இருக்கிறது" என்று கழற்றிவிட்டுவிட்டு. இரவு உணவு நேரம் தாண்டிய பின், வழக்கமான ஆட்டோவில் வெகு தாமதமாகவே பிரதீபனுடைய வீட்டைச் சென்றடைந்தாள் நித்யா.

இறங்குமுன் ஆட்டோவிலேயே உள்ளே செல்லுமாறு கூறிக் கேட்டைத் திறந்துவிட்டான் கூர்க்கா.

இரவில் அந்த நீண்ட கார்ப்பாதையில் நடந்து செல்ல வேண்டுமே என்று எண்ணியபடியே வந்த நித்யாவுக்கு நிம்மதியாயிற்று. ஆனால் பாதையெங்கும் பால் ஒளியைப்

பரப்பி அழகூட்டிய குழல் விளக்குகள் நடந்திருக்கலாமே என்று எண்ண வைத்தன.

முன் ஹாலில் அமர்ந்து மனோகரனுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தான் பிரதீபன். சூட்கேசையும் கிட்பேக்கையும் எடுத்து வந்த ஆளைத் தொடர்ந்து நித்யாவை அசையாது பார்த்தவனின் முகம் சற்று கடுத்தது "ஹலோ, வெல்கம்" என்று எழுந்தான்.

திரும்பிப் பார்த்த மனோகரனுக்கு ஒரே உற்சாகம். "வா -வா - வா நித்யா. என்ன இவ்வளவு நேரம் ஆக்கிவிட்டாய்? வந்து சாப்பிடு வா. சப்பாத்திக்கு குருமாவும், பட்டாணி மசாலாவும் செய்திருக்கிறார்கள் பார். அப்படி ருசி. எட்டு சப்பாத்தி முழுங்கியிருக்கிறேன். வா. சாப்பிடு. என்று சொந்த வீடுபோல உபசாரம் செய்தான்.

"நான் சாப்பிட்டாயிற்று. எனக்கு எங்கே அறை வசதி?"என்று வினவினாள் நித்யா.

"செண்பகம்"என்று குரல் கொடுத்தான் பிரதீபன்.

ஒரு பெண் விரைந்து வரவும், "அம்மாவுக்கு அவர்கள் ரூமைக் காட்டி வேண்டியதைச் செய். சாமான்களை அந்த அறையில் வைத்துவிட்டு நீ படுக்கப்போகலாம், முருகன்" என்று இருபணியாட்களுக்கும் உத்திரவிட்டான்.

தாமதமாக வந்து இவர்கள் தூக்கத்தைக் கெடுத்துவிட்டாய் என்று சொல்லாமல் சொல்கிறானாக்கும் என்று புகைந்தபடியே செண்பகத்தின் பின்னே சென்றாள் நித்யா. பின்னே; இந்த மனோகரனைப்போல ஓசிச் சாப்பாட்டுக்கு ஓடி வருவாள் என்று எண்ணினானாக்கும்.

செண்பகம் கதவைத் திறந்து உள்ளே விளக்குகளைப் போட்டாள். சாமான்களை உள்ளே இருந்த டிரஸ்சிங் டேபிள் மீது வைத்துவிட்டு முருகன் சென்றதும், "உங்கள் சாமான்களை கபோர்டில் அடுக்கி வைக்கட்டுமாம்மா? ஹீட்டர் போட்டு வைத்திருக்கிறேன். டப்பில் வெந்நீர் பிடிக்கவா? ஆனால் மணி பத்தாகிவிட்டதே. முகம் மட்டும்



கழுவிக் கொள்கிறீர்களா? ராத்திரிக்கு உங்களுக்கு பாலில் பூஸ்ட் போட்டுக் கொண்டு வரவா, போர்ன்விடாவா? எதற்கும் ஒரே ஒரு சப்பாத்தி கூட்டு கறியோடு தட்டில் கொண்டு வரட்டுமா?"என்று விடாமல் தொண தொணத்தாள்.

"வேண்டாம் - வேண்டாம்."என்று ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் மறுத்து ஒருவாறு அவளை அனுப்பி வைத்தாள் நித்யா.

பழக்கம் மாதிரிப் பேசுகிறாளே. பிரதீபன் அடிக்கடி வீட்டுக்கு பெண்களை கூட்டி வருவான்போல, என்னையும் அந்த மாதிரிக் கழுதைகளில் ஒருத்தியாக எண்ணிவிட்டாளா என்று வருந்தினாள்.

இன்னமும் ஏ —ழு நாட்கள்!

சற்று நேரம் அப்படியே நின்றிருந்த பிறகுதான் அந்த அறையையே ஒழுங்காகப் பார்க்கத் தோன்றியது அவளுக்கு

வழுவழுத்த சுவரின் வண்ணத்துக்கு ஏற்றாற்போல வால் டு வால் கார்ப்பெட் காலின் கீழ் மெத்தென்றது. வெல்வெட் குஷனுடன் கூடிய முக்காலியுடன் முப்பட்டைக் கண்ணாடி பளபளத்த டிரஸ்சிங் டேபிள் உட்கார்ந்தபோது அரையடி அமுங்கிக் கொடுத்தது. போம் மெத்தையுடன் கூடிய பெரிய கட்டில், டிரஸ்சிங் டேபிளை ஒட்டி சித்திர வேலைப்பாடமைந்த கதவுகளுடன்கூடிய அலமாரி. அலங்காரமான பெட்ஸைட்லாம்ப், படுக்கை, டிரஸ்சிங் டேபிள், அலமாரி கதவுகள் எல்லாவற்றிலுமே காணப்பட்ட ஒரே மாதிரியான நுண்ணிய மரவேலைப்பாடு அதற்கான செலவைப் பறை சாற்றியது. நாற்புறச் சுவரிலும் ஒருவிதமான மொட்டுப்போன்ற வடிவுடன் கூடிய மின்விளக்குகள் இதமான ஒளியை உமிழ்ந்தன. படுக்கை ஓரமாகக் கையெட்டும் இடத்தில் ஸ்விட்சுகள். மின் விசிறியைத் தேடியபோது இதமான ஏசி குளிர் அதன்

தேவையின்மையைத் தெரிவித்தது. ஒரு புறமாய்ச் சுவரை மறைத்திருந்த திரையை ஒதுக்கிப் பார்த்தபோது அங்கங்கே விளக்குகளுடன் தோட்டம் தென்பட்டது. பகலிலும் பார்க்க மிகவும் அழகாயிருக்கும் இந்தத் தோட்டம் என்று பறை சாற்றியது.

இத்தனை செழிப்பையும் பார்க்கையில் மனதில் மகிழ்ச்சி உண்டாக மறுத்தது. பண்ணை, பணம் என்று போனாயே, இப்போது பார் என்று குத்திக்காட்டுவதாக எண்ணிக் குமையத்தான் அவளால் முடிந்தது.

கதவைத் தட்டும் ஒலி கேட்கவும், இந்தப் பெண் என்னை நிம்மதியாக இருக்க விடமாட்டாளா என்று அலுத்தபடியே, "என்ன?" என்றாள் நித்யா.

கதவைத் திறந்து கொண்டு பிரதீபன் உள்ளே வரவும் திடுக்குற்று படுக்கையிலிருந்து எழுந்தாள்.

கையில் இருந்த ட்ரேயைப் படுக்கை அருகே இருந்த வட்டமான கண்ணாடி மேசை மீது டெலிஃபோனை ஒதுக்கி வைத்துவிட்டு திரும்பினான் அவன்.

அவளை ஒருதரம் பார்வையால் அளந்துவிட்டு, "இரண்டு நாட்களுமா பட்டினி கிடந்தாய்? "என்று மெதுவான குரலில் அவன் கேட்கவும் அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

மெய்யாகவே கடந்த இரு தினங்களிலும் அவளுக்கு உண்ணப்பிடிக்கவில்லை. கூடவே யாருடனும் முகத்தை பார்த்துப் பேசவும் பிரியமில்லை. யாரும் வருமுன்பாகக் காலையில் முன்னதாகச் சென்று உண்ட இரண்டிரண்டு இட்லிகளைத் தவிர்த்து அவள் பட்டினிதான் கிடந்தாள்.

ஆனால் அது இவனுக்கு எப்படி தெரிய முடியும் என்று எண்ணம் ஓடுகையில் அவன் அவளை அளவிடுவதுபோல பார்த்தது நினைவு வந்தது. இரண்டு நாள் சாப்பிடாவிட்டால்கூட உடம்பு மெலிந்து தோன்றிவிடுமா



என்ன? எப்படியும் உண்ணாதது பிரதீபனுக்கு தெரியலாகாது என்று எண்ணி, "ஹூம். நான் ஏன் பட்டினி கிடக்க வேண்டும்?" என்று முடிந்த அளவு மிடுக்காக வினவினாள். ஆனால் குரல்தான் ஒத்துழைக்காமல் சற்று சோர்ந்து ஒலித்ததோ என்று சிறு சந்தேகம்.

அவன் வேசாகத் தோளைக் குலுக்கி, "அதை நீதான் சொல்ல வேண்டும்" என்று பதிலிறுத்தான்.

உதட்டைக் கடித்துக் கொண்டாள் நித்யா. உடனே சமாளித்து; "எனக்குத் தூக்கம் வருகிறது" என்றாள் குறிப்பாக.

லேசாக முறுவலித்து, "தூக்கம் வராவிட்டாலும்கூடக் கவலை வேண்டாம். நான் இப்போது வெளியே போய்விடுவேன். ஆனால் தூங்கும்முன் இந்த பிஸ்கட்டுகளையும், பாலையும் . குறைந்தது பாலை மட்டுமேனும் குடித்துவிடு. குட்நைட்" என்று கதவை நோக்கி நடந்தான்.

"எனக்கு இந்த அறையின் சாவி வேண்டும்."

'விருக்'கெனத் திரும்பிய பிரதீபனின் விழிகளில் சினம் தெறித்தது.

# 8

தொழில் என்கிற எல்லைக்குள் உறவை நிறுத்திக் கொள்ள வேண்டும்; அதற்கு மேல் நீ யாரோ நான் யாரோ என்கிற முறையில் தான் நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டபிறகுதான் நித்யா பிரதீபனின் வீட்டுப்பக்கம் காலடி எடுத்துவைத்தாள். ஆனால் அவனது

சினந்தபார்வை அந்தத் தீர்மானத்தை மறக்கடித்து அவளைக் கலங்கச் செய்தது.

அவளைத் தரக்குறைவாய் நினைத்து அவனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளச் சாவி கேட்கவில்லை என்று சொல்லாமல் சொல்ல எண்ணி, "விடுதியில் அறைக்கதவைத் தாளிட்டுக் கொண்டு தூங்கித்தான் எனக்குப் பழக்கம் இல்லாவிட்டால் தூக்கமே வராது. இதற்குச் சாவியால் மட்டும்தானே". என்று முணுமுணுத்தாள்.

"டிரஸ்சிங் டேபிள் டிராயரில்' சாவி இருக்கும்" என்று கூறி வேகமாக வெளியேறிவிட்டான் பிரதீபன்.

அவனுக்குக் கோபம் அடங்கவில்லை என்பது நித்யாவுக்கு நன்றாகவே புரிந்தது. எனக்கென்ன என்று அலட்சியம் செய்ய மாட்டாமல் விழிகளில் நீர் துளிர்த்தது.

சில நிமிடங்களில் படுக்கையின் அருகிலிருந்த டெலிஃபோன் ஒருசி ராய்க் கிணுகிணுத்தது. பிரதீபன்தான்.

"எனது நாள் காலை ஐந்தே முக்காலுக்குத் தொடங்கும். ஆறு மணிக்கு 'ஜிம்மு'க்கு வழிகாட்ட செண்பகம் வருவாள். மனோகரனிடம் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அலமாரிக்குள் கடிகாரம் இருக்கும். எடுத்து அலாரம் செட் பண்ணிவைத்துக் கொள். குட்நைட்" என்றான்.

பதிலுக்கு அவசர அவசரமாகக் "குட்நைட்"சொன்ன பிறகு ஏனோ சற்று நிம்மதியாக இருந்தது நித்யாவுக்கு.

காலையில் ஆறுமணிக்குக் கதவைத் திறந்தபோது செண்பகம் வாயிலிலேயே தயாராக நின்று கொண்டிருந்தாள்.

அவள் கண்களில் தூக்கக்கலக்கத்தைக் காணவும், "என்னால் உனக்கு இரவிலும் லேட்டாகத் தூங்கிக் காலையிலும் சீக்கிரமாக எழும்பும்படி ஆகிவிட்டதா, செண்பகம்?" என்று சற்று வருத்தம் தொனிக்க வினவினாள் நித்யா.



"அட, ஒரு நாள், ஒரு பத்து நிமிஷம் முன்ன எழுந்தாக்க என்ன ஆயிடும்மா?" என்றவள் விழிகளை விரித்து நித்யாவை நன்றாகப் பார்த்து விட்டு, "அம்மா, அய்யா சொன்ன மாதிரியே நீங்க நிஜமாகவே ரொம்பவும் அழகாத்தான் இருக்கீங்கம்மா" என்றாள் வியப்பும் மகிழ்ச்சியுமாக.

அய்யா சொன்னமாதிரியா?

லேசாக முகம் சிவந்தது நித்யாவுக்கு. செண்பகத்திடம் என்ன சொல்வது என்று சற்றுத் திணறிக் கொண்டு இருந்த போது நல்லவேளையாக மனோகரன் வந்து சேர்ந்தான்.

"ஃபைவ்ஸ்டார் ஹோட்டல் ரூம். அழகாகப் போர்வைக்குள் தூங்கவிடாமல், இந்த நேரத்திலேயே எழும்பும்படி ஆகிவிட்டதுபார், நித்யா இதைத்தான் சமைக்கக் கொடுத்து வைத்தாலும், சாப்பிடக் கொடுத்து வைக்கவேண்டும் என்பது. உன் ரூம், பெட் படுக்கையெல்லாம் எப்படி? என்னோடது மாதிரி தானா மெத்துமெத்துதென்று? நான் வந்து பார்த்து சொல்லட்டுமா?" என்று இளித்தான் அவன்.

"வேண்டாம்" என்று கருக்கமாக உரைத்துவிட்டு செண்பகத்தை ஒட்டி விரைவாக நடந்தாள் நித்யா.

இந்தப் பெண் அருகில் இராத போது யாரை ஒட்டுவது?

பிரதீபனின் விசாலமான காற்றோட்டமான ஜிம்னாசியத்தைப் பார்த்தபோது 'வாவ்' என்றிருந்தது நித்யாவுக்கு.

எப்போதுமே பிரதீபனுக்கு உடற்பயிற்சி முக்கியம்தான். வசதியற்ற அந்த நாளில்கூடக் காலையில் எழுந்து ஸ்கிப்பிங் குதிப்பான். சூரியநமஸ்காரம் செய்வான். தோளுக்கு, தொடைக்கு, மூச்சுக்கு என்று பல பயிற்சிகள். நித்யாவையும் செய்ய வைப்பான். 'இப்போது உன் உடல்கட்டு மிகமிக அழகுதான் நித்தி. ஆனாலும், இதையெல்லாம் செய்தால் எந்நாளுமே இப்படியே

இருப்பாய் அதோடு மனதுக்கும் திடம் வரும்' என்பான் அவனைப் பிரிந்த பிறகு தாளமாட்டாது போலத் தோன்றிய துயர நாட்கள் தவிர நித்யாவும் பயிற்சியை விட்டதில்லை.

ஏற்கனவே பயிற்சியைத் தொடங்கி விட்டிருந்தான் போலும். வெற்று மார்பிலும், நெற்றியிலும் வியர்வை பளபளக்க பிரதீபன் வந்து நின்றான். "வாவ்! உங்களுக்கு மெய்யாகவே பிரமாதமான உடல்கட்டு, சார். நான் சினிமாவில் ஏதோ ட்ரிக் என்று நினைத்திருந்தேன் என்றான் மனோகரன்.

பிரதீபன் முன்பே நன்றாகத் தான் இருப்பான் என்றாலும் அதற்கென்றே உரிய கருவிகளைக் கொண்டு செய்யும் பயிற்சியும், பணைச்செழுமையும் அவனுக்கு இன்னும் மெருகேற்றியிருந்தன. அவனது அகன்ற தோள்களும். . . அதிகப்படி கொழுப்பே இல்லாத இறுகிய தசைகளும். நித்யாவுக்கு பார்வையை அகற்றமுடியவில்லை.

ஆனால் அவளை நோக்கிய பிரதீபனின் புருவங்களில் ஒன்று கேள்வி போல மெல்ல உயரவும், முகம் கன்ற அவசரமாகப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

முறுவல் செய்து, "இதுதான் என் ஜிம்னாசியம், மிஸ். . . மிஸ். . . வந்து. . ." என்று இழுத்தான் பிரதீபன்.

வேண்டுமென்றே சீண்டுகிறானே என்று நித்யா உள்ளூரக் கொதிக்க மனோகரன் இடைவிட்டுப் பதில் சொன்னான். "நித்யா செக்ஸ், உடை விஷயங்களில் பழமை விரும்பி என்றாலும் ஒருவகையில் பயங்கர மாடர்ன் தேர்ள், சார் வெறும் எம். எஸ் தான் போட்டுக் கொள்வாள். அதைப் பற்றித் தூவினால் பட்டென்று மூக்கறுத்து விடுவாள். நீங்கள் வேணுமானால் கேட்டுப் பாருங்கள்."

"அவசியம் இல்லை எல்லோரையும் போல என்னை வெறுமனே நித்யா என்றே அழைக்கலாம்" என்றாள் நித்யா கருக்கமாக.



அதற்குமேல் வம்பு வளர்க்கவில்லை பிரதீபன். "ஓகே", நித்யா இப்போது இந்த 'ஜிம்'மில் உள்ள ஒவ்வொரு மிஷினையும் எப்படிப் பயன்படுத்துகிறேன் என்று பார்த்து எழுதிக் கொள்கிறீர்களா?"

மனோகரனுக்காக என்று தெரிந்தபோதும், அவனது மரியாதைப் பண்மை அவள் மனதை ஒரு மாதிரித் தாக்கியது. கூடவே அவன் பயிற்சிகளைச் செய்து காட்ட, அவன் உடலைப் பார்த்து மேலும் மனதைச் சலனப் படுத்திக் கொள்ள விரும்பாமல், "இல்லை, மனோகரன் போட்டோ எடுத்துக் கொள்ளட்டும். அப்புறம், இது இப்படி என்று குறிப்பு கொடுத்தால் போதும். நான் . . . நான் உங்கள் தோட்டத்தைப் பார்க்கிறேன்" என்று நிமிர்ந்து பாராமலே சொல்லி வெளிநடந்துவிட்டாள் நித்யா.

"இதெல்லாம் நான் அக்னி நட்சத்திரம் படத்தில் பிரபு பயன்படுத்தப் பார்த்தேன் சார்" என்று மலைப்பும், பிரமிப்புமாக மனோகரன் கூறுவது அவள் காதில் விழுந்தது.

தொடக்கமே இந்தத் தவிப்பாக இருக்கிறதே!

பேட்டியின் முதல் நாளை ஒரு சாதாரண நாளாகத் தொடங்க விட்டிருந்தான் பிரதீபன்.

பூண்டி நீர்தேக்கத்தின் அருகே அன்று படப்பிடிப்பு. பத்து மணிக்கு 'ரிப்போர்ட்' பண்ணவேண்டும் என்று கூறி விரைவாகவே கிளம்ப ஏற்பாடு செய்தான்.

"வெளிப்புறப் படப்பிடிப்பு என்றால் எல்லோருக்கும் வரும் உணவைத்தான் நானும் உண்பது. உங்களுக்கு ஏதாவது தனியாக அனுப்பச் சொல்லட்டுமா?" என்று அவன் கேட்டபோது, பேசத் துடித்த மனோகரனை முந்திக் கொண்டு 'வேண்டாம்' என்று விட்டாள் நித்யா.

காரில் ஏறும்போது. "நித்யா, நீ என்னோடு முன்னாலேயே ஏறிக் கொள்கிறாயா? சார் வசதியாகப்

பின்னால் தனியே வரட்டும்" என்று மனோகரன் கேட்கவும், நித்யா திணறிப்போனாள்.

டிரைவர் அருகில் மனோகரனோடு நெருக்கிக் கொண்டு அமர்வதை நினைத்தாலே வெறுப்பாக இருந்தது. ஆனால் மறுத்து, பிரதீபனுடன் பின்புறம் அமரப்போவதாகச் சொல்வதும் கஷ்டம்தான். அவன் அருகில் அமர்ந்து செல்வதும் இன்னொரு வகைத் துன்பம்தான் என்றாலும் முன்னது போல அருவருப்பாய் இராது.

நல்ல வேளையாகப் பிரதீபன் முன் வந்து, "இல்லை மனோகரன், எதற்காக நெருக்கியடித்துக் கொண்டு செல்வது? நித்யா பின்புறமே அமரட்டும்" என்று முடித்துவிட்டான்.

காரில் அவள் ஓர் ஓரமாக அமர்வதைப் பார்த்த போதும் லேசாக முறுவல் செய்தானே தவிர ஒன்றும் கூறவில்லை.

"ம்ம். இது கார். இது கார் சவாரி" என்று ரசனையுடன் சாய்ந்திருந்த மனோகரன் சற்று தூரம் சென்றதும் தன் திறமையைக் காட்டத் தொடங்கினான்.

சீட்டிலிருந்து பின்புறம் திரும்பி, "பிரதீபன் சார், ரொம்ப முக்கியமாக நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்" என்று அவன் சீரியசாகத் தொடங்கவும் நித்யாவின் முகம் கறுத்தது.

தொடங்கிவிட்டானா அவன் வேலையை?

"வேண்டாம். நீங்கள் எதுவும் சொல்லத் தேவையில்லை" என்றாள் சுள்ளென்று.

ஆனால் பிரதீபன் சமாதானமாக "பரவாயில்லை சொல்லட்டும்" என்று கூறி மேலே பேசத் தொடங்கியவனைத் தலையசைத்து அடக்கிவிட்டு, "நீங்கள் சொல்லுங்கள், மனோகரன். ஆனால் ஒரு நிபந்தனை.



நீங்கள் 'ஒன்று' சொன்னால் அப்புறம் நான் 'இரண்டு' சொல்வதைக் கேட்க வேண்டியிருக்கும்" என்றான் சாவதானமாக.

அலுவலகத்தில் யாரைப் பார்த்தாலும் இதேபோல சீரியசாகத் தொடங்கிவிட்டு, அவர்கள் என்னவோ ஏதோ என்று செவிமடுக்கும்போது ஒன்று என்று கூறிக் குதிரைக்கனைப்பு கனைப்பது மனோகரனின் வழக்கம். இவனிடமும் தொடங்கி விட்டானே என்று குன்றி இருந்தாள் நித்யா.

ஆனால் இன்று பிரதீபன் 'இரண்டு' சொல்வேன் என்று மடக்கவும் அவன் முகம் போன போக்கைப் பார்த்துத் தன்னை மீறி வெகு காலத்துக்குப் பிறகு வாய்விட்டுச் சிரித்தாள்.

எல்லா ஷீட்டிங்கும் போலத்தான் அவளது படப்பிடிப்பும் இருந்தது.

பிரதீபனின் காரைக் கண்டதும் முன்னே வந்து வரவேற்ற ஒரு வெள்ளை வேட்டிக்காரர், " ஹீரோ வந்தாச்சது. இந்த ஹீரோயினி அம்மா எப்போ வந்து சேருமோ?" என்று அலுத்துக் கொண்டார்.

அவர்தான் டைரக்டர் போலும் என்று நினைத்தாள் நித்யா. ஆனால் அவர் பைனான்சியரின் ஏஜண்ட் என்றார்கள். முள்ளின்மேல் நிற்பதுபோல, தான் பரபரத்ததோடு மற்றவர்களையும் அவர் நிம்மதியோடு இருக்கவிடவில்லை.

டைரக்டர் திணறுவதைப் பார்த்துவிட்டு, "ஹீரோயின் தேவைப்படாத மற்றவேலையை முடிப்போமே, நாதன் சார்?" என்று பிரதீபன் யோசனை கூறவும் வேலை தொடங்கியது.

ஒரு புறமாய் இருபது ஆண், பெண்களுக்கு ஆணும், பெண்ணுமாய் இருவர் 'மூவ்மெண்ட்ஸ்' கற்றுக் கொடுத்துக் கொண்டு இருந்தனர். அங்கே நின்று அந்தப் பெண்களை

வெறிக்கத்தொடங்கினான் மனோகரன். இன்னொரு பக்கம் ஓர் அம்மா நடிகையுடன் பிரதீபனின் ஒத்திகை தொடங்கியது.

"எனக்கென்று ஒரு லட்சியம் இருக்கிறது, அம்மா. அது நிறைவேறும்வரை என் வாழ்வில் திருமணத்திற்கு இடம் இல்லை" என்று அவன் வசனம் பேச, "ஆமாம்பா, உன் லட்சியம் நிறைவேற இன்னும் இருபது வருஷம் ஆகிறது என்று வை. அப்படி என்றால் நான் என் பேரன் பேத்திகளைக் கண்ணால் பாராமலேயே உயிரை விடவேண்டும் என்கிறாயா? கல்யாணத்தைக் கட்டிக் கொண்டு இரண்டுபேருமாக லட்சியப்பயணம் செய்யுங்களேன்" என்று அந்த அம்மா நடிகை வாதாடுவதாகக் காட்சி.

இருவருக்குமே அதிக ஒத்திகை தேவைப்படவில்லை. சில காமிராகோணம், குளோஸ்அப் ஒளி முகத்தில் உடம்பில் விழுகிற விதம் பற்றி டைரக்டர், காமிராமேன் விவாதித்துக்கொண்டு இருந்தபோது அந்த அம்மா நடிகை இவர்களோடு அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தாள்.

"அது சினிமா வசனம். இனிமே நடப்புக்குவா பிரதீபு. நீ எப்போது கல்யாணம் கட்டிக்க போகிறாய் சொல்லு" என்று ஒரு வற்புறுத்தலோடு வினவினாள்.

வேடிக்கையாகக் கையை விரித்தான் பிரதீபன்.

ஊகூம் அந்த மழுப்பலெல்லாம் என்கிட்ட வேண்டாம். சொல்லு. உன் கல்யாணம் எப்போ? " என்றாள் அந்த அம்மான் பிடிவாதமாக.

"கல்யாணம் என்றால் நான் மட்டுமாய் கட்டிக்கொள்ள முடியுமா, அம்மா. முதலாவதும் முக்கியமானதுமாக ஒரு பெண் வேண்டாமா?" என்று பல் வரிசை தெரிய அழகாகச் சிரித்தான் பிரதீபன்.

"பொண்ணுக்கா பஞ்சம்? அதுவும் உனக்கா? இன்னிக்கு நடிக்க வருவாளே, ஹீரோயின், அவளைக்கேளு



'மஞ்சக்கயிறு கிடைக்காவிட்டால்கூடப் பரவாயில்லை என் பாவாடை நாடாவை வெட்டித்தாரேன். இப்பவே கட்டு' என்பாள் என்று தன் பாணியில் அந்த நடிகை பேசவும் எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

"ஆமாம், மழுப்பி மழுப்பி நல்லாச்சிரிப்பியே. நான் என்ன பொய்யா சொல்கிறேன்? வேணுமானா இந்தப் பாப்பாவையே கேட்டுப்பாரு "என்று அருகில் ஒரு நாற்காலியில் அவ்வப்போது குறிப்பு எடுத்தபடி அமர்ந்திருந்த நித்யாவைக் காட்டினாள் அவள்.

நித்யா கல்லைப்போல உட்கார்ந்திருக்க "அய்யோ, வேண்டாம்மா. அப்புறம் கன்னத்தில் கைத்தடத்தோடு நடிக்க முடியாது. கண்டினியூட்டி கெட்டுவிடும். என்று பயந்தவன்போலப் பேசினான் பிரதீபன்.

"கைத்தடமா?_ஏன்? உனக்குப் பொண்ணுக்குப் பஞ்சமான்னு கேட்டால் ஏன்_ஓகோ, நீ அப்படி அர்த்தத்தில் சொன்னாயா? அப்படியே கேட்டால்தான் என்ன? அடித்து விடுவாளா? இதோ நான் கேட்கிறேன் பார். ஏம்மா, நீயே சொல்லு உனக்கு எங்கள் பிரதீபனைக் கட்டிக் கொள்ளக் கசக்குமா? கோடிகோடியாப் பணம் இருக்குது. படிப்பு இருக்குது. ஆளும் அழகு. நீயே பார்த்துக் கொள். அரிதாரம் கூடக் கிடையாது" என்று நேரடியாகக் கேட்கவும் நித்யா திணறிப்போனாள்.

பிரதீபனை ஆத்திரத்துடன் முறைத்தவள், அம்மா நடிகை மீண்டும் கேட்கவும், "பணம், படிப்பு, அழகுக்காக மாத்திரம் ஒருவரை மணந்து கொள்ள முடியுமா, அம்மா?" என்று திருப்பிக் கேட்டாள்.

"அடப்பெண்ணே, உனக்கு வேறே என்ன வேணும்?" என்று ஆச்சரியத்துடன் வினவினாள் நடிகை.

"ஒழுக்கம், நேர்மை, கடைசிவரை காப்பாற்றுவார் என்கிற நம்பிக்கை" என்றாள் நித்யா எடுப்பாக.

பிரதீபனின் முகம் இறுகியது.

திகைப்புடன் இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள் அந்த அம்மாள். வேடிக்கையாகத் தொடங்கியது, என்னவோ ஆகிவிட்டது என்பது புரிந்தது. ஆனாலும் விடாமல், எங்கள் பிரதீபுக்கு அதிலேயும்தான் என்ன குறைச்சலாம்? சும்மா கண்ட கசமால பேப்பரிலே போடுகிற கண்ணராவிகளை எல்லாம் படித்துவிட்டு சினிமாக்காரன் என்றலே குணம் கெட்டவன் என்கிறது. எனக்குத் தெரிந்த ஒருத்தர் இருக்கிறார். பெண்டாட்டியே நாலு. அதுபோக ஊருக்கு ஒருத்தி. தைரியமா எழுதுவீர்களா? படம்போடுவீர்களா? போட்டால்தான் பேப்பர் விற்குமா? எங்கள் படத்தை, செய்தியைப்போட்டு பேப்பர் விற்கிறீர்களே. அந்த நன்றி வேண்டாம்? விஷயமே இல்லாமல் கால், தலை வைத்து ஜோடிப்பது என்று பொரிந்து கொட்டிவிட்டாள்.

மெய் தான். ஆனாலும் பத்திரிகைகளில் உங்கள் செய்தி வருவது உங்களுக்கும் விளம்பரம்தானே. தன்னைப்பற்றி கிசு கிசு போடும்படி சில நடிகைகள் பத்திரிகை ஆபீசுகளுக்கு ஃபோன் செய்ததாகக் கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று துணிவோடு திருப்பினாள் நித்யா.

அது மெய்தான் என்று ஒத்துக்கொண்டாள் அம்மா நடிகை. "ஒன்றிரண்டு கழுதைகள் அப்படியும் உண்டுதான்..." என்றவளின் பார்வை நித்யாவைச் சுவாரசியத்தோடு ஆராய்ந்தது "நீயும் லைட் போட்ட மாதிரி பளிச்சென்று அழகாகத்தான் இருக்கிறாய். தைரியமாகப் பேசுகிறாய். கல்யாணம்.." என்று கழுத்தை ஆராய்ந்தவள், "கல்யாணம் பண்ணிக் கொள்கிற உத்தேசம் இருந்தால் சொல்லு. கைவசம் இரண்டுமூன்று நல்ல பையன்கள் இருக்கிறார்கள்" என்றாள் சீ ரியசாகவே.

நித்யாவுக்கு வேடிக்கையாக இருந்தது. "பரவாயில்லை. நடிப்புக்கு முழுக்குப்போட்டால் கூடப்பரவாயில்லை.



கைவசம் வேறே தொழில் வைத்திருக்கிறீர்கள்" என்று கேலியாகச் சிரித்தாள்.

டைரக்டர் அழைக்கவும், சிரித்தபடி எழுந்த அந்த அம்மாள், "கெட்டிக்காரப் பொண்ணு" என்று நித்யாவின் முகவாயைத் தொட்டு முத்தமிட்டு விட்டுப் போனாள்.

இன்னொரு காட்சியும் படம் பிடித்தார்கள்.

பிரம்மாண்டமான அம்மன் சிலையின் முன்னே ஆணும், பெண்ணுமாக இருபது பேர் பாடி ஆட, கதாநாயகனும், ஒருவாறு வந்து சேர்ந்துவிட்ட கதாநாயகியும் இடையிடையே ஓடி ஆடுவது போலக் காட்சி.

ஹீரோவும், ஹீரோயினும் அவ்வப்போது குடை நிழலில் அமர்ந்து கொள்ளத் துணை நடிகர்கள் வெய்யிலில் வெந்தார்கள். 'டைமிங்'கில் யாராவது சிறு தவறு செய்துவிட, அவர்களால் மற்றவர்களும் உரிய போஸ்களில் நின்று கொண்டே இருக்க நேர்ந்தது.

சற்றுநேரம் பார்த்துக் கொண்டு இருந்த பிரதீபன். ஆண் நடிகர்களில் ஒருவரைச் சுட்டிக்காட்டி அருகில், வருமாறு அழைத்தான்.

பயந்தபடி வந்தவனிடம், "உடம்பு சரியில்லையா?" என்று வினவினான்.

மிரண்ட பார்வையை, ஆட்டத்தைப்பார்த்துக் கொண்டு நின்ற டைரக்டர் முதலானவர்களிடம் செலுத்தினான் அவன். மீண்டும் பிரதீபனிடம் திரும்பி, "காய்ச்சல். ஆனால் தயவு பண்ணி வெளியே சொல்லிவிடாதீர்கள், அண்ணே. வீட்டுக்கு அனுப்பிவிட்டு வேறே ஆளைப்போட்டு எடுத்துவிடுவார்கள். இன்றைக்குச் சம்பளம் இல்லாமல் எனக்குத் தாங்காது அண்ணே," என்றவன் அழுது விடுவான்போல இருந்தது.

"ஆனால், இன்னும் எவ்வளவு நேரம் உன்னால் இப்படி ஆடமுடியும்?" என்று கேட்டான் பிரதீபன்.

அவன் பரிதாபகரமாகப் பார்க்கவும், "ரூம்மெண்ட்" எல்லாம் வந்துவிட்டதா? கடைசி டேக் சமாளித்து விடுவாயா?" என்று தொடர்ந்துவிசாரித்தான்.

அவன் சமாளித்துவிடமுடியும் என்றதும், அவன் பெயரைக் கேட்டுத்தெரிந்து கொண்டு, டைரக்டரை அழைத்தான்.

நடுங்கிய தாமோதரனின் தோளில் ஒரு கையை வைத்து, "நாதன் சார், தாமு என்னோடு சற்றுப்பேசிக் கொண்டு இருக்கலாம் இல்லையா. கடைசி டேக்கின்போது அனுப்பி விடுகிறேன்." என்றான்.

"தாமு" என்ற அழைப்பையும், தோளை அணைத்தாற்போல நின்ற நெருக்கத்தையும் கண்ட டைரக்டர் தலையாட்டினார். "ஏய், யாரங்கே, தாமோதரனுக்கு ஒரு நாற்காலி கொண்டுபோடுங்கள். ஜீஸ்கம் கொடு" என்று உத்திரவிட்டு விட்டுப் போனார்.

நன்றியுடன் நாற்காலியில் சாய்ந்து ஓய்வெடுத்துவிட்டு, கடைசி 'டேக்'கில் நடித்து, பணத்தை வாங்கிக் கொண்டு போனான் அவன்.

"இவ்வளவு சுற்றி வளைப்பானேன்? உங்களிடம் இருக்கும் கோடி கோடிகளில் இவருக்கு ஒரு நாள் சம்பளம் கொடுத்தால் குறைந்து விடவா போகிறது" என்று விசாரித்தாள் நித்யா.

"குறையாதுதான். ஆனால் இப்படி எத்தனை பேருக்குக் கொடுப்பது? முடியாமல் தடுமாறுகிறவர்களில் எத்தனை மெய், எத்தனை பொய்யென்று எப்படிக் கண்டு கொள்வது? அத்தோடு இந்த 'டெம்பிள் டான்சில்' இன்னும் நாலு நாள் வேலை இருக்கிறது. இன்று வேறு ஆளைப் போட்டுவிட்டால் இடையில் மாற்றமாட்டார்கள். அவனுக்கு இன்னும் நாலுநாள் வருமானம் வேறு போய்விடுமே" பொறுமையாக விளக்கினான் பிரதீபன்.



அதுவும் சரிதான்.

பொதுவாக முடிந்த அளவு இரவு உணவுக்கு வீடு திரும்பிவிடுவது வழக்கம் என்றான் பிரதீபன். பகலில் உண்டான 'டென்ஷன்'தனர, நன்றாகக் குளித்துவிட்டு, ஏதாவது இசையைக் கேட்டபடி படுத்திருப்பானாம்.

"வரப்போகிற மனைவிக்கு மிகவும் பிடித்தமாயிருக்கும். ஹி.. ஹி.. ஹி.." என்று சிரித்தான் மனோகரன்.

உதடுகளில் புன்முறுவலுடன் நித்யாவைப் பார்த்தான் பிரதீபன். "உங்கள் நிருபரின் அபிப்பிராயம் எப்படியோ?" என்றான் கேலியாக.

இந்த வார்த்தைகளில் உட்குறிப்பு புரியாமல் மனோகரன் "எல்லாம் என் அபிப்பிராயம்தான் சார் நித்யாவுக்கும், மாறுதலாக எப்படி இருக்க முடியும்? என்ன நித்யா?" என்றான் மனோகரன்.

நித்யா மவுனம் சாதித்தாள்.

## 9

இரவில் அமர்ந்து அன்றுவரையில் எடுத்த குறிப்புகளுக்கு கட்டுரைவடிவம் கொடுத்துப் படித்துப் பார்த்தாள் நித்யா.

எல்லாமே அவனை உயர்த்தி, உத்தமனாக்கிக் காட்டின. ஆனால் அவன் அப்படி இல்லையே. அப்படி இல்லையென்பதற்கு அவள் நேரடி சாட்சி ஆயிற்றே.

வேலை முடிந்து படுத்தவளுக்கு அன்று வாய்விட்டுச் சிரித்தது நினைவு வந்தது. மனோகரனின் காலை, பிரதீபன்

வாரிய விதத்தை நினைத்து மீண்டும் முறுவலித்தபடியே உறங்கிப் போனாள்.

மறுநாள் மதியம் வரை முன்தினம் போலப் படப்பிடிப்புகள்தான்.

பொதுவாகப் படம் எடுக்கிற இடத்தில் பிரதீபனுக்கு வரவேற்பும், மரியாதையும் இருப்பதை நித்யா உணர்ந்தாள். கடை நிலை ஊழியரிடம் கூட ஒரு மனிதாபிமானத்தோடு அவன் நடந்து கொள்வதும் தெரிந்தது.

ஒருவேளை இதுவும் நடிப்புதானோ? இருக்கும். மற்றபடி இவ்வளவு முக்கியமானதை மறப்பது சாத்தியமா? அல்லது அவனுக்கு அதுவும் ஒரு படப்பிடிப்பு போலத்தானா?

உள்ளூர இருந்த குமைச்சலை வெளியே காட்டிக் கொள்ளாமல், கண்ணில் விளக்கெண்ணையை விட்டுக் கொண்டு பிரதீபனிடம் குற்றம் தேடி அலுத்தாள் நித்யா.

மனோகரனின் அனுபவங்களை இருவருமே ரசித்துகொள்வதாக இல்லை.

அன்று மதிய உணவுக்கே இருவரையும் அழைத்துக் கொண்டு வீடு திரும்பிவிட்டான் பிரதீபன்.

"ஆண்டுதோறும் இந்த நாளில் கைதிகளுக்கு இனிப்பு வழங்குவது என் வழக்கம். இன்று மாலை மூன்று மணிக்குச் சிறைச்சாலையில் இருக்க வேண்டும். நீங்கள் இருவரும் இரண்டரை மணிக்குத் தயாராயிருங்கள்"

"ஆனால் அநியாயம் சார்"என்றான் மனோகரன். "மணி ஒன்று ரொம்ப நல்லல்ல சாப்பாடு வேறு போட்டிருக்கிறீர்கள். ரூமிலோ ஏசியும் மெத்தைக் கட்டிலும்— படுத்தால் நாலு மணிக்கு முன் எழுந்திருக்க முடியுமா? கொஞ்சம் லேட்டாய்—"

"இரண்டரை மணிக்குத் தயாராகிக் கீழே வரவில்லை என்றால் வராதவர்களை விட்டு விட்டுப் போய்விடுவேன். நேரம் தவறுவது எனக்குப் பிடிக்காது. இது பற்றிய புகைபடங்கள் உங்கள் பத்திரிகைக்குத் தேவை இல்லை என்றால் நீங்கள் தாராளமாகத் தூங்கலாம்."



பிரதீபன் குரலை உயர்த்தாவிட்டாலும் 'நொட்' டென்று தனக்கு ஒரு குட்டு விழுந்ததை மனோகரன் உணர்ந்து கொண்டான். உடனேயே குழைந்து, "நீங்கள் பெரிய ஹீரோ சார். உங்களுக்கு இவ்வளவு பக்கத்தில் வருவதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று முகஸ்துதி செய்தான்.

ஓரக்கண்ணால் நித்யாவை நோக்கி, "எல்லோரும் உங்களை மாதிரி நினைப்பது இல்லை, மனோகரன்" என்றான் பிரதீபன்.

"இல்லையாவது இன்னொன்றாவது? நித்யா, நான்— எல்லோரும் அப்படித்தான் சார் என்ன நித்யா?"

கைக்கிண்ணத்தில் இருந்த பழசாலடில் இருந்து, ஒரு செர்ரியைக் கவனத்துடன் கரண்டியால் தேடி எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள் நித்யா.

நித்யா தன்பேச்சைக் கவனிக்கவில்லையா, அல்லது ஒத்துழைக்க வில்லையா, என்பது புரியாமல்"இன்றைக்குத் தான் ஸ்வீட் கொடுக்க வேண்டும் என்று என்ன சார் கணக்கு? நாளைக்கு— நாளன்று. வருஷத்தில் இன்னமும் முன்னூற்று அறுபத்தைந்து நாட்கள் இருக்கிறதே," என்று வேறுபுறம் பேச்சைத் திருப்பினான் மனோகரன். "ஓ! ஓ! இது லீப் வருஷமில்லையா?"

"இன்றைக்கு என் வாழ்விலேயே மிகவும் முக்கியமான நிகழ்ச்சி நடந்த நாள்" என்றான் பிரதீபன் கருக்கமாக.

சாலடைக் கரண்டியால் அளைந்து கொண்டிருந்த நித்யாவின் கை நின்றுபோயிற்று. பார்வை மட்டும் உயர்ந்து பிரதீபனை நாடியது.

இல்லை. பிரதீபன மறக்கவில்லை.

இவ்வளவு நேரம் நெஞ்சில் இருந்த கனம் சட்டென இறங்கிவிட்டாற் போல உணர்ந்தாள் நித்யா.

மூன்றாவது கிண்ணம் சாலடைக் கையில் எடுத்த மனோகரனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டாகிவிட்டது.

முன்னே குனிந்து, "அது என்ன நிகழ்ச்சி, சார்?" என்று குரலைத் தவிர்த்து வினவினான்.

அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, நன்றாகப் பின்புறம் சாய்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டான் பிரதீபன். "ஆமாம். பேட்டி எடுக்க வந்தது, நித்யாவா, நீங்களா, மனோகர்?" என்று பார்வையை நித்யாவிடம் செலுத்தினான். "கேட்க வேண்டியவர்கள் பெறக்கூடிய பதிலைப் பெற்றுக்கொள்ளட்டும்." என்றான் புன்னகையோடு.

"ஆகா!" என்று குதித்தான் மனோகரன். "கேள் நித்யா. சீக்கிரம் கேள். உன் கட்டுரைக்கு ஏதாவது முக்கியமான விஷயம் கிடைக்கும் கேள்," என்று உந்தினான்.

வாயைத்திறந்து வார்த்தைகளை எடுக்காத குறைதான். ஆனால் நித்யா பேசாமல் உண்ணுவதில் கவனமாக இருக்கவே," ஒரு வேளை கேட்கப் பயமாயிருக்கும் "என்றான் பிரதீபன் கேலியாக.

கையிலிருந்த கிண்ணத்தை நிதானமாக அந்தச் சதுர மேசை மேல் வைத்தாள் நித்யா. எழுந்துகொண்டவள், "எப்போது என்ன கேள்வி கேட்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும்" என்று மிடுக்காக மொழிந்து விட்டுத் தன் அறையை நாடி நடந்தாள்.

"நம் கிரிக்கெட் டீம் ரொம்ப வெயில் கொளுத்தினாலும், ரொம்பக் குளிர் அடித்தாலும் பிரமாதமாய் விளையாடுவார்களாம். ஏன் தெரியுமா?" என்று சிறைச்சாலையை நோக்கிக் கார் செல்லும்போது தொடங்கினான் மனோகரன்.

"போரடிக்காதீர்கள், மனோகரன், வெயிலுக்கு மோரும், குளிருக்குக் கம்பளியும் நம் டீமில் இருப்பதால் என்று நீங்கள் படித்ததை எல்லோரும் படித்திருப்பார்கள். ஆனால் நம் டீம் தோற்றுப் போயிற்று என்பதை மறந்து பெரிதாக அதைத் திருப்பி வேறு சொல்ல வந்துவிட்டீர்களே" என்று எரிச்சல் பட்டாள் நித்யா.



மனோகரன் முகத்தில் அசடுவழிய "எப்படி ஜெயிக்க முடியும்?" என்று கேட்டான் பிரதீபன். "வெயில் அடித்தாலோ, குளிர் அடித்தாலோ நன்றாக விளையாடி ஜெயித்திருப்பார் கள். ஆனால் அங்கே மழை அல்லவா பெய்து கெடுத்தது?"

"அப்படிச் சொல்லுங்கள், சார்" என்று கைதட்டினான் மனோகர்.

நித்யாவுக்கும் சிரிப்பு வந்தபோதும் காட்டிக்கொள்ளப் பிடிக்காமல் பேச்சை மாற்றினாள். "இந்த மாதிரி வாழ்க்கையில் முக்கியமான நாள் அப்படி இப்படி என்றால் அனாதை இல்லம், மெர்சிஹோம் மாதிரி இடங்களில் வாழ்பவர்களுக்கு இனிப்பு வழங்குவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்களானால் குற்றம் நிரூபிக்கப்பட்டு, தண்டனை அடைந்த கைதிகளுக்கு இனிப்பு கொடுக்கிறீர்களே, ஏன்?" என்று வினவினாள்.

"நல்ல கேள்விதான்" என்று மெச்சிக்கொண்டான் பிரதீபன். "எங்கள் நித்யா இப்படிக் கேள்வி கேட்பதில் கெட்டிக்காரி சார். அதனால் தான் இவ்வளவு முக்கியமான பேட்டிக்கு அவளை அனுப்பினார்கள். ஆனால், அந்த முக்கியமான நிகழ்ச்சி என்ன என்று." "முதலில் அவர் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லட்டும்." என்று அடக்கினாள் நித்யா.

"சொல்லுகிறேன். என் செய்கைக்கு ஒரு காரணம் இருக்கிறது. சிறையில் இருப்பவர்களில் செய்த தப்புக்குத் தண்டனை அனுபவிப்பவர்களும் உண்டு. செய்யாத தப்புக்காக தங்களால் உண்மையை நிரூபிக்க முடியாத காரணத்தினாலேயே தண்டனை அனுபவிப்பவர்களும் உண்டு. அந்த மாதிரி அநியாயமாய் மாட்டிக் கொண்டு அல்லல்படுகிறவர்களிடம் எனக்குத் தனிப்பரிவு உண்டு. தவறு செய்யாமல் தண்டனை அனுபவிக்கும் ஓரிரு நிரபராதிகளுக்கேனும் இந்த இனிப்பு சேருமானால் அது

என் வாழ்விற்கு இனிமை கூட்டும் என்று எனக்கு ஒரு நம்பிக்கை" என்றான் பிரதீபன்.

"அடேயப்பா. இதற்கு மேல் இனிப்பா? பணம், புகழ், இளமை, அழகு, அந்தஸ்து. இதற்குமேல் தாங்காதுசார், பயங்கரமாய்ச் சர்க்கரை வியாதி வந்து விடும் என்று" அசட்டுச் சிரிப்பு சிரித்தான் மனோகரன். அவன் விட் அடித்துவிட்டானாம்.

பிரதீபன் எதையோ குறிப்பாகக் கூறுவது நித்யாவுக்குப் புரிந்தது. எதையோ என்ன? விஷயம் இதுதான். அவன் குற்றம் செய்யாதவனாம். ஆனால் நிருபிக்க இயலாமல் போய் விட்டதாம். யார் காதில் பூ சுற்றுகிறான். அல்லது- ஒரு வேளை–

வார்டன் ஏதோ அலுவலாக உள்ளே சென்றிருந்ததால், அவருக்காக சற்று நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஆனால் வார்டனின் அலுவலகத்தில் பிரதீபனுக்குப் பிரமாதமான வரவேற்பு இருந்தது. இரண்டு மூன்று பேருக்கு ஆட்டோகிராக்கூடப் போட்டுக்கொடுத்தான்.

"எல்லோரையும் நன்றாகக் காக்காய் பிடித்து வைத்திருக்கிறீர்களே, சமயத்தில் உதவும் என்றா?" என்று முகம் மாறாமல் கேட்டாள் நித்யா.

உள்ளர்த்தம் புரியாமல், "ஆமாம் இப்பொழுது உதவுகிறது பார். உட்காரவைத்து மரியாதையாகப் பேசுகிறார்கள்," என்றான் மனோகரன்.

லேசாக முறுவலித்து, "என்ன மாதிரி சமயத்தில் உதவும் என்கிறீர்கள்?" என்று நேரடியாகக் கேட்டான் பிரதீபன்.

"அது தான்– எப்போதாவது உள்ளே தங்க நேர்ந்தால்," என்று இழுத்தாள் நித்யா.

"நான் ஏன் உள்ளே தங்கப்போகிறேனாம்?" என்று பழைய மாதிரியே வினவினான் பிரதீபன்.



"அதானே கடல் மாதிரி வீடு இருக்கிறது ஏசி, டீசி என்று. அதைவிட்டு இங்கேபோய் தங்குவார்களா? சமயத்தில் நீயும் உளறுகிறாய், நித்யா. புத்திசாலி, கெட்டிக்காரி என்று சொல்லச் சொல்ல கண்பட்டுவிட்டது. யாரையாவது சுத்திப்போடச் சொல்லு. உனக்குத் தெரியுமா, என் அம்மாகூட ஆரத்தி சுத்திப்போட்டு எப்போது மருமகளை உள்ளே அழைப்பேன் என்று ஏங்குகிறாள். ஹி- ஹி- ஹி–"

தன் கிண்டலைப் பிரதீபன் புரிந்து கொண்டான் என்றதும் நித்யாவுக்கு உள்ளூர உற்சாகம் பீறிட்டது. அவனை மேலும் மட்டம் தட்டவும் விரும்பி, "மைனர் பெண்ணை மணம் செய்தால் சிறைத்தண்டனை உண்டாமே, உங்களுக்குத் தெரியுமா, மனோகர்?" என்று ஓரக்கண்ணால் பிரதீபனை நோக்கினாள்.

"மைனர் பெண் என்றால் யாராம்?" இது பிரதீபனின் கேள்வி.

"அய்யோ இது தெரியாதா, சார்? ஒரு பெண்ணுக்குப் பதினெட்டு வயதுக்கு ஒரு நாள் குறைந்திருந்தாலும் அவள் மைனர்தான். அதாவது மைனரில்லை. மைனர் பெண்தான். ஆனால் விஷயம் என்ன வென்றால் இந்த மைனர் பசங்களுக்கெல்லாம், அப்படி மைனர் பெண்கள் மேல்தான் ஆசையாம். ஆனால் நான் அப்படி இல்லை. உனக்கு எத்தனை வயதாகிறது, நித்யா?"

"எத்தனை வயதானாலும் இதைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் இல்லை." என்று சூடாகப்பதில் அளித்தாள் அவள். உடனேயே, "அப்படியானால் பதினெட்டு வயதுக்கு ஒரு நாள் குறைந்த பெண் என்றாலும் திருமணம் செய்தால் ஜெயில்தானாமா," மனோகர் பாவம். என்று பரிதாபப்பட்டான்.

இவனுக்கு மட்டும்தான் குறிப்புக் காட்டிப் பேசத்தெரியுமா? இப்போது தானும் கொஞ்சம் யோசிக்கட்டும்.

"கொஞ்ச நாளுக்கு முன்னால் ஒரு பழைய கேஸ் விவரம் படித்தேன், மனோகர்."என்று தொடங்கினான் பிரதீபன். "என்ன கேஸ் சார்?" என்று அவன் எதிர்பார்த்ததுபோலவே மனோகரன் ஆவலுடன் கேட்டான்.

"மைனர் பெண் கேஸ்தான். பெண்ணுக்குப் பதினெட்டுவயது முடிய பத்து நாட்கள் இருக்கும்போது ஒரு காதலனும் காதலியும் மணந்து கொண்டார்களாம். அவர்களைத் தேடிக் கண்டுபிடித்த பெண்ணின் தகப்பனார் அந்தப்பையன் மீது கேஸ் போட்டார். விசாரித்த ஜட்ஜ் சொன்னாராம். பதினெட்டு வயது என்றால் அது ஒரு பெண் உரிய வளர்ச்சி அடைந்து விடக்கூடிய வயது என்று தான் அப்படிக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதை இந்த வெர்னியர் காலிப்பர்ஸ் வைத்து அளப்பது போல் நுண்ணிய அளவுக்கு நூல் பிடித்துப் பார்க்கக்கூடாது. பதினெட்டாவது பிறந்த நாளைக்குப் பத்துநாள் முன்பாக இல்லாத அறிவு வளர்ச்சி, பதினெட்டாவது பிறந்தநாளன்று சட்டத்துக்குப் பயந்து ஓடி வந்து உட்கார்ந்து கொள்ளுமா? அத்தோடு இந்த கேஸ் நடக்கும் இத்தனை நாளில் அவளுக்குப் பத்தொன்பது வயதுகூட முடிந்துவிட்டது. அவளை அவன் விருப்பம் போல் வாழ அனுமதியுங்கள் என்றாராம். எப்படி கேஸ்? ஜட்ஜ் ரொம்ப அறிவாளி இல்லையா?" என்ற கேள்வியும் குறுநகையுமாக முடித்தான் பிரதீபன்.

"பிரமாதம் சார் மகா அறிவாளி சார்?" என்று தலையை உருட்டி ஒத்து ஊதினான் மனோகரன்.

"ஆனால் உங்கள் நித்யா ஒன்றும் சொல்லவில்லையே? என்று சீண்டினான் பிரதீபன்.

"எனக்கு ஒரு சந்தேகம். " என்றாள் அவள். "என்ன தெரியுமா? உலகத்தில் சில பேருக்குப் பதினைந்திலேயே உலக அறிவு, பொது அறிவு எல்லாம் வந்து விடுகிறது. சில பேருக்கு இருபத்தைந்து முப்பது ஆனாலும் வருவது இல்லை.



அப்போது ஜட்ஜ் எதை அளவு கோலாக வைத்து மன வளர்ச்சியை அளந்து தீர்ப்பு சொல்வார்?"

"அதுவும் கஷ்டம் தான் "என்று இப்போது நித்யாவுக்கு ஒத்து ஊதினான் மனோகர்.

"நித்யா சந்தேகமாய்ப் பார்க்கையிலேயே. "உங்கள் நித்யா சொல்வதில் இன்னொரு உண்மையும் இருக்கிறது. அவர்கள் சொல்கிற இருபத்தைந்து, முப்பது எல்லாம் எப்படியோ. ஆனால் இருபத்து மூன்றில் புத்தி வராத கேஸ் ஒன்றை நானே பார்த்திருக்கிறேன்" என்று கண்ணோரம் மட்டும் சுருங்க மற்றபடி அப்பாவிபோல கூறினான் அவன்.

இருபத்து மூன்றில் புத்தி இல்லையாமே.

ஆத்திரத்துடன் அவனை உறுத்து விழித்த நித்யா சட்டென முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள். ஏன் எனில் சிரிப்பை அடக்க அவளும் பாடுபட வேண்டியிருந்தது.

ஒருவாறாக வார்டன் வேக வேகமாக வந்து சேர்ந்தார். "சாரி மிஸ்டர் ஜெயப்பிரதீபன். உங்களை மூன்று மணிக்கு வரச்சொல்லிவிட்டு நான் தாமதமாகும்படி ஆகிவிட்டது. சாரி" என்று மன்னிப்புக் கோரினார்.

"அதனால் பரவாயில்லை சார். எங்களுக்குப் பொழுது சுவாரசியமாகத் தான் கழிந்தது" என்று ஒரு விஷமச் சிரிப்புடன் கூறினான் பிரதீபன்.

"அப்படியானால் சரி. வாருங்கள் போகலாம். ஸ்வீட் எல்லாம் நீங்கள் சொன்னமாதிரி செட் செட்டாகப் பிரித்தே வந்து விட்டது. "என்று மூவரையும் உடன் அழைத்துச் சென்றார்.

ஒரு பாலிதீன் பையில் ஒரு லட்டு, ஒரு சோன்பப்டி, ஒரு ஜாங்கிரி போட்டு சீல் பண்ணி, முறுக்குடன் கூடிய இன்னொரு பையையும் அத்துடன் இணைந்து பின் பண்ணி பல பெட்டிகளில் வைத்திருந்தார்கள். இலவசந்தானே.

அதுவும் கைதிகளுக்குத்தான் என்று உப்பையும், இனிப்பையும் ஒன்றாகப் போடாமல் தனித் தனியாக பாக் பண்ணியிருந்தது நித்யாவின் மனதில் பட்டது. பெட்டி பெட்டியாக பின்னோடு ஆட்கள் தூக்கி வர, சிறையின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று ஒவ்வொரு வருக்கும் தன் கையாலேயே இனிப்புக் கொடுத்தான் பிரதீபன்.

"இனி, கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும் ஜெயப்பிரதீபன். இவர்கள் மரணதண்டனை பெற்றவர்கள்" என்று எச்சரித்தபடி உடன் வந்தார் வார்டன்.

ஒரு செல்லில் சிறைக்கம்பி வழியே கைநீட்டிப் பிரதீபன் பலகாரப் பொட்டலத்தைக் கொடுத்தபோது அவனது கையை இறுகப் பற்றிக் கொண்டான் உள்ளிருந்த ஒருவன்.

## 10

**ப**லகாரப் பொட்டலத்தை மட்டுமாக வாங்கிக் கொள்ளாமல் பிரதீபனின் கையையும் சேர்த்து உள்ளிருந்த கொலைக் குற்றவாளி இறுகப் பற்றவும் வெளியில் நின்ற எல்லோருமே அதிர்ந்து போயினர்.

என்ன பயங்கர ஆயுதங்களை உள்ளே கடத்தி வைத்திருக்கிறார்களோ? பிரதீபனை பிணையாகப் பிடித்து வைத்து ஏதும் செய்து விடுவார்களோ? எத்தனை படங்கள், எத்தனை கதைகள் இதுபோல வந்தாயிற்று.

பிரதீபனுக்கு ஆபத்து என்ற ஒன்றில் நித்யா தன்னை மறந்தாள். கையிலிருந்த நோட்டு, பால் பென் எல்லாம் எங்கோ பறக்க, மின்னல் விரைவுடன் பிரதீபனை அணுகி, அவனைக் காப்பாற்றுவாள்போல் அவனுக்கும், கம்பி



களுக்கும் இடையே குறுக்கே புகுந்து அவனை உள்ளிருக்கும் ஆபத்திலிருந்து மறைக்க முயன்றாள்.

வார்டன் இடுப்பில் உள்ள பெல்ட்டில் இருந்த துப்பாக்கியை உருவி உள்ளே குறி பார்த்தார்.

குனிந்து நித்யாவைப் பார்த்துக் கனிவாக முறுவலித்து, மறுகையால் அவள் தலையை வருடி, "பயப்பட ஒன்றும் இல்லை, நித்தி" என்றான் அவன், மிருதுவான குரலில்.

அவளை மெதுவாக விலக்கியவன், "நிமிர்ந்து, எதற்கும் அவசியமில்லை, சார் என்று வார்டரிடம் கூறி மீண்டும் உள்ளே நோக்கினான். என்னப்பா, என்ன வேண்டும்?" என்று உள்ளிருந்தவனை விசாரித்தான்.

வெளி நடப்பு எதையும் உள்ளிருந்தவன் கவனித்திருக்கவில்லை. பிரதீபனின் கையைப் பற்றித் தன் முகத்தில் ஒற்றியவன் நிமிர்ந்து, "என்னைத் தெரியவில்லையா சார்?" என்று வினவினான்.

தாடி மீசைக்கிடையே அந்த குரலுக்குரிய முகத்தை அடையாளம் காண முயன்றான் பிரதீபன். "யார்? ஓ... மிஸ்டர் மோகன். மோகன்தானே? நீங்கள்... என்று ஆச்சரியத்துடன் தொடங்கி, "ஐயாம், சாரி, நான்... நான் ஏதாவது செய்யக்கூடுமா?" என்று கேட்டான்.

வருத்தமாக முறுவலித்து, "ஒன்று செய்யலாம் சார், என்னை... என்னை மன்னிக்கவேண்டும். என்ற மோகனின் விழிகளில் நீர் ததும்பி வழிந்தது. "அன்றைக்கு எனக்கு உங்கள் மேல் ரொம்பக் கோபம் வந்தது சார். குடிப்பதும் குடிக்காததும் என் இஷ்டம். அதைச் சுட்டிக்காட்டி எனக்குச் சுந்தரியைக் கட்டிக் கொடுக்கக் கூடாது என்று சொல்ல இவன் யார் என்று ஆத்திரப்பட்டேன். சுந்தரிமேல் இந்த ஆளுக்கே ஒருகண் என்றுகூட நினைத்தேன். சுந்தரியைக் கட்டிக் கொடுக்க மாட்டேன் என்று மாமா சொன்னதும் குடிவெறியில் கத்தியைத் தூக்கிக் கொண்டுவந்து உங்களை .

. . தோளில் அந்த வடு இன்னமும் இருக்கும் இல்லையா, சார்?" என்றான் அவன், வருத்தத்துடன்.

"ரொம்பச் சின்னக் காயம்தானே!" என்றான் பிரதீபன் ஆறுதலாக.

"குடிகாரக் கூத்தாடிகள் குடித்து விட்டு . . . கத்தியால் கீறல்கூட உண்டு என்று . . ."

சட்டெனக் குறுக்கிட்டு, "இது எப்போது நடந்தது?" என்று விசாரித்தாள் நித்யா.

"அது . . . முன்னே திருச்சியில் . . . . கிட்டத்தட்ட இரண்டு வருஷம் இருக்கும்" என்றான் அவன். தொடர்ந்து, "ஆனால், நல்ல வேளையாக அந்தத் திருமணத்தை நீங்கள் நிறுத்தினீர்கள், சார். அவள் மட்டும் பிடிவாதமாக என்னை மணந்துகொண்டிருந்தால் இப்போது என்ன கதியாகியிருப்பாள்! ஏதோ அவளாவது நன்றாக இருக்கிறாளே. கடவுள் . . . இல்லை. கடவுளாக வந்து நீங்கள் காப்பாற்றினீர்கள்" என்று கூறினான்.

"பழைய கதை போகட்டும், மோகன். இப்போது. . . ." என்று தொடங்கிய பிரதீபனிடம் வார்டர் குறுக்கிட்டு சொன்னார்: "குடிவெறியில் இரட்டைக் கொலை செய்ததாக வழக்கு, மிஸ்டர் ஜெயப்பிரதீபன், விஷயம் நடந்தது சித்தூரில். நேற்றுதான் இங்கே டிரான்ஸ்பர் ஆகிவந்தான்"

"ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா?" என்று அவரிடம் வினவினான் பிரதீபன்.

"சுயநினைவில் செய்யவில்லை என்று அப்பீல் செய்யலாம். மரண தண்டனைக்குத் தப்பினாலும் சிறை நிச்சயம்" என்றார் அவர்.

"வேண்டாம் சார் . . . . ஒன்றும் செய்ய வேண்டாம். இந்தக் குடிகாரப் பாவி செத்தாலே . . . ." என்றவன் விழிகளில் பயத்தைக் காணவும் நித்யாவுக்கு வேதனையாக இருந்தது.



பிரதீபனும் அப்படித்தான் உணர்ந்தானோ? "கவலை வேண்டாம், மோகன். அப்பீலுக்கு ஏற்பாடு செய்கிறேன். குடிப்பது தப்பு என்பதை அறிய ரொம்பப் பெரிய விலை கொடுத்திருக்கிறீர்கள். இனி திருந்திய வாழ்வில் மனதைச் செலுத்துங்கள். நான் உங்கள் மாமாவிடம் . . ?"

"வேண்டாம் சார்" என்று கதறி விட்டான் அவன். "அங்கே என் அம்மாவுக்கு மிகவும் தலையிறக்கம் ஆகிவிடும். நான் காணாமல் போனேன் என்கிற சிறு வேதனையிலேயே அவர்கள் இருக்கட்டும். இது தெரிந்தால் அம்மா உயிரை விட்டுவிடுவார்கள்" என்று விம்மினான்.

"ஓ . கே. . . ஓ . கே. . . சொல்லவில்லை. அழாதீர்கள். கொஞ்ச காலம் கழித்துத் திருந்திய மனிதனாக அவர்களிடம் சென்று அவர்களை மகிழ்வையுங்கள்" என்று தேறுதல் கூறி அவனிடமிருந்து விடைபெற்றான் பிரதீபன்.

வழக்கம்போல இரவில் குறிப்புகளுக்கு வரிவடிவும் கொடுத்தாள் நித்யா. மோகனின் விஷயம் சுவாரசியமானதுதான். என்றாலும் இன்னொரு மனிதனின் அவமானத்தை வெளிப்படுத்துவது தவறு என்று அவளுக்குத் தோன்றியது. அதுவும் பெற்ற தாயிடமிருந்துகூட அவன் மறைக்க விரும்பிய ரகசியம். எனவே அதை மட்டும் விடுத்தாள்.

எழுதியவற்றைச் சீராக அடுக்கி வைத்துவிட்டு, பல் துலக்கி உடல்கழுவி, நைட்டிக்கு மாறிவந்து படுத்தாள்.

பிரதீபனுக்கு ஆபத்தோ என்றதும் தன்னை மறந்து பாய்ந்தது நினைவு வந்தது. அப்படி என்றால் . . . சந்தோஷமா வருத்தமா என்று அறிந்து கொள்ள முடியாத உணர்வில் அவளுக்குத் தொண்டை அடைத்தது.

கூடவே இன்னொன்றும் அவள் மனதை உறுத்தியது.

குடிகாரனிடமிருந்து சுந்தரியைக் காக்கும் உந்துதல் பிரதீபனுக்கு ஏன் வந்தது? அதுவும் கத்திக் குத்து

வாங்கினாலும் பரவாயில்லை என்று! அப்படி என்ன அவளிடம் அவனுக்குத் தனி அக்கறை?

அவரே என்னை ... என்ற சுந்தரியின் குரல் அவளை வருத்தியபோதும் தூக்கத்தில் வந்த கனவுகளில் பிரதீபன் தான் அவளைக் கனிவோடு பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தான்.

காலை எழுந்ததும் அவளுக்கு ஒரே பரபரப்பு. அவனுக்கு நேராகப் பார்த்தாக வேண்டும். இப்போது பிரதீபன் ஜிம்னாசியத்தில்தான் இருப்பான். ஜட்டி தவிர வெற்று உடம்போடு. அதைத் தெரிந்துகொள்வதும் எளிது. ஆனால் ...

ஆனால் இனால் ஒன்றும் கிடையாது என்று தனக்குள்ளேயே முணுமுணுத்தவள், அவசரமாகச் சேலைக்கு மாறி ஜிம்னாசியத்தை நோக்கி விரைந்தாள்.

அங்கே எதிர்பாராமல் அவளைக் காணவும் முகம் மலர, "ஹலோ, குட்மார்னிங் நித்யா" என்று அவளை நோக்கி வந்தான் பிரதீபன்.

"குட்மார்னிங்" என்று வாய் ஏதோ சொல்ல, அவளது பார்வை அவனது இரு தோளுக்கும் பாய்ந்தது.

தோளில் என்றுதானே அந்த மோர்கன் சொன்னான்? எந்தத் தோள்? ஓ ... அதோ வலது தோள் ஐந்து ஆண்டுகள் கழித்தும் இரண்டு அங்குல நீளம் தெரிகிறதே வடு. குத்தப்பட்டபோது பெரிய காயமாக இருந்திருக்குமோ? நிறைய ரத்தம் சேதமாகியிருக்குமோ? எப்படி வலித்திருக்கும்?

அவள் முகத்திலேயே பார்வையைப் பதித்திருந்த பிரதீபனின் கண்கள் சிரித்தன. "வெறும் கீறல்தான் நித்யா. தோலளவுதான்" என்று அவன் தேற்றுவதுபோலக் கூறவும் அவள் முகம் சிவந்துவிட்டது.



"நான் .... நான் ஒரு குறிப்புக்காக உங்கள் 'ஜிம்'மைப் பார்க்க வந்தேன் அவ்வளவுதான்" என்று சமாளித்து விட்டு வேகமாக வெளியேறிவிட்டாள்.

அன்று வழக்கமான படப்பிடிப்புகள் போக மாலையில் ஒரு விழாவுக்குச் செல்லவேண்டும் என்றான் பிரதீபன்.

"அடடா! பட்டு ஜிப்பாவைக் கொண்டு வரவில்லையே, சார். நீயும் 'சிம்பிளா'கத்தானே கொண்டு வந்திருப்பாய், நித்யா? பரவாயில்லை. நாம் இருவரும் பொருத்தமான ஜோடியாய்த் தான் தெரியும்" என்று இளித்த மனோகரனை உறுத்து விழித்துவிட்டு பிரதீபனின் அருகில் சென்று நின்றாள் நித்யா.

இந்த மாதிரி பேச்சுகளை பெண்கள் ரசிப்பதில்லை என்று இவனுக்கு யார் புரியவைப்பது?

ஆத்திரத்துடன் திரும்பியவளின் மனதில் முழு வெண்மையில் முழுக்கை சட்டையும் பாண்டும் இடையிலே கறுப்பு பெல்ட்டுமாக நின்ற பிரதீபன் கனமாகப் பதிந்தான்.

விழா நடந்த வீட்டில் வாயிலில் நின்று வாயெல்லாம் பல்லாக வரவேற்றவர் தேவசகாயம்.

"இவருடைய மகள் வயிற்றுப் பேரனுக்கு இன்று தொட்டில் போடுகிறார்கள்" என்று கூறி, நித்யாவை ஒருதரம் யோசனையோடு நோக்கிவிட்டு இறங்கினான் பிரதீபன்.

உள்ளே சென்று அலங்கரிக்கப்பட்ட தொட்டிலின் அருகே நின்ற பெண்ணைப் பார்த்ததும் அந்தப் பார்வையின் அர்த்தம் நித்யாவுக்கு விளங்கியது.

அந்தப் பெண் சுந்தரி. தேவசகாயத்தின் முகம் ஏன் பரிச்சயமானதாகத் தெரிந்தது என்பதும் புரிந்தது.

தேவசகாயம் முன்னதாக மகளிடம் சொல்லியிருப்பாரோ என்னவோ, நித்யாவைக் கண்டதும் சுந்தரியின் கண்களில் ஒரு கவனம் வந்ததே தவிர அதிர்ச்சியில்லை.

சுந்தரி தன் கணவனை அறிமுகம் செய்துவைத்தபோது அந்தக் கவனம் சற்று அதிகமாகத் தெரியவும் நித்யா புன்னகை செய்தாள். அப்படி அவனைக் காட்டிக் கொடுத்து ஒரு பெண்ணின் வாழ்வை நாசம் செய்வேனா என்ன?

புன்னகையோடு, குழந்தையின் அழகைப் பற்றியும், உணவின் ருசியைப் பற்றியும் நித்யா இயல்பாகப் பேசவும் சுந்தரியின் இறுக்கம் தளர்ந்தது. வாய்ப்புக் கிட்டியதும் நித்யாவைத் தனியே அழைத்துச் சென்றாள். "மேடம், அன்று நான் சொன்னதெல்லாம் தப்பு. இன்றைக்கு இப்படி ஒரு நல்ல நிலைமையில் பிரியமான புருஷனும், தேவைக்குப் பணமும் இரண்டு குழந்தைகளுமாக நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்றால் அதற்கு சார் தான் காரணம். முக்கியமாக அப்பாவின் மகிழ்ச்சியைச் சொல்லுங்கள். 'எனக்கு சகாயம் சாரின் நிம்மதிதான் முக்கியம். உன் ரொமான்ஸ் அல்ல' என்று அவர் அன்று சொன்னபோது நம்பாமல் ஆத்திரப்பட்டேன். ஆனால் . . . . என் மூளையற்ற பேச்சினால்தான் நீங்கள் பிரிந்துவிட்டீர்களோ என்று வேதனையாக இருக்கிறது" என்று அவசரமாக மொழிந்தாள்.

இல்லையெனத் தலையசைத்தாள் நித்யா.

"நாங்கள் பிரிந்ததற்கு எத்தனையோ காரணங்கள். மிஞ்சி மிஞ்சி போனாலும் உன் பேச்சின் மதிப்பு ஒரு சதவீதம் தான் கவலையை விடு . . . ." என்று புன்முறுவல் செய்தாள்.

விழிகள் விரியப் பார்த்துவிட்டு, "அழகாக இருக்கிறீர்கள். சார் கிட்டே நின்றால் கண்படும்போலப் பொருத்தமாக இருக்கிறது. . . ." என்றவள் எங்கோ கடிகார மணி அடிக்கவும், "அய்யோ, சின்னதற்கு ஃபீடிங் நேரம். உங்களோடு பேச்சில் மறந்தே போனேன். நான் போகட்டுமா?" என்று ஓடினாள்.



அவ்வளவுதான் அவனது வருத்தத்தின் ஆழம், அவரவருக்குத்தான் தீராதது என்று எண்ணியபடி பின் தொடர்ந்தாள் நித்யா.

அங்கிருந்து கிளம்பும்போது, "இன்றிரவு கொஞ்சம் 'டப்பிங்' இருக்கிறது. நீங்கள் இருவரும் வீட்டுக்குப் போகிறீர்களா?' என்று பிரதீபன் கேட்கவும் மனோகர் கண்கள் பளபளக்க நிமிர்ந்தான். நித்தியாவுக்கு புரிந்துவிட்டது. இவன் எப்படியாவது பின்பிறம் வந்து உட்கார்ந்து கொண்டு மேலே சரிந்து விழப் போகிறான். "இல்லை அதையும் உங்கள் 'டப்பிங்' கையும் பார்க்கிறோம்" என்றாள் அவசரமாக.

ஒருகணம் யோசித்துவிட்டு, "சில சமயம் பன்னிரண்டு ஒரு மணிகூட ஆகிவிடும், நித்யா. அதனால் . . ." என்றவன் திரும்பி தேவசகாயத்தை விழித்தான். "உங்களால் எங்களோடு வரமுடியுமா, சகாயம் சார்? என்னை 'டப்பிங்' தியேட்டரில் விட்டுவிட்டு, நித்தியாவை வீட்டில் சேர்த்துவிட்டு திரும்பவும் இங்கே வந்து இறங்கிக் கொண்டு எனக்குக் காரை அனுப்பி விட்டால் நன்றாயிருக்கும்"

பிரச்சினையை எவ்வளவு சீக்கிரமாகக் கவனித்து உடனேயே தீர்த்தும் விடுகிறான் என்று தோன்றியது நித்யாவுக்கு.

மறுநாள் ஒரு நூறாவதுநாள் விழாக் கொண்டாட்டம்.

காரில் செல்லும்போது இரண்டொரு முறை பிரதீபனின் பார்வை தன்மீது படிவதை நித்யா உணர்ந்தாள். ஆனால் திரும்பிப் பார்க்கவில்லை. எதுவும் சொல்லவேண்டுமானால், கூப்பிட்டுச் சொல்ல வேண்டியதுதான். மற்றபடி இவனது பார்வைக்கெல்லாம் பணிவதற்கு நான் இவனுடைய பணியாள் அல்ல என்று எண்ணியபடி அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

ஆனாலும் சுந்தரி விஷயம் நினைத்ததற்கு நேர் எதிராகப் போய்விட்டதே . . .

விழா மண்டபத்தில் பிரதீபனுக்கு ஏகப்பட்ட வரவேற்பு. கதாநாயகன் ஆயிற்றே! மேளம் முழங்க மாலை மரியாதைகள். இந்தக் கூட்டத்தில் இடித்து நெறித்துக்கொண்டு அவனோடு ஒட்டிச் செல்ல மனம் இன்றி ஒதுங்கிவிட்டாள் நித்யா.

விழா அமைப்பாளரிடம் காதோடு பிரதீபன் ஏதோ சொல்ல, இருவர் வந்து நித்யாவை அழைத்துச் சென்று முதல் வரிசை சோபா ஒன்றில் உட்கார வைத்தார்கள்.

மனோகரன் மற்ற ஃபோட்டோ கிராபர்களுடன் சேர்ந்துகொண்டான்.

மற்றவர்கள் பளபளாத் துணியில் சட்டை, அல்லது, ஃபுல்சூட் என்று இருந்தபோது பிரதீபன் தன் முழு வெண்ணிற உடையில் தனித்து தெரிவதுபோல உணர்ந்தாள் நித்யா.

மேடை மேல் சில பெண்களும் இருந்தார்கள். கதாநாயகி, துணைக் கதாநாயகி ... அந்த அம்மா நடிகைகூட எல்லோரும் ஒரேயடியாக ஜரிகை, வைரம் என்று கண்ணைப் பறித்தார்கள்.

பிரதீபனின் அருகில் அமர்ந்திருந்த கதாநாயகி நடிகை அவன் புறமாகச் சாய்ந்து ஏதோ சொல்லிச் சிரிக்கவும், இவங்க 'இரண்டுபேரும் கட்டிக்குவாங்கண்ணு சொல்றாங்க' என்று பின்னிருந்து பேசிய குரலில் நித்யாவின் மனம் கனித்தது.

இரண்டுபேர் அருகருகே அமர்ந்திருந்தாலே வம்பு பேசுவது தவறுதான். ஆனால் இவன் குணம் அப்படி ஒன்றும் சிறப்பானதல்ல என்பதும் நித்யாவுக்குத் தெரியுமே.

வேலை என்று வந்துவிட்டு, சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் தரக்கூடாது என்ற முடிவுடன் ஒவ்வொன்றாக ஊன்றிக் கவனித்துக் குறிப்பெடுக்கத் தொடங்கினாள் அவள்.

பலர் பேசினார்கள். எல்லாமே கிட்டத்தட்ட 'ஐஸ்' ரகம்தான். அல்லது தற்பெருமை. வெளிநாட்டிலேயே இந்தப்



படம் முழுமையும் எடுத்த சிறப்புதான் பன்னிப் பன்னிப் பேசப்பட்டது. ஒரேயடியாகப் போர் அடித்து விடாமல் சிலர் சிரிக்கவும் வைத்தார்கள். கேடயம் வழங்கினார்கள்.

பிரதீபன் பேசும் முறை வந்தது.

அவன் எழுந்ததும் ஒரு கைதட்டல்.

அந்தக் கதாநாயகி நடிகையின் கையில் ஒரு தஞ்சாவூர் மாலையைக் கொடுத்து போடச் சொன்னார்கள்.

மைக் அருகே பிரதீபன் நின்று கொண்டு இருந்த நாலடி தூரத்தை இருபது தடவை இடுப்பை நெளித்துக் கடந்துசென்று அவன் கழுத்தில் இட மாலையை நளினமாகத் தூக்கினாள் அவள். அவளே மாலை போல அவன் மேலேயே விழுந்துவிடுவாள் போலத் தோன்றியது.

சிரித்தபடியே நாசுக்காகப் பின்னே நகர்ந்து மாலையைக் கையில் வாங்கிக் கொண்டான் பிரதீபன்.

ஓ! என்ற மொத்தமாய் ஏமாற்றக் குரல் எழுந்தபோதும் ஒருசிலர் கை தட்டவும் செய்தார்கள்.

'பெரிய ஸ்ரீராமச்சந்திர பிரபுதான்' என்று ஏளனமாக உதட்டைப் பிதுக்கினாள் நித்யா.

"அன்புடன் வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம். அதற்காக அன்பு இல்லாமல் வந்திருப்போர் வருத்தப்பட வேண்டாம்" என்று தொடங்கிய பிரதீபனின் பார்வை, பார்வையாளர்களைச் சுற்றிவருவதைக் கண்டதும் முகத்தை நேர்ப்படுத்திக் கொண்டு கவனித்தாள் நித்யா. ஆனால் அவனோ வெளிநாட்டு உலாபற்றித் தான் பேசினான்.

சென்ற ஆண்டு செப்டம்பர், அக்டோபர் இரண்டு மாதங்களும் நில்லாமல் சுற்றிக் கொண்டே இருந்தார்களாம். இந்தியாவுக்கும் அவர்களுக்கும் தொடர்பே இல்லை என்றுகூடக் கூறலாமாம் என்பதைக் கூறியபோது அவனது பார்வை நித்யாவிடம் வந்து நிலைத்தது.

பெத்த பிரதாபம்தான் என்று ஏளனமாக நினைத்துக்கொண்டாள் அவள்.

அத்தனை திரை உலகப் பிரபலஸ்தர்களைப் பார்த்துப் படம் எடுத்த பெருமையை வழிமுழுவதும் மனோகரன் வளவளத்துக் கொண்டு வந்ததால் மற்றவர் பேச்சுக்கு இடம் இல்லாமல் போயிற்று.

அதற்கு இடையிலும் ஒருதரம் நித்யாவிடம் திரும்பி "என் பேச்சு முழுவதையும் குறித்துக் கொண்டாயா, நித்யா?" என்று பிரதீபன் கேட்கவும், அவனது சுய பிரதாபத்தை வெறுத்த நித்யா, "உங்கள் வெளிநாட்டுப் புராணம்தானே, கட்டாயம் அச்சில் வரும். கவலையே படாதீர்கள்" என்று அசட்டையாகக் கூறி, முகத்தை வெளியே திருப்பிக் கொண்டாள்.

வீடு திரும்பி அவரவர் அறைகளுக்குச் சென்றபோதும் பிரதீபன் தன் பின்னோடு வரவும் ஆத்திரமடைந்த நித்யா வெடுக்கெனத் திரும்பி, "அதான் அச்சில் வரும் என்று அப்போதே சொன்னேனே" என்று எரிந்து விழுந்தாள்.

ஒருகணம் தயங்கி, "அதில்லை நித்யா, அங்கே படப்பிடிப்பு நடந்த நேரம் . . . சென்ற ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் என்றேனே . . . அதைக் கவனித்தாயா என்றுதான் . . ." என்று இழுத்தான் அவன்.

இது வெறும் தற்பெருமையல்ல. இவன் வேறு ஏதோ சொல்ல முயற்சிக்கிறான். சொல்வதை நேரிடையாகச் சொல்வதற்கு என்ன வந்ததாம்? "சென்ற செப்டம்பர் . . . அக்டோபர்" என்று தீவிரமாக யோசித்தவள் சட்டென உடல் விறைத்தாள்.

## 11

அம்மா!

நித்யாவுடைய அருமைத் தாயார் இறந்தது செப்டம்பர் மாதம் தான். செப்டம்பர் கடைசியில். ஆக இதைச்



சொல்லாமல் சொல்லத்தான் பிரதீபன் இப்படிச் சுற்றிவளைத்தானா?

இங்கிதம் பார்த்தானாக்கும்! பெரிய இங்கிதம்! ஆறிவந்த புண்ணைக் கீறிக் கிழித்திருக்கிறான்.

அன்றைய வேதனையும், ஆற்றுவார் இன்றி அனுபவித்த துயரமும், அந்த அன்னைபற்றி மனம்விட்டுப் பேசக்கூட ஆளில்லாமல் தனிமையில் தவித்த தவிப்பும், கூடவே அந்த ஒருவனின் மார்பில் முகம் புதைத்து இருந்தால் இந்த வலி குறையக்கூடுமோ என்று ஏங்கிய ஏக்கமும் இன்று நடப்பதுபோல நினைவில் ஓடின. கூடவே அன்னையின் மறைவு இவ்வளவு விரைவில் ஏற்படக் காரணம் அவளுடைய மூளைகெட்ட மகளான தான்தானே என்று குற்ற உணர்வில் குமைந்ததும்தான்.

சிவானந்தமும் அவருடைய மனைவி சாரதாவுமாக அவளை அந்தச் சூழலில் இருந்து வலுக்கட்டாயமாகப் பிரித்து, இப்போது அவள் இருக்கும் பெண்கள் விடுதியில் சேர்த்திரா விட்டால் இன்று நித்யா இருந்த இடத்தில் புல் முளைத்திருக்கும்.

மூன்று நாட்கள் அவள் தண்ணீர் கூடக் குடிக்கவில்லையே!

இதையெல்லாம் இப்போது இவன் நினைவுபடுத்தித்தான் ஆக வேண்டுமா? நெஞ்சடைக்க நின்றாள் அவள்.

தளர்வான குரலில், "அங்கும் இங்குமாய் அலைந்துகொண்டு இருந்ததில் எனக்கு அந்தச் செய்தி கிடைக்காமல் போயிற்று. நித்தி, திரும்பி வந்து விஷயம் அறிந்தபோது நீ அந்தப் பெண்கள் விடுதிக்குப் போய் மீண்டும் அன்றாட வாழ்வுக்குப் பழகி, சாதாரணமாக வாழத் தொடங்கிவிட்டாய்" என்று மேலும் உரைத்தான் அவன்.

தெரிந்திருந்தால் மட்டும் காதல் கணவனாக ஓடோடி வந்து, மனைவியின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல்படுத்தியிருப்பானாக்கும்!

பழைய துன்பங்களின் நினைவை ஒதுக்க முடியாமல் நித்யாவின் விழிகளில் நீர் அரும்பியது. இவன் முன் காட்டிக் கொள்ளக் கூடாது என்ற பிடிவாதத்துடன், சிரமப்பட்டு விழிநீரை உள்ளுக்கு இழுத்தபடி, "நான் ... நான் யாரையும் வேண்டவில்லையே. ஏன் இந்த சுயநிலை விளக்கம்? இதெல்லாம் எனக்குத் தேவையே இல்லை. தயவு செய்து இப்படிக் குத்திக் கிளறாமல் என்னைப் பழையபடி நிம்மதியாக இருக்கவிடுங்கள். ப்ளீஸ் . ." என்றாள் சற்றே சலித்த குரலில்.

மீண்டும் சற்றுத் தயங்கிவிட்டு, "உன் நிம்மதி, மகிழ்ச்சி எல்லாம் அந்த வாழ்வில்தான் என்றால் நான் அதற்கு இடையூறு செய்யமாட்டேன், நித்யா. செய்வது நியாயமும் இல்லை. ஆனால் ஒன்றுமட்டும் சொல்லு நித்யா, இந்த வாழ்வில் நீ சந்தோஷமாக இருக்கிறாயா? மெய்யான மகிழ்ச்சி..?"

அவனது ஆழ்ந்த குரல் தாழ்ந்த பின்னிய மாயவலையை அறுத்து மீள முயன்றாள் நித்யா. இவன் சினிமா நடிகன். குரலில், முகத்தில் உணர்ச்சியைக் கொட்டுவதை முறையாகப் பயின்றிருப்பான். இந்தக் குரல் உண்மையாகவே அக்கறை காட்டுவதாக எண்ணி மயங்குவது மதியீனம்.

தலையை நிமிர்த்தி, "உங்களோடு வாழ முடியாதவர்கள் எல்லாம் அதற்காக ஏங்கிக் கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டு இருப்பார்கள் என்றா நினைப்பு? என்ன கர்வம்!" என்றாள், ஓர் அலட்சிய பாவனையோடு.

"மற்றவர்களைப் பற்றி எனக்கு ஒன்றும் இல்லை, நித்தி. ஆனால் நீ மகிழ்ச்சியோடு இருப்பது எனக்கு முக்கியம். சொல்லு, நீ சந்தோஷமாக இருக்கிறாயா? என் முகத்தைப் பார்த்து சொல்லு!" என்றான் அவன் விடாமல்.

மகிழ்ச்சியா? சந்தோஷமா?



பிரதீபனைப் பிரிந்திருந்த இந்த ஐந்து ஆண்டுகளில் உள்ளார்ந்த சிரிப்பு என்பது இயலாததாகவே போய்விட்டதே. எதிலும் ஓர் அலுப்பு. எங்கும் வெறும் சூன்யம்.

இந்த வெறுமை தாங்காமல் அவள் எத்தனையோ தடவை எண்ணியதுண்டு. ஒரேநாள் உறவில் பெண் கருவுற்றுவிடுவதாக எத்தனை எத்தனை கதைகளில் படித்திருக்கிறாள். எத்தனை எத்தனை திரைப்படங்களில் பார்த்திருக்கிறாள்! ஆனால் முழுவதாக ஏழு நாட்கள் அவன் அணைப்பில் கழித்தவளுக்குக் கடவுள் ஏன் அந்த பாக்கியத்தைத் தரவில்லை? அப்படி ஒரு பாக்கியம் கிட்டியிருந்தால் வாழ்வு இப்படி வெறும் பொட்டல் பாலைவனமாகிப் போயிராதே. தவித்த மனம் தணிய ஒரு பசுஞ்சோலை அவளுக்கும் கிட்டியிருக்குமே என்று எத்தனை முறை எண்ணி எண்ணி ஏங்கி . .

பிரதீபன் கேள்வி கேட்டுவிட்டு பதிலுக்காகக் காத்திருப்பது, அதுவும் அவளது முகத்தை மிகவும் உன்னிப்புடன் கவனித்தபடி காத்திருப்பது, சட்டென அவளது உணர்வில் பட்டது.

அதற்குரிய பதிலுக்குச் சற்று அதிகமாகவே காலம் தாழ்த்திவிட்டது புரியவும், அவசரமாக, "ஆமாம், ஆமாம் . . ஆமாம்" என்று படபடவென்று மொழிந்துவிட்டு வேகமாகத் திரும்பி அவளது அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

அன்றிரவு தன் குறிப்புகளுக்குக் கட்டுரை வடிவம் கொடுக்க நித்தியா மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. அமைதியாக இருக்கும் நீர்ப்பரப்பில் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டாற்போல இது ஒரு சின்ன சலனம். இந்த ஒரு வாரம் கழிந்தால் அப்புறம் ஒன்றுமே இல்லை என்று ஆகிவிடும் என்று ஒதுக்கிவிட எவ்வளவோ முயன்றும் மனம் திரும்பத் திரும்ப சொந்த வாழ்விலேயே நின்றது. அவளது

மகிழ்ச்சியைப்பற்றி அவன் பேசியதை எண்ணி எண்ணி விழிகளில் நீர் மல்கியது.

மகிழ்ச்சி, சந்தோஷம் இதுபோல இன்னொரு வார்த்தைகூட உண்டே ஆனந்தம் என்று. இதற்கெல்லாம் அவள் வாழ்வில் இடம் ஏது?

என்றைக்கு அவளைப் பெற்று, பேணி வளர்த்த பெற்றோரையும், குடும்ப கவுரவத்தையும், பெண்ணுக்குரிய மானத்தையும் தூக்கி எறிந்துவிட்டு அவள் பிரதீபனிடம் சென்றாளோ,. அதற்குப் பிறகு மகிழ்ச்சியோடு வாழ அவளுக்கு உரிமை ஏது? தகுதிதான் ஏது? நெஞ்சின் ஒரு மூலையில் சதா புழுவாய் அரிக்கும் வேதனையோடு வாழ்ந்து முடிக்கவேண்டியது அவளுக்குரிய நியாயமான தண்டனை அல்லவா?

இந்த ஒரு வலி போதாதென்று இவன்வேறு வந்து அதைப் பெரு வலியாக்க வேண்டுமா?

மனதில் ஒன்று உறைக்கச் சட்டென நிமிர்ந்து அமர்ந்தாள் நித்யா.

அன்றைக்கு அந்த வெண்ணிறக் ''காண்டஸா'விலிருந்து 'பஸ்'சுக்காக நின்றிருந்த அவளைத் தற்செயலாகப் பார்த்துவிட்ட பிரதீபன், பழைய குட்டையைக் கிளறி இன்னொரு தரம் மீன்பிடிக்க முயல்கிறான் என்று அவள் எண்ணியது தவறு. அதற்கு முன்பாகவே அவன், அவளைப்பற்றி அறிந்திருக்கிறான். மற்றபடி அவளுடைய தாயார் இற... தாயாரின் மறைவுபற்றி அவனுக்கு எப்படித் தெரியும்? அப்படியானால் அவளைப்பற்றிய விவரங்கள் எப்போதிருந்து அவனுக்குத் தெரியும். என்னாளுமே தெரியுமா? பின்னே, தந்தை மறைந்தபோதுகூட ஏன் அணுகவில்லை?

அலைமேல் அலையாக வரும் அத்தனை கேள்விகளுக்கும் பிரதீபன் மட்டும்தான் பதிலளிக்க முடியும்! எப்படியும் அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது



என்று முடிவுசெய்த பிறகு தான் நித்யாவுக்கு வேலை ஓடியது. ஒரு வழியாக உறக்கமும் வந்தது.

காலையில் உடற்பயிற்சி முடிந்ததும் காற்றாடத் தோட்டத்தில் அமர்ந்து காஃபி அருந்துவது பிரதீபனின் வழக்கம் என்பதை நித்யா கண்டிருந்தாள். அவளது அறை ஜன்னலிலிருந்து பார்த்தால் அவன் இலகுவாகச் சாய்ந்து அமர்ந்திருப்பது நன்றாகத் தெரியும். அவன் அறியாமல் திரைமறைவில் நின்று அவள் பார்த்ததும் உண்டு.

இன்றும் வழக்கம்போல அவன் அமரவும் மடமடவென்று அவனை நாடிச்சென்றாள்.

புன்னகைத்து, காலை வாழ்த்து உரைத்தவன், காபியைக் காட்டி "ஒரு கப்?" என்று வினவினான்.

"வேண்டாம்" தலையசைத்து விட்டு, நேராக விஷயத்துக்கு வந்தாள். "என் அம்மாவின் மறைவு . . . அதெல்லாம் எப்படித் தெரியும்?"

அவன் முகத்தில் திரைவிழுந்தது. எதிரில் இருந்த ஆசனத்தைக் காட்டி, "உட்கார்" என்றான்.

மறுக்கப்போனவள் சட்டென ஒட்டில் அமர்ந்து, "சீக்கிரம் சொல்லுங்கள். எப்படித் தெரியும்? எப்போதிருந்து?" என்று கேட்டாள்.

கையிலிருந்த கப்பைக் காபித் தட்டில் வைத்துவிட்டு அவள் முகத்தை நேராகப் பார்த்தான் பிரதீபன். "உன் தந்தையைப் பார்த்தவுடன் நீ என்னைப் பிரிந்து மாங்கல்யத்தைக்கூட மதியாமல் நீ சென்ற விதத்தில் அப்போது எனக்கும் மிகுந்த ஆத்திரம் நித்யா. பிரிவதுதான் நல்லதோ என்றுகூட எண்ணினேன். அதற்குச் சரியாக இரண்டு படங்கள். இரண்டுமே வடக்கே இமயமலை அடிவாரத்தில் எடுத்தார்கள். அங்கேயே ஆறுமாதம் கழிந்தது. பிறகு முடியவில்லை. இது அறுகிற பந்தம் இல்லை என்று உன் ஊருக்கு வந்தேன். அங்கே உன் தந்தை நிலபுலன்களை விற்றுவிட்டு வெளியூர் போய்விட்டதாக அறிந்தேன்"

உயிரைப் பிரிகிற வேதனையோடு தாயும், தந்தையும் அந்த வீட்டையும், வேலையாட்களையும், மாடு கன்றுகளையும் பிரிந்து வந்த நிலையில் நித்யாவின் மனம் நொந்தது. பாதி காரணம் இவனுமல்லவா? உள்ளூரப் பொங்கிய சினத்துடன், "ஆமாம். இந்த மாதிரி நகர்ப்புறம் என்றால் பக்கத்து வீட்டில் கொலை விழுந்தால்கூடக் கண்டுகொள்வது இல்லை. ஆனால் கிராமப்புறங்களில் இன்னமும் இந்த நாகரீகம் பரவவில்லையே. அதனால் . . . அதனால் அப்பாவுக்கு மிகவும் தலைகுனிவாகி விட்டது. அதற்குமேல் அங்கே இருக்க முடியுமா, என்ன?" என்றாள், எகத்தாளம் கலந்த குரலில்.

அவன் பார்வையை அகற்றாமல் இன்னும் ஒன்று கேட்டான். "இன்னொரு திருமணத்துக்கு மாப்பிள்ளை பார்த்ததாகவும் கேள்விப்பட்டேனே" என்றான், அவளது குரலைத் தானும் பற்றி.

"அது அப்பாவாகச் சொல்லச் சொல்ல . . ." என்று தொடங்கியவள் நாக்கைக் கடித்துப் பேச்சை நிறுத்தினாள்.

மகள் செய்த பெரும்பிழையை மன்னித்து, நல்லது கெட்டது தெரியாத சின்னப்பெண். இவளுக்கு நல்லதொரு வாழ்வை அமைத்துக் கொடுப்பது தன் பொறுப்பு என்று கருதி, அவளுடைய அன்பான தகப்பனார் செய்த முயற்சி அது. மகளின் மறுப்பை அவர் லட்சியம் செய்யவில்லைதான். ஆனால் அதற்குக் காரணமும் அவரது அன்பே அல்லவா! அப்படிப்பட்ட அவரை இவனிடம் என்ன காட்டிக் கொடுப்பது என்று எண்ணியவளாய் வாயை இறுக மூடிக்கொண்டாள். அவள் சொன்ன அளவே போதும் போலப் பிரதீபனின் முகம் மலர்ந்தது. ஆயினும் அன்றைய நிலையை விளக்குபவனாய் அவன், "அப்போது அது உன் சம்மதத்தோடு நடந்திருக்குமோ என்று எனக்கு சந்தேகம்" எனவும் ஆத்திரத்துடன் முறைத்தாள்.

ஆனால் அவன் கைகளை விரித்து, லேசான முறுவலுடன், "அப்போது எனக்குச் சரியான விவரம் தெ



ரியவில்லை, நித்யா. சொல்லப் போனால் உன் ஒன்றுவிட்ட சித்தப்பாவாமே, நாகேந்திரன் என்று ஒருவர், அவர் உனக்குத் திருமணம் முடிந்திருக்கக்கூடும் என்றார்" எனவும், தலையைத் திருப்பிக் கொண்டு, "பிறகு" என்று கேட்டாள்.

"அப்போதைக்கு நெற்றிப் பொட்டில் அடி பட்டாற்போல அரண்டு போய்த் திரும்பி வந்துவிட்டான். அதற்குள் தொழிலில் 'பிக்கப்' பண்ணிவிடவே பணம் ஒரு பிரச்சினை அல்ல என்கிற நிலை வந்துவிட்டது. சும்மா இருக்க முடியாமல் மீண்டும் உன்னைத் தேடினேன். நேரில் நான் தேடவில்லை. ஆனால் ஒரு துப்பறியும் நிறுவனத்தின் மூலம் தீவிரமாகத் தேடினேன்..."

"அவ்வளவு கஷ்டம் ஏன்? உங்களிடம் என் போட்டோ உண்டே, டிவியில் · ஒரு விளம்பரம் செய்தால் தெரிந்துவிட்டுப் போகிறது" என்றாள் அவள், விட்டேற்றியாக.

"யோசித்துப் பேசு நித்யா, உனக்கு மீண்டும் திருமணமே ஆகியிருக்கும் என்கிறார் உன் உறவினர். அப்படி ஒருவேளை நடந்து, உனக்கு நல்வாழ்வு ஒன்று அமைந்திருந்தால் இந்த விளம்பரம் அதை அதோ கதியாக்கி விடாதா? அதனால்தான் ரகசியமாகவே தேடினேன். வெகுநாளைக்குப் பிறகு உன் தந்தையின் மறைவுபற்றி உன் சித்தப்பாவுக்கு வந்த கடிதம் பற்றிய துப்பு கிடைத்தது. அதுவும் ஓர் ஆண்டு சென்ற பின்தான் கிடைத்தது. அதை வைத்துக் கொண்டு மதுரைக்கு ஓடினால் அங்கேயிருந்தும் மறைந்துபோனாய். சென்னைக்குச் சென்றிருக்கலாம் என்று உன் பக்கத்து வீட்டுப்பெண் ஒரு வார்த்தை சொன்னாள். இங்கே தேடத் தொடங்கினோம். ஓர் ஆண்டு முன்னதாக ஒரு வழியாக உன்னைப் பார்க்க முடிந்தது."

"அதுவரை எனக்கு மிகவும் கவலைதான். பட்டப்படிப்புகூட முடிக்கவில்லையே. பணம் போனபிறகு என்ன செய்கிறாயோ என்று கஷ்டமாக இருக்கும்."

என்ன செய்தாள்? பணமின்றி அவள் பட்ட துன்பத்தைவிட, தந்தையும், தாயும் மனம் உடைந்து ஓய்ந்ததுதான். தாங்கமாட்டாமல் அப்போது தொண்டை அடைத்தது. நடுங்கத் தொடங்கிய கீழ் உதட்டைப் பற்களால் அழுத்தியபடி அசையாமல் அமர்ந்திருந்தாள்.

சற்றுப் பொறுத்து அவனே தொடர்ந்தான், "மணிகண்டன் நிறுவனத்தில் இருக்கிறாய் என்பது, கிட்டத்தட்ட ஓர் ஆண்டு காலமாய்த் தெரியும். ஆனால் உன்னை எப்படி அணுகுவது என்று தெரியவில்லை. பணம் சம்பாதித்துவிட்டது ஒருவகையில் பெரும் உதவியாயிற்று என்றாலும் இந்தப் புகழ் பெருமளவு நடமாட்டத்தைக் குறுக்கிவிட்டது. உன்னை நேரே வந்து அணுகிப் பேசமுடியவில்லை."

"அத்தோடு உன் மனநிலை எப்படி இருக்கிறதோ என்று அதுவும் ஒரு திகைப்பு. தனித்தே இருக்கின்றாய் என்பதில் ஒரு சிறு நம்பிக்கை. மற்றபடி முன்பு நாம் இருவருமாக சேர்ந்து வாழ்ந்த அந்த ஒரு வாரத்திலும்கூட நாம் ஒருவரைப்பற்றி ஒருவர் என்ன அறிந்து கொண்டோம் உடம்பு தவிர"

"நான் நிறையத் தடவை நினைத்திருக்கிறேன், நித்யா. நாம் இருவரும் முன்பு நடந்துகொண்ட முறை மிகவும் தப்பு என்று. அன்று நாம் பொறுத்திருக்க வேண்டும். அப்படி எவ்வளவு காலம் உன் தந்தையால் மறுக்க முடியும் குறைந்தது இரண்டு ஆண்டுகளேனும் காத்திருந்து நம் உறுதியை அவர்களுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். உன்னை வேண்டி எத்தனை மாப்பிள்ளை வீட்டார் வந்தாலும்தான் என்ன? உன்னைக் கையைக் காலைக் கட்டியா மணமேடையில் கொண்டு வைத்துக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிடுவார்கள்? நாம் அவசரப்பட்டது தப்பு. அவசரப்பட்டு முன்பின் யோசியாமல் பொறுப்பற்று நடந்து கொண்டு விட்டோம்"



மெய்தான். ஆனால் ஒன்று குற்றத்தில் பெரும்பகுதி அவளதுதான். பாவம் என்று நினைத்தோ என்னவோ, சுமையில் தானும் பங்கேற்றுக்கொள்கிறான். ஆனால் அவன் சொல்வதுபோல் உறுதி காட்டியிருந்தால் அவளுடைய பெற்றோர் இருவரும் மறைந்திருக்க மாட்டார்கள். அதிலும் மனம் ஒடிந்து மடிந்திருக்க மாட்டார்கள். ஒருவாறு மனம் ஒப்பி, மகளின் திருமணத்தை நடத்தி பேரன் பேத்தி என்று... எவ்வளவு பெரிய இழப்பு!

ஆனால் சீ சீ. . . என்ன மடத்தனம்? இந்தக் கெம்பு அட்டிகையையும் அந்த நடிகை ஜெயரஜினாவையும் எப்படி மறந்தாள்? அவனது அழகான பேச்சினாலா? வளமான குரலினாலா? அல்லது இன்னமும் மூடத்தனம் விலகுவதாகவே இல்லையா?

நெகிழத் தொடங்கியிருந்த அவளது மனம் மீண்டும் திடம் பெறுகையில் பிரதீபன் மேலும் தொடர்ந்தான். "நல்ல வேளையாக மணிகண்டனே பத்திரிகை விற்பனை குறித்து பேசத் தொடங்கவும் நன்றியோடு பற்றிக் கொண்டேன்" என்று கூறி அழகாக புன்முறுவலித்தான்.

தோட்டத்தை ரசிப்பவள் போலப் பார்வையை விலக்கிக் கொண்டு "ஏன்?" என்றாள் நித்யா.

லேசாகப் புருவங்களைச் சுருக்கி "புரியவில்லை" என்றான் அவன்.

"அதுதான் இந்த ஆண்டுக்கணக்காகத் தேடல், கண்டுபிடித்தல், நன்றியோடு பற்றிக்கொள்ளல் இதெல்லாம் ஏன்?" என்று கேட்டாள். குரலில் ஏளனம் நன்றாகவே வெளிப்பட்டது.

தோளைக் குலுக்கி, "இந்தக் கேள்விக்கு முன்பே பதில் சொல்லியாயிற்று என்று நினைக்கிறேன்" என்றான் அவனும்.

வெட்டுவதுபோல அவனைப் பார்த்தாள் நித்யா, "அதை நம்புவதற்கு இல்லை என்று நானும் அப்போதே

சொல்லிவிட்டேன். என்னை என்ன, இன்னமும் பதினெட்டு வயது முட்டாள் என்று நினைத்தீர்களா?"

"இல்லையே, இருபத்து மூன்று வயதில் முட்டாளாக இருக்கலாம் என்றுகூட" என்று கேலிக் குரலிலேயே தொடங்கியவன் கண்களில் கனல் பறக்க அவள் எழவும் சட்டெனத் தணிந்து, "நித்யா, ப்ளீஸ் இது வாழ்க்கைப் பிரச்சினை. சிறுபிள்ளைபோல் அவசரப் பட்டுப் பேசுகிறாயே என்றுதான் கொஞ்சம் மட்டம் தட்டிப் பேசி விட்டேன். உட்கார், நிதானமா—"என்று இதமாகப் பேசலானான்.

ஆனால், "என் வாழ்க்கைப் பிரச்சினைபத்தி உங்களிடம் பேச எனக்கு அவசியமில்லை. இந்தப் பேட்டி காலம் முடிந்துவிட்டால் அப்புறம் நீங்கள் யாரோ, நான் யாரோ" என்று தீர்மானமாக உரைத்த நித்யா, மேற்கொண்டு நில்லாமல் நடந்து விட்டாள்.

ஆனால் என்னதான் பிரதீபனின் பிழைகளை நினைவுபடுத்திக் கொண்டபோதும், அவள் தன்னை மறக்கவில்லை. ஒட்டின தூசியைத் தட்டுவதுபோல விட்டுவிடவில்லை என்பது அவள் மனதுக்குப் பெரும் ஆறுதலாகவே இருந்தது-அந்த ஆறுதலில் அவளது மனதைச் சுற்றிலும் இருந்த இறுக்கம் தளரத் தொடங்கியது.

அன்றுவரை இல்லாத விதமாகக் காரில் செல்லும்போது அவளது பார்வை கார் சன்னலுக்கு வெளியே இருந்த காட்சிகளை மட்டிலுமே பார்ப்பதை விடுத்து, அவ்வப்போது அருகில் இருந்தவன் பக்கமும் பாய முயன்றது.

அவள் முழுமையாகத் திரும்பி பிரதீபனைப் பார்த்தாள் என்று சொல்லமுடியாது. ஆயினும் அவன் இலகுவாக அமர்ந்திருந்த நிலை, ஃபைலைப் பற்றியிருந்த அவனது வலிய கரங்கள், நகங்கள் சீராக வெட்டப்பட்ட சுத்தமாயிருந்த அவனது நீண்ட விரல்கள் காகிதம்



கசங்காமல் பக்கத்தைப் புரட்டியவிதம்... என்று ஒவ்வொன்றாக அவளது கண்வழியே புகுந்து மனதை அடைந்து அங்கே நிலைகொள்ளலாயின.

இவளிடம் அசைவை உணர்ந்த பிரதீபன் சட்டெனத் திரும்பி அவளது பார்வையைச் சந்தித்துவிடவும் குப்பென முகம் சிவந்து போனாள் நித்யா.

ரசனையும் கேள்வியுமாக அவனது புருவம் உயரவும் சொல்வதறியாது முதலில் திணறி, "அது—அது என்ன ஃபைல்?" என்று ஃபைல் பற்றிய விவரம் அறிவதற்காகவே பார்த்தது போலப் பாவனை செய்து சமாளித்தாள்.

கண்ணால் சிரித்தபோதும் அவளது கேள்விக்கு உரிய பதிலைத் தர அவன் தயங்கவில்லை. "இன்றையப் படப்பிடிப்புகள் பற்றிய பொதுவான விவரங்கள். கதைப்போக்கு எப்படி? கதாநாயகன் குணம் எப்படி என்பது போல"

அவனது முறுவல் அவளைச் சீண்ட, "ஓ அவ்வளவுதானா? நானும் ஏதோ பக்கம் பக்கமாக வசனமாக்கும் விழுந்து விழுந்து படிக்கிறீர்களாக்கும் என்று நினைத்தேனே" என்றாள் அவள், கிண்டலாக.

"ச்சுச்சுச்சு..." என்று தலையசைத்தான் அவன். "பாவம் சிவானந்தம் இந்த மாதிரி ஆட்களிடம் வேலை வாங்க வேண்டியிருக்கிறது. நாலு நாளாகக் கூடவே ஷூட்டிங் வந்தும், வசனம் எல்லாம் அவ்வப்போது ஸ்பாரில் தான் சொல்கிறார்கள் என்பது தெரியவில்லையே ச்சு!" என்று பெரிதும் பரிதாபப்பட்டான் பிரதீபன்.

வந்துவிட்ட சிரிப்பை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கினாள் நித்யா.

பின்னிருந்த இருவரையும் தன் அறுவைகளில் சிக்கவைக்க முடியாமல் போகவே டிரைவரிடம் தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தான் மனோகரன்.

"பாருங்கள் டிரைவர், அது மாதிரி நாற்சந்தியிலே ஒருபக்கம் கார், ஒருபக்கம் லாரி, ஒரு பக்கம் பஸ், ஒரு பக்கம் ஒற்றை மாட்டு வண்டி முடிந்த ஸ்பீடில் வருகிறபோது அங்கே என்ன நடந்திருக்கும்?"

"வேற என்ன சார் நடக்க முடியும்? எல்லாம் உங்களைப்போல யாரோ ஏதாச்சம் தான் நடந்திருக்கும்" என்று பணிவான குரலில் தன் திறமையைக் காட்டி அவன் வாயை அடைத்தார் டிரைவர்.

பீறிட்டுக்கொண்டு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள் நித்யா. தன்னியல்பாய்ப் பிரதீபனிடம் திரும்பிய விழிகள் அவனும் அதே நிலையில் இருப்பதைக் காண, இருவருக்குமே முறுவல் மலர்ந்தது.

## 12

மெய்யான ஜோக்குகளைக் கூட ரசிக்கமாட்டாமல் மரியாதைக்காக உதடுகளை மட்டும் நெளித்துவைத்த காலம் நினைவில் வரவும், தனக்கு இப்படிச் சிரிப்பு வருகிறதே என்று நித்யாவுக்கு வியப்பாக இருந்தது. அதைப் பிரதீபனுடன் பகிர்ந்து கொள்ளத் தோன்றியது அதைவிட ஆச்சரியம்!

அன்றைய தினம் பிரதீபனைப் பற்றி இன்னமும் சற்று அறிந்து கொண்டாள் நித்யா.

அன்று கருவுற்றிருந்த பெண் ஒருத்தி எழுந்து பிரதீபனுடன் பேசுவது போலக் காட்சி படமாக்கப்பட்டது.

ஒருதரம் ஒத்திகை பார்த்தபின், பிரதீபன் டைரக்டரிடம் ஒரு யோசனை சொன்னான். "நாதன், அந்த லேடி காரெக்டர் ஒரு கர்ப்பிணிப் பெண்தான் என்றாலும்



இவ்வளவு தூரம் முக்கி முனகுவது மூச்சு வாங்குவது எல்லாம் அதிகப்படியாக இல்லை. அதைவிட, லேசாகக் கையூன்றி எழுந்து, ரொம்பவும் லைட்டாக மூச்சுவாங்கிப் பேசுவது போல இருந்தால் நன்றாயிராது?" என்று கேட்டவன், அவர் ஒப்பவும், அந்தப் பெண்ணுக்குத் தானே அதை நடித்தும் காட்டினான்.

அதன்படி படமாக்கப்பட்ட பிறகு பிரதீபனின் நடிப்பைப் பற்றிய பேச்சு எழுந்தது. "ஜெயப்பிரதீபன் அண்ணன் இந்தச் சண்டை, டான்ஸ் இதையெல்லாம் விட்டுவிட்டு வெறும் நடிப்புக்கே போகலாம். பேர், அவார்டு எல்லாம் கொட்டும் நம்பர்ஒன் ஆகிவிடுவீர்கள்" என்றாள் அந்த நடிகை "அப்புறம் நீங்கள் வைத்ததுதான் ரேட்"

"எனக்குக்கூட உன்னை அப்படி நடிக்கவைத்து ஒருபடம் பண்ணவேண்டும் என்று ஆசைதான். ஒரு நல்ல புரொட்யூசர் கிடைத்தால் தொடங்கி விடலாம்" என்றார் டைரக்டர் நாதன்.

"ஊஹும்" என்று மறுத்துவிட்டுப் பிரதீபன் சொன்னான். "ரசிகர்கள் என்னிடம் எதிர்பார்ப்பது இதைத்தான். மாற்ற முயன்றேன் என்றால் கண்ணில் விளக்கெண்ணையை விட்டுக்கொண்டு பிழை தேடுவார்கள். ஒரு முத்திரை குத்தியாகிவிட்டபின் மாற்றுவது என்றால் பத்திரிகைகளுக்கும் பிடிக்காது." என்று அவன் கூறியபோது குறுக்கிட்டு, "அப்படி ஒன்றும் கிடையாது" என்று மறுத்து பத்திரிகைகளுக்கு வாக்காலத்து வாங்கினாள் நித்யா.

"பெரும்பாலும் அப்படிதான்" என்று பிரதீபன் அதற்கு ஓர் உதாரணம் கொடுத்தான். "நாகேசுவரராவ் தெரியுமா?"

"தெலுங்கில் பெரிய ஹீரோ" என்றன பல குரல்கள்.

"தெலுங்கில் மட்டுமல்ல. முன்னே தமிழிலும் நிறையச் செய்திருக்கிறார். அவரது பேச்சில் வெகு சிலவார்த்தைகளில் தெலுங்கு 'ஆக்செண்ட்' வரும். அதைப் பெரிதுபடுத்திப் பத்திரிகைகளில் எழுதுவதும் உண்டு

அப்போது 'கல்யாணப் பரிசு' என்ற படம் டைரக்டர் ஸ்ரீதர் எடுத்தது."

"இளமை ஊஞ்சலாடுகிறது எடுத்தாரே"

"அவரேதான். கல்யாணப் பரிசு படத்தில் நாகேசுவரராவ் இரண்டாவது கதாநாயகன். படம் பெரிய ஹிட். ஆனால் பல பத்திரிகைகளில் நாகேசுவர ராவ் வழக்கம் போலத் தமிழை மென்று துப்புகிறார் என்று எழுதிவிட்டார்கள். நாகேசுவர ராவ் ஜெண்டில்மேன். போகிறது என்று விட்டுவிட்டார். உண்மை என்னவென்றால் அந்தப் படத்தில் வெறும் வாயசைப்பு மட்டும்தான் அவருடையதாம். பேசியது முழுக்க முழுக்க வேறு ஒருவர். ஆனாலும் விமரிசனம் வந்துவிட்டது. இன்னார் இப்படித்தான் என்று பட்டைதீட்டி விட்டால் மாறுவதே இல்லை."

"இதை ஒத்துக்கொள்ள முடியாது" என்றாள் நித்யா, ரோஷத்தோடு." சத்யராஜ், சரத்குமார் எல்லாம் வில்லனாக இருந்து கதாநாயகன் ஆகவில்லையா?" என்று வாதாடினாள் அவள்."ஓகோகோ! பத்திரிகைக்கார அம்மா இருப்பதை மறந்து பேசிவிட்டேன் போலத் தெரிகிறதே." என்று சிரித்தான் பிரதீபன். தொடர்ந்து "அவர்கள் வில்லனாக இருந்து கதாநாயகன் ஆனார்கள். அதுவேறு விஷயம். என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு கமர்ஷியல் ஹீரோ. இரண்டு சண்டை, இரண்டு பாட்டு, காதல், இப்படி லைட்டாகப் போய்விடுகிறவன். இந்த இமேஜை மாற்றுவது கஷ்டம். மாற்ற வேண்டும் என்று முயன்று படம் டப்பா ஆகிவிட்டால்? எனக்கு நட்டமிராது. ஆனால் படத்தயாரிப்பாளர் அல்லவா தலையில் கைவைக்கும்படி ஆகிவிடும்.

அவனது கொள்கையை நித்யா மனதினுள் வெகுவாகப் பாராட்டினாள். கூடவே பத்திரிகைக்கார அம்மா என்ற சிறு கேலியால் அவளுக்கு ஓர் உற்சாகமும்



உண்டாயிற்று. ஏதாவது பதில் கொடுக்க வேண்டும் என்று எண்ணியவளாக, "இந்தக் கல்யாணப் பரிசு படம் வந்து ஒரு ஒரு முப்பது வருஷம் இருக்காது?" என்று சீரியசாக கேட்டாள்.

"இருக்குமே" என்றனர் பலர்.

"படம், பத்திரிகை விமர்சனம், உள்கதை எல்லாம் மிஸ்டர் பிரதீபன் நேரடியாக அறிந்தது போல விசாரித்தாரே, அப்படியானால் நம் கதாநாயகருக்கு என்ன வயதோ தெரியவில்லையே.." என்று இழுத்தாள் அவள்.

அவளது கேலியை உணர்ந்து முகம் மலர்ந்து "நேரடியாகத் தெரிந்தால்தான் சொல்ல முடியுமா? அப்புறம் சரித்திரப் பாடத்தையே உடைப்பில் போட வேண்டியதுதான். முன்னே நடிக்க வாய்ப்பில்லாமல் ஸ்டுடியோக்களில் சுற்றியபோது ஒவ்வொருவரிடம் கேட்ட பழையகதைகள்" என்று கூச்சமின்றிக் கூறினான் பிரதீபன்.

அத்தனையும் பத்திரிகை நிருபருக்கான நடிப்பென்று இப்போது அவளால் நினைக்க முடிய வில்லை. ஏனென்றால் நிருபருக்காக அவன் நடிக்கலாம். ஆனால் எடுபிடி பையனிலிருந்து பைனான்சியர் வரை அவனைக் கண்டதும் முகம் மலரும் அத்தனை பேரையும் நடிக்க வைக்க முடியாதில்லையா?

பின்னே அவள் வாழ்வில் மட்டும் ஏன் விளையாடினான்?

'சொந்த பிரச்சினையை வேலையோடு இணைக்காதேடி முட்டாள்' என்று தன்னையே கடிந்து கொண்டபடி அன்றைய குறிப்புகளை விரிவாக எழுதி முடித்தாள்,

மறுநாள் காலை கண் விழித்து எழும்போதே அவளுள் ஓர் ஏக்கமும் எழுந்து கொண்டது.

இன்னும் ஒரே ஒரு நாள்.

அதன் பிறகு உள்ளார்ந்த சிரிப்பில் சுருங்கும் அவனது கண்ணோரங்களை, செதுக்கினாற் போலான உதடுகளை பிரிந்து பளபளக்கும் வரிசைப் பற்களை, அகன்ற தோளை, வலிவும் வனப்புமான விரல்களை எதையும் இப்படி அருகிலிருந்து கண்ணால் பருகி தாகம் தணியமுடியாது.

அவனது அமர்ந்த குரலை கம்பீரமான நகைப்பைக் கேட்டுக் காது குளிர முடியாது.

பழையபடி ஹாஸ்டல் வாசமும், பக்கத்து அறைக்காரியின் டிஸ்கோ சங்கீதமும், தனிமையும்... கடவுளே, எப்படி சகிப்பது?

ஆனால் ஏன்?

ஆண்டுக்கணக்கில் விடாமல் தேடிய பிரதீபன் அதற்குமேல் எதையும் வேண்டவில்லையே, ஏன்? உட்கார்ந்து பேசும்படி ஒருதரம் கூறினான் என்றாலும், அதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்வதாகவும் தெரியவில்லையே. ஒரு நன்னிலை விளக்கத்துக்குரிய வாய்ப்புக்கு மேலாக அவனுக்கு எதுவும் தேவையில்லை போலும். ஆனால் அவளால் அப்படி இருக்க முடிய வில்லையே.

வண்டாக நெஞ்சைக் குடைந்த ஏக்கம் கண்களில் பிரதிபலித்து விடாமல் காக்க நித்யா வெகுசிரமப்பட வேண்டியிருந்தது.

தான் கொண்டுவந்த 'பாண்ட்'கள் எல்லாம் இடுப்பு சின்னதாகி விட்டதாகச் சொல்லி, பிரதீபனிடம் ஒரு வேட்டி வாங்கிக் கட்டிக்கொண்டான் மனோகரன்.

எப்போதையும் போல அன்றைய காலை உணவும் சுவைபடத்தான் தயாரிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தொண்டைத் துவாரமே குறுகிவிட்டாற்போல உண்பதாகப் பெயர் பண்ணிக் கொண்டிருந்த



நித்யாவுக்குச் சின்னச் சின்ன பால் போளிகளை மனோகரன் டஜன் கணக்கில் விழுங்குவதைக் காண அருவையாகக்கூட இருந்தது.

அத்தோடு அவளுக்கு உணவு செல்லவில்லை என்பதைக் கண்டு, "காலை வேளையில் இனிப்பு பிரியமில்லாவிட்டால் வேறே ஏதாவது மசால் தோசையும், வெண்பொங்கலும் இருக்கிறதே, அதைச் சாப்பிடலாமே, நித்யா?" என்று வீட்டுக்காரனாய்ப் பிரதீபன் உபசரிக்கவும் எரிச்சல்தான் வந்தது.

"பசியில்லை" என்று அவள் முணுமுணுக்கவும் "டயட்டில் இருக்கிறாளாயிருக்கும் பிரதீபன் சார்" என்றான் மனோகரன். "பார் நித்யா. இதுபோலத் திணுசு திணுசாக ருசிவகையாகக் கைக்காசு செலவாகாமல் வேறே எங்கே எப்போது கிடைக்கப் போகிறது? இப்போது ஆசைதீர முழுங்கிவிட்டால் பிறகு உன் ஹாஸ்டலுக்குப் போன பிறகு பட்டினி கிடந்து, வெயிட்டைச் சரிபண்ணிக்கொள்ள வேண்டியதுதானே. அதது கிடைக்கிறபோது அனுபவிக்கவும் தெரியவேணும்." என்று அளந்த மனோகரனின் குரல் காதிலேயே விழாததுபோலக் கை கழுவிவிட்டு வெளியேறினாள் நித்யா.

கிடைக்கும் போது அனுபவிப்பதா! எதை? அப்புறம் பட்டினி கிடப்பது என்னவோ நிச்சயம்தான்.

பிரதீபனின் பார்வைக்காக குரலுக்காக அவள் ஏங்கப்போவது நிச்சயம். ஏக்கம் அத்தோடு நிற்கவா போகிறது? அந்த ஒருவார அணைப்பை இன்னமும் மறக்க முடியவில்லையே!

காமாலைக் கண் கொண்டு பார்த்தால், காண்பதெல்லாம் மஞ்சளாகத் தோன்றுமாம். அதைப்போல அன்று பிரதீபனுக்கும் தப்புவண்ணம் பூசிவிட்டாளோ என்று ஓயாமல் தோன்றத் தொடங்கியது நித்யாவுக்கு. இப்போது பார்த்தால் அவன் செய்வதெல்லாம் அவளை

நல்லவனாக்கிக் காட்டுகின்றனவே. ஒரு வேளை அந்த நகைக்கும், ஜெயநளினாவுக்கும் கூட ஏதாவது விளக்கம் இருக்குமோ?

விளக்கம் இருக்க வேண்டுமே என்று ஒரு புறம் அவளது மனம் தவியாய் தவித்தபோதும், அதைக் கேட்டு அறிந்து கொள்ளும் துணிவு அவளுக்கு வரவில்லை.

ஒரு விளக்கத்தின் பின்னர் அடுத்து வேறு எந்த விதமான நெருக்கத்தையும் பிரதீபன், அவளிடம் வேண்டவோ, காட்டவோ இல்லாத போது அதிலும் ஒரு வினாடிக் கோபத்தில், 'நீ யாரோ நான் யாரோ' என்று சத்தரித்தாற்போலப் பேசிவிட்டு இப்போது தானாக உரிமை எடுத்து விசாரிக்க அவளால் முடியவில்லை.

தெளிவுபடாத இந்த விஷயங்களோடு விரைவில் அவனைப் பிரியப் போகும் தவிப்பும், கூடவே எதையும் வெளியே காட்டிக்கொள்ளாமல் சாதாரணமாக நடந்து கொள்ள வேண்டிய கட்டாயமுமாக நித்யா திண்டாடிப்போனாள்.

அன்றைய படப்பிடிப்பின் போது இரு நெடிய குன்றுகளை இணைக்கும் குறுகலான கயிற்றுப் பாலத்தின் மீது பிரதீபன் ஓடுவதுபோலக் காட்சி எடுக்கப்பட்டது. பிரதீபனை ஓட விட்டு முதலில் எடுத்துவிட்டு அவன் கைதவறி தொங்குவது போலவும், வில்லனின் ஆட்களோடு சண்டையிடுவது போலவும் காட்சிகளை டூப் போட்டு எடுத்தார்கள்.

"நீங்கள்கூட 'டூப்' போடுவீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை சார்" என்றான் மனோகரன் ஏமாற்றத்துடன்.

நித்யாவுக்கு அது சற்று ஏமாற்றம்தான் என்றாலும் நல்ல வேளை கைதவறி விழுந்தால் என்ன ஆவது என்று நிம்மதியாகவும் இருந்தது.



ஆனால் பிரதீபன் வேறு ஒரு விளக்கம் சொன்னான். "நான்கூட முதலில் இந்தமாதிரி நினைத்தது உண்டுதான், மனோகரன். ஆனால் ஒரு தரம் ஒரு ஹீரோ நடிகர் இந்தமாதிரி டூப் போடாமல் நடித்துக் காலில் அடிபட்டுவிட்டது. கட்டுப் போட்டுக் கொண்டு கிடந்த அவரிடம் சிவாஜி சொன்னாராம் என்ன தெரியுமா? கதாநாயகன் இப்படி அடிப்பட்டு படுத்துக் கொண்டால் எத்தனை நாட்கள் படப்பிடிப்பு பாதிக்கப்படும்? உன் கால்ஷீட் மட்டும் என்றால் ஏதோ இரவு பகல் பாராமல் எக்ஸ்ட்ரா வேலை செய்து முடித்துக் கொடுத்துவிடலாம். ஆனால் கதாநாயகி, துணை நடிகர்கள், டைரக்டர் எல்லோர் ஷெட்யூலும் கெட்டு விடுமே. அத்தோடு ஸ்டுடியோவில் ஃப்ளோர் கிடைக்க வேண்டும். அத்தோடு இந்த சீனை நீ செய்தாலும், செய்யாவிட்டாலும் உனக்குக் குறையப் போவது இல்லை. ஆனால் ஒரு ஸ்டண்ட் நடிகரின் வருமானம் போய்விடுமில்லையா? என்றாராம். அத்தோடு பழக்கத்தில் அவர்கள் எங்களைவிட நன்றாகவும் செய்வார்கள். வெளிப்படையாகப் பார்த்தால் ஆபத்துக்கு அஞ்சி ஒளிந்து கொள்வது போலத்தான் தோன்றும் ஆனால்—

"சாரி சார். இனிமேல் உங்கள் விஷயமாய் நான் ஒரு போதும் வாயையே திறக்கப் போவது இல்லை. ஏன் என்றால் எப்போதும் மூக்கை உடைத்து விடுகிறீர்கள்" என்றான் மனோகரன்.

வாய்விட்டுச் சிரித்தான் பிரதீபன் கவலைப்படாதீர்கள். இன்னமும் ஒரு நாள்தானே. "பொறுத்துக்கொள்ளுங்கள் ஒரு கொசுறு தரட்டுமா? இன்னும் ஒரு காட்சி. இந்தப் படத்துக்கு முடித்துக் கொடுக்க வேண்டிய கடைசிக்காட்சி ஒன்று இருக்கிறது. இதேபோலத்தான் அதை நானே நடிப்பதா, டூப்போடுவதா என்கிற முடிவு ஒருவர் கையில் இருக்கிறது"

இலகுவான குரலில் கூறிய போதும், அந்தக் குரலில் இருந்த ஏதோ ஒன்று எல்லோரையும் திரும்ப வைத்தது.

"யார் கையில் சார்?" என்று மிகவும் ஆவலோடு கேட்டான் மனோகரன்.

விளையாட்டாக எச்சரிப்பது போலச் சுட்டுவிரலை உயர்த்தினான் பிரதீபன் " திரும்பவும் நீங்கள் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டீர்கள்"

திடுமென நுரையீரல்களுள் காற்று புகமுடியாதது போல மூச்சடைத்துப் போனாள் நித்யா. இவன் என்ன சொல்ல வருகிறான்? அவளுக்கும், இதற்கும் என்ன சம்பந்தம்? இந்த மாதிரி ஆபத்தான வேலையைச் செய்யும்படி அவனிடம் எப்படி அவளால் சொல்ல முடியும்

அதற்குள் பிரதீபனைக் கண்டுவிட்ட வேறு இரு பத்திரிகை நிருபர்கள் அங்கே வந்து சேர்ந்தனர் " என் மிஸ்டர் பிரதீபன். புதுப்படங்கள் ஒன்றும் ஒத்துக்கொள்வது இல்லையாமே. பழைய படங்களையும் வேகமாக முடித்துக் கொடுக்கிறீர்களாம். என்ன சார் விஷயம்? சொந்தப்படம் எடுக்க போகிறீர்களா?" என்று ஒருவர் கேட்டார்.

"ராஜபாளையம் பக்கம் ஏதோ மில் வாங்கியிருக்கிறீர்களாமே. ஊட்டிப் பக்கம் எஸ்டேட் வேறேயாம். பிசினஸ் மேனாகிவிடப் போகிறீர்களா?' என்று வினவினார் இன்னொருவர்.

புன்னகையோடு, "என்ன சாப்பிடுகிறீர்கள்? கூல் டிரிங்க்? காஃபி?" என்று விசாரித்தான் பிரதீபன்.

"அய்யோ கல்லிலிருந்து நார் உரிக்கலாம் சார். ஒன்று ஒரு சேதி கிடைக்காதே உங்களிடம்" என்று ஒருவர் அலுத்துக் கொள்ளவும், "இல்லை நாங்_" என்று தொடங்கிய மனோகரனைப் பிரதீபனின் பார்வை அடக்கியது.

மீண்டும் நித்யாவுக்கு ஓர் அழுத்தமான திருத்தம் மெய்யாகவே அவன் தன்னை விளம்பரப்படுத்திக்



கொள்வதற்காக இந்தப் பேட்டி தரவில்லை அதுமட்டுமல்ல; அவன் பேட்டியே கொடுப்பதில்லை.

"அந்தப் பாலத்தைப் பார்த்து வரலாம் நித்யா. மனோகரன் ஃபோட்டோவுக்கு நீங்கள் வரவேண்டும் என்பது இல்லை. இங்கேயே 'ஸ்டில்ஸ்' இருக்கும் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று அவனை நிறுத்திவிட்டு நித்யாவை அழைத்துச் சென்றான் பிரதீபன்.

சுமார் மூன்றுமாடி அளவு உயரத்துக்குக் குன்றுகள் போல அமைத்து இடையே பாலம் கட்டியிருந்தார்கள்.

ஏதோ காரணமாகவே அவன் தன்னை மட்டும் கூட்டி வந்திருக்கிறான் என்பதை ஊகித்த நித்யா, மறுத்துப் பேசாமல் அவனுடன் நடந்தாள்.

பாலத்தின் மீது நாலடி நடந்தான். "கீழே பார்" என்று பிரதீபன் கூறவும் கீழே நோக்கிய நித்யாவுக்கு தலை சுற்றியது. அங்கிருந்து பார்க்கையில் நேர் கீழே அதல பாதாளம் போலத் தோன்றியது.

தோளைப் பற்றித் தடுமாறாமல் தாங்கி நிறுத்தியவனைத் திகைப்பும் பயமும், கேள்வியுமாய் வெறித்தன அவளது விழிகள்.

நெஞ்சு படபடக்க அவனைப் பின்தொடர்ந்தாள் நித்யா.

கீழே இறங்கிவந்து சேர்ந்தபோது இடுப்பில் கைவைத்தபடி மனோகரன் நின்றான். "நித்யா, நீ ஏன் அந்தப் பாலத்தில் நடந்தாய்? அங்கிருந்து விழுந்தால் எலும்புகள் அத்தனையும் நொறுங்கிவிடாதா? என்னைக் கேளாமல் எப்படிப் போகலாம்?" என்று ஆத்திரம் காட்டி அதட்டிப் பேசினான்.

"யாரிடமும் நான் கேட்க வேண்டியது இல்லை" என்று 'சுருக்'கென மொழிந்துவிட்டு நகர முயன்றாள் நித்யா.

"என்ன கேட்கவேண்டியது இல்லை? நான் இங்கே வெறும் ஃபோட்டோகிராஃபராக மட்டும் வரவில்லை தெரியுமா. சிவானந்தம் சொல்லி அனுப்பினாராக்கும். உனக்கு எந்த வித ஆபத்தும் வராமல் பார்த்து கொள்ள வேண்டும் என்று உத்தரவு. பழைய காலத்தில் மெய்க்காப்பாளர்கள் இருப்பார்களாமே. அதுமாதிரி உனக்கு 'பாடிகார்ட்' ஹி- ஹி அதாவது இ- இந்த உடம்புக்கு" என்று கைநீட்டி அவளைத் தொட முயன்றான்.

நித்யா பின்னே நகருமுன், சட்டென அவள் கரத்தைப் பற்றி பக்கவாட்டில் நகர்த்தினான் பிரதீபன். மறுகையால் மனோகரனின் கையை ஒதுக்கிவிட்டு, "உங்கள் பெற்றோர் உங்களைச் சரியாக வளர்க்கவில்லை மனோகரன்" என்றான் சற்று கடுமையான குரலில்.

"இ- இல்லை சார். எங்கள் குடும்பத்தில் நான்தான் சார் ப்ரம்" என்று மேலும் இளித்தான் அவன்.

"நான் உங்கள் பேச்சைச் சொன்னேன். தரம் குறையாமல் பேச அவர்கள் உங்களுக்குக் கற்றுத்தரவில்லையே. எங்கள் பக்கத்தில், பிள்ளைகள் வாயில் இப்படிப் பேச்சுவந்தால் கட்டிவைத்துக், கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தடவி விட்டுவிடுவார்கள்"

"அய்யோ.. எரியுமே!"

"ஆமாம். அடுத்த தடவை தவறான பேச்சு வாயில் வராது இல்லையா? இன்னும் ஒன்று. எந்த வயதில் கண்ணில் மிளகாய்ப்பொடி பட்டாலும் எரியத்தான் செய்யும்"

நம்பாத சிரிப்பும் லேசான நடுக்கமுமாகப் பிரதீபனைப் பார்த்தான் மனோகரன். அவனது அசையாத பார்வையில் சற்றே முகம் வெளுத்து, "வந்து- வந்து-' நித்யா நம் அலுவலகத்தைச் சேர்ந்தவள், தேவைப்பட்டால் பாதுகாக்கவும் வேண்டும்' என்று ஆசிரியர் சார் என்னிடம் சொல்லி அனுப்பினார்...



தளர்ந்த குரலில் முணுமுணுக்கவும், பிரதீபன் சட்டெனச் சிரித்தான்.

"பாருங்கள் மனோகரன், இந்த வினாடியில் நித்யாவைக் காக்கும் கடமையும் உரிமையும் உலகத்திலேயே அதிகம் உள்ள ஒரே ஆள் நான்தான். தெரியுமா உங்களுக்கு?" என்று அவன் கேட்கவும் நித்யாவுக்கு தூக்கிவாரிப்போட்டது.

இவன் இப்போது என்ன சொல்லப்போகிறான்? எதைப் போட்டு உடைக்கப் போகிறான்?

## 13

இன்னமும் நித்யாவின் கரம் பிரதீபனின் பிடியில்தான் இருந்தது. விலக வேண்டும் என்று மூளையின் ஒரு மூலையில் தோன்றினாலும் கையை விடுவித்துக் கொள்ளும் செயல் திறனின்றி அப்படியே நின்று கொண்டிருந்தாள். இப்போது பிரதீபனின் இந்தக் கடமை உரிமை பேச்சு அவளை மேலும் செயலிழக்கச் செய்தது.

ஆனால் மனோகரனுக்கு அவல் கிடைத்தாற் போலாகிவிட, "அதெப்படி, சார்?" என்று அவசரமாக கேட்டான்.

ஒரு பார்வையை நித்தியாவிடம் செலுத்தி, முறுவலித்துவிட்டு, "விருந்தாளிகளைக் காப்பது வீட்டுக்காரனின் கடமையில்லையா? நீங்கள் இருவரும் என் விருந்தாளிகள் தானே. இப்போது கூட நீங்கள் அதிகக்கனம் தடுமாறினால் உங்களைக் காப்பாற்றுவது கஷ்டம் என்பதால், நீங்கள் மேலே வரவேண்டாம் என்று நான் தடுக்க வில்லையா? அதிலும் நித்யா பெண். மெல்லியல்

காப்பதில் இரு மடங்கு கவனம் காட்ட வேண்டியது என் பொறுப்பல்லவா? அதனால்தான் என்னோடு நித்யா இருக்கும் போது நீங்கள் வெறும் புகைப்படக்காரராக மட்டும் இருந்தால் போதும்" என்று இலகுவாகப் பேசி முடித்துவிட்டான் பிரதீபன்.

என்ன எதிர்பார்க்கிறோம், எதற்காகப் பயப்படுகிறோம் என்று நித்யாவுக்கே ஒன்றும் புலப்படவில்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் இனிய அருவியாய்த் தொடங்கிய ஒன்று, காட்டாற்று வெள்ளம்போல எல்லாவற்றையும் அடித்துச் சென்று அழித்து முடித்துவிட ஏங்கி அழுது தீர்த்து இனி ஒன்றுமில்லை என்று ஒருவாறு தேறி இருந்தபோது வந்த இந்த குறுக்கீடு அவளைப் போட்டு உருட்டி எடுத்தது.

ஒரு பெரும் சூடுபட்ட அனுபவம், ஒன்றும் வேண்டாம் என்று ஒதுங்கி ஓடிப் பதுங்கிக்கொள்ள விரட்டியது.

ஆனால் அனுபவித்திருந்த அருவிச்சுவையின் சுகம் ஒதுங்கிக் கொள்ள விடாமல் ஈர்த்தது.

அத்தோடு சூடும் குளிரும் போல, நெருக்கமும் ஒதுக்கமுமான பிரதீபனின் பேச்சு வேறு அவளைத் திணற வைத்தது.

அன்று மதியத்தோடு படப்பிடிப்பு வேலைகள் முடிந்து விட்டது. வீடு திரும்புகையில், "திருச்சி பக்கம் ஒரு பண்ணை இருக்கிறது. பொதுவாக வெளியீட்டு தினம் நெருங்கிவிட்ட படம் ஏதும் இல்லாதபோது சனிக்கிழமை இரவு அங்கே சென்று விடுவேன். ஞாயிறு இரவு திரும்பி வந்து விடுவேன். இப்போது கிளம்பினால் மிகவும் வெக்கையாக இருக்கும். மாலையில், சற்றே வெயில் தணிந்ததும் கிளம்பிவிடலாம். உங்கள் எடிட்டரிடம் பேசி அனுமதி பெற்று விட்டேன். எதற்கும் வீடு சென்றதும் நீங்களும் ஒரு தரம் உங்கள் அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு கேட்டுக் கொள்ளுங்கள்" என்றான் பிரதீபன்.



பண்ணை, மிராசு எல்லாம். இப்போது இவனே பண்ணை வைத்திருக்கிறானாமா? மலையும் மடுவும் இடம் மாறிவிட்டனவா?

"இதுவரை ஜெயபிரதீபனை படம் எடுத்தது போதும், மனோகரன். இனி அந்தப் பண்ணை, அங்கே விளைவது, சீனரி என்று படம் எடுங்கள்" என்று பிரதீபனிடம் கூறிய சிவானந்தம், இப்போது நீ இன்னமும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும், நித்யா. இங்கே உள்ள சூழல் வேறு. நடிகர் என்கிற ஜபர்தஸ்து இல்லாமல் அங்கே எப்படியிருக்கிறார் என்கிற வேறுபாட்டைக் கண்டறிந்து எழுத வேண்டும்." என்றார் நித்யாவிடம். கூடவே, "பார் நித்யா ஜெயப்பிரதீபன் யாருக்கும் பேட்டி கொடுக்கிற பழக்கம் கிடையாது. அதனால் இந்த பேட்டியே நமக்கு ஒரு புதையல். அதிலும் பேட்டி முடிவில் முக்கியமான அறிவிப்பு ஒன்றும் கொடுக்கப்போகிறாராம். அதனால் முடிந்த அளவு பதவிசாக நடந்து விஷயத்தைக் கிரகித்துக்கொள்." என்றும் பணித்தார். என்ன அறிவிக்கப்போகிறான் என்று யோசித்தாள் நித்யா. ஏற்கனவே திருமணம் வேண்டாம் வேண்டாம் அதற்குமேல் தப்புத் தவறுக்குப் போய்விடக் கூடிய ஜகங்கள் எதுவும் வேண்டாம் எல்லாம் நடக்கிற போது அறிவிப்பு வருகிறபோது பார்த்துக் கொள்ளலாம். அத்தோடு அப்படி ஓர் அறிவிப்பு கொடுப்பதென்றால் அதற்கு அவளிடம் அனுமதி பெற வேண்டாமா?

சென்னையிலிருந்து கிளம்பியபின் முதலில் வெளிப்புறம் வேடிக்கை பார்த்துச் செல்லும்போது பயணம் நன்றாகத்தான் இருந்தது. ஆனால் இருட்டியதும் போரடிக்கத் தொடங்கியது. அதிலும் சற்று சீக்கிரமாகவே உண்டு முடித்த இரவு உணவுக்குப் பிறகு கண்ணிமைகளைப் பிரித்து வைப்பது கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது.

"டிரைவர் பகலில் தூங்கி எழுந்தவர். அதனால் ஓட்டும்போது தூங்கி விடமாட்டார்" என்று பிரதீபன் உறுதி கொடுத்த மறுநிமிடமே மனோகரனின் குறட்டை ஒலி கேட்கத் தொடங்கியது.

இருளின் பார்வையில் யாரும் அறியாமல் ஒரு கொட்டாவியை வெளியேற்றியதாக எண்ணிய நித்யாவிடம், "நான் வேண்டுமானால் முடிந்த அளவு ஓரமாய் ஒதுங்கிக் கொள்கிறேன், நீ காலை மடக்கிக் கொண்டு படுத்தே தூங்கலாம்" என்று பிரதீபன் கூறவும் அவளுக்கு வெட்கமாகிப் போயிற்று.

கொட்டாவிக்காக "சாரி" சொன்னவள், உட்கார்ந்தபடியே பின்னே சாய்ந்து தூங்கப் போவதாகக் கூறி விட்டு அப்படியே கண்ணயர்ந்து விட்டாள்.

மட்டமான ரோடுகளில்கூட உள்ளிருப்போரை அலுங்காமல் நலுங்காமல் கொண்டு சேர்க்கக்கூடிய கார் அது. புதிதாகப் போடப்பட்ட 'ஹைவே' யில் கேட்க வேண்டுமா?

அங்கங்கே எதிர்பட்ட வண்டிகளின் விளக்கொளியில் நித்யா நன்றாக உறங்கிவிட்டது தெரியவும், பிரதீபன் ஒரு முறுவலுடன் அவளை நெருங்கினான்.

குளிருக்கு இதமான 'ரஜாய்'க்குள்ளிருந்து வெளியே வரவே நித்யாவுக்கு மனமில்லை. ஆனால் விடாமல் அவளை உலுக்கி எழுப்பிக்கொண்டிருந்த கைக்கு அது புரிவதாகக் காணோம். வேறு வழியின்றிக் கண்ணைத் திறந்தவளுக்கு அவளைச் சுற்றியிருந்தது 'ரஜாய்' அல்ல; பிரதீபனின் கையும் தோளும் என்பதை அறியவும் தூக்கிவாரிப் போட்டது.

"தூக்க மயக்கத்தில் மடத்தனம் செய்துவிட்டேனே" என்று அவள் கூறுகையில் அவனே சொன்னான், "நீயாக ஒண்டிக்கொண்டு விடவில்லை நித்யா. குளிரில் நடுங்குவதைப் பார்த்து நான்தான் உன்னை இழுத்துக்கொண்டேன். இப்போது கூடப் பண்ணை நெருங்கிவிட்டதே. இந்த மாதிரி போசில் பிறர் பார்த்தால் உனக்குக் கூச்சமாக இருக்குமே என்றுதான் எழுப்பினேன்" என்றான்.



ஒரு வகையில் நிம்மதியுற்றபோதும் அந்த அணைப்பிலிருந்து விலகுவதும் அவளுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

அந்த நள்ளிரவு நேரத்திலும் பண்ணை வீட்டில் அவர்களுக்கு குங்குமப் பூப்போட்டு காய்ச்சிய சூடான பசும்பால் தயாராக இருந்த சோபாவிலேயே உறங்கிவிடுவாள் போல் இருந்தது. மனோகரனை அவளது அறையில் கொண்டு சேர்க்கும்படி டிரைவரிடம் பணித்துவிட்டு, நித்யாவின் 'கிட்பாக்'கைத் தூக்கிக் கொண்டு அவளோடு நடந்தான் பிரதீபன்.

அறைக்குள் வந்து பையை வைத்தவன் தண்ணீர்க் கூஜா போன்றவற்றைச் சரிபார்த்துவிட்டு, "உன் வாட்சைக் கொஞ்சம் தருகிறாயா?" என்று கேட்டான்.

ஏனென்று புரியாதபோதும் மறுக்க தோணாமல் கழற்றிக் கொடுத்தாள் அவள்.

"ம்ம். இதன் கொக்கி கொஞ்சம் லூசாக இருக்கிறாற்போலத் தெரியவில்லை?" என்ற பிரதீபன், அதைப் பலமாக இழுக்கவும் கொக்கி கையோடு வந்து விட நித்யா திகைத்தாள்.

"இது என்ன வம்பு வேலை?"

"அடப் பரவாயில்லை போ. இதை நானே சரிசெய்து தந்துவிடுகிறேன். அதுவரை இதைக் கட்டிக்கொள்" என்று கூறி தன் சட்டைப் பையில் இருந்த ஒரு கைக்கடியாரத்தை எடுத்து அவளது கையில் கட்டிவிட்டான்.

அழகான மெல்லிய தங்கச் சங்கிலியில் கோத்திருந்த சிறு வட்ட வடிவக் கடிகாரத்தில் பதிக்கப்பட்டிருந்த வைரங்களின் ஒளி அவளது திகைப்பை அதிகப்படுத்தின.

"இப்போது இதில் மணி பார்த்துச் சொல்லேன். நித்தி?" என்று குழைந்தது அவன் குரல்.

என்ன ஏது என்று புரிபடாமல் "மணி பன்னிரண்டு" என்று பார்த்துச் சொன்னாள் நித்யா.

ஒருகையால் அவளது தோளைப் பற்றி, மறுகரத்தால் அவளது முகவாயை நிமிர்த்தி, அவளது பட்டான இதழ்களில் மென்மையாக முத்தமிட்டு, "ஹாப்பி பர்த்டே" என்ற பிரதீபன், மீண்டும் குனிந்தான்.

பிறந்த நாள்!

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் இரவில் வெளியே சென்று இனிப்பு வாங்கிவந்த அந்த நாளைப் பிரதீபன் மறந்துவிடவில்லை போலும்!

ஆனால் அவளுக்கு மறந்து விட்டதே.

அதற்கப்புறம் ஒரு வருடம் மட்டும் அம்மா செய்துகொடுத்த பாயசத்தைக் கண்ணீரை உள்ளுக்கு இழுத்தபடி விழுங்கியதோடு சரி, தந்தையின் மறைவுக்கு பிறகு மகளோடு தாய்க்கும்கூட அதில் அக்கறையற்றுப் போய்விட்டது. அதில் என்று என்ன, எதிலுமேதான். உண்பதில், உறங்குவதில், உடலைப் பேணுவதில்.

பழைய துன்பங்கள் நினைவு வரலாயின.

கூடவே இந்த ஐந்து ஆண்டு வேதனையின் நடுவிலும் அவனை மறந்து ஒதுக்கமுடியாமல் தவித்தவளுக்கு இந்த ஒருவாரமாக அவனது அருகாமையும் முன்தினம் காரிலுமாக அவனது தொடுகையுமாக மனமும், உடலும் மயங்கத் தொடங்கியிருந்தன. அதிலும் கைதொட்டுக் கடிகாரத்தை கட்டிவிட்டு, இதழணைத்தபோது இதற்காகவே இந்த ஐந்து ஆண்டுகாலமும் தவமிருந்தது போலவும் ஒருகணம் உணர்ந்தாள்.

ஆனால் பழைய நினைவுகள் தந்த வேதனையால் இதை ஒப்பவும் முடியாமல் அவனிடமிருந்து விலக முயன்றபடி "தீபன்.. ப்ளீஸ்" என்றாள், கெஞ்சுதலாக.

ஆனால் அவன்பிடி மேலும் இறுகிப்போனது. "உனக்குத் 'தீபன்' நினைவிருக்கிறதா, நித்தி அதைக்கூட மறந்துவிட்டாயோ என்றெல்லாம் எண்ணிவிட்டேன்"



என்றவன் அவளது சுழுத்து வளைவில் உதடுகளைப் புதைத்தான்.

பலமிழந்த கைகளால் அவனைத் தள்ள முயன்றபடி "கவுரவக் குறைவாக நடப்பதில்லை என்று ப்ராமிஸ் செய்திருக்கிறீர்களே அதை மறக்காதீர்கள்" என்றாள் அவள்.

சற்று நிமிர்ந்து, "ஒரு கணவன் தன் மனைவியை முத்தமிடுவது கவுரவக்குறைவான நடத்தை என்று எனக்கு இன்றுவரை தெரியாதே" என்றான் பிரதீபன், கோபமும் கேலியுமாக.

"இல்லை.. நான்.. நான் ஒன்றும் நீங்கள் ஒன்றும்.."

எதையும் உறுதியாக சொல்லும் தெம்பற்று அவள் தடுமாறுகையில் பிரதீபன் மீண்டும் குறுக்கிட்டு, "நீ என் மனைவி, நான் உன் கணவன் நம் இருவருக்கும் திருமணம் நடந்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன" என்றான், அழுத்தமான குரலில்.

"அதெல்லாம் திருமணமா? அதை நம்பியது எவ்வளவு பெரிய மடமை இல்லை, அது சும்மா என்று" சற்றுத் திடமான குரலில் அவள் தொடங்கவும் மீண்டும் குறுக்கிட்டுப் பேசினான் அவன்.

அவளது தோள்களைப்பற்றி நேராக நிறுத்தி, "சும்மாவா? எங்கே என்னைப் பார்த்துச் சொல்லு. என் முகத்தைப் பார்த்து அது ஒன்றுமில்லை என்று சொல்லிவிடு பார்ப்போம்" என்றான் ஆத்திரத்துடன்.

அவள் உதட்டை கடித்தபடி பேசாமல் நிற்கவும், "உன்னை நன்றாக உதைக்கவேண்டும் போல வருகிறது. ஆனால் ஒரு பெண்ணை அதிலும் மனைவியை அடிப்பது கேவலம் என்பதால்.. இன்று பிழைத்தாய்" என்றவன் விலகிக் கதவை நோக்கி நடந்தான்.

கதவருகில் நின்று ஒரு பெரிய மூச்சு எடுத்துவிட்டு, "குட்நைட் ஸ்வீட் ட்ரீம்ஸ்" என்று கூறி வெளியேறிச் சென்றுவிட்டான்.

வெகுநேரம் அப்படியே சிலை போல நின்றுவிட்டு ஒருவாறு வந்து படுத்த நித்யாவுக்கு மெய்யாகவே இரவெல்லாம் கனவுகள்தான். காணும் போது இனியனவாகவே இருந்த போதும் கண்விழித்தபின் அவளைக் கூசவும், ஏங்கவும் வைத்த கனவுகள்.

காலைக் காபியின் போது அவனைச் சந்திக்கையில் நித்யாவின் முகம் லேசாகச் சிவந்தது.

ஆனால் ஒன்றும் நடந்திராதது போல வழக்கமான உற்சாகத்துடன், "குட்மார்னிங்" சொல்லிக் காபி கப்பை அவள்புறம் நகர்த்திவிட்டு மனோகரனிடம் தன் பேச்சைத் தொடர்ந்தான் பிரதீபன். "ஜீப்பில் போங்கள் மனோகரன். சைஸ்வாரியாகக் கரும்பு சாகுபடியும் சர்க்கரை ஆலையையும் ஜீப் டிரைவரே காட்டுவார், கிளம்புங்கள்." என்றான்.

"கரும்புச் சாகுபடி. சர்க்கரை ஆலை. ராஜபாளையம் மில். அந்த சிலர் சொன்னது போல சினிமாவை ஓரங்கட்டிவிட்டு தொழில் அதிபர் ஆகப்போகிறீர்களா சார்?" என்று விழிகளை விரித்து வினவினான் மனோகரன்.

சிறு முறுவலுடன் பிரதீபன் பேசாதிருக்கவும். "இந்தப் பண்ணை, ஆலை எல்லாம் உங்களுடையதுதானே, பிரதீபன் சார்?" என்று சந்தேகமாகக் கேட்டான் மனோகரன்.

"ஊகூம்" என்று தலையசைத்தான் பிரதீபன். "சமபங்கு உடைய பார்ட்னர் ஒருவர் இருக்கிறார்" என்றவன், "அது யார் சார்?" என்று மற்றவன் பரபரக்கவும் மீண்டும் சுட்டுவிரலால் பத்திரம் காட்டி, "திரும்பவும் நித்யாவின் வேலையைப் பறித்துக்கொள்ள முயற்சிக்கிறீர்கள், மனோகரன். போங்கள். போய் போட்டோ எடுத்துக்கொண்டு வாருங்கள்" என்று அனுப்பி வைத்தான்.



இடையே சத்தமின்றி நழுவிவிட முயன்ற நித்யாவிடம் "ஒரு நிமிடம்" என்று அவளை நிறுத்திவிட்டு மனோகரன் சென்றதும் அவளிடம் திரும்பினான்.

சொல்ல நினைத்த விஷயம் அவனுக்கு உவப்பாயில்லை போலச் சில விநாடி மவுனம் சாதித்தான். பிறகு "உனக்கு நாகேந்திரன் என்று உங்கள் ஊரில் ஒருவரை நினைவு இருக்கிறதா?" என்று கேட்டான்.

எதிர்பாராமல் நாகேந்திரன் பேச்சை பிரதீபன் எடுக்கவும், நித்யா வியப்புற்றாள். அவளுடைய அப்பாவித் தந்தைக்கு அந்த மனிதர் இழைத்த தீங்கு மறக்கக்கூடியதா? "ஒன்றுவிட்ட சித்தப்பா" என்றாள் சுருக்கமாக.

"ம். அவர் நேற்று இறந்துவிட்டார். கடந்த ஓர் ஆண்டுகாலமாக அவருக்கு எத்தனையோ வேதனைகள். கடைசியாக ஒரு விபத்தில் உன் சித்தி இறந்து அவருக்கும் கால் முறிந்து போயிற்று. தன் அண்ணனுக்குச் செய்த அநியாயத்தின் பலன் என்று வெகுவாக வருந்தியிருக்கிறார். பிராயச்சித்தமாக உன்னைக் கண்டுபிடித்து, உன் அப்பாவிடம் கால் விலை கொடுத்து வாங்கிய சொத்துகளையெல்லாம் உன்னிடம் சேர்ப்பிக்கும்படி எழுதியிருக்கிறாராம். அதனால்." என்று மீண்டும் சற்றுத் தயங்கியவன், "உனக்கு கார் ஏற்பாடு செய்து தருகிறேன். நித்யா. நீ வேண்டுமானால் உன் ஊருக்குப் போய் அந்தச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளலாம். வாழ்க்கைச் செலவுக்கு என்று இனியும் நீ மணிகண்டனிடம் வேலை பார்த்துத் தீரவேண்டிய கட்டாயம் இல்லை. இந்த நிமிடத்திலிருந்து வேலையை உதறி விட்டால்கூடப் பொருளாதார ரீதியாக உனக்கு நஷ்டம் என்று ஒன்றும் வந்துவிடாது- வேறு- வேறு எந்த வகையிலும் கட்டுப்பட்டிருப்பதாகக்கூட எண்ணித் தயங்க வேண்டாம் நித்யா" என்று ஒருவாறு கூறி முடித்தான், பிரதீபன்.

அவனது தயக்கமும் இரக்கமும் அவன் வேறே ஏதோ சொல்ல விரும்புவதை உணர்த்தின. சட்டென நித்யாவுக்குப்

புரிந்தது. கூடவே சொந்த ஊரும் அங்கே கடைசியாகக் கூசிக் குன்றியதும்கூட நினைவு வந்தது. "என்னைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் என்ன ஆகும்?" என்று விசாரித்தாள்.

"டிரஸ்டிகள் இரண்டு ஆண்டுகாலம் உனக்காகக் காத்து இருப்பார்கள். பிறகு உங்கள் ஊர்க் கோவிலுக்கும் சில தர்ம நிறுவனங்களுக்கும் சொத்து போகவேண்டும் என்று உயில்" என்றான் அவன், உணர்ச்சியற்ற குரலில்.

சட்டென அவளுள் ஒரு குறும்புத் தனம் தலை தூக்கியது. "ஓ! அப்படியானால்" என்று இழுத்தபடி ஓரக் கண்ணால் அவன் முகத்தைப் பார்த்தாள். உதட்டோரம் அழுத்தத்தில் வெண்மையுறுவதையும், கழுத்தில் ஒரு நரம்பு துடிப்பதைக் காணவும் மனது தாங்காமல், "அப்படியானால் இரண்டு ஆண்டுகளும் காத்திருந்து முடிக்கட்டும்" என்று சொல்லி விட்டாள்.

ஆனால் பிரதீபனின் இறுக்கம் தளர்ந்து முகம் மலர்ந்த விதத்தில் உடனே கூச்சமும் குழப்பமுமாகி விட்டது அவளுக்கு.

இவன் என்ன, அந்த சொத்து வேண்டாம் என்றதால் இவனோடு ஒட்டிக்கொள்ளச் சம்மதித்ததாக எண்ணிவிட்டானோ? ஆனால் மற்றபடி அவன் மனம் வாடுவது போல உணர்ந்ததும் அவளும்தான் எதற்காகச் சொத்தை மறுக்க வேண்டும்?

ஏதோ நெருட, "சித்தப்பா, விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியவந்தது?" என்று விசாரித்தாள்.

அவளிடம் மறைப்பதற்கு ஒன்றும் இல்லாததுபோல் அவன் உடனே பதில் சொன்னான். "உன்னைப்பற்றிய உன் தொடர்பான எல்லாமே எனக்கு முக்கியம்தான் நித்தி. உன் உறவினர்களில் சற்று நெருங்கிய உறவு அவர்தான். ஒருவேளை நீ அவரை நாடிச் சென்றால்? என்று அங்கும் ஓர் ஆள் வைத்திருக்கிறேன்" என்று முறுவலித்தான்.



உறவா என்று ஆத்திரப்பட முடியாமல் அந்த முறுவல் தடுத்த போதும் எனக்கு என்றும் நீதான் என்று அவன் சொல்லாமல் சொன்னதை முழுமையாக ஏற்றுப் பதிலுக்குப் புன்னகை செய்யவும் அவளுக்கு அவகாசம் தேவைப்பட்டது.

யோசிக்க வேண்டும் நன்றாக யோசிக்க வேண்டும். நின்று நிதானியாமல் ஒரு தரம் பிழை புரிந்து, பட்ட துன்பம் போதும்.

தனிமையை விரும்பியவளாக, "நான்" என்று அவள் எழவும் அவனும் கூடவே எழுந்தான்.

கணக்கப்பிள்ளை மாதிரி ஒருவர் தலை நீட்டவும், "தோட்டத்தில் சுற்றிப் பாரேன், நித்யா. நான் கொஞ்சம் கணக்குகளைப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று பிரதீபன் கூற நல்லதாயிற்று என்று கிளம்பினாள் நித்யா.

சென்னை மாளிகை அளவு இல்லை என்றாலும் இதுவும் ஓரளவு பெரிய வீடுதான். வீட்டைச் சுற்றிலும் காலாற நடக்கும் அளவு தூரத்துக்கு பலவகைப் பூஞ்செடிகள் அழகாகப் பூத்திருந்தன.

அதைத் தாண்டியதும் மரவகைகள் சீராக வளர்ந்து கொண்டு இருப்பது தெரிந்தது. இரண்டு மூன்று ஆண்டு வளர்ச்சி. இன்னொரு திசையில் கண்ணுக்கு எட்டியதூரம் வரை தென்னை மரங்கள் அதே இரண்டு மூன்று வருடக் கன்றுகளாக நின்றன. இடையே சிமெண்டினால் கட்டப்பட்டிருந்த வாய்க்கால்களின் வழியே நீர் சலசலத்து ஓடிக்கொண்டு இருந்தது. அங்கங்கே ஓரிருவர் நின்று நீர் பாய்ச்சி, பாத்தி பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

சீராகத் திட்டமிடப்பட்ட பண்ணை. இன்னமும் சில ஆண்டுகளில் பணம்காய்ச்சி மரங்களாகி விடும்.

மரங்களின் வளர்ச்சி அளவைப் பார்க்கையில் சினிமாவில் பணம் நன்றாக சேரத் தொடங்கியதும் முதன் முதலில் இதை ஆரம்பித்திருக்க வேண்டும் என்று நித்யாவுக்குத் தோன்றியது.

இந்த பண்ணை பணம் விஷயம் பிரதீபன் மனதை அவ்வளவு பாதித்திருந்ததா? அவன் அதைப் பெரிதாக நினைத்தது இல்லை என்பது அவளுக்குத் தெரியவில்லையே. இப்போது ஊர்சொத்தை வேண்டாம் என்றபோது புரிந்திருக்குமா? புரிந்து விட்டிருந்தால் அவனது அடுத்து நடவடிக்கை என்னவாக இருக்கும்?

## 14

**யோ**சித்தபடி நடந்து கொண்டே இருந்த நித்யாவுக்குக் கால் லேசாக அயர்வது போலத் தோன்றவும் அங்கேயே ஒரு மரத்தடியில் அமர்ந்து மரத்தண்டில் சாய்ந்து கொண்டாள், யோசிக்க எண்ணிய விஷயங்களுக்குப் பதிலாக மனம் வேறு ஏதோ கற்பனையில் ஆழ்ந்தது.

விடுமுறை நாட்களில் வந்து தங்கி கண்ணையும் மனதையும் குளிர்வித்துக் கொண்டு செல்வதற்கு மிக அருமையான இடம். பிரதீபனும் அவளுமாக, பிரதீபனைப் போல ஜாடையில் ஒரு சிறுவனோடும் அவளைப்போல ஒரு சிறுமியோடும் வருகிறார்கள். ஆனால் பெண் குழந்தை அப்பாவின் ஜாடையில் இருப்பது நல்லது என்பார்களே கண் உதடு எல்லாம் நன்றாகத் தான் இருக்கும். ஆனால் அவனது அந்த நீண்ட நாசி பெண்ணுக்கு இருந்தால் கொஞ்சம் ஓவர்சைஸ் போலத் தெரியுமே என்று சிறு கவலை வேறு தோன்றவும் அவளுக்குச் சட்டென சிரிப்பு வந்துவிட்டது. என்ன பைத்தியக்காரத்தனம் அவனது அன்பிலேயே இன்னும் முழு உறுதி வரவில்லை. அதற்குள் பிள்ளை, பெண், பேத்தியைச் சீராட்டாததுதான் குறை



என்று எண்ணியவளுக்கு மேலும் சிரிப்பு வந்தது. ச்சசி. இந்த மனத்திற்கு வெட்கமும் இல்லை கட்டுப்பாடும் இல்லை.

"அவ்வளவு சந்தோஷமான விஷயம் என்னவென்று சொன்னால் நானும் சேர்ந்து சிரிக்கலாம்" என்று இலகுவாகக் கூறியபடி அவள் அருகே அமர்ந்த பிரதீபனின் கேள்வியில் அவள் முகம் செக்கச் சிவந்துபோயிற்று. நாணமின்றி நினைத்தது போதாதென்று இவனிடம் சொல்ல வேறு வேண்டுமாக்கும்.

முகத்தில் சூட்டை உணர்ந்து அதை அவன் கண்டுகொள்ளாமல் மறுபுறம் திரும்பியவள் பேச, வேறு விஷயம் தேடி வேகமாக யோசித்தாள். "வந்து- வந்து மனோகரனிடம் கரும்புக் கொல்லை என்றீர்களே, இங்கே கண்ணிலேயே காணோம்." என்று வாயில் வந்ததைக் கொட்டினாள்.

பாதி திரும்பியிருந்த அவளது முகத்தில் ஒரு பார்வையைச் செலுத்தியவன், லேசாக முறுவலித்து, "தென்னந்தோப்புக்கு அந்தப் பக்கம் கொஞ்சம் வீடுகள் தெரிகிறதில்லையா. அதற்கு அந்தப்பக்கம். அதான் சர்க்கரை ஆலை" என்றான்.

"ஓ- ஏகப்பட்ட இடத்தை வளைத்துப் போட்டிருக்கிறீர்களே, இங்கெல்லாம் நிலத்துக்கு உச்சவரம்பு ஒன்றும் கிடையாதா?" அதற்குள் சுதாரித்துவிட்ட நித்யா, கேள்வியில் இறங்கினாள்.

ஆனால், "உண்டு, விவசாயம் தொழில் என்கிற போது சில விதிவிலக்குகளும் உண்டு. ஆனால் இதிலெல்லாம் இன்னொருவருக்கும் பங்கு உண்டு என்றேனே, நினைவில்லையா?" என்று பிரதீபன் திருப்பிக் கேட்கவும் குறிப்பு புரிந்து அவள் வாய் மூடிப்போயிற்று.

இன்னமும் அவன் மனம் முழுமையாகத் தெளியவில்லையே.

அவள் கையைத் தன்கையில் எடுத்து மிருதுவாக வருடியபடி, "அந்த இன்னொருவர் பாதிப் பங்கை ஏற்றுக் கொள்ளவேண்டுமே என்பதுதான் இப்போது என் கவலை" என்று உரைத்தான் அவன்.

நித்யா பேசாமலே இருக்கவும் "உனக்கு இங்கே இன்னும் ஒன்று காட்ட வேண்டும், நித்யா. இப்போது என்னோடு வருகிறாயா.. அல்லது கால் வலிக்கிறதா?" என்று தொடர்ந்து பிரதீபன் பேசவும், "வலிக்கவில்லை" என்று கூறி எழுந்தாள்.

வந்த வழியே வெகுதூரம் திரும்பிச் சென்றபின் ஒரு கிளை வழியே வீட்டின் பின்புறமாக அவளை அழைத்துச் சென்றான் பிரதீபன்.

அங்கும் சற்று தூரம் நடந்ததும் ஆள் உயரத்துக்கு செடிவேலி ஒன்று தென்பட்டது. அங்கிருந்த கேட்டை அவன் சாவி கொண்டு திறக்கவும், "இன்னமும் நடக்க வேண்டுமா?" அலுப்புடன் கேட்டாள் நித்யா.

சிரித்துவிட்டு, "வந்துவிட்டோம்" என்று கதவை உட்புறமாக சாத்தித் தாளிட்டு விட்டுத் திரும்பி, இதுதான். என்று காட்டினான்.

கொஞ்சம் வேறுபாடான முறையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு சிறு வீடு. முன்புறமாய் இருந்த பெரியவீட்டைப் போல கண்ணைக் கவரும் வண்ண மலர்த்தோட்டம் இல்லை. ஆனால் நறுமண மலர்களின் வாசனை மனதை மயக்கியது. நடுவில் இருந்த சிறுவீட்டின் சுற்றுவராண்டாத் தூண்களைச் சுற்றிக் கொண்டு ஏறிய பூங்கொடியின் கூரை மேலும் ஒய்யாரமாய்ப் படர்ந்திருந்தன. முதல் பார்வையில் பெரிதாக கண்ணைக் கவர்வதுபோல இல்லாவிட்டாலும் பார்க்கப் பார்க்க ஓர் அழகு கூடுவது போலத் தோன்றியது.

லேசாக அவள் கையைப்பற்றி வீட்டை நோக்கி அழைத்துச் சென்றபடி பிரதீபன் சொன்னான்.



"பண்ணைக்கு வந்தேன் என்றால் காலையில் கணக்கு வழக்கு, மில் எல்லாம் ஒரு பார்வை பார்த்துவிட்டு உணவை முடித்துக் கொண்டு இங்கு வந்துவிடுவேன். இங்கே என்னை யாரும் எதற்காகவும் தொல்லை செய்யக்கூடாது என்பது என் கண்டிப்பான உத்தரவு என்றபடி வீட்டுக்கதவைத் திறந்தான்.

அவன் பேச்சிலிருந்து பெரிதாக எதிர்பார்த்தபடி உள்ளே வந்த நித்யாவுக்கு ஏமாற்றம்தான்.

வெளியே படர்ந்திருந்த கொடிகளுக்கும், பூச்சிகள் நுழையாதிருக்க என்று உள்ளே அடித்திருந்த வலைக்கும் தப்பி உள்ளே வந்து அரைவெளிச்சத்தில் கண்ணுக்கு தென்பட்டவை ஒரு சோஃபா, ஒரு மேஜை மேஜைமேல் தண்ணீர்க் கூஜா. அடுத்து ஒரு கட்டில் இவ்வளவுதான். சென்னை வீட்டுக் கலைப்பொருட்கள் போல இங்கே அழகு படுத்த ஒன்றுமே என்று எண்ணமிட்டபடி மேலே பார்வையை ஓட்டிய நித்யா. உள்விளக்கு ஒன்றின் ஸ்விட்சை அவன் தட்டவும் அயர்ந்து நின்றாள். கட்டிலுக்கு நேர் எதிரே மாட்டியிருந்த ஓர் ஆள் உயர ஃபோட்டோவில் இருந்து சிரித்துக் கொண்டிருந்தது அவனும் அவளும்தான்! முகத்தில் சிறு வேறுபாடு தெரிந்த போதும் அதிலிருந்தது அவர்கள் தான். அவன் தத்ரூபமாயிருந்தான். ஆனால் அவளிடம் கொஞ்சம் வேறு பாடு. ஆனால் இந்தப் படம் இங்கே.

நெஞ்சு தடதடக்க அவள் யோசிக்கையில் அவன் சொன்னான். "படம் தெரிகிறதா? நம் திருமணமானதும் பக்கத்தில் ஒரு குட்டி ஸ்டூடியோவில் எடுத்தோமே, அதைத்தான் பெரிதாக்கியிருக்கிறது. உன் முகத்தில் கொஞ்சம் வித்தியாசம் தெரிகிறது. இல்லையா? நெகட்டிவ் இருந்தால் இதைவிட நன்றாகச் செய்திருக்க முடியுமாம். ஆனால் உன் அப்பாதான் அந்த ஸ்டூடியோக்காரனையே கையைக் காலை உடைத்துவிடுவதாக மிரட்டி நெகட்டிவை

வாங்கிச் சென்றுவிட்டாரே. அடுத்தவர் கையைக் காலை உடைப்பது அவ்வளவு எளிதாமா?" என்றான். ஒரு மாதிரிக் குரலில்.

'அந்தப் பாம்பின் கடைசிப் பல்லையும் பிடுங்கி விட்டேன். இனி வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடவேண்டியதுதான். படவா ராஸ்கல், என்னை யார் என்று நினைத்து என் மகளிடம் வாலாட்டினான்' தந்தை முகம் அப்படியே நினைவு வந்தது அவளுக்கு. இதைத்தான் சொன்னாரா?

"ப்ரூஃப் பார்க்க முதலில் தந்த காப்பியைத் திரும்ப படம் எடுத்து பெரிதாக்கி, ஒரு சித்திரக்காரரிடம் இங்கே இல்லை. இங்கே கொடுத்தால் விஷயம் பரவிவிடுமே. ஒருதரம் இத்தாலிக்குப் படம் எடுக்கப் போன போது அங்கே உள்ள ஓர் ஆர்ட்டிஸ்ட்டிடம் கொடுத்து வரையச் சொன்னேன். மாடலாக நானே இருந்ததால் என் முகம் சரியாக வந்து விட்டது. ஆனால் என்ன முயன்றாலும் உன்னை இந்த அளவுதான் படமாக்க முடிந்தது. பட்டினிக்குப் பழையது மேல் என்று இதையே வைத்துக்கொண்டேன். இங்குள்ள வேலைகளை முடித்துக் கொண்டு வந்தேனென்றால் கிளம்புகிற நேரம் வரை இதைப் பார்த்துக் கொண்டே படுத்திருப்பேன். நித்தி." என்று அவளைப் பின்னிருந்தே தோளோடு அணைத்து, "அந்த ஒரு வாரத்தை திரும்பத் திரும்ப நினைத்துக்கொண்டே கிடப்பேன்" என்றான்.

அந்த ஒரு வாரம் அவளாலும் மறக்க முடியாததுதான். ஆனால் அதன் மூலம் அவளுடைய பெற்றோருக்கு செய்த அநீதியும் நினைவிலேயே நின்றதே.

கன்னத்தை வருடிய விரல்களைப் பற்றி நிறுத்தி, "அப்பா, அம்மாவை நினைத்தால் இது தப்பு போலத் தெரிகிறதே" என்றாள் கலங்கியகுரலில் "அவர்களுக்கு இழைத்த பிழை."

"ஏன், அவர்கள் பிழையே செய்யவில்லையா?" என்றான் அவன், ஆத்திரத்துடன், "ஒரு சினிமா நடிகன்,



வசதியில்லாதவன் பெண் கேட்டான் என்ற உடனே பிச்சைக்காரனைப் போல நடத்தினார்களே? ஒரு வார்த்தை ஒரு விஷயம் என்னைப்பற்றி விசாரித்தார்களா? இவன் நல்லவனா? மானஸ்தனா? குடும்பம் எப்படிப்பட்டது என்று ஒரு கேள்வி கேட்டார்களா? நான் யாரையேனும் ஏய்த்ததுண்டா? சொன்னசொல் மாறியது உண்டா? இதெல்லாம் பற்றித் தெரிந்துகொள்ளும் எண்ணம் கூட வரவில்லையே. அவர்களைவிட பணத்தில் குறைந்தவன் என்கிற ஒரே காரணத்தால் எச்சில் இலைக்கு பறக்கிற நாய் மாதிரி. மாதிரி என்ன. நாய் என்றே அழைத்தாரே உன் அப்பா. எல்லாவற்றுக்கும் மேலாகக் கட்டிய தாலியைக் கழற்றி எறிந்தாரே இதெல்லாம் பிழை அல்லவா?" என்று பொரிந்து கொட்டி விட்டான்.

ஐந்து ஆண்டுகளாக தன்னுள்ளேயே வைத்துக் குமைந்தது போலும்.

"அவனைத் தன்புறமாகத் திருப்பிக் கேட்டான். சொல்லு நித்யா, பெண் கேட்டு வந்தானே, அவன் உண்மையானவனாக, நல்லவனாக இருக்கலாம் என்ற எண்ணம் கூட இல்லாமல் ஒதுக்கியது பிழை அல்லவா?"

மெய்தானே? அப்பாதான் அவசரப்பட்டு விட்டாரோ கடைசியில் கூட அதை உணர்ந்துதான் மன்னித்துவிடச் சொல்லம்மா என்றாரோ.

நல்லவன், யாரையும் ஏய்த்தது இல்லை என்கிறானே, பின்னே அந்த நெக்லஸ்? அதிலும் அவன் சொன்னதே மெய்யாக இருக்குமோ? அப்புறம் அந்த ஜெயநளினா? ஆனால் சொன்னதெல்லாம் அவன்தானே. பொய்யே சொல்லியிருக்கலாம். அந்த சென்ட். அதுகூட பிரதீபன் அறியாமலே அவன் மீது ஒரு துளி தெளித்திருக்கலாம்.

இப்படி எல்லாவற்றுக்கும் வேறு சரியான விளக்கம் இருக்கக் கூடுமோ? கட்டாயம் இருக்கும். இருக்கும் என்று நம்ப வேண்டியதுதான்.

மற்றபடி வாய்வார்த்தையாக நேருக்கு நேரே ஒருவனிடம் உனக்கும் இப்போதைக்கு மார்க்கெட் இழந்த பழைய பெரிய நடிகை ஒருத்திக்கும் தவறான தொடர்பு இருந்ததா என்று எப்படிக் கேட்பது? அவன் இவ்வளவு சொன்ன பிறகு அப்படிக் கேட்பது முறையல்ல எல்லாம் தவறாக இருந்து, யாரோ ஒருத்தி ஃபோனில் ஏதோ புளுகினால், அதை நம்பி என்னைத் தவறாக எண்ணுவதா என்று அவன் கோபம் கொண்டு விட்டால் எப்படித் தாங்குவது? சொல்லப்போனால் இந்த ஐந்து ஆண்டுகளில் பிரதீபன் யாரை வேண்டுமானாலும் நூறாவது நாள் கொண்டாட்டத்தில் தானே மாலை போல மேல விழப்போனாளே. அந்த மாதிரிப் பணமும் அழகும் உடைய பிரபல நடிகையைக்கூட மணந்திருக்கலாம். இவனானால் படத்தைப் பார்த்துக் கொண்டே படுத்துக் கிடப்பானாமே.

எவ்வளவு ஏக்கம்? அவளைப் போலவேயா?

அவளது பார்வையில் உருகி இரு கைகளாலும் அவள் முகத்தை ஏந்தி, "என்னடா? எது வேண்டுமானாலும் சொல்லு. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதான நம் திருமணத்தை அப்படியே அறிவிக்க வேண்டுமா? சொல்லு, செய்வோம். அல்லது புதிதாக ஊரறியத் திருமணம் செய்யவேண்டுமா? ரிஜிஸ்டர் பண்ண வேண்டுமா? நீ என்ன மாதிரி விரும்பினாலும் நடத்திக் காட்டுகிறேன். எனக்கு நீ என் மனைவி என்பதை எல்லோரும் அறியவேண்டும். அவ்வளவுதான். என்னால் இனியும் உன்னைப் பிரிந்து வாழ முடியாது, நித்தி" என்று பிரதீபன் பேசவும், என்னாலும்தான் முடியாது என எண்ணியவளின் கை தன்னிச்சையாக உயர்ந்து அவன் கன்னத்தை வருடியது.

"என் நித்தி." என்றவனின் அணைப்பில் அவளுக்கு எலும்பு நொறுங்கிவிடும் போல் ஆயிற்று.

சில வினாடிகளில் "உறுத்துகிறதே நித்தி" என்று என்னவென்று பார்க்க முயன்றவனை முகம் சிவக்கத் தடுக்க முயன்றாள் நித்யா.



அந்த முகச் சிவப்பும் தடுத்த விதமும் உந்தப் பிடிவாதத்துடன் பார்த்தவன் ஒரேடியாகத் திகைத்துப் போனான்.

அது அவனது மோதிரம். சம்பாதிக்கத் தொடங்கியதும் முதல் முதலாகச் செய்துகொண்டது. திருமண இரவன்று அவளுக்கு அணிவித்தது. அவனது மோதிர விரலுக்குச் சரியாக இருந்தது. அவளது எல்லா விரல்களுக்கும் மிகவும் லூசாக இருக்கவே, நிறைய நூல் சுற்றி அணியும்படி ஆயிற்று. பிறகு துஷ்யந்த மகாராஜா மோதிரம் போட்டானா என்று மனம் வெதும்பிய போதும் சரடையே கழற்றி எறிந்த தந்தை இதையும் பிடுங்கி வீசி விடக்கூடாதே என்ற பயத்தில் தானாகவே கழற்றி விட்டாள். ஆனால் பிரதீபன் மீது அவ்வளவு வெறுப்பு கொண்டிருந்த போதும் அதைத் தூர விலக்கிவிட அவளுக்கு ஏனோ மனம் வரவில்லை. மாறாக யாரும் அறியாமல், ஒரு பின்னில் அதைக் கோத்து, பின்னைத் தன் சட்டையின் முதல் ஹுக்கில் மாட்டி வைத்திருந்தாள். விசித்திரமான வகையில் அதில் ஒரு திருப்தி அவளுக்கு இருந்தது. அன்று முதல் எப்போதும் இருபத்து நாலு மணி நேரமும் அப்படித்தான். அது அங்கேயே இருக்கையில், கழுத்தில் மாங்கல்யம் இருப்பது போலவே அவள் மனதில் ஒரு பாதுகாப்பாகத் தோன்றும்.

இப்போது காற்றுப் புகமுடியாத படியான அவனது இறுகிய அணைப்பில் அவனது விரலுக்குச் சரியானதான அந்த மோதிரம் உறுத்தி, தானிருப்பதை உணர்த்தி விட்டது.

இந்த ஐந்து ஆண்டுகளாக அவளுக்கு மட்டுமே உரியதாய் இருந்த ரகசியம். இப்போது அவனுக்கு வெட்ட வெளிச்சமானதில் அவள் முகம் குங்கும நிறம் கொள்ள அவனுக்கு மகிழ்ச்சி பீறிட்டது. மனைவியின் முகத்தை ஏந்தி முத்த மழை பொழிந்தான் பிரதீபன்.

அவளுக்கும் சொந்த வீடு வந்தாற்போல் ஓர் உணர்ச்சி.

இருவருமாகத் தன்னை மறந்து கொண்டிருந்த வேளையில், பூஜை வேளைக் கரடியாக மனோகரன் அழைக்கும் குரல் கேட்டது.

கண்டதும் காதல் கொண்டு இணைந்த இருவருமாக ஐந்தாண்டு பிரிவுக்குப் பிறகு இடையே இருந்த ஒட்டடை தூசி, தும்புகளை விலக்கி, ஒருவரை ஒருவர் கண்டுகொண்டிருந்த அந்த நேரத்தில் மனோகரனின் குரல் அந்த இருவருக்கும் கசப்பாக இருந்தது.

பதில் இல்லாதுபோனால் ஆள் இல்லையென்று போய்விடமாட்டானா என்று எண்ணியது போல, நித்யாவின் உதட்டில் விரல்வைத்து எச்சரித்துத் தானும் பேசாமல் இருந்தான் பிரதீபன்.

ஆனால் உள்ளே கையை நுழைத்து, கேட்டின் உட்புறத் தாளை நீக்கும் ஓசை கேட்கவும் பிரதீபன் உடல் விறைத்தது.

சட்டெனக் கைநீட்டி, உள் விளக்கை அணைத்தவன் குனிந்து நித்யாவின் காதில், "நித்தி இந்த அறைக்குள் நான் வேறு யாரையும் அனுமதிப்பது இல்லை. அத்தோடு, இவன் இங்கே வந்து நாம் இருவரும் தனித்திருப்பதைப் பார்த்துவிட்டால் பல அசிங்கக் கதைகளைப் பரப்பிவிடக்கூடும். நம் திருமணத்தை எப்படி அறிவிப்பது என்று நாம் முடிவு செய்யும் வரை இவனுக்குத் தெரியவேண்டாம். நான் முதலில் சென்று வேறு புறமாய் மனோகரனை அழைத்துக் கொண்டு போய்விடுகிறேன், பிறகு நீ பூட்டிக்கொண்டு பெரிய வீட்டுக்கு போய்விடு" என்று கிசுகிசுத்தவன், அவளை விட்டு விலக மனம் அற்றவனாய் மீண்டும் ஒருதரம் அவளை இறுக அணைத்தான். உடனே விட்டு விட்டு விரைவாக வெளியேறினான். தனக்குப் பின்னே கதவை இழுத்துச்



சாத்திவிட்டு. "ஹலோ மனோகரன், அதற்குள் உங்கள் வேலை எப்படி முடிந்தது?" என்று விசாரித்தபடி மனோகரனிடம் விரைந்து சென்றான்.

"ம்ம்.. என்ன வாசனை சார்? அந்தப் பக்கம் மகிழம்பூவா சார்? இந்தப் பந்தலில் மனோரஞ்சிதம்.. அதோ ஒரு பூ" என்று வீட்டின் பக்கம் செல்ல முயன்றவனைக் கையைப் பற்றி நிறுத்தி, "மிஸ்டர் மனோகரன், உங்கள் வேலை என்ன ஆயிற்று? முதலில் அதைச் சொல்லுங்கள்" என்றான். எரிச்சலைக் காட்டாதிருக்க வெகுவாக முயன்றபடி.

"எந்த வேலை? ஓ சர்க்கரை ஆலையைச் சொல்கிறீர்களா? அங்கே தான் எனக்கு வேலையே இல்லையே! நல்ல, நல்ல ஃபோட்டோ எல்லாம் ஆலை மேனேஜரே வைத்திருந்தார். ஒரு செட் வாங்கிக்கொண்டு உடனே வந்து விட்டேனே.. இங்கே நித்யா தனியாகத் தவிப்பாளே, ஒரு துணையா..அதில்லை சார், நித்யாவைத்தான் நீங்கள் பார்த்துக் கொள்வதாய்ச் சொன்னீர்களே! இங்கே இந்தக் கோடிவீட்டை ஃபோட்டோ எடுக்கலாமென்று - உள்ளே போய் எடுக்கலாமா சார்?"

அதற்குள் அவனது அமர்ந்த குரல் கைவந்துவிட, "உள்ளே பெரிதாக ஒன்றும் இல்லை, மனோகரன். வெறுமனே ஒரு சினிமா நடிகன் தனியே ஓய்வெடுக்கும் இடம். அவ்வளவுதான். உங்களுக்குப் பயன்படாது. ஆனால் இங்கே வேலியைச் சுற்றிக்கொண்டு பின்புறம் சென்றால் ஒரு நல்ல வ்யூ பாயிண்ட் இருக்கிறது. இந்த வீட்டையும் இதன் பின்னணியில் பெரிய வீட்டையும் கூட சேர்த்து எடுக்கலாம்" என்று மனோகரனை உடன் அழைத்துச் சென்றபடி கூறிய பிரதீபனின் குரல், மெலிந்து தேய்ந்தது.

எதிரில் நின்ற படத்தை மகிழ்ச்சியோடு ஒரு தரம் பார்த்துவிட்டு அவசரமாகப் பிரதீபனின் கட்டளையை நிறைவேற்றினாள் நித்யா.

மதிய உணவின் போது அடுத்து உடனே சென்னைக்குக் கிளம்பவேண்டும் என்றான் பிரதீபன். இரவு பயணம் இல்லை என்பதால் இப்போது தூங்கப் போகாமல் சாப்பிட்டதும் காரை ரெடிபண்ணும்படி டிரைவரிடம் பணித்தான்.

"ஏன் சார், வழக்கமாக ராத்திரிதானே கிளம்புவீர்களாம். இன்றைக்கு என்ன அவசரம்? சும்.. அது.. இந்தக் கேள்வி நித்யாதான் கேட்கவேண்டும். என்னமோ இரண்டு மூன்று நாட்களாக அவள் கொஞ்சம் மந்தமாய்த் தெரிவதால் நான் கேட்டேன்."என்றான் மனோகரன்.

"மந்தம் என்ன, மனோகரன்? ஏற்கனவே பதில் தெரிந்திருக்கும் போது அனாவசியமாகக் கேள்வி கேட்பானேன். என்று கூடக் கேளாதிருந்திருக்கலாம்" என்று பிரதீபன் நித்யாவைச் சார்ந்து பேசினான்.

"பதில் தெரியுமா? அப்போ சரிதான். ஆனால் இப்போதே கிளம்பினால்கூடச் சென்னை போய்சேர ராத்திரி ஒன்பதாவது ஆகிவிடுமே. அப்புறம் போய் என்ன சார் வேலை? ம் சொல்லாதீர்கள். நானே சொல்லுகிறேன். ஏதாவது படம் கடைசி டப்பிங் வேலை இருப்பதாக கிபோன் வந்திருக்கும். அதுதான் வேலை. எப்படி சார், என் கண்டுபிடிப்பு? ஷெர்லாக் ஹோம்ஸ் கெட்டாரில்லை?" என்று பெருமை பேசிய மனோகரனிடம் "பின்னே?" என்று தட்டிக்கொடுத்து விட்டு, நித்யாவை பார்த்துக் கண்ணால் சிரித்தான் பிரதீபன்.

தன்முகம் கன்றுவதைத் தவிர்க்கவும் மறைக்கவும் நித்யா அரும்பாடுபட வேண்டியதாயிற்று.

அந்தப் பையனைப் பற்றிய விபரம் நாடிய பெற்றோரின் நினைவு நித்யாவுக்கு வந்தது. மகளிடம் உயிரை வைத்திருந்த அந்த இருவரும் இப்போது எங்கிருந்தோ அவளுக்கு ஆசி கூறுவது போல உணர்ந்தாள் அவள்.



# 15

திரும்பும் பயணத்திலும் முட்ட முட்ட உண்டுவிட்ட மனோகரன் உறங்கிப் போனான்.

ஆனால் சில்லறைச் சேட்டைகளில் ஈடுபடாமல் அவள் கையை மட்டும் பற்றியபடி பிரதீபன் அமர்ந்திருந்தது நித்யாவுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

சென்னைப் புறநகர்ப் பகுதியை அடைந்ததும் மனோகரனை எழுப்பி அவனது இருப்பிடம் கேட்டு அங்கே காரைச் செலுத்துமாறு கூறினான் பிரதீபன்.

"ஏ.. ஏன் சார்?" என்றான் மனோகரன். தூக்கக் கலக்கம் முழுமையாக தெளியாமலே.

"இன்றோடு ஒரு வாரம் முடிகிறதில்லையா, மனோகரன்? உங்கள் துணிமணிகளோடு என் தனி அன்பளிப்பு ஒன்றும் நாளை உங்கள் வீடு தேடிவரும்."

இந்த ஏழு நாட்கள் கவனித்ததில் பிரதீபனிடம் கஞ்சத்தனத்தை அவன் கண்டிராததால் அன்பளிப்பு என்றதும் மனோகரனுக்கு ஒரே மகிழ்ச்சி. "ரொம்ப சந்தோஷம் சார். மிக்க நன்றி சார் என்றவன், சற்று யோசித்து, "ஆனால் நித்தியா, சார்?" என்று வினவினான்.

இலகுவான புன்னகையுடன் "உங்களை உங்கள் இடத்தில் சேர்ப்பது போல நித்யாவையும் உரிய இடத்தில் கொண்டுபோய் விட்டுவிடுவேன் மனோகரன் அவளைப் பற்றிய கவலை உங்களுக்குத் தேவையே இல்லை என்று முன்பே சொன்னேனே" என்று கூறினான் பிரதீபன்.

அடுத்து கார், ஹாஸ்டலுக்குப் போகிறது என்று மனோகரன் நினைத்திருப்பான் என்று எண்ணுகையில் இப்போது நித்யாவுக்கு லேசாக உறுத்தியது.

மனோகரனிடம் விளக்கம் கூறிக் கொண்டு இருப்பது கடினம். ஆனாலும் பொய் பொய்தானே.

பிரதீபனின் வீட்டில் அவளுக்கு அளிக்கப்பட்டிருந்த அறைக்குள் செல்ல ஓர் எட்டு எடுத்துவைத்த நித்யாவைப் பிரதீபன் தடுத்து அவனது சொந்த அறை பக்கமாகத் திருப்பினான்.

கால்கள் அவனோடு இணைந்து நடந்தபோதும், "யாரேனும் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?" முணுமுணுத்தாள் அவள்.

"என்ன நினைப்பார்களாம்?"

அந்த உல்லாச குரல் சீண்ட "பேட்டி எடுக்க வந்தவள் வளைத்துப் போட முயற்சிக்கிறாள் என்று என்னைத் தான் தப்பாக எண்ணுவார்கள். உங்களுக்கு என்ன?" என்றாள், குறையோடு அவள்.

"ஓ- ஆனால் அதை எளிதாக மாற்றிவிடலாமே. நம் திருமணம் ஐந்தாண்டுகளுக்கு முன்பே நடந்து முடிந்த ஒன்று என்று அறியும்போது தப்பு எண்ணமெல்லாம் சரியாகி விடுமே."

தனது அறைக் கதவைத் திறந்து அவளை உள்ளே அழைத்துச் சென்றான் பிரதீபன். " மாறிய பிறகு என்று எதுவும் சொல்லாதே நித்தி. மணிகண்டனுக்கும் சிவானந்தனுக்கும் நாம் தம்பதி என்பது ஏற்கனவே தெரியும். அதனால் வெளிப்படையாக அறிவிக்கும்வரை காத்திருக்க வேண்டியது இல்லை. அத்தோடு என்னால் காத்திருக்க முடியாது, கண்மணி" என்று அவள் முகத்தைத் தன் இரு கைகளிலும் ஏந்தி முத்தமிட்டான் பிரதீபன்.

எங்கிருந்தோ ஒரு மணிச் சத்தம் மெல்லச் சிணுங்குவது போலவும், மெல்லிய குரலில் யாரோ பேசுவது போலவும் கனவு வந்தது நித்யாவுக்கு. ஆழ்ந்ததுயில் லேசாகக் கலையப் படுக்கையில் புரண்டவளைப் பிரதீபனின் விரல்கள் இதமாய் வருட, மீண்டும் நல்ல தூக்கத்தில்



ஆழ்ந்தாள். ஐந்து ஆண்டுகளாக அவள் எவ்வளவோ முயன்றும் அவளை அணுகாமல் ஓடி விட்டிருந்த ஆழ்ந்த உறக்கம்.

எவ்வளவு நேரம் தன்னை மறந்து அப்படி உறங்கினாளோ, மீண்டும் எங்கோ மணியடித்தது.

பழைய கனவு என்று நினைத்தபடி, திரும்பப் படுத்து உறங்க முயன்றாள் அவள். ஆனால் மணிச் சத்தம் நிற்பதாகவே இல்லை.

சிரமப்பட்டு இமைகளைப் பிரித்துப் பார்த்தபோது முதலில் இடம் பொருள் என்று எதுவுமே புரியவில்லை.

சில வினாடிகள்தான்.

எல்லாமே முட்டி மோதிக்கொண்டு நினைவு வர, முகம் சிவக்க நோக்கியபோது பிரதீபன் அங்கே இல்லாதது தெரிந்தது. அவன் இருந்த பக்கமாக அருகிலிருந்த ஒரு சிறு மேசை மேல் இருந்த ஒரு தந்த வர்ண அலங்கார டெலிபோன் விடாமல் மணி அடிப்பதும் விடிவிளக்கின் ஒளியில் புரிந்தது.

சற்றுத் தயங்கியவள் மெல்லக் கைநீட்டி, ரிசீவரை எடுத்தாள். "டெலிபோனை எடுக்க இவ்வளவு நேரமா? அப்படியா எருமை போலத் தூங்குவாய்? அது தாங்காமல்தான் இந்த ராத்திரியில் பிரதீப் என்னைத் தேடி வந்து நிற்கிறார்" என்றது எதிர்முனையிலிருந்து ஒரு பெண் குரல். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கேட்ட அதே குரல் அந்த ஜெயநளினாவின் குரல்.

அன்றைக்கும் அவள் பேச்சை நம்பி விலகியது தவறு. அங்கே பிரதீபனை நியாயப்படுத்தும் விளக்கம் ஒன்று நிச்சயமாக இருக்கும் என்று முடிவு செய்து மீண்டும் அவனிடம் தன்னை இழந்தாளே, இப்போது இதற்கு என்ன விளக்கம் இருக்க முடியும்? இந்த நேரத்தில் பிரதீபன் எதற்காக ஜெயநளினாவின் இருப்பிடம் செல்ல வேண்டும் அடக்கம். பொறுமையாய் யோசி மனமே. இந்த ஒரு குரலில்

நிலை குலைந்து போவது பிழை. பிரதீபன் அங்கே சென்றிருப்பதாக அவள்தானே சொல்கிறாள். அது நிஜமாக இருக்க வேண்டும் என்று என்ன கட்டாயம்?

ஆனால் பிரதீபன் இப்போது எங்கே?

"என்னடி அங்கே இருக்கிறாயா அல்லது செத்து கித்து தொலைத்து விட்டாயா?"

என்ன உதாசீனம் இந்த மாதிரி அன்னியப் பெண்ணிடம் பேச எவ்வளவு திமிர் இருக்கவேண்டும்? இப்போது பிரதீபன் அருகில் இருந்தால் 'வைடி கீபோனை' என்று அவளாலும் அதட்ட முடியும் ஆனால்...

பிரதீபனைக் காணாத மனம் கலங்க "இருக்கிறேன்" என்றாள் நித்யா சுருக்கமாக.

"அதானே பார்த்தேன் நீ எங்கே அப்படிச் சுலபமாக செத்துத் தொலைக்கப் போகிறாய்? அல்லது விட்டுதான் விலகிவிடப் போகிறாயா? முன்னே வெறும் ஆள் அழகைப் பார்த்தே ஓடி வந்தவள். இப்போது பணம் காசையும் சேர்த்துப் பார்த்த பிறகு விடுவாயா, என்ன?"

"ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக்கொள். ஏதோ சாமி சிலைக்கு முன்னாலே தாலிகட்டிவிட்ட தோஷத்துக்காக இப்போது சொத்து சுகம் எல்லாம் இழந்து நிற்கிறதைப் பார்த்துப் பரிதாபப்பட்டு பிரதீப் உன்னைக் கைவிடாமல் காப்பாற்றலாம். வாழ்வும் கொடுக்கலாம். மற்றபடி பிரதீபுக்கு நான்தான் எல்லாம். அதை மட்டும் மறந்து விடாதே"

"மார்க்கெட் போன பழைய நடிகை என்று மற்றவர்கள் என்னை ஒதுக்கலாம். ஆனால் பிரதீப்பால் நான் இல்லாமல் இருக்க முடியாது. நாங்கள் இரண்டு பேரும் ஒருவருக்கு ஒருவர் என்றே."

அதற்கு மேல் தாங்க மாட்டாமல் "பொ... பொய்...



"என்னடி பொய்?" என்றாள் ஜெயநளினா ஆங்காரமாக. "பின்னே ஏண்டி, நடுராத்திரி இரண்டு மணிக்கு வந்து கதவைத் தட்டி எனக்கு திருப்தியே இல்லை, வா என்று கூப்பிடுகிறார். இதோபார் நாங்கள் இப்படியேதான் இருப்போம். ஒன்று. இதை அனுசரித்து நல்லபடியாகக் கண்டும் காணாமல் நடந்துகொள் அல்லது முன்னைப் போலக் கண்காணாமல் எங்காவது ஓடிவிடு. சும்மா ரகளை பண்ணினாயனால் பிரதீபை என் வீட்டிலேயே இருக்கச் சொல்லிவிடுவேன்"

இவள் பொல்லாத ராட்சசி. சும்மா என்னென்னவோ சொல்லி மிரட்டப் பார்க்கிறாள். இவள் சொல்வதெல்லாம் பொய். ஆனால் அது பொய்தான் என்று நிரூபிக்க பிரதீபனைக் காணோமே.. அவன் எங்கே?

நித்யாவின் கலங்கிய பார்வை அந்த அறை முழுவதையும், அறையிலிருந்து வெளியே உள்ளே சென்று வரக்கூடிய வழிகளையும் சுற்றி அலைந்து கணவனைத் தேடியது.

அவளது கேள்விக்கு விடையைப் போலப் பிரதீபனின் குரல் கேட்டது. டெலிபோனில் நளினா என்று அழைத்து. "அங்கே என்ன செய்கிறாய், வாம்மா வந்து படு" என்று ஜெயநளினாவை அழைத்தது.

தீச் சுட்டாற்போல ரிசீவரைத் தூக்கிப் போட்டாள் நித்யா.

ரிசீவர் விழுந்த வேகத்தில், கருவி முழுமையுமே ஆடி, அதன் அடியிலிருந்த காகிதம் ஒன்று எங்கோ பறந்தது.

ஏதாவது முக்கியமான காகிதமாக இருக்கலாம் என்று அதை எடுத்து வைக்கக்கூட அவளுக்குத் தோன்றவில்லை. இரண்டாவது தடவையாகத் தன் உலகம் தலைகீழ் கவிழ்ந்த அதிர்ச்சியில் அவள் நிலைகுலைந்து நின்றாள்.

ஆக, ஜெயநளினா சொன்னது உண்மை. பிரதீபன் அவன் வீட்டில்தான் இருக்கிறான். அது மட்டுமல்ல; அவன் கூறியது அவ்வளவும் முழுக்க முழுக்க உண்மை.

மற்றபடி இந்த நேரத்தில் அவனுக்கு அங்கென்ன வேலை? திருப்தி இல்லாமல் சென்றானாமா? முன்னிரவில் பனிநிலவாய் அவன் அணைத்த உடல் முழுமையும் இப்போது தீயாய் எரிந்தது. திருப்தி இராதுதான். கண்ட கேடு கெட்டவளின் ஜாலங்கள் எல்லாம் குலமகளுக்கு எப்படித் தெரியும்? அவன் என்னவெல்லாம்...

அதற்கு மேல் எண்ணிப் பார்க்கக் கூட முடியாமல் நித்யாவின் நெஞ்சு கூசிக் குமுறியது வேதனையில் தவித்தது.

இதை அனுசரித்து வாழ வேண்டுமாமா? சீச்சீ. இந்த வீட்டில் இனி ஒரு நல்ல மூச்சுக்கூட விட முடியாது. வேகமாக ஓடிச்சென்று அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறையை அடைந்தாள். கையில் அகப்பட்ட உடைமைகளைப் பையில் திணித்துத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்,

இந்தச் சில தினங்களாகப் பிரதீபன் நித்யாவை நடத்திய விதத்தைக் கண்டிருந்ததால் வீட்டு வாயிலிலோ கேட் அருகிலோ காவலிருந்தவர்கள் யாரும் அவளை வெளியே விட மறுத்து மரியாதை குறைவாக நடந்து கொள்ள வில்லை. மாறாக, "காரை எடுக்கச் சொல்லவா?" என்றுதான் கேட்டார்கள்.

காரை மறுத்தவள், கூர்க்காவிடம் ஓர் ஆட்டோ கொண்டுவர சொல்லி அனுப்பினாள். அதிகாலை ஐந்து மணிக்கு தனியே சென்று ஆட்டோ தேடி ஏறுவது எளிதில்லையே.

ஆட்டோவில் ஏறி விழுந்தவளுக்கு நல்லபடியாக மூச்சு எடுக்க முடிந்தது உண்மைதான். ஆனால் உள்ளே குமுறும் எரிமலையை என்ன செய்வது?



பால்காரன் வரும் நேரத்துக்குச் சரியாக விடுதிக்கு வந்து சேர்ந்து ஒருவர் கண்ணிலும் படாமல் அறைக்குள் புகுந்து கொண்டவளால் அதற்குமேல் அழுகையை அடக்க முடியவில்லை. விம்மலும், விசும்பலும் அடுத்த அறைக்குக் கேட்டுவிடுமோ என்ற பயத்தில் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறித் தீர்த்தாள்.

ஆற்றுமடை திறந்தால் வெள்ளம் வடிந்ததும், நீர் வடிவது நின்றுவிடும். ஆனால் கடல்மடை திறந்தால் கடல் நீர் வற்றுவது எப்போது? கண்ணீர் நிற்பது தான் எப்போது?

அதுதான் ஒன்றும் வேண்டாம் என்று விட்டுவிட்டேனே, வெளியேறி வந்து விட்டேனே என்று தனக்குதானே எத்தனையோ முறை சொல்லிக் கொண்ட போதும் முன்னிரவில் கண்ணே மணியே என்றவன் பின்னிரவில் இன்னொருத்தியிடம் வாம்மா வந்து படு என்று குழைந்த வஞ்சகத்தை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை அவன் நல்லவன்தான் என்ற நம்பிக்கையை உருவாக்கிவிட்டு மீண்டும் ஏமாற்றி விட்டானே.

காலநேரம் தெரியாமல் கண்ணீர் வடித்தவளுக்குச் சுற்றுப் புறச் சந்தடி அடங்கியது மனதில் படவில்லை.

சூழ இருந்த அமைதியில் ஹால் கடிகாரம் மணியடித்தது. பெரிதாகக் கேட்கவும் திடுக்கிட்டு எழுந்தாள். எதிரே இருந்த டைம்பீஸ் மணி பத்து என்றது.

கிட்டத்தட்ட நாலரை மணி நேரமாக அழுது இருக்கிறாள் எல்லாம் ஒரு தகுதியற்ற மனிதனுக்காக என்ன மடத்தனம்.

மடத்தனம் என்று நினைத்த போதும் மீண்டும் அழுகைதான் வந்தது. இது சரியில்லை என்று எண்ணி, டவலுடன் குளியலறை சென்றாள். சில்லென்ற நீரைத் தலையில் நிறைய கொட்டிக் கொண்டாள். கொஞ்சம் கண்ணீர் நின்றாற்போலத் தோன்றவும் குளியலை முடித்தாள்.

கிளம்பும்முன் கண்ணாடியில் முகத்தை ஆராய்ந்தாள். வெகுநேரம் குளிர் நீர் பட்டதால் இமை வீக்கம் வற்றியிருந்த போதும் விழிகளின் சிவப்பும், இதோ இதோ என்று தூரத்திக் கொண்டு நின்ற நீர்த்திரையும் எட்டப்பனாக அவள் அழுததைக் காட்டிக் கொடுக்க முயன்றன.

கண்ணில் தூசி பட்டதாகக் கூறிச் சமாளிக்கலாம் என்று எண்ணி கண்ணைச் சுற்றிலும் கொஞ்சம் பவுடரை ஒற்றிக் கொண்டாள்.

பிரதீபன் பற்றிய குறிப்புகளை எடுத்து வைத்தபோது குபுக்கென இரண்டு சொட்டுக் கண்ணீர் திரண்டு உருளவும் ஆத்திரத்துடன் துடைத்துக் கொண்டு கிளம்பினாள் நித்யா.

ஆசிரியர் சிவானந்தத்திடம் ரிப்போர்ட் செய்யச் சென்றபோது அவர் முகத்தில் வியப்பையும், கூடவே ஓர் ஆறுதலையும் காணவும் அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

ஆனால் அதுபற்றிப் பேசாமல் கையோடு கொணர்ந்திருந்த குறிப்புகளையும், கட்டுரையாக்கியதையும் அவர் முன்னே அவள் எடுத்து வைக்கவும் அவராகவே, "இதுவரை எங்கேம்மா இருந்தாய்? ஹாஸ்டலில் கேட்டபோது வரவில்லை என்றார்களே" என்று கேட்டுவிட்டார்.

சற்றுத் திகைப்புடன், "அங்கேதானே இருந்தேன்" என்றவளுக்குச் சட்டென விஷயம் தெளிவாயிற்று. "அதிகாலையில் நான் சென்றபோது யாரும் பார்க்கவில்லை, சார். அதனால் வரவில்லை என்றே நினைத்திருப்பார்கள்" என்று விளக்கினாள்.

"பாராததால் மட்டுமா? காலைக் காஃபி, எட்டுமணி டிஃபன் எதையுமே நீ உட்கொள்ள வராததாலும் கூடத்தான் நீ வந்திருக்க மாட்டாய் என்று சொன்னார்களே, மகளே" என்று எண்ணிய பெரியவர், அதை வெளிப்படையாகச் சொல்லாமல், இருக்கும் என்று ஒப்பி, ஒரு காஃபி வரவழைத்து அவளை அருந்தச் செய்தார்.



ஒரு வாய்க் காஃபி அருந்தவற்குக் கூட அவள் தொண்டை அடைத்தாற் போலச் சிரமப்படுவதைக் கவனித்தபடி அமர்ந்திருந்த அவரது கண்களுக்கு நித்யாவின் அழுது சிவந்த விழிகளும், முகமும், அதை மறைக்க அவள் செய்த ஒப்பனையும் புரிபடாமல் இல்லை.

எவ்வளவோ வேதனைகளை இந்தப் பெண் சகித்த விதம் அவர் அறிந்ததே இவள் இந்த வேதனைப் படுவது என்றால்..?

புண்ணை மூடி மூடி வைப்பதை விட அதைக் கீறி உள்ளே இருக்கும் அழுக்கை வெளிப்படுத்தி சுத்தம் செய்வதுதான் அந்தப் புண் ஆறுவதற்கு உரிய வழி. ஆனால் புண்ணைக் கீறியதில் இங்கே மரண காயம் பட்டு விட்டதா?

முதல் பகுதி: கேள்வி பதில். என் ஊகம், விளக்கங்களை எல்லாமே விவரமாக அச்சிடச் சரியாக எழுதி விட்டேன். சார் கடைசியில். அந்தப் பண்ணைப் பகுதி மட்டும். அதை விரைவில் தயார் செய்து தந்து விடுகிறேன். என்று ஒருவாறு கூறி முடித்தாள் நித்யா.

"கடைசிப் பகுதிதானேம்மா? அதை மெல்லத் தந்தாலும் பரவாயில்லை. ஆனால். நித்யா மிஸ்டர் பிரதீபன் உன்னைத்தேடி இங்கே இரண்டு தடவை டெலிஃபோன் செய்தார். உன்னிடம் பேச வேண்டுமாம். என்று இழுத்தார் சிவானந்தம்.

அடக்க மாட்டாமல் பெருகிய கண்ணீரைக் குனிந்து காலில் சேலையை சீர்செய்யும் பாவனையில் அழுந்தத் துடைத்தாள்.

இவருக்கு விஷயம் தெரியும் முன்கதையின் அவலமும் முழுதாகவே தெரியும். நல்லவேளையாகப் பின் கதையின் அவலம் அவருக்குத் தெரியாது. அதை விண்டுரைத்து வெட்கித் தலை குனியத் தேவையும் இல்லை. குரலில் முடிந்த அளவு அமைதியைக் காட்டி, "அவரைப் பொருத்த வரையில் என் வேலை முடிந்து விட்டது சார். ஆனால் அவருடன் இனி

நான் பேசும் அவசியமும் இல்லை" என்றாள் மிக மெல்லிய ஆனால் உறுதியான குரலில்.

## 16

"ஆனால்" என்று அவர் தொடங்குமுன் அவர் முன்னே இருந்த டெலிக்போன் கிணுகிணுத்தது.

மடியில் கோர்த்திருந்த கைகளில் பார்வையைப் பதித்திருந்த நித்யாவை ஒரு தரம் பார்த்துவிட்டு, ரிசீவரைக் கையில் எடுத்தார் சிவானந்தம் அவர் எதிர்பார்த்த கால்தான் போலும்.

"ம். நான்தான்" என்றவர் மீண்டும் நித்யாவைப் பார்க்க, "நான் அப்புறம் வருகிறேன் சார்" என்று எழுந்தாள் அவள்.

"இல்லையில்லை பொறு" என்றவர் போனில் "இங்கேதான் இருக்கிறாள். இதோ அவளிடம் கொடுக்கிறேன்" என்று ரிசீவரை அவளிடம் நீட்டினார். "பிரதீபன்"

அதை அவர் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவர்கள் பேச்சிலிருந்தே பேசுவது பிரதீபன் என்பதை ஊகித்து விட்டிருந்த நித்யா அவர் கையிலிருந்த கருவியை வெறித்துப் பார்த்தாள்.

இவர் முன்னிலையில் இதைத் தவிர்ப்பதற்கு வழியில்லை. மெல்ல ரிசீவரை வாங்கியவள், "நித்யா ஸ்பீகிங்" என்றாள் வறண்ட குரலில்.

அவள் குரல் கேட்டதுமே பிரதீபன் பேசத் தொடங்கிவிட்டான். "நித்தி என்னம்மா, இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்? காலையில் வந்ததும் பார்த்தால் உன்னைக் காணோம். விடிகாலையில் போனாயாமே, ஏன் விடுதியில் கேட்டாலும் இல்லை என்றார்களே, பதறிப் போனேன். என்ன ஆபத்தோ என்று- நல்லவேளை அப்படி ஒன்றும்



இல்லை. ஆனால் நீ ஏன் போனாய் நித்தி? என் கடிதம் பார்த்தாயில்லையா?"

"இல்லை" என்றாள் அவள் சுருக்கமாக

"இல்லையா? டெலிக்போன் அடியில் வைத்திருந்தேனே, திடீரென்று உடம்பு சரியில்லாமல் போன ஒரு க்பிரண்டைப் பார்க்கப் போவதாக எழுதியிருந்தேனே."

க்பிரண்ட்! என்ன கெட்டிக்காரத்தனம்! ஆண் பெண் என்று தெளிவு படுத்தாமல் ஓர் ஆங்கில வார்த்தையில் எளிதாக மறைத்தாயிற்று.

"அது போகட்டும் நித்திம்மா கடிதத்தைப் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் நான் இல்லாவிட்டால் நீ போய் விடவேண்டுமா? இது உன் வீடு இல்லையா?"

"இல்லை" என்றாள் அவள் மீண்டும் வெகு சுருக்கமாகவே.

ஒரு வினாடி மவுனத்தின் பின் "என்ன இல்லை நித்யா?" என்று விளக்கம் கேட்டான் அவன்.

"அது என் வீடு இல்லை என்றேன்" என்றாள் அவள்.

"இன்னும் கொஞ்சம் விளக்கம் தேவைப்படுகிறது. நித்ய கல்யாணி"

கோபம் என்று கருதி அவள் நடுங்க வேண்டுமாக்கும். இவன் நடிப்பை சினிமாவோடு நிறுத்திக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

சட்டென அலுப்புற்றவளாக "இதோ பாருங்கள் மிஸ்டர் பிரதீபன் எங்கள் பத்திரிகையிலிருந்து ஒரு வாரப் பேட்டிக்காக உங்கள் வீட்டுக்கு வந்தேன். பேட்டி காலம் முடிந்ததும் திரும்பி விட்டேன். இதற்குமேல். இதற்குமேல் நமக்குள் ஒன்றும் இல்லை அவ்வளவு தான்" என்றாள் அவள்.

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன். ஏன் ஒன்றுமில்லை? எப்படி ஒன்றும் இல்லாமல் போகும்? நான்

கட்டிய தாலியை உன் தந்தை கழற்றி வீசியிருக்கலாம். நான் போட்ட மோதிரத்தை நெஞ்சிலேயே இவ்வளவு காலம் சுமப்பவள் பேசுகிற பேச்சா இது?" என்றான் பிரதீபன் கோபக் குரலில்.

"அது ஒரு மடத்தனம் என்பது இப்போதுதானே தெரிகிறது." மடத்தனம் என்று தெரிந்த பிறகும் அதை விலக்கி எறியமுடியாமல் இருப்பதை எண்ணி அவளுக்கு நெஞ்சையும் அடைத்தது. இனி அதிக நேரம் சமாளிக்க முடியாது என்பதை உணர்ந்தவளாய், "வேறு ஒன்றும் இல்லை. உங்கள் பேட்டி விவரம் ஆசிரியரிடம் கொடுத்து விடு. விடுகிறேன். அவரோடு பேசிக்கொள்ளுங்கள். வைக்கிறேன்" என்று ரிசீவரைக் கீழே வைத்தாள்.

வைத்ததுமே மீண்டும் டெலிஃபோன் மணி சீறியது. போனை எடுத்துக் காதில் வைத்துவிட்டு, மீண்டும் நித்யாவிடமே நீட்டினார் சிவானந்தம்.

கண்ணில் நிரம்பும் நீர் வழிந்து விடாமல் அடக்க முயன்று அகல விழித்து இங்கும் அங்கும் விழிகளைத் திருப்பி வேதனைப்படும் இந்தப் பெண்ணைப் பார்க்கும்போது அவருக்குப் பரிதாபமாக இருந்தது. ஆனால் இந்த நேரத்தில் அவர் தலையிட முடியாதே.

"நித்யா, எனக்கு விளக்கம் வேண்டும். ஒன்று நீ இங்கே வா" என்றவனை இடைமறித்து "முடியாது" என்றாள் நித்யா.

"அல்லது நான் அங்கே வருகிறேன். நாம் பேசியே ஆகவேண்டும்" என்றான் அவன் உறுதியான குரலில்.

இங்கே வந்து இத்தனை பேர் நடுவில் ஆத்திரத்துடன், "உங்கள் நடிப்புத் திறமையை இந்த ஆபீசில் உள்ளவர்கள் அறிய வேண்டுமானால் உங்கள் படங்களின் காசெட்டுகளைப் போட்டுக் காட்டுங்கள். மற்றபடி இங்கே வந்து நாடகமாடி, எனக்குப் பிழைக்க இருக்கும் இந்த ஒரு வழியையும் கூடத் தயவு செய்து மூடிவிடாதீர்கள்" என்று



டாய்லட்டுக்குள் ஓடினாள். சற்று பொறுத்து வெளியே வந்த அந்தப் பெண்ணின் சிவந்த விழிகளைக் காணச் சிவானந்தத்துக்கு மேலும் பாரமாக இருந்தது.

ஆனால் பிரதீபன் அத்துடன் விட்டு விடுவதாக இல்லை. அலுவலகத்தில் அவள் பேச மறுப்பதாக சிவானந்தம் கூறவும் மாலைக்குமேல் விடுதிக்கு டெலிஃபோன் செய்தான். அவள் பேசாமலே வைத்துவிடவும் மூன்று தரம் ஃபோனில் முயற்சித்தவன் நேராக விடுதிக்கே வந்து விட்டான்.

"இ-இங்கே ஆண்களை உள்ளே அனுமதிப்பது இல்லை- இங்கே உட்காருங்கள் சார் " என்று வாயெல்லாம் பல்லாக உபசரித்து, ஹாலில் அவனை அமர வைத்து விட்டு, நித்யாவை அழைத்து வரத் தானே ஓடினாள் நிர்வாகி. மறுக்க வழியின்றி ஒருவாறு நித்யா வந்து சேருமுன், அனந்தம்மா, கூடத் தங்கியிருந்த சில பெண்கள், தெருப்பக்கம் பெட்டிக்கடை ஆள் என்று கூட்டம் சேரத் தொடங்கியிருந்தது.

ஏதோ புத்தகம் ஒன்றை விரித்து படிப்பது போலப் பாவனை செய்து கொண்டிருந்த பிரதீபன் அவளைக் கண்டதும் "பார் இந்த ஆடியன்ஸ் நடுவில்தான் உன்னுடன் பேச வேண்டுமா? என்னை என்ன மாதிரி நிலைமைக்கு ஆளாக்கியிருக்கிறாய்?" என்று அடிக்குரலில் சீறினான்.

"என்னை என்ன மாதிரி நிலைமைக்கு ஆளாக்கி இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குப் " புரிகிறதா? உங்களுக்கென்ன, பெரிய நடிகர், தோளைக் குலுக்கி விட்டுப்போய் விடுவீர்கள். என்னைப் போட்டுத் துளைத்து எடுப்பார்களே, இவர்களிடம் என்ன விளக்கம் சொல்லட்டும்? உங்கள் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன். தயவு பண்ணி உடனே போங்கள்" என்று அதே அடிக் குரலில் பதிலுக்குச் சீறிவிட்டு திரும்பி நடந்தாள்.

அறை வாயிலிலேயே நின்ற நிர்வாகிகளிடம், "ஒன்றுமில்லை மேடம். போனவாரம் இவரைப் பத்திரிகைக்காகப் பேட்டி எடுத்தேன். அது பற்றிச் செ விவரம் சொல்ல வந்தாராம். எல்லாம் எடிட்டரிடம்தான் பேச வேண்டும் என்று சொல்லி விட்டு வந்தேன். அவ்வளவுதான்" என்று உரக்க மொழிந்து விட்டு நில்லாமல் நடந்தாள்.

"அய்யோ ஜெயப்பிரதீபன் கூடப் பேட்டியா? லக்கிம்மா நீ கூட ஷூட்டிங் போனாயா? அங்கே ரஜனி, விஜயகாந்த், கமலஹாசன் எல்லாம் பார்த்தாயா? சல்மான்கான் இங்கே ஏதோ நடிக்க வந்தாராமே. பேசினாயா?" என்று அடுக்கியவர்களிடம் "உடம்பு சரியில்லை தனியே விடுங்கள்" என்ற ஒரே பதிலுடன் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு அழுது தீர்த்தாள் நித்யா.

முன்பொரு தரமும் இதே இழப்பை அனுபவித்தவள் தான் நித்யா. ஆனால் அப்போது பாவம் பெண்ணென்று பேண அவளுடைய பெற்றோர் இருந்தனர். இப்போது அவள் உண்டாளா, உறங்கினாளா என்று யாருக்கு அக்கறை? அலுவலகத்தில் சிவானந்தமாக ஊக்கத்து உண்ணைச் செய்த பன், பட்டர், காபி தவிரப் பட்டினி கிடந்தாள் எனலாம், ஊண் உறக்கமற்றுக் கிடந்து உடலோடு உள்ளத்தையும் பலவீனப்படுத்திக் கொண்டாள் அவள். உதட்டில் பூசிய புன்னகையின் பின்னே உள்ளத்துக் காயங்களைப் பிறர் அறியாமல் மறைத்து வைத்திருந்த நித்யா அடியோடு மறைந்து போனாள். இம்மெனுமுன் துளிர்த்த விழிநீர் வெளியே சிந்தி விடாமல் அடக்கு வதற்கே இந்த நித்யாவுக்கு நேரம் சரியாக இருந்தது. ஓரளவு எல்லோரிடமும் பிரியத்தையே சம்பாதித்திருந்த பெண் என்பதால் மற்றவர்கள் ஒரு பரிவான பார்வையுடன் நாகரீகமாக ஒதுங்கினர். பெண்களைச் சீண்டுவதில் பேரின்பம் காணும் மனோகரன்கூட மரியாதையாக விலகிப்போனான்.



அடுத்து பிரதீபன் அவளது அலுவலகத்துக்கு வந்தான். ஒரு கசமுச பேச்சுடன் பிரதீபன் பெயரும் கேட்கவே வாரிச் சுருட்டிக் கொண்டு பின்வழியே வெளியேறி விட்டாள் நித்யா.

மறுமுறை, நித்யாவின் இருக்கைக்கே நேராக வந்து, "இத்தனை பேர் நடுவில் இங்கே பேசுவதா தனிமையில் உங்கள் கெஸ்ட் ரூமில் பேசுவதா இரண்டில் எது என்பது உன் விருப்பம் என்னைப் பொறுத்தவரை இப்போது நான், மான அவமானம் மற்றவர்கள் என்கிற எதையும் பொருட்படுத்துவதாக இல்லை" தாழ்ந்த குரலில் உறுதியாகக் கூறவும் அவள் எழுந்து விட்டாள்.

ஆனால் அவனுடன் இணைந்து செல்லுகையில், அலுவலகத்தில் இருந்த மற்றவர்களின் பார்வையில் இருந்த வியப்பும் குறு குறுப்பும் கண்ணில் படப் பட அவள் கொதி நிலைக்கே போய்ச் சேர்ந்தாள்.

அந்த விருந்தினர் அறை மிகவும் முக்கியமான வி.ஐ.பி.களை உபசரிக்க எம்.டி. மணிகண்டனும் சிவானந்த மும் பயன்படுத்துவது. அறைக்குள் சென்றதும் சொந்த இடம் போலப் பிரதீபன் கதவைச் சாத்தவும் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. அதுதான் அவர்கள் இருவரையும் நன்றாகக் கைக்குள் போட்டு வைத்திருக்கிறானே, இல்லை யென்றால் மறுக்க மறுக்க அவளையே அவனிடம் பேட்டி காண அனுப்புவார்களா?

நித்யாவை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "என்னை விட்டுப் பிரிந்து வந்ததில் நீயும் ஒன்றும் உற்சாகத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டு இருப்பதாகக் காணவில்லையே. இரண்டே நாட்களில் உடம்பை என்னபாடு படுத்தி வைத்திருக்கிறாய்?" என்றான் சிறு சினத்துடன்.

ஆகா என்ன கரிசனம்!

உதடுகளை இறுக மூடிக்கொண்டு அவன் அசைவின்றி நிற்கவும் "ஏன் இப்படி நித்தி? முன்பாவது உன் தந்தையின் பணம், அந்தஸ்து, கூடவே சுந்தரியின் முட்டாள் தனமான பேச்சு என்று ஏதேதோ காரணங்கள் இருந்தன. இப்போது எல்லாம் தெளிந்து விட்டது என்று நினைத்தேன். இப்போது போய் பிரிந்தால் எப்படி? எதற்காக இந்தப் பிரிவு? சொல்லு." என்று இதமான குரலில் வினவினான் பிரதீபன்.

இந்தக் குரலுக்கு இளகுவது மிகவும் எளிதுதான். ஆனால் மகா மடத்தனமும்கூட. ஆனால் இவனுக்கு மட்டும்தான் இந்த மாற்றங்கள் முடியுமா? "பெரிய காரணம் ஒன்றும் இல்லை. எனக்கு உங்களைப் பிடிக்க வில்லை அவ்வளவுதான்" என்றாள் அலட்சியம் போலக்காட்டி.

"அதை யாராவது அடிமடையனிடம் போய்ச் சொல்லு, நம்புவான். பிடிக்காதவள் தான் இரண்டு நாள் பிரிவில் இப்படி மெலிந்தாயா?"

"எனக்கு.. எனக்கு இரண்டு நாட்களாக வயிறு சரியில்லை."

"ஷ். நித்யா. இந்த வெட்டிப் பேச்சு எதுவும் வேண்டாம் உன் பிரியத்தை நீ மறைக்க தேவையே இல்லை. கவுரவம் பார்க்காமல் நானே முதலில் சொல்கிறேன் கேள். என் மனைவி இல்லாமல் என்னால் வாழ முடியாது போதுமா? இப்.."

டெலிபோனில் கேட்ட அவன் குரல் நினைவு வர ஆங்காரத்துடன் குறுக்கிட்டு, "ஏன் எதற்க்கும் அனுசரணையாக நடக்கும் ஓர் அலங்காரப் பொம்மைக்கு அப்படி ஒரு தேவையா?" என்றாள் எகத்தாளமாக நித்யா.

"நான் என்ன ஜவுளிக்கடையா வைத்திருக்கிறேன், அலங்கார பொம்மை வாங்கி அடுக்குவதற்கு?" என்று திருப்பிக் கொடுத்தவன் உடனே தழைந்தான். அவள் அருகில் வந்து கரங்களைப் பற்றிக் கூறினான். "கொஞ்சம் நன்றாகவே கவனி, நித்யா. இரண்டாவது தடவையாக நீ எனக்குக் கிடைத்து, உன்னை இவ்வளவு தூரம் அறிந்த



பிறகு, இனி உன்னை நான் ஒருபோதும் விட்டு விடமாட்டேன். இந்த இரண்டு நாட்களாக உன் மனதில் என்ன இருந்து குழப்புகிறது என்பது எனக்குத் தெரியாது. அதை வெளியிட்டுச் சொன்னால் எனக்குத் தெரிந்த வரையில் இயன்ற வரையில், சிக்கலைத் தீர்க்க முயற்சிக்கிறேன். இல்லை, உள்ளேயே வைத்துப் பூட்டிக்கொள்வது என்று பிடிவாதமாயிருந்தால் அது உன் இஷ்டம். ஆனால் எந்தக் காரணம் கொண்டும் முன்னைப்போல என்னைப் பிரிந்து நீ தனி வாழ்வு வாழ்வதை நான் அனுமதிக்கப் போவது இல்லை."

"நீங்கள் என்ன.. என்னை அனுமதிப்பது?" என்று தூக்கி எறிந்து பேசினாள் நித்யா. " நான் என் விருப்பம் போலத்."

கைப்பிடி இறுக "என்னைப் பழைய கற்கால மனிதனாக்கிவிட மாட்டாய் என்று நம்புகிறேன், நித்யா." என்று எச்சரித்தான் பிரதீபன்.

கைப்பிடி, முகம், பார்வை, குரல் எல்லாவற்றிலும் எக்கிரும்பின் உறுதியைக் கண்ட நித்யா திகைத்தாள் 'வாம்மா.' என்று இன்னொருத்தியை இரவில் அழைக்கிறவனுக்கு இந்தப் பிடிவாதம் ஏன்? கேட்டு விட்டாள் "அந்த ஜெயநளினா இருக்கும் போது நான் எதற்கு?" என்று.

"ஜெயநளினாவா!" வியப்பும் குழப்பமுமாக வினவியவனின் பிடிதளரவும் கை உதறி விடுவித்துக் கொண்டாள் நித்யா. சற்று நிமிர்ந்து, "நளினா என்னைவிட ஐந்து வயது பெரியவள். எனக்கு அக்காமாதிரி. பேசுவதை சற்று நிதானித்துப் பேசு". என்றான் பிரதீபன் குரலில் கண்டிப்புடன்.

கைகளில் அவன் பற்றிய இடம் பட்டையாக கன்றி இருப்பதைக் காணவும் அவளுக்குக் கோபம் தலைக்கேறியது "அக்கா உடம்பில்தான் வேறு எதுவும் இல்லாமல் கெம்பு அட்டிகையை மட்டும் அணிவித்துப் பார்த்து ரசிப்பீர்களாக்கும்" என்றாள் குத்தலாக.

"சீச்சி என்ன பேச்சு இது!" என்றான் அவன் அருவருப்புடன் "நீ கூட இப்படித் தரம் இறங்கிப் பேசுவாயா, நித்யா?"

"அதை உங்கள் நளினாவிடம் போய்க் கேளுங்கள் அவள்தான் அன்று" என்றவளுக்கு அன்றைய துன்ப நினைவில் அப்போதும் தொண்டை அடைத்தது. "அவள்தான் திருச்சியில் வீட்டுக்காரர் நம்பருக்கு டெலிஃபோன் பண்ணி, செய்து என்னை எழுப்பி வரச்செய்து இதைச்சொன்னாள். இந்த மயக்கத்தில் இரண்டு பேருக்குமே தூக்கம் ஹோகயா, அதனால் அவரைத்தொல்லை பண்ணாமல் பகல் முழுவதும் தூங்க விடு." என்று ஒருவாறு முடிக்குமுன் கரகரவென்று இரு விழிகளிலும் கண்ணீர் பெருகி வழியலாயிற்று.

இருந்திருந்து இவன்முன் அழுவதா என்கிற ஆத்திரத்துடன் விழிநீரை அவள் வேகமாகத் தட்டிவிட்டபோது ஒரு பெரிய மூச்சை எடுத்து வெளி விட்ட அவன், "பொய்" என்றான்.

"பொய்யா? நானா பொய் சொல்கிறேன்?" என்று அவள் ஆங்காரத்துடன் தொடங்கியபோது, தலையசைத்து மறுத்தான் அவன்.

"இல்லை நீ இல்லை. நான் நளினாவைத்தான் சொன்னேன். அவள் உன்னிடம் கூறியது அவ்வளவும் பொய்" என்று மீண்டும் தலையசைத்தான் பிரதீபன்.

"எது பொய்? நீங்கள் அவளிடம் நகையைக் கொடுத்ததா? அல்லது அவள் வீட்டில் இருந்து விட்டு வந்ததா?"

மீண்டும் தலையசைத்து இரண்டும் இல்லை என்றான் அவன்.

"ஓஹோ பின்னே அந்தநேரத்தில் அவளுக்குப் பாப்பா கதை சொல்லித்தூங்க வைக்கப் போனீர்களாக்கும்" என்றாள் நித்யா எகத்தாளமாக.



மீண்டும் மறுப்பாகத் தலையசைத்து, அது அப்படி இல்லை என்றவன் ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தான். "நித்யா, நளினாவும் நானும் ஒரே ஊர்க்காரர்கள். சிறுவயதில் பக்கத்து வீட்டுக்காரர்களும்கூட. படித்த படிப்பு பிரயோசனமற்றுப்போய், ஸ்டுடியோ ஒன்றில் டைப்பிஸ்ட் என்கிற பெயரில் எடுபிடி வேலை செய்து என் தாயாருக்கு அரைவயிற்றுக் கஞ்சி ஊற்றிக்கொண்டு இருந்த சமயத்தில் என்னைக் கண்டு கைதூக்கி விட்டாள் அவள். அப்போது நளினா ஓரளவு வெற்றி பெற்ற நடிகை. அவளுக்குத் தெரிந்த பல தயாரிப்பாளர்களிடம் சிபாரிசு செய்தாள். அவளைப் போல அதிர்ஷ்டம் வரட்டும் என்று என் பெயரில் ஜெய சேர்த்தவளும் அவளே. அம்மா நோயுற்ற போது மருத்துவச் செலவுகூட அவள் தான் செய்தாள். அந்த நன்றி எனக்கு எப்போதும் உண்டு."

"ஒரே ஊர் பக்கத்து வீட்டுக்காரி ஒரு சகோதர பாசத்தில் செய்கிறாள் என்றுதான் நான் நினைத்தது. உன் நகையைக்கூட அவளிடம் வைத்துத்தான் பணம் வாங்கினேன். நம் விஷயத்தைக் கூடசொல்லியிருக்கிறேன். அந்த நகை தொலைந்ததாக அவள் சொன்ன போது முழுமையாக நம்பினேன்."

"இந்தக் கதையெல்லாம் பேசத்தான் ஞாயிற்றுக்கிழமை கூட அந்த இரவு வேளையில் அவளிடம் சென்றீர்கள் போல" பழைய குரலிலேயே தொடங்கியவளின் பேச்சு பிரதீபனின் வெறித்த பார்வையில் நின்றது.

அவன் தொடர்ந்தான். "நளினாவுக்கு ஒரு மாதிரி ஹை ப்ரஷர் ஹிஸ்டிரியாகம்ப்ளைன்ட உண்டு. நடிக்க வந்த புதிதில் நேர்ந்த சில செக்ஸ் ஹராஸ்மென்டினால் வந்தது என்று அவளுடைய அம்மா சொல்லுவார்கள். அந்த மாதிரி வரும் போது தாயாருக்குக்கூட அடங்க மாட்டாள். வெளியே தெரிந்தால் இமேஜ் போய்விடும் என்று அந்த அம்மாள் என்னைத்தான் கூப்பிடுவார்கள். இருவருமாகச் சேர்ந்து

பிடித்துதான் அடக்கி வைப்போம். அப்படித்தான் அந்த இரவில் அங்கே தங்கி விடும்படி ஆயிற்று" என்றவன் திரும்பி அவளை நேராகப் பார்த்து, " ஆனால் நித்யா, நீ என் மேல் ஐயம் கொண்டு பிரிந்து போய் விட நீ அறியாத ஒரு பெண்ணின் டெலிக்போன் பேச்சு போதுமானதாக இருந்ததா?" சற்றுக் கடுமை ஏறிய குரலில் கேட்டு அவளைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினான்.

## 17

நித்யா சற்றுத் திணறிப் போனாள். கணவன் என்று ஏற்றுக் கொண்டபின் இன்னொருவர் வார்த்தையை மட்டும் நம்பி வெறுப்பது தவறுதான். அன்று கூட அவள் ஜெய நளினாவின் பேச்சை உடனேயே நம்பிவிடவில்லையே. பொய்யாக இருக்கும் என்று. சட்டென நினைவு வர "உங்கள் மேல் சென்ட் வாசனை வந்ததே" என்று பதில் தந்தாள்.

என்ன இத் என்று அலுப்புற்றவன் போலக் கைகை அசைத்தான் பிரதீபன். "நித்யா, நீ புரிந்துதான் பேசுகிறாயா? ஒரு ஹிஸ்டீரியா நோயாளி, கிணற்றில் விழப் போகிறேன் என்று தறிகெட்டு ஓடும் போது தொட்டுப் பிடித்துத் தூக்கி வராமல் சொற்பொழிவு ஆற்றியா நிறுத்த முடியும்?"

முடியாததுதான் இது மெய்யென்றால் இதை ஒரு பிழையென்று அவன் மீது குற்றம் சுமத்த முடியாதுதான்.

ஆனால் தொட்டுப்பிடித்து தூக்கினானாமா? அதை அவள் ஜெயநளினா எப்படியெல்லாம் ரசித்திருப்பாள் என்று எண்ணம் ஓட மீண்டும் நித்யாவின் நெஞ்சு கனன்றது.



"நீங்கள் தொட்டுத் தூக்கினீர்களோ, கட்டிப் பிடித்தீர்களோ, நான் கேட்டேனா? நான்பாட்டில் ஒதுங்கிக் கொள்கிறேன் என்றுதானே."

"அந்தப் பேச்சை விடு. இந்த ஞாயிறன்று இரவு என்ன நடந்தது?"

அவளது பேச்சை முக்கியமற்றது போல விலக்கிவிட்டு அவன் கேட்டவிதம் எரிச்சலூட்ட குரோதத்துடன் முறைத்துவிட்டு, "வேறு என்ன நடக்கும்? உங்கள் நளினாதான் திரும்பவும் விடிகாலையில் ஃபோன் செய்தாள்" என்றாள் வெறுப்புடன் அவள்.

"அப்படித்தான் இருக்கும் என்று நானும் நினைத்தேன். ஆனால் ஒன்று அவள் என்றுமே என் நளினா இல்லை. இந்த தடவை என்ன சொன்னாள்?" என்று விடாமல் கேட்டான் பிரதீபன்.

என்ன சொன்னாள்? அவள் சொன்னதுமட்டுமா? முத்தாய்ப்பு வைத்தாற்போல அவனும் சொன்னானே.

உள்ளிருந்த வேதனையில் அவள் முகம் கசங்கவும் "என்னடா?" என்று ஓர் எட்டு அவளை நோக்கி எடுத்து வைத்தான் பிரதீபன்.

சட்டென நித்யாவும் பின்னடையவும் நின்று "மேலேசொல்லு" என்றான் தொடர்பை விடாமல் அவள் என்னதான் சொன்னாள்.

நினைப்பதற்குக் கூட அருவருப்பாகவும், அசிங்கமாக வும் சொல்லில் அடங்காத வேதனையைத் தருவதாகவும் இருந்ததுதான். அதை அவளது வாயால் சொல்வது மிகவும் கஷ்டம்தான். ஆனால் சொல்லாமல் தீராது. சொல்லித் தீர்த்துவிட்டால் இனி மாற்றிப் பொய் விளக்கம் சொல்ல வழியில்லை என்று கண்டபிறகு அவன் வாழ்வில் குறுக்கிடாமல் அவள் ஒதுங்கிவிடுவாள். இன்பம் அற்ற வறண்டவாழ்க்கைதான் என்றாலும் அதில் இதுபோல வேதனைகள் இருக்கவும் வழியில்லை.

நரையை வெறித்தபடி. "என்னால், என்னிடம் உங்களுக்கு திருப்தியில்லை என்றும், அதனால் அந்த இரவில் அவள் வீடு சென்று அவளை.." என்று அவன் சொல்லிக்கொண்டே போன போது அவசரமாக பிரதீபன் குறுக்கிட்டான். "பொய் நித்தி. பொய். எல்லாம் பொய்யம்மா" என்றான் படபடப்புடன்.

கசப்புடன் சிரித்தாள் நித்யா. "நானும் பொய்யென்றுதான் நினைத்தேன். அதே டெலிபோனில் சற்று தள்ளியிருந்து அங்கே என்ன செய்கிறாய்? வாம்மா வந்துபடு என்று நீங்கள் அவளைக் கொஞ்சி அழைத்த குரல் கேட்கும் வரை" என்று போட்டு உடைத்தாள்.

"நான்" என்று தொடங்கி ஒருகணம் பேச்சிழந்து நின்றான் பிரதீபன். உடனேயே, "நித்யா, நான் சொல்வதைக் கேட்டுவிட்டு முடிவுசெய். பார், இங்கிருந்து நான் போன பிறகும் நளினாவை அடக்கித் தூங்க வைக்க அவளுடைய தாயாரும் நானும் மிகவும் போராடவேண்டியிருந்தது. அவள் தூங்கிய அறையிலேயே பக்கத்தில் ஒரு சோபாவில் நானும் இன்னொன்றில் அவள் அம்மாவும் காவல் இருந்தோம். அவள் உறங்கிவிட்டாள் என்றுதான் நாங்கள் நினைத்தோம். நளினாவின் தாயார் வயதானவர்கள். மனவேதனை வேறு, உறங்கிவிட்டார்கள். நான் எனக்கும் இரண்டு நாட்களாகச் சரியான உறக்கம் இல்லை என்பது உனக்கும் தெரிந்த விஷயம். எப்படியோ, சற்று கண்ணயர்ந்த நேரம் பார்த்து போன் செய்திருக்கிறாள். இடையில் தூக்கம் கலைந்து பார்த்தால் அவள் படுக்கையில் இல்லை. அடுத்திருந்த ஹாலில் டெலிபோன் அங்கேதான் இருந்தது. அவள் குரல் கேட்கவும் அழைத்தேன். அவ்வளவுதான் என் பேச்சை நம்பு, நித்தி?"

இருக்குமோ என்று நெகிழத்தொடங்கிய மனதை உடனேயே திடப்படுத்திக் கொண்டாள் நித்யா. இவன் நடந்ததைச் சாதுரியமாக திரித்துக் கூறவில்லை என்று என்ன நிச்சயம்? இருதரம் இவனை நம்பிப் பட்ட துயரம் போதாதா? இன்னுமா?



"நோ. மாட்டேன். இனி ஒருதரம் உங்களை நம்பி நான் மோசம் போவதாக இல்லை."

"அதற்குப் பதில் நம்பாமலே மோசம் போகப் போகிறாயாக்கும்" என்று ஏளனமாகக் கேட்டவன் அவள் உறுத்து விழிக்கவும், "பின்னே என்ன நித்யா? பொய் மெய் புரியாமல் சும்மா பிடிவாதம் செய்கிறாயே நான் சொல்வது உண்மையாக இருக்கும் என்றுதான் ஒரு தரம் யோசித்து பாரேன்" என்றான் நயமாக.

"பூனை கேவலம் ஒரு மிருகம் ஐந்தறிவு ஜாதி. அதுகூட ஒரு தரம் சூடு பட்டால் அந்தப் பக்கமே போகாதாம். ஒருதரத்துக்கு இரண்டுமுறை உங்களை நம்பிச் சூடு வாங்கியவள் நான். இதற்கு மேலும் உங்களை நம்பினால் மனித ஜாதி என்று நான் உயிரோடு இருக்கவே நியாயம் இல்லை. போதுமா? இப்போதே இங்கே ஆபிசில் என்னென்ன பேசுகிறார்களோ, இன்னமும் தொல்லை செய்து பிழைப்பதற்கு இருக்கும் ஒரு வழியையும் நாசம் பண்ணி விடாதீர்கள்."

"அவ்வளவு கஷ்டம் ஏன்? உன் தந்தையின் சொத்தை ஒரு சொல்லில் பெற்று சுகமாக வாழலாமே".

"ஆமாமாம் அன்று செய்துவிட்ட காரியம் ஊரில் சொத்தைப் பெற்றுத் தலை நிமிர்ந்து வாழ்கிற மாதிரிதானே இருக்கிறது. சே. அந்தக் காசு பணமும் வேண்டாம் கண்டவர் பேச்சில் குன்றவும் வேண்டாம்."

"எங்கேயுமே நீ குன்றத் தேவை இல்லை என் மனைவி என்றைக்கும் யாருக்கும் தலைகுனியத் தேவையிராது"

"உங்கள் மனைவி என்கிற நிலையே தலைக்குனிவு என்றால்?" என்றாள் நித்யா துடுக்காக.

"நித்யா" என்று அதட்டினான் பிரதீபன்.

"ஆமாம் நான் அப்படித்தான் நினைக்கிறேன். நான் உங்கள் மனைவி என்று வெளியே தெரியாமல் இருப்பதுதான் எனக்கு நிம்மதி" என்று வேண்டுமென்றே உதாசீனமாகப் பேசினாள் நித்யா. தன்னை இவ்வளவு வேதனைக்கு ஆளாக்கிய அவனைக் கண்டபடி காயப்படுத்திவிடும் வெறி அவளுக்கு.

அவள் வென்றாள் போல பிரதீபன் முகம் கன்றிச் சிவந்தது. "அதுதான் நிம்மதியா ஒருநாள் நீயாகவே என் மனைவி என்று ஊர் அறியக் கதறிக் கொண்டு வருவாய் பார். அன்று காலம் கடந்துவிடக் கூடாதே என்றுதான் இவ்வளவு பாடுபட்டேன். எல்லாம் வீண்" என்றான் அவனும் கசப்புடன்.

"அப்படி நான் வருகிற நாளில் அதைப் பார்க்கலாம். இப்போதைக்கு என்னை நிம்மதியாக வாழ விட்டு விட்டுத் தயவு செய்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் போய் விடுங்கள் போதும்" என்றாள் அவள் வெறுப்பாக.

அவளை வெறித்துப் பார்த்துவிட்டு "அவ்வளவுதான் இல்லையா? அதுதான் உனக்கு நிம்மதி என்றால் நான் போய்விடுகிறேன் நித்யா. போயே போய்விடுகிறேன். தூரமாய் வெகுதொலை தூரமாய் எட்டாத தூரத்துக்கே போய்விடுகிறேன்" என்று அறை வாயிலை நோக்கிச் சென்று கதவில் கை வைத்தவன், ஒரு கணம் நிதானித்து, "அந்தப் படத்தின் கடைசிக் காட்சியில் யார் நடிப்பது என்று ஒருவர் முடிவு செய்ய வேண்டும் என்றேனே, நினைவு இருக்கிறதா நித்யா. முடிவு செய்துவிட்டாய்" என்றவன் கதவை திறந்து கொண்டு சென்று விட்டான்.

என்ன முடிவு?

என்ன காட்சி?

திக் கென்றது அவளுக்கு.



மூன்று மாடிக் கட்டடம் அளவு உயரமாக அமைக்கப்பட்ட இரு குன்றுகளும் இடையே குறுகலான மரப் பாலமும் நினைவு வர சற்றுநேரம் நித்யாவின் மூச்சு நின்று போயிற்று.

அவனே சொன்னானே. ரூப் போடுகிற ஸ்டண்ட் நடிகர்களுக்குப் பழக்கமும் திறமையும் அதிகம். அதனால் நன்றாகச் செய்வார்கள் என்று. பழக்கமற்ற காரணத்தால் பிரதீபன் விழுந்து விட்டால்? எவ்வளவு உயரம் கடவுளே.

சிதறத் தொடங்கிய புத்தியை வெகுசிரமப்பட்டு இழுத்துப் பிடித்தாள் நித்யா. அவன் உயிரைப் பற்றி அவனுக்கு அக்கறை இராதா? இவ்வளவு சொத்துபத்து சேர்த்து வைத்திருக்கிறவனுக்கு அதையெல்லாம் விட்டு விட்டுப் போக மனம் வருமா?

இது சும்மா மிரட்டல். அவளை பயமுறுத்திப் பார்க்கிறான். பேதைப் பெண் மனம்தானே. மிரண்டுபோய் ஓடி வந்து, கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று காலில் விழுவாள் என்ற எண்ணம். அதெல்லாம் இந்த நித்யாவிடமா நடக்கும்.

ஆனால் ஒரு வேளை...

இந்த ஆனால் ஒருவேளை மெல்ல மெல்ல அவளைக் குடையத் தொடங்கியது.

காக்காய் கத்துவதிலிருந்து ஒவ்வொரு சத்தத்துக்கும் இதயம் நின்று துடித்தது.

டெலிபோன் மணி அடித்தால், அதை யாரேனும் எடுத்து, பிரதீபன் பற்றியது அல்லாத வேறு விஷயம் பேசுவது காதில் விழும் வரை மூச்சு விட மறந்தாள்.

"சார், ஒரு பெரிய நியூஸ்" என்று ஒரு ரிப்போர்ட்டர் வந்து தொடங்கவும் நித்யாவின் இதயம் தொண்டைக்குள் வந்து துடிக்கத் தொடங்கியது. கட்சி எம். எல். ஏ. கட்சி மாறிவிட்டாராம். கட்சி பலத்தில் மூன்றில் ஒரு பங்கைப்

பிரித்து வந்துவிட்டதால் கட்சித்தாவல் தடை சட்டம் ஒன்றும் செய்ய முடியாதாம் என்னது எத்தனை பேராம்? சபையில் கட்சி மெம்பர்கள் மொத்தம் மூன்றுபேராம். மூன்றில் ஒரு பங்கு பலம் எனறால். எல்லோருடையே சிரிப்பும் காட்டுக் கூச்சலாகத் தோன்ற வாயை மூடும்படிக் கத்த தோன்றியது.

விடியா இரவே தொலையாப் பகலே என்றால் இதுதான் போலும் ஒவ்வொரு வினாடி கழிவதும் ஒவ்வொரு யுகம் கழிவது போலத்தான் இருந்தது. உட்காரமுடியாமல், நிற்க மாட்டாமல் அவஸ்தைப்பட்டாள்.

இந்த வேதனை எத்தனை நாள் தாங்கும்? பேசாமல் அவனிடம் சென்று விட்டால் என்ன என்று கூடத் தோன்றியது. கூடவே இன்னொன்றும் இவன் எதற்காக அவளை இப்படி விரும்பி அழைக்கிறான். பிரதீபன் கூறியதெல்லாம் மெய்யாக இருந்து. அவன் உண்மையான பிரியத்தோடு அழைத்தான் என்றால் மறுப்பதே தவறுதான்.

ஆனால் ஒருவேளை, இவன் போக்கிடமற்ற அனாதை, மனைவி ஸ்தானத்தில் அவளை உட்காரவைத்துவிட்டு தட்டிக் கேட்பாரே இல்லாமல் இஷ்டம் போல ஆட்டம் போடலாம் என்று திட்டமிட்டிருந்தால் மீண்டும் எவ்வளவு கேவலம் ஆகிவிடும். யாரோ அழைக்கும் குரலில் நித்யா தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்து நின்றாள். "அய்யோ, நான் தானம்மா கம்மா உட்காரு" என்றான் ஆபீஸ் பையன்.

ஓ என்று தொய்ந்தவளிடம் "அப்படி என்னாம்மா ரோசனை? ஆசிரியர் அய்யா ரெண்டுதரம் கூப்பிட்டார். நீ பதிலே சொல்லலியாம் முக்கிய வேலை போலருக்கு என்று போய்விட்டாராம். சாயந்தரம் வீட்டுக்குப் போகும் முன்னாடி அவரைப் போய்ப் பார்த்துவிட்டு போவியாம். ஏம்மா. மணியும் ஐந்தரை ஆவப் போறதே கௌம்பிளயா? மத்த எல்லாரும் கிளம்பியாச்சது. ஒனக்கு ஏதாச்சம் மீட்டிங் போவணுமா? சித்தப்பாரு கிட்டே ஆட்டோவுக்குச் சொல்லணுமா?" என்று வள வளத்தான் அவன்.



"இல்லையப்பா" என்று அவனுக்கு பதிலுரைத்துவிட்டு மணியைப் பார்த்தாள் நித்யா. ஐந்தரைதான். அலுவலக நேரம் ஒரு வழியாய் முடிந்து. அங்கே. அங்கே ஷூட்டிங் நேரமும் முடிந்திருக்காது? ஆனால் சில சமயங்களில் படம் முடிகிற நேரம் கால்ஷீட் நெருக்கடி மாதிரி நேரங்களில் இரவிலும் எடுப்பார்கள் என்றானே, அது பகலிலேயே ஆபத்தான இடம் இரவில் முருகா.

காக்க காக்க கனகவேல் காக்க காக்க. கடவுளே, சஷ்டி கவசம் கூட முழுவதாகப் பயிலவில்லையே வழியில் சஷ்டி கவசம் புத்தகம் ஒன்று வாங்கிப் போக வேண்டும்.

ஆசிரியர் முன்னே அமர்ந்தவளுக்கு நிலை கொள்ளவில்லை.

சிறிது நேரம் அவளையே கவனித்த சிவானந்தம் நித்யாவிடம் மன்னிப்புக் கேட்டார்.

"ஏ. என் சார்? எதற்காக?" என்று திகைத்தவளிடம், "உன் அமைதியை அழியவிட்டதற்காக கணவன், மனைவி என்று எம்.டி. சொன்னதும் மனக்கசப்பு மாறி ஒரு குடும்பம் சீர்படட்டும் என்கிற நல்ல எண்ணத்தில்தான் உன்னை அனுப்பினேன். நீ இந்த மாதிரித் துன்புறுவாய் என்று தெரிந்திருந்தால் பிடிவாதமாக மறுத்திருப்பேன். இப்போது. நான் என்ன சொல்லட்டும் மெய்யாகவே சாரியம்மா" என்று வருத்தமாக உரைத்தார்.

ஒரு மரியாதைக்காக 'அதெல்லாம் ஒன்றுமில்லை சார்' என்று கூற வாயெடுத்தவளுக்கு குபுக்கென்று கண்ணீர்தான் வந்தது.

அவமானக் கன்றலுடன் அவசரமாகக் கண்ணைத் துடைத்து கொண்டு "நான் வருகிறேன்" என்று அவள் எழுந்தபோது டெலிபோன் மணி அடிக்கவும் சட்டென நெஞ்சில் திகில் பரவ அப்படியே அசைவற்று நின்றாள்.

"ஹலோ..?" என்று எடுத்துப் பேசிய சிவானந்தத்தின் முகமும் மாறியது.

பதைத்த நெஞ்சில் கைவைத்து அழுத்தியபடி நின்ற நித்யாவிடம் "பிரதீபன் ஏதோ ஆபத்தான காட்சியில் டூப்பை மறுத்து தானே நடித்தாராம். அப்போது கீழே விழுந்து அடிபட்டு விட்டதாம்" என்று உரைத்தார்.

ரத்தமெல்லாம் வடிந்துவிட்டாற்போல நித்யாவின் முகம் வெளுத்தது. கால்கள் தள்ளாடின.

## 18

நித்யா ஒரேயடியாகக் கலங்கித் தள்ளாடுவதைக் கண்ட சிவானந்தம், "உயிருக்கு ஆபத்தில்லை நித்யா" என்றார் அவசரமாக.

மீண்டும் உயிர்த்து, "இப்போது எங்கே இருக்கிறார், சார்? காயம் ஒன்றும் பலமில்லையே சார்? எனக்கு அவரைப் பார்க்க வேண்டுமே உடனே அவரிடம் போக வேண்டுமே எங்கே சார் சீக்கிரம் சொல்லுங்களேன். ப்ளீஸ்" என்று பதறினாள் அவள்.

"அவருக்கு தலையில் அடி பட்டிருக்குபோலத் தெரிகிறது அங்கே பக்கத்தில்தான் ஒரு மருத்துவமனையில்."

"எந்த மருத்துவமனை? முதலில் விலாசம் சொல்லுங்கள்" என்று நித்யா குறுக்கிடவும் முகவரியை சொன்னவர் "கொஞ்சம் பொறு அம்மா இதோ நானே காரில்" என்று சில காகிதங்களைக் கைப்பெட்டிக்குள் வைத்து மூடியவர் நிமிர்ந்த போதுதான். தான் காற்றுடன் பேசிக் கொண்டிருப்பது அவருக்குப் புரிந்தது.

"சீக்கிரம் சீக்கிரம்" என்று அவள் விரட்டிய விரட்டலில் ஆட்டோ விரைவாகவே மருத்துவமனையை அடைந்தது.



நின்று கணக்கு பார்த்து மீதி வாங்கி நேரத்தை வீணாக்க விரும்பாமல் ஐம்பது ரூபாய்த்தாளை வீசி விட்டு மருத்துவமனைக்குள் ஓடினாள் நித்யா.

முதலில் இருந்த பெரிய மேசையின் பின்னே அமர்ந்திருந்த ரிசப்ஷனிஸ்ட்டிடம் ஓடிச் சென்று "நான் பிரதீபனை ஜெயப்பிரதீபனைப் பார்க்க வேண்டும் உடனே" என்று பரபரத்தாள்.

கண்டபடி பறந்த கூந்தலும் எங்கே எங்கே என்பதுபோல பதட்டத்துடன் அலைந்த சிவந்த விழிகளும் கலைந்த ஆடையுமாக பைத்தியம் போலத் தோற்றமளித்த அந்தப் பெண்ணை பார்த்து வரவேற்பு பெண் தயங்கினாள்.

"அவருக்கு தலையில் அடிபட்டிருக்கிறது. டாக்டரிடம் கேட்க வேண்டும் நீங்கள் யாரென்று சொன்னால்."

"மனைவி" என்று வீறிட்டாள் நித்யா." அவருடைய ஜெயபிரதீபனுடைய மனைவி. நான் அவரை உடனே பார்த்தாக வேண்டும்."

ஹாலில் காத்திருந்த மற்றவர்கள் நித்யாவை வியப்புடன் பார்த்தார்கள். அவர்களுள் ஒருவர் எழுந்து வந்து "நான் திரை அரங்கம் பத்திரிகையின் நிருபர். ஜெயப்பிரதீபனுக்கு விபத்து என்று செய்தி விவரத்துக்காக வந்தேன். நீங்களானால் மனைவி என்று வந்து நிற்கிறீர்கள். நிஜமாகத்தான் சொல்கிறீர்களா?" என்று விசாரித்தார்.

"ஆமாம் ஆமாம் ஆமாம் நிஜமாகவே நான் பிரதீபனுடைய மனைவிதான் போதுமா? என்று வெடித்தவள்" மீண்டும் வரவேற்புப் பெண்ணிடம் திரும்பினாள்.

"அதற்குள் இங்கே என்ன சத்தம்" என்று கழுத்தில் ஸ்டெத்துடன் தூய வெண்மையில் ஒருவர் வந்தார். அவர்தான் டாக்டர் என்று கண்டு அவரிடம் ஓடினாள்

நித்யா. "டாக்டர் நான் ஜெயபிரதீபனுடைய மனைவி நான். எனக்கு அவரை உடனே பார்க்க வேண்டும் டாக்டர் அவருக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே. டாக்டர் ப்ளீஸ் டாக்டர். தயவு செய்து அவரைப் பார்க்க எனக்கு அனுமதி கொடுங்கள், டாக்டர்" என்று கண்ணீர் வழிய விம்மினாள்.

"என்னுடன் வாருங்கள்" என்று உள்ளே அழைத்துச் சென்றார் அவர்.

"டாக்டர் அவருக்கு" என்று குரல் நடுங்க மீண்டும் தொடங்கியவளிடம் டாக்டர் விவரித்தார். "தலையில் அடிபட்டிருக்கிறது. இந்த மண்டைஅடிகெல்லாம் முதலில் ஒன்றும் சொல்ல முடியாதம்மா. ஒன்றுமே இல்லாமலும் போகும். திடீரென்று வாயைப் பிளந்து வைப்பதும் உண்டு."

"டாக்டர்!" என்று கதறிவிட்டாள் நித்யா.

"ஷ். மெல்லக்கத்துங்கள், நித்யா. இது மருத்துவமனை பிரதீப் போல எத்தனையோ கேஸ்" என்று லேசாக கண்டித்தார் டாக்டர்.

என்னவோ மனதில் உறுத்தியபோதும் அது என்ன வென்று யோசிக்கத் தோன்றாமல், "பெரிய அடியா டாக்டர்? அவருக்கு மயக்கம் தெளிந்துவிட்டதா? முடிவில்லாப் பயணம் போலத் தோன்றுகிறதே இன்னும் எவ்வளவுதூரம்" என்று கேட்டுக் கொண்டு இருக்கும் போதே, டாக்டர் ஓர் அறைக் கதவின் முன் நின்று கதவுக் குமிழைத்திருகி, "இது தான் பிரதீபனின் அறை மிஸ் பிரதீபன். நீங்கள் ஆவேசமாய் உங்கள் கணவர் மேலே விழுந்து கதறி ஆர்ப்பாட்டம் எல்லாம் பண்ணக்கூடாது. தலையில் அடி என்பதால் அவரது மனநிலை, ஞாபக சக்தி எல்லாம் எப்படி இருக்கும் என்று நான் எதுவும் சொல்வதற்கு இல்லை. கொஞ்சம் பார்த்துப் பதமாய் நடந்து கொள்ளுங்கள்" என்று அறிவுரை கூறினார் அவர்.



இவர் கதவை நன்றாகத் திறந்துவிட்டால் என்ன? வழியை விட்டு விலகினால் அவளாவது திறந்து கொண்டு உள்ளே போய் பிரதீபனைப் பார்த்து மனம் ஆறுவாளே.

டாக்டரைப் பிடித்து தள்ளிவிட்டு உள்ளே போய்விடலாம் என்று நித்யா முடிவு செய்த போது அவராகவே கதவைத் திறந்தார்.

உள்ளே கண்மூடிப் படுத்திருந்தவனைப் பார்க்கவும் அவளுக்குத் திக் சென்றது. அவள் உள்ளூரப் பயந்து கொண்டு வந்தது போல எகிப்திய மம்மி மாதிரி தலைமுதல் கால்வரை கட்டுகள் இல்லை பிரதீபனுக்கு. நெற்றியிலும், வலது கண்ணுக்கு மேலாகக் கன்னத்திலுமாக இரண்டு பிளாஸ்டர்கள். வலதுகையில் முழங்கையிலிருந்து மணிக் கட்டுவரை ஒரு கட்டு. கால்கள் எப்படி என்று வெளியே தெரியவில்லை. அவள் உருவகப் படுத்தி வந்த அளவுக்கு இது ஒன்றுமே இல்லை என்றாலும், கண்மூடி அவன் அசையாமல் படுத்திருந்த நிலை நித்யாவுக்கு அச்சத்தை ஊட்டியது.

ஓசையற்று நடந்து, நோயாளியின் அருகில் அவளை அழைத்து சென்ற டாக்டர் நெற்றி பிளாஸ்டரைச் சுட்டிக் காட்டினார். "மற்ற காயம் எல்லாம் பயப்படத் தேவையே இல்லாதவை. இதுதான் ஆபத்தானது. எவ்வளவு ஆபத்து என்பது பிறகுதான் தெரியும். பார்க்கலாம். எதற்கும் உங்கள் கணவருக்காக கடவுளிடம் பிரார்த்தனையும் செய்யுங்கள். நர்ஸ், இனி மிஸஸ் பிரதீபன் பார்த்துக் கொள்வார்கள். நீ பத்தாம் நம்பர் அறையில் அந்த அல்சர் பேஷண்டுக்கு சார்ட் ரெடி பண்ணு. நானும் இதோ வந்து விடுகிறேன்." என்றவர் நித்யாவிடம் திரும்பி, "பிரதீப் விழித்தால் கொஞ்சம் ஜாக்கிரதையாக, இதமாக அவன் போக்கிலேயே பேசுங்கள்" என்று கூறிக் கதவை சாத்திக் கொண்டு வெளியேறினார்.

இந்த டாக்டரிடம் ஏதோ தப்பு இருக்கிறது. இவர் நல்ல கெட்டிக்கார டாக்டரோ என்னவோ? முதலில் பிரதீபனை 'விஜயா'வில் கொண்டு காட்டவேண்டும்.

கதவிலிருந்து பிரதீபனிடம் பார்வையைத் திருப்பிய வளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏனெனில் பிரதீபன் இருவிழிகளையும் நன்றாகத் திறந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன சொல்வது என்று புரியாமல் சற்று திகைத்து விட்டு "வ..வந்து வலிக்கிறதா?" தன்னுள்ளே ஒரு வேதனையை உணர்ந்தவாறு வினவினாள்.

"இல்லை" என்றான் அவன் அவளிடமிருந்து பார்வையை அகற்றாமலே.

'வா, வா' என்று முன்பு அழைத்தவன் இப்போது ஒன்றும் பேசாதது திகைப்பையும் சிறு பயத்தையும் அளிக்க, "நான்.. நான் வந்துவிட்டேன். நீங்கள் சொன்னதுபோலவே வந்து விட்டேன்" என்றாள் நித்யா தழுதழுத்த குரலில்.

சலனமற்ற பார்வையுடன், "யார் நீ" என்றான் பிரதீபன். நித்யாவின் தலையில் அந்தக் கட்டிடம் இடிந்து விழுந்தது.

நெற்றிக் காயம் தான் ஆபத்து என்று டாக்டர் சொன்னாரே தலையில் அடிபட்டதால் மூளையில் பாதிப்பு ஏற்பட்டுவிட்டதா? இப்படியே இருந்துவிடுவானா?

நீ வரும்போது காலம் கடந்து விடக்கூடாதே என்றானே, பாவி, இந்தத் தாமதம் செய்துவிட்டேனே! 'ஓ' என்று கதற வேண்டும் போல நெஞ்சில் முட்டிய துயரத்தை வெளிக்காட்டப் பயந்து அடக்கினாள். அந்த அழுகை அவனை மேலும் பாதித்துவிடக் கூடாதே.

ஒருவேளை, இது அப்படி ஒன்றும் பெரிய நிலையான பாதிப்பாக இல்லாமல் குணமாகியும் விடலாம். விழுந்து அடிபட்டதில் மூளையில் உள்ள நினைவு திசுக்கள் மீது



லேசான அழுத்தம் ஏற்பட்டிருக்கலாம். அம்னிஷியா குணமாகும் வியாதி என்பார்களே. டாக்டர் கூட இதமாய்ப் பேச வேண்டும் என்றாரே...

பதறிய மனது தனக்குச் சாதகமாக ஒவ்வொன்றாகத் தேடித் தேடிக் கண்டுபிடித்து சேர்த்து நம்பிக்கை அதிகம் வரமறுத்த போதும், நடுங்கிய உதடுகளை இழுத்துப் புன்னகை புரிய வைத்து, "நான் உங்கள் மனைவி" என்றாள் சற்றே குழறிய ஆனால் இனிய குரலில்.

"ஜகமும் பொய் ... பொய்தானே?"

"இல்லை தீபன். நான் உங்கள் மனைவிதான்" என்றாள் அவள் விழிகளில் நீர் மல்க.

"அப்படியா? எனக்கே தெரியாமல் எனக்கு ஒரு மனைவியா?" என்று வியப்பும் யோசனையுமாகத் தன் போக்கில் தலையைக் கோதிவிடும் போது மேல் நெற்றியில் இருந்த பிளாஸ்டர் அவன் கையில் பட்டது.

தடவிப் பார்த்துவிட்டுச் சொன்னான். "நெற்றியில் அடிபட்டிருப்பது போலத் தெரிகிறது ம். அடிபட்டதில் அம்னிஷியா வந்திருக்கும் போலவும் தெரிகிறது. அப்படி யானால் மெய்யாகவே நீ என் மனைவியாகவும் இருக்கலாம். அல்லது எனது இந்த நிலைமையைத் தெரிந்து கொண்டு ஏமாற்ற வந்தவளாகவும் இருக்கலாம்."

அவசரமாக அவன் பேச்சில் குறுக்கிட்டு "இல்லை யில்லை நான் உங்களுடைய மனைவியேதான்" என்று வேகமாக உரைத்தவளை ஒரு கையை உயர்த்தி அடக்கினான் பிரதீபன்.

"முதலில் உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும். ஓ. கே. போய் அந்தக் கதவை உட்புறம் தாளிட்டு விட்டு இங்கேவா."

அவனது உத்திரவை அவள் நிறைவேற்றியதும், "நாம் இருவரும் கணவன் மனைவி என்கிறாய் நீ அதை

நிரூபித்துக் காட்டிவிட்டால் நம்புகிறேன்" என்றான் அவளிடம்.

"எப்படி நிரூபிக்க வேண்டும்?" என்று கேட்கையிலேயே அவளுக்கு நெஞ்சுக்குள் ஜில்லிட்டது. அவனுக்காக நினைவு வந்தால் தவிர அவளால் எப்படி நிரூபிக்கமுடியும்? நடந்த திருமணத்துக்கு ஒரு சான்று, ஒரு சாட்சி என்று எதுவும் இல்லையே.

"ம்ம்..." பாதிமூடிய இமைகளின் வழியே அவளை ஏறஇறங்கப் பார்த்தவன் வழியொன்று காட்டினான். "எந்த கணவன் மனைவிக்குமே அவர்களுக்கென்று தனிப்பட்ட தான அந்தரங்கம் ஒன்று இருக்கும். ஏதோ ஒரு ஜோக், ஒரு சேட்டை, ஒரு சங்கேதம், என்று ஏதாவது ஒன்று. பேச்சோ செய்கையோ இருக்கும் அதைக் காட்டினால் நம்புகிறேன்."

அவன் சொல்லிவிட்டான்.

ஆனால் அவள் எதை செய்து அவனுக்கு நிரூபிப்பாள்?

முதலில் ஓர் ஏழும், பிறகு ஒன்றுமாக எட்டே நாள் இல்லறம். இதில் இவர்களுக்கு மட்டுமான ஸ்பெஷல் என்று எதை - சிரிப்பு, கிண்டல், சேட்டை, செய்கை என்று தனிப்பட்ட எதைத்தான் வளர்த்துக் கொள்ள அவகாசம் இருந்தது? கிடைத்த நேரத்தில் கட்டி அணைத்தார்கள்தான், முத்தமிட்டார்கள்தான். ஆனால் இது எல்லோரும் செய்வதுதானே. இதில் அவர்கள் இருவருக்கும் மட்டுமே தனிப்பட்டது என்று எதை செய்து காட்டுவது?

அவள் மருண்டு விழிக்கவும், "ஆகா குட்டு வெளிப்பட்டுவிட்டதா, நீ என் மனைவி இல்லைதானே?" என்று கை கொட்டி நகைத்தான் பிரதீபன்.

தாங்கொணாத வேதனையில் அவள் நெஞ்சு தவித்தது. அந்தக் கடவுளாகப் பார்த்து பிரதீபனுக்கு தன் நினைவைக் கொடுத்தாலும் கொடுக்கட்டும். அல்லது இதுவே கடைசி என்று ஆனாலும் ஆகட்டும் என்று எண்ணியவளாய்க்



கட்டிலை நெருங்கி, அவன் அருகே அமர்ந்தாள். பிரதீபனின் கண்களில் இருந்த பளபளப்பு தயங்க வைத்தபோதும், குனிந்து அவனது உதடுகளில் தன் மெல்லிதழ்களை பொருத்தி முத்தமிட்டாள்.

ஆனால் பிரதீபனிடம் எந்தவித சலனமும் இல்லாது போகவே தோற்று ஓய்ந்தவளாய் அவனது மார்பிலேயே முகம் புதைத்து விம்மத் தொடங்கினாள்.

மறுகணம், என்ன நேர்ந்தது என்று அறியுமுன் அவள் பிரதீபனின் அருகில் கிடக்க, அவன் குனிந்து அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

அவளது திகைப்பைக் கண்டு அவனுக்கு இன்னமும் சிரிப்பு வந்தது. "ஆக நளினா, சந்தேகம், பிடிவாதம் எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டு வந்தாயிற்று. அப்படிதானே?" என்று கூறி அவன் மேலும் நகைக்கவும் அவளுக்கு விஷயம் புரிந்தது.

"எல்லாம் வேஷம்" என்று சினத்துடன் முறைத்துப் பார்க்க முயன்றவளுக்கும் அது முடியாமல் சிரிப்புதான் வந்தது. பெரும் ஆறுதலும் கூட.

குனிந்து அவளது இதழ்களில் லேசாக முத்தமிட்டு விட்டு "எல்லாம் வேஷமில்லை, நித்தி" என்றான் பிரதீபன். மனம் வெறுத்துப்போனது. டூப் போடாமல் நடித்தது. விழுந்த வரை எல்லாம் மெய்தான்.

மெய்யாக விழுந்தான் என்றால்?

அவளது பயந்தபார்வை வேறே என்ன காயம் எங்கே பட்டதோ என்று கவலையுடன் அவனை வேகமாக ஆராயவும், பெருமிதமாய் முறுவலித்து "மண்டு" என்று அவளது மூக்கைப் பிடித்து ஆட்டினான் அவன்.

"மனித உயிர் யாருக்கும் அலட்சியமில்லை நித்தி. இந்த மாதிரி அபாயமுள்ள காட்சிகளைப் படமாக்கும்போது, யாரேனும் விழுந்து விட்டால் காப்பதற்கென்று முன்

எச்சரிக்கையாக கீழே வலை கட்டி இருப்பார்கள். அன்று அந்த வலையை அகற்றிய பிறகு உன்னை அழைத்துப் போய் காட்டினேன். இன்று அந்த வலையில்தான் விழுந்தேன். பழக்கமில்லாத காரணம் பக்குவமாக விழத் தெரியாததால் சிறுசிராய்ப்புகள் மட்டும்."

"பின்னே, டாக்டர்." என்றவளின் விழிகள் அகன்றன "இந்த டாக்டர் உங்கள் நண்பராக இருக்க வேண்டும் பிரதீப். அவன் இவன் என்ற போதே எனக்குப் புரிந்திருக்க வேண்டும். அப்போதே ஒரு மாதிரி உறுத்தியபோதும் அந்த மனநிலையில் யோசித்துப் பார்க்கத் தோன்றவில்லை."

"தேவுடா! நல்லவேளையப்பா! அல்லது இவ்வளவு கஷ்டப்பட்டதும் வீணாகிப்போயிருக்குமே" என்று சிரித்தான் அவன்.

"சரியான தண்டனையாக இருந்திருக்கும். எத்தனையோ நோயாளிகள் இருக்க இப்படித்தான் ஓர் ஆஸ்பத்திரி ரூமை வீணாக்குவார்களா?" என்று செல்லமாகக் கோபித்தாள் நித்யா.

சற்றும் அயராமல், "நித்யகல்யாணித் தேவியார் அவர்கள், சற்றே என் முகமாகிய காந்தத்திலிருந்து பார்வையை விலக்கிச் சுற்றிலும் கவனித்துப் பார்க்க வேண்டும். எந்த நோயாளி அறையில் இப்படி இன்டோர் ப்ளான்டும், பெயிண்டிங்கும், புத்தக வரிசைகளும் இருக்குமாம்? இது அவனுடைய சொந்த அறை. கீழ்தளம் மட்டும்தான் மருத்துவமனை" என்று அவன் மேலும் சிரிக்கவும் அவள் அசடு வழிந்தாள்.

தானாகவே சிரிப்பை நிறுத்தி, "வேறு குழப்பம், தயக்கம், கோபம் என்று ஒன்றும் இல்லையே?" என்று அவளிடம் வினவினான்.

இல்லை என்று அவள் தலையசைக்கவும் ஒற்றை விரலில் அவளது உதடுகளை அளந்தபடி சொன்னான். "நளினாவிடம் தெளிவாகச் சொல்லி விட்டேன். இனி



அவள்வீட்டுக்கு நல்லது கெட்டதற்குக் கூட என்னைக் கூப்பிட வேண்டாம் என்று. அவள் வேறேதிட்டம் போட்டிருக்கிறாள். கொஞ்சம் ஃபைனான்ஸ் ஏற்பாடு செய்து கொண்டு என்னைக் கதாநாயகனாக நடிக்க வைத்து அவளே கதாநாயகியாகி ஒரு காதல் படம் எடுத்து அப்போது எப்படியாவது மடக்கிச்சு அவள் தாயார் நல்லவர்கள். அப்புறம் என்னிடம் மகளுக்காக மன்னிப்புக் கேட்டார்கள். அனேகமாக ஓரிரண்டு நாட்களில் நளினாவின் திருமண அறிவிப்பு பத்திரிகைகளில் வரும் என்று நினைக்கிறேன்." என்று தோளைக் குலுக்கினான் அவன்.

"திருமணமா? மாப்பிள்ளை?"

"நடிகை என்றாலே எச்சில் வடியவிடும் எத்தனையோ இளிச்சவாயர்கள் இல்லை? ஒன்றைப்பிடிப்பாள்" என்றான் பிரதீபன் அலட்சியமாக.

ஜெயநளினாவின் விட்டில் பிரதீபனுக்கு வெறுப்பும் அருவெறுப்பும் உண்டாகுமாறு ஏதோ நடந்திருக்க வேண்டும் என்று நித்யா ஊகித்தாள். ஜெயநளினா செய்ய கூடியவள்தான் முன் பின் அறியாத அவளிடமே பச்சையும் நீலமுமாய் என்னென்னவோ வாய் கூசாமல் புளுகவில்லை? இன்னும் என்ன மாதிரி நடந் கொண்டாளோ!

இந்த நளினா இந்த நூறுநாள் படநாயகி, கேட்டுகி காத்து கிடந்த பெண்கள். இத்தனை பேரை ஒதுக் அவளிடம் என்ன கண்டான்? அவனுக்காகக் காய படுத்திக்கொண்டானே.

பிரதீபனின் நெற்றிக் காயத்தை ஏறிட்ட விழிகளி கண்ணீர் இரண்டு வழிவதைக் காணவும், "இந் படப்பிடிப்பைக் கடைசி ஆயுதமாகத்தான் வைத்திருந்தே நித்தி. ஆனால் ஒன்று, எப்போது மீண்டும் ஒரு தரம் உன் அணுக முடிந்துவிட்டதோ, அதன் பின் எந்த விதத்தி உன்னை நான் இழந்து விடுவதாக இல் அதற்காகத்தான்" என்று விளக்கம் கூறினான் அவன்.

ஆனால் அவளுக்குச் சமாதானம் ஆகவில்லை. பிளாஸ்டரைச் சுற்றிலும் மிருதுவாக வருடி, "அதற்காக இந்த மாதிரி ஆபத்தை இழுத்துக் கொள்ள வேண்டுமா?" என்றாள் வேதனையோடு.

"ஊகூம் முதலில் அழுகையை நிறுத்து" என்று கண்ணீரைத் துடைத்துவிட்டுவிட்டுப் பிரதீபன் சொன்னான். "கவனி கண்ணம்மா, என் மனைவியை ராணி மாதிரி வைத்துக் கொள்ள வேண்டும் என்று இவ்வளவு சொத்து சேர்த்து வைத்திருக்கிறேனே இதையெல்லாம் விட்டெறிந்து விட்டு அவ்வளவு கலபத்தில் போய் விடுவேனோ? உயிர் போகாது என்பது எனக்கு நிச்சயம். நெஞ்சில், முகத்தில் அடிபட்டுவிடாமல் மறைத்துக் காக்கும் முயற்சியில் கை கால்களில் காயம் படலாம். ஆனால் கை கால் ஒடிந்தாலும் கூட நீ வந்து விட்டால் போதும்; தரும் என்று நினைத்தேன். அப்படியும் வராவிட்டால் அப்புறம் உயிர் போனாலும் ஒன்றும் இல்லை என்று... ஏய்... என்னது இது? என்னடா?"

கை கால் ஒடிகிறபோது கழுத்து மட்டும் இரும்பாலா செய்து மாட்டியிருக்கிறது என்று எண்ணியமாத்திரத்தில் கதிகலங்கி விதிர் விதிர்த்து கணவனை இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தாள் நித்யா.

கூந்தலை வருடி, தோளை அணைத்து, முதுகைத் தடவி அவளை ஆறுதல் படுத்திய பிரதீபன், மனைவியின் முகம் சற்றுத் தெளிவுறவும், "ஆக, பெண்டாட்டி அவளாக வந்து கட்டிப் பிடிக்க வைப்பதற்கு ஒரு வழி கண்டுபிடித்தாயிற்று. நமக்கு மூடு வரும் போதெல்லாம் இந்த கதையை அவிழ்த்து விட்டால் போதும் அப்புறம்" என்று ராகத்தோடு இயம்பி, விஷமத்துடன் கண் சிமிட்டிச் சிரித்தான்.

கன்னங்கள் சிவந்தபோதும் கணவனோடு சேர்ந்து தானும் சிரிக்கத் தொடங்கினாள் நித்யகல்யாணி.